178

# தத்த்வார்த்த ஸூத்ரம்

மூலமும் - உரையும்

178

ஸ்ரீபாலவர்ணி

இ3
.N41
67939



श्री महावीरजी ஸ்ரீ மஹாவீரர்

# समर्पणम्

श्रीमत्पूज्यगुरुवर्याणां श्रवणबेळुगुळ
मठाधीशानां श्री चारुकीर्ति पंडिताचार्यवर्य
महास्वामिनां करकमलेषु
भवच्छिष्येण श्रीपालवर्णिना
सादरसमर्पितोऽयं
ग्रन्थः

—

ஸ்ரீமத்பூஜ்யகுருவர்யரும்
ஸ்ரீவணபெளிகுளத்து மடாதிபதிகளும்
ஆகிய
ஸ்ரீ சாருகீர்த்தி பண்டிதாசார்யவர்ய
மஹாஸ்வாமிகளுடைய
கரகமலங்களில்
சிஷ்யனுகிய ஸ்ரீபாலவர்ணியினுல்
குருபக்திபூர்வகம் இந்த க்ரந்தமானது
ஸமர்ப்பிக்கப்பட்டது.

तञ्चूर्
१५-१०-४४

भवदुपकारात्पुनीतः
श्रीपालवर्णी

# PREFACE

BY

Rao Bahadur **A. CHAKRAVARTI,** M.A., I.E.S. (Retd.)
Madras.

The Tattvarthasutra of Sri Umaswami is a very important work of the Jaina Sacred Literature. It is considered to be an authoritative exposition of the Jaina doctrines and is therefore held in great veneration both by the Digambaras and the Swetambaras. Tattvarthasutra exactly corresponds to the Vedanta Sutras of the Hindus. The aim of both is the same. Both propose to describe the Moksha Marga, the method to be adopted for the realisation of the self. Vedanta Sutra begins with the words " Brahmajignasa ". According to this doctrine, knowledge of the self is the way to realise the self. To know the Brahman is to become the Brahman, the term Brahman being indentical with Atman or the self. According to the School of Vedantins which is represented by Brahama Sutras. Jnana Marga is the Moksha Marga. Besides Jnana Marga, the orthodox Hindu thinkers recognise two other alternative Margas, Karma Marga and Bakthi Marga. The orthodox school of Karma Marga is represented by Purva Mimamsa which maintain that the goal of life consists in the strict performance of Vedic rituals. But about the time of the Upanishadic Literature, this Mimamsic Karma Marga of Vedic ritualism was assigned a lower place and was definitely called inferior Vidya. Its aim was only happiness in Swarga and hence is not identical with the

Ideal of Moksha. But this Karma Marga of Purva Mimamsa school was soon replaced by another important school of Indian thought, Buddhism which laid an emphasis upon Karma or Conduct. Here the course of conduct was prescribed, not as a means of obtaining the pleasures of Swarga but as a path to Nirvana or Moksha. In this emphasis on conduct, Buddhism pushed to the background, the attempt to gain knowledge of ultimate reality.. Gautama Sakhyamuni himself evaded the problem as to the nature of Atman. He considered the knowledge of the Atman to be irrelevent and unnecessary for the purpose of obtaining Nirvana, so much so his system of philosophy gained the unenviable title of Anatmavada. Considering Atma Vidya to be irrelevent and unimportant, ended in the denial of the existence of Atma itself. Besides these two schools of thought one emphasising that knowledge is the way to Moksha and the other emphasising moral conduct there arose a third school just immediately after the Upanishadic period represented by the Vasudeva cult. This Vasudeva cult which forms the source of later Vaishnavaism emphasises the Bakthi Marga, as a third alternative method of gaining the summum bonum of life. This school is represented by the Bhagavad Gita, according to which faith in Vasudeva is the determining factor and not the individual conduct.

Jainism considers these three methods to be partial and incomplete. Each by itself, Knowledge, Karma, and Bakthi or Faith is incapable of serving as a sufficient method of Moksha Marga, though each is a necessary

complement of the same. It is this truth that is emphasised in the Tattvartha Sutra of Sri Umaswami. He begins the work with the first Sutra stating the Moksha Marga which is constituted of all the three elements Right Faith, Right Knowledge and Right Conduct. " Samyak darsana Jnana Charitrani Moksha Margaha." Thus Umaswami in trying to establish Svapaksha, his own doctrine at the same time refutes the other incomplete doctrines represented by the three above mentioned systems.

Such an important work is for the first time offered to the Tamil public with a Tamil commentary by Brahmachari **Sripal Varniji.** He clearly brings out the meaning of the Sutras and presents it to the reader in an easy and intelligible form. The Tamil public, Jains and non-Jains are indebted to him for this useful service. This work is evidently the first of a series of works which he wants to publish. We hope that he would be successful in the attempt and we expect some more volumns of a similar nature which will be welcomed and appreciated by the Tamil public. We congratulate him for publishing this very useful work in the midst of great difficulties such as paper scarcity, paper control order etc. The get up is also quite satisfactory.

# முன்னுரை

தத்த்வார்த்தஸூத்ரகர்த்தாரம் க்ருத்ரபிச்சோபலக்ஷிதம் ।
வந்தே கணீந்த்ரஸஞ்ஜாதம் உமாஸ்வாமிமுநீஶ்வரம் ॥

**நூலின் சிறப்பு**

தத்த்வார்த்த ஸூத்ரம் என்னும் இந்நூல் மிகச் சிறந்தது. இது ஜைநஸமயசாஸ்திரங்களுட் பிரசித்தி பெற்றது. இதனுடைய சிறப்பினை யறிந்து, நூலாசிரியர்காலத்தில் இருந்தவர்களும் அவருக்குப் பின்னர்த் தோன்றியவர்களும் ஆகிய ஆசிரியர்கள் தம் தம் நூல்களில் இதனை மேற்கோளாகவும் ஆசிரியவசனமாகவும் எடுத்தாண்டிருக்கின்றனர். அன்றி ஸ்ரீ பூஜ்யபாதர், அகளங்க ஸ்வாமி, வித்யாநந்த ஸ்வாமி, ஸமந்தபத்ரர், முதலான ஆசார்யர்கள் இதற்கு 'ஸர்வார்த்தஸித்தி,' 'இராஜ வார்த்திகம்,' 'ஶ்லோக வார்த்திகம்,' 'கந்தஹஸ்திமஹாபாஷ்யம்' முதலான வ்யாக்யானங்களை எழுதியுள்ளனர். இந்நூல் திகம்பர ஜைனர்கட்கும் ஶ்வேதாம்பரஜைநர்கட்கும் பொதுவானது. திகம்பரஜைநர் இதனை இயற்றியவர் ஸ்ரீ உமாஸ்வாமி யென்றும், ஶ்வேதாம்பரஜைநர் ஸ்ரீ உமாஸ்வாதி யென்றும் பெயர் கூறுகின்றனர். இயற்றியவர் யாவராயினும், இந்நூல் இன்றும் இவ்விருசாராராலும் பாராட்டிப் போற்றப்படுகின்றது.

ஆசிரியர் இந்நூலில் ஸம்ஸாரிஜீவன்கட்கு உபயோகமாகும்பொருட்டு முக்தியாகிய வீட்டினை அடையும் வழியை விளக்கமாக் கூறியுள்ளார். ஆதலால், இதனை 'மோக்ஷ ஶாஸ்த்ரம்' என்று வழங்குகின்றனர்.

இந்நூலின்கண் ஜிநதருமத்தின் அங்கங்களாகிய ஸம்யக் தர்ஶநம் ஸம்யக்ஜ்ஞானம் ஸம்யக்சாரித்ரம் ஆகிய மூன்றன் சிறப்புக்களும் அவைகட்கு விஷயமான ஜீவ அஜீவ ஆஸ்ரவ பந்த ஸம்வர நிர்ஜரா மோக்ஷம் என்னும் ஏழு தத்துவங்களின் இயல்புகளும் 'சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல்' என்னும் அழகு அமையக் கூறப்பட்டுள்ளன.

குஜராத்து தேசத்தில் கல்வியிலும் பக்தியிலும் சிறந்த துவைபாயகன் என்பானொரு ஶ்ராவகன் (க்ருஹஸ்த தர்மத்தை உடையோன்) இருந்தான். அவன், தான் நித்தியப்படி ஓதுவதற்காக மோக்ஷஶாஸ்த்ரம்

**தத்த்வார்த்த ஸூத்ரம் இயற்றிய காரணம்**

என்பதொரு நூலை இயற்றவேண்டும் என்று எண்ணி, 'நாள்தோறும் ஒரு ஸூத்ரமாவது செய்துதான் உணவு உண்பேன். இன்றேல் பட்டினிவிரதம் (உபவாஸம்) கொள்வேன்' என்று உறுதி செய்துகொண்டு, முதல்நாள், 'தர்ஶநஜ்ஞாநசாரித்ராணி மோக்ஷமார்க்க:' என்னும் ஸூத்ரத்தை இயற்றி, அது மறந்து போகாதபடி அதனைத் தனது வீட்டின் கம்பத்தில் வரைந்துவைத்தான். அவன், மறுநாள் கார்யாந்தரமாக வேறுஇடத்திற்குச் சென்றிருந்தபோது, அவன்வீட்டிற்கு முனிவர்ஒருவர் ஆஹாரார்த்தமாக (உணவு கொள்ளவேண்டி) வந்தார். துவைபாயகன்மனைவி அம் முனிவரைக் கண்டதனால் உண்டான ஆநந்தத்தை உள் அடக்க முடியாமல் கண்ணில்நின்றும் வருகின்ற பாஷ்பமூலமாக வெளியிட்டு விநயத்துடன் நமஸ்கரித்து, நவபுண்யக்ரமத்தினால் ஸத்காரம் செய்து, முக்தியாகிய வீட்டிற்கு வழியைப்போன்றவராகிய அம்முனிவர்க்கு ஆஹாரம் அளித்தாள். ஆஹாரம்

முடிந்தவுடன் அம்முனிவர் கம்பத்தில் வரைந்திருந்த ஸூத்ரத்தை நோக்கி, சற்று யோசனை செய்து, 'ஸம்யக்' என்னும் (அடைமொழியை) விசேஷணத்தைச் சேர்த்து எழுதி அவ்வீட்டினின்றும் புறப்பட்டு, தம் இருப்பிடம் சேர்ந்தார். பின், வெளியிற் சென்றிருந்த துவைபாயகன் வந்து அதனைப் பார்த்து, "'ஸம்யக்' என்னும் சப்தத்தைச் சேர்த்தவர் யார்?" என்று வினவினன். 'முனிவர் ஒருவர் ஆஹாரார்த்தமாக வந்தார். அவர்க்குப் பயபக்தியுடன் யான் ஆஹாரம் அளித்தேன். அவர் ஆஹாரம் கொண்ட பிறகு இதை எழுதினர்' என்று அவன்மனைவி கூற, அது கேட்டு அவன் பின்னும் அவளை நோக்கி, 'அம்முனிவர் எங்கே சென்றார்?' என்று கேட்க. 'இவ்வழியாகச் சென்றார்' என்று அவள் முனிவர் சென்ற திசையைக் காட்ட, அவன், அவரைத் தேடுவதற்காக வீட்டினின்றும் புறப்பட்டு அவ்வழியே காட்டிற்குச் சென்று பல விடங்களிலும் தேடிக் காணுமல், முடிவில் ஒரு வனத்தையடைந்து, ஆங்கு, செடி கொடி புதர்களினல் சூழப்பட்டதும் சுத்தமான இடமுள்ளதும் ஆகிய ஓர் ஆச்ரமத்தில் அநேகசிஷ்யர்களால் சூழப்பட்டவரும், அழகு வாய்ந்த உருவமுள்ளவரும், பத்துத்திசைகளிலும் பரவிய உடலின் ஒளியை உடையவரும், உயர்ந்த ஆஸனத்தின்மீது அமர்ந்திருப்பவரும் ஆகிய முனிவரைக் கண்டு 'இவராகத்தான் இருக்கவேண்டும்' என்றெண்ணி, அவரிடஞ் சென்று வணங்கி, 'மோக்ஷ ஶாஸ்திரத்தினை இயற்றுதற்குத்தாங்களே தகுந்தவர். ஆதலின், தாங்களே அதனை இயற்றியருளவேண்டும்' என்று வேண்டிக் கொண்டான். அவனது வேண்டுகோளுக் கிணங்கி, அவனுடைய வினக்களுக்குத்தக்கவாறு விடை ரூபமாக அம்

முனிவர் 'தத்வார்த்த ஸூத்ரம்' என்னும் இந்நூலைச் செய்தருளினர். முதலில் அவன் கேட்ட கேள்வியாவது—

'பகவன், ஆத்மாவிற்கு ஹிதம் யாது?' என்பது.

விடை :—மோக்ஷம்.

வினு :—மோக்ஷத்தினை அடையும் வழி யாது ?

விடை :—ஸம்யக்தர்ஶந ஜ்ஞானசாரித்ராணி மோக்ஷ மார்க்க :

இத்தகைய வினுவிற்குரிய விடைகளே இந்நூலாகும். ஆதலால், இதனை மோக்ஷ ஶாஸ்திரம் என்று வழங்குகின்றனர்.

## இந்நூலில் அடங்கியவை

**முதல் அத்யாயத்தில்** :— மோக்ஷத்தின் வழி, ஸம்யக்தர்ஶனத்தின் இயல், ஸப்ததத்துவம், ஸம்யக்ஜ்ஞானம், ஸப்தநயம் முதலியன.

**இரண்டாம் அத்யாயத்தில்** :—ஜீவனுடைய அஸாதாரண லக்ஷணமாகிய பஞ்சபாவம், ஜீவன் வகை, இந்திரியங்கள், யோனி பேதம், ஜன்மபேதம், சரீரங்கள் முதலியன.

**மூன்றும் அத்யாயத்தில்** :—நரகஜீவன்கள் வசிக்கும் இடம், நரகஜீவன்களின் துக்கம் முதலியனவும், மத்திமலோகத்தின் வர்ணனை-யும் உள்ளன.

**நான்காம் அத்யாயத்தில் :**—நால்வகைத் தேவர்களுடைய ஆயுள், பேதம், இருப்பிடம், சரீர அளவு முதலியன.

**ஐந்தாம் அத்யாயத்தில்:**—தர்மம், அதர்மம், ஆகாஶம், காலம், புத்கலம் ஆகிய அஜீவதத்த்வங் களின் வர்ணனை.

**ஆரும் அத்யாயத்தில் :**—ஆஸ்ரவ தத்த்வம், எட்டுக் கர்மங் களினது ஆஸ்ரவ காரணம் முதலியன.

**ஏழாம் அத்யாயத்தில் :**—ஶுபஆஸ்ரவத்திற்குக் காரண மான இல்லற நெறி.

**எட்டாம் அத்யாயத்தில்:**—பந்ததத்த்வ வர்ணனை.

**ஒன்பதாம் அத்யாயத்தில்:**—ஸம்வரதத்த்வம், நிர்ஜரா தத்த்வம் ஆகியவை

**பத்தாம் அத்யாயத்தில் :**—மோக்ஷதத்த்வ வர்ணனை.

இத்தகைய பல தத்துவங்கள் அடங்கியிருத்தலின் இந்நூல் ஜைனசமய நூல்களுட் சிறப்புடையதா யுளது. இந்நூல் ஸுலபமான ஸூத்ரங்களால் இயன்றிருத்தலின் இதனை யாவரும் மனப்பாடஞ் செய்வது எளிதாகும். அதனுல் இந்நூலை இளஞ்சிறுவர்கட்குக் கற்பித்து வருவது வழக்கில் உளது. இதனை ஜைனர் ஒவ்வொருவரும் கற்றுத் தெளிவது இன்றியமையாததென்பது ஒருதலை.

யான் மேல்சித்தாமூர்மடத்தில் தங்கி மாணுக்கர்கட்கு ஜைநமத தத்துவங்களைப் போதித்துவந்த காலத்தில் தத்த்வார்த்த ஸூத்ரம் என்னும் மோக்ஷஶாஸ்த்ரத்தினைப்

போதிக்க ஆரம்பித்தபோது, தமிழ்உரையுடன் இருந்தால் மாணுக்கர் அறிதற்குச் சுலபமாகும் என்றெண்ணிப் பழைய உரைகளை நோக்கியவிடத்து அவ்வுரைகள் இளமாணுக்கர் எளிதின் அறிதற்கு இயலாதனவாய் இருந்தன. அதனுல், ராஜவார்த்திகம் ஸர்வார்த்தஸித்தி கோமடஸாரம் தத்த்வார்த்தஸூத்ரம் ஹிந்தியுரை இவைகளைத் தழுவிச் சுலபமான தமிழ்நடையில் பதவுரை கருத்துரை குறிப்புரைகளை எழுதி மாணுக்கர்களுக்குப் போதித்துவந்தேன். அப்போது இந்நூலைக் கண்ட சிலர், 'இதனை அச்சிட்டு வெளிப்படுத்தின், நம் தமிழ்நாட்டிற்கு மிக்க பயன் உண்டாகும்' என்றனர். அதனையறிந்து தொரைப்பாடி ஸ்வஸ்திஸ்ரீ க்ஷுல்லக வர்த்தமான ஸாகரர், வளத்தி ஸ்ரீமதி கெம்பம்மாள், மேல்மலையனூர் ஸ்ரீமான் சந்த்ரநாத நைனர், மேல்சித்தாமூர் ஸ்ரீமான் பத்மராஜ பண்டிதர், அவர்மனைவி ஜிநதத்தைஅம்மாள், மேல்சித்தாமூர் ஸ்ரீமதி தனமதி அம்மாள் ஆகிய இவர்கள் இந்நூலை அச்சிட முன்வந்தனர். அவர்களுள் மேல் சித்தாமூர் பத்மராஜ பண்டிதரும் தனமதி அம்மாளும் 'இந்நூல் வெளி வருவதற்கு வேண்டிய பொருளுதவியை யாங்களே செய்கின்றோம்' என்று உறுதி கூறினா. அவர்களுடைய அன்பும் ஶாஸ்த்ரதானத்தில் அவர்களுக்குள்ள ஶ்ரத்தையும் அளவிடற்பாலன அல்ல. இத்தகைய தானஶீலர்களின் பெருஞ்செயல் யாவராலும் பாராட்டற்பாலன. இவர்களது ஆதரவைக்கொண்டு அச்சிடக் கருதி, நாகரம் கிரந்தம் தமிழ் ஆகிய மூன்றுபாஷைகளிலும் ஸூத்ரமும் பதமும் இருந்தால் நலமென்று எண்ணி அவ்வாறே ஒரு முறை எழுதினேன். அவ்வாறிருப்பின், புஸ்தகம் விரிவாகிவிடும் என்று அஞ்சி, கிரந்தமும் தமிழும்

இருந்தால் போதும் என்று தீர்மானித்து, அவ்வாறு நூல் முழுதும் எழுதி வைத்திருந்தேன்.

புஸ்தகம் அச்சிடுதற்குக் காகிதம் கிடைக்காத கஷ்டத்தினால் ஒருவருஷகாலம்வரைக்கும் அச்சு வேலை ஆரம்பிக்க இயலவில்லை. பின்னர், நம் தமிழ்நாட்டு ஜைநருக்கு ஸ்ரீபுராணம் வெளிப்படுத்தி உதவிபுரிந்த திருவாளர் **வே. வேங்கடராஜுலு** ரெட்டியாரவர்களிடம் இவ்விஷயத்தை அறிவித்தபோது, அவர்கள் இவ்வேலையைப் பூர்த்தி செய்து தருவதாக உவந்து கூறி அவ்வாறே காகிதம் வாங்கித் தந்தும், அச்சிடும்போது ப்ரூப்களைப் பார்த்துத் திருத்தியும் விரைவில் வெளிவருதற்கு வேண்டு-வன செய்து உதவினார்கள். பச்சையப்பன் கல்லூரி ஆங்கிலப்பேராசிரியர் ஸ்ரீமான் அப்பாண்டைராஜ் ஜைன் அவர்கள் 10-ஆம் பாரம்வரைக்கும் ப்ரூப் திருத்தி உதவி புரிந்தார்கள். சென்னை தாம்ஸன் கம்பெனி சொந்தக்காரர் ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸராகவாசார்யர் B.A.,B.L. அவர்கள் மிக்க அன்போடு இந்நூலை நல்ல பதிப்பாக விரைவில் அச்சிட்டார்கள். இவர்கள் அனைவருக்கும் நன்றி பாராட்டுதலுடையேன்.

இந்நூல் நம் தமிழ்நாட்டில் உள்ள ஜைநப்பெரியோர்களுக்கும் மாணாக்கர்கட்கும் ஜைநமததத்துவங்களையறிய விருப்பமுள்ள ஆஸ்திகமதாவலம்பிகளான ஜைநேதரர்களுக்கும் உபயோகமாகுமென்று நம்புகின்றேன்.

ஸ்ரீபாலவர்ணீ

# மதிஜ்ஞானத்தின் 336 பேதம்

## மதிஜ்ஞானம்

| 1 அவக்ரஹ: | | 2 ஈஹா | 3 அவாய: | 4 தாரணா |
|---|---|---|---|---|
| வ்யஞ்ஜனவக்ரஹ: | அர்த்தாவக்ரஹ: | | | |
| பஹு: | பஹு: | பஹு: | பஹு: | பஹு: |
| பஹுவித: | பஹுவித: | பஹுவித: | பஹுவித: | பஹுவித: |
| க்ஷிப்ர: | க்ஷிப்ர: | க்ஷிப்ர: | க்ஷிப்ர: | க்ஷிப்ர: |
| அநிஸ்ருத: | அநிஸ்ருத: | அநிஸ்ருத: | அநிஸ்ருத: | அநிஸ்ருத: |
| அநுக்த: | அநுக்த: | அநுக்த: | அநுக்த: | அநுக்த: |
| த்ருவ: | த்ருவ: | த்ருவ: | த்ருவ: | த்ருவ: |
| ஏக: | ஏக: | ஏக: | ஏக: | ஏக: |
| ஏகவித: | ஏகவித: | ஏகவித: | ஏகவித: | ஏகவித: |
| அக்ஷிப்ர: | அக்ஷிப்ர: | அக்ஷிப்ர: | அக்ஷிப்ர: | அக்ஷிப்ர: |
| நிஸ்ருத: | நிஸ்ருத: | நிஸ்ருத: | நிஸ்ருத: | நிஸ்ருத: |
| உக்த: | உக்த: | உக்த: | உக்த: | உக்த: |
| அத்ருவ: | அத்ருவ: | அத்ருவ: | அத்ருவ: | அத்ருவ: |
| ஸ்பர்சனம் ரஸனம் க்ராணம் ஸ்ரோத்ரம் | ஸ்பர்சனம் ரஸனம் க்ராணம் சக்ஷு: ஸ்ரோத்ரம் மன: | ஸ்பர்சனம் ரசனம் க்ராணம் சக்ஷு: ஸ்ரோத்ரம் மன: | ஸ்பர்சனம் ரசனம் க்ராணம் சக்ஷு: ஸ்ரோத்ரம் மன: | ஸ்பர்சனம் ரஸனம் க்ராணம் சக்ஷு: ஸ்ரோத்ரம் மன: |
| 12×4 | 12×6 | 12×6 | 12×6 | 12×6 |
| 48 + | 72 + | 72 + | 72 + | 72 = 336 |

# அங்கப்ரவிஷ்டஶ்ருதஜ்ஞானத்தின் விஸ்தார அமைப்பு

## அங்கப்ரவிஷ்டம்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆசாரः, | ஸூத்ரக்ருதம், | ஸ்தானம், | ஸமவாயः, | வியாக்யாப்ரஜ்ஞப்திः, | ஜ்ஞாத்ருதர்மகதா, | உபாஸகாத்யயனம், | அந்தக்ருத்தஶாங்கம், | அநுத்தரோபபாதிகதஶம், | ப்ரசனவ்யாகரணம், | விபாகஸூத்ரம் | த்ருஷ்டிவாதः. |

### 12. த்ருஷ்டிவாதः

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| பரிகர்ம, | ஸூத்ரம், | ப்ரதமானுயோகः, | பூர்வகதம், | சூலிகா. |

### 1. பரிகர்ம

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| சந்த்ரப்ரஜ்ஞப்திः, | ஸூர்யப்ரஜ்ஞப்திः, | ஜம்பூத்வீபப்ரஜ்ஞப்திः, | த்வீபஸாகரப்ரஜ்ஞப்தி, | வியாக்யாப்ரஜ்ஞப்திः. |

### 4. பூர்வகதம்

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உத்பாதபூர்வம், | ஆக்ராயணீயம், | வீர்யானுப்ரவாதம், | அஸ்திநாஸ்திப்ரவாதம், | ஞானப்ரவாதம், | ஸத்யப்ரவாதம், | ஆத்மப்ரவாதம், | கர்மப்ரவாதம், | ப்ரத்யாக்யானநாமதேயம், | வித்யாநுவாதம், | கல்யாணநாமதேயம், | ப்ராணவாயப்ரவாதம், | க்ரியாவிஶாலம், | லோகபிந்துஸாரம். |

### 5. சூலிகா

| 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|
| ஜலகதா | ஸ்தலகதா | மாயாகதா | ஆகாசகதா | ரூபகதா |

# அவதிஜ்ஞானத்தின் பேதம்

அவதிஜ்ஞானம்



# ஜீவனுடைய 53 பாவங்கள்

## பாவ:

### ஔபஶமிக: 2
- ஸம்யக்த்வம்
- சாரித்ரம்

### க்ஷாயிக: 9
1. கேவலஜ்ஞானம்
2. கேவலதர்சனம்
3. க்ஷாயிகதானம்
4. ,, லாப:
5. ,, போக:
6. ,, உபபோக:
7. ,, வீர்யம்
8. ,, ஸம்யக்த்வம்
9. ,, சாரித்ரம்

### க்ஷாயோபஶமிக: 18

ஜ்ஞானம்,
1. மதி:
2. ஶ்ருதம்
3. அவதி:
4. மன: பர்யய:

அஜ்ஞானம்,
1. குமதி:
2. குஶ்ருதம்
3. குஅவதி:

தர்சனம்.
1. சக்ஷு:
2. அசக்ஷு:
3. அவதி:

லப்தி:
1. தானம்
2. லாப:
3. போக:
4. உப போக:
5. வீர்யம்

- க்ஷாயோபஶமிகஸம்யக்த்வ
- க்ஷாயோபஶமகசாரித்ரம்
- ஸம்யமாஸம்யமம்

### ஔதயிக: 21

கதி:,
1. நரககதி:
2. திர்யக்கதி:
3. மநுஷ்யகதி:
4. தேவகதி:

கஷாய:,
1. க்ரோத:
2. மான:
3. மாயா
4. லோப:

லிங்க:,
1. ஸ்திரீ லிங்க:
2. புருஷ ,,
3. நபும்ஸக ,,

மித்யா தர்சனம், அஜ் ஞானம், அஸம் யதம், அஸித் தத்வம்,

லேஶ்யா
1. க்ருஷ்ண
2. நீல
3. காபோத
4. பீத
5. பத்ம
6. சுக்ல

### பாரிணாமிக:3
- ஜீவத்வம்
- பவ்யத்வம்
- அபவ்யத்வம்

## உபயோகத்தின் பேதம்

### உபயோகம்

- தர்ஶனோபயோகம்
  - சக்ஷுர:, அசக்ஷுர:, அவதி:, கேவலம்
- ஜ்ஞானோபயோகம்
  - மதி:, ஶ்ருதம், அவதி:, மனப்பர்யய:, கேவலம், குமதி:, குஶ்ருதம், குஅவதி:.

| | |
|---|---|
| ஞானோபயோகம் | 8 |
| தர்ஶனோபயோகம் | 4 |
| ஆக | 12 |

# ஜீவன்களின் பேதம்


ஜீவன்கள்
ஸம்ஸாரிகள்
முக்தர்கள்
த்ரஸ:
ஸ்தாவர:
ப்ருத்வீ காயிக:,
ஜலகாயிக:,
அக்நி காயிக:,
வாயு காயிக:,
வனஸ்பதி காயிக:.
த்வீந்த்ரிய:,
த்ரீந்த்ரிய:,
சதுரிந்த்ரிய:,
பஞ்சேந்த்ரிய:.
ஸம்ஜ்ஞீ
அஸம்ஜ்ஞீ

# நரகத்தின் அமைப்புக்கள்

| எண் | ப்ருத்வீ | ப்ரஸ்தார: | பிலம் | சரீரத்தின் உயரம் | லேஶ்யை | ஶீதோஷ்ண வேதனை | உத்க்ருஷ்ட ஆயுள் | ஜகன்ய ஆயுள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | ரத்னப்ரபை | 13 | 3000000 | த. மு. அ. 7 3 6 | ஜகன்ய காபோதம் | உஷ்ண வேதனை | 1 ஸாகரோபமம் | 10000 வர்ஷம் |
| 2 | ஶர்க்கரா ப்ரபை | 11 | 2500000 | த. மு. அ. 15 2 12 | மத்யம காபோதம் | உஷ்ண வேதனை | 3 ஸாகரோபமம் | 1 ஸாகரோபமம் |
| 3 | வாலுகா ப்ரபை | 9 | 1500000 | த. முழம். 31 1 | உத்கிருஷ்ட காபோதமும் ஜகன்ய நீலமும் | உஷ்ண வேதனை | 7 ஸாகரோபமம் | 3 ஸாகரோபமம் |
| 4 | பங்கப்ரபை | 7 | 1000000 | த. முழம். 62 2 | மத்யம நீலம் | உஷ்ண வேதனை | 10 ஸாகரோபமம் | 7 ஸாகரோபமம் |
| 5 | தூமப்ரபை | 5 | 300000 | தனுஷ். 125 | உத்கிருஷ்ட நீலமும் ஜகன்ய கிருஷ்ணமும் | உஷ்ணமும் ஶீதமும் | 17 ஸாகரோபமம் | 10 ஸாகரோபமம் |
| 6 | தம:ப்ரபை | 3 | 99995 | தனுஷ். 250 | மத்யம கிருஷ்ணம் | ஶீதவேதனை | 22 ஸாகரோபமம் | 17 ஸாகரோபமம் |
| 7 | மஹாதம: ப்ரபை | 1 | 5 | தனுஷ். 500 | உத்கிருஷ்ட கிருஷ்ணம் | ஶீதம் | 33 ஸாகரோபமம் | 22 ஸாகரோபம |

# க்ஷேத்ரம், பர்வதம் இவைகளின் விஸ்தாரம் முதலியன.

| க்ஷேத்ரம் | பர்வதம் | விஸ்தாரம் | உயரம் | ஆழம் |
|---|---|---|---|---|
| பரத: | ... | $526\frac{6}{19}$ யோஜனை | ... | ... |
| | ஹிமவான் | $1052\frac{12}{19}$ ,, | 100 யோஜனை | 25யோஜனை |
| ஹைமவத: | ... | $2105\frac{5}{19}$ ,, | ... | ... |
| | மஹா ஹிமவான் | $4210\frac{10}{19}$ ,, | 200 யோ. | 50 யோ. |
| ஹரி: | ... | $8421\frac{1}{19}$ ,, | ... | ... |
| | நிஷத: | $16842\frac{2}{19}$ ,, | 400 யோ. | 100 யோ. |
| விதேஹ: | ... | $33684\frac{4}{19}$ ,, | ... | ... |
| | நீல: | $16842\frac{2}{19}$ ,, | 400 யோ. | 100 யோ. |
| ரம்யக: | ... | $8421\frac{1}{19}$ ,, | ... | ... |
| | ருக்மீ | $4210\frac{10}{19}$ ,, | 200 யோ. | 50 யோ. |
| ஹைரண்யவத: | ... | $2105\frac{5}{19}$ ,, | ... | ... |
| | ஶிகரீ | $1052\frac{12}{19}$ ,, | 100 யோ. | 25 யோ. |
| ஐராவத: | ... | $526\frac{6}{19}$ ,, | ... | ... |

## பொய்கைகளின் விஸ்தாரம் முதலானவைகள்

| பெயர் | உற்பத்தி ஸ்தானம் | நீளம் | அகலம் | ஆழம் | தாமரை | தேவியர் |
|---|---|---|---|---|---|---|
| 1 பத்மஃ | ஹிமவான் | 1000 யோ. | 500 யோ. | 10 யோ. | 1 யோ. | ஸ்ரீ |
| 2 மஹாபத்மஃ | மஹாஹிமவான் | 2000 ,, | 1000 ,, | 20 ,, | 2 ,, | ஹ்ரீ |
| 3 திகிஞ்சஃ | நிஷதஃ | 4000 ,, | 2000 ,, | 40 ,, | 4 ,, | த்ருதிஃ |
| 4 கேஸரீ | நீலஃ | 4000 ,, | 2000 ,, | 40 ,, | 4 ,, | கீர்த்திஃ |
| 5 மஹா புண்டரீகஃ | ருக்மீ | 2000 ,, | 1000 ,, | 20 ,, | 2 ,, | புத்திஃ |
| 6 புண்டரீகஃ | ஶிகரீ | 1000 ,, | 500 ,, | 10 ,, | 1 ,, | லக்ஷ்மீ |

# த்ரவ்யத்தின் பேதம்


த்ரவ்யம்
ஜீவ:
அஜீவ:
முக்த:
ஸம்ஸாரீ
புத்கலః
தர்மః
அதர்மః
ஆகாஶః
காலః
அணு:
ஸ்கந்தః
லோகః
அலோகः
நிச்சயः
வ்யவஹாரः
த்ரஸ:
ஸ்தாவர:
த்வீந்த்ரியः, த்ரீந்த்ரியः, சதுரிந்த்ரியः, பஞ்சேந்த்ரியः
ப்ருத்வீ, ஜலம், தேஜஸ், வாயுः, வனஸ்பதி:


பஞ்சேந்த்ரியஃ
ஸம்ஜ்ஞீ
அஸம்ஜ்ஞீ
நாரகர்,
திர்யக்,
மனுஷ்யர்,
தேவர்
ரத்னப்ரபை முதலான எழு நரகத்தில் உள்ளவர்கள்
1. ஜலசர:
2. ஸ்தலசர:
3. நபச்சர:
ஆர்யர்
மிலேச்சர்
பவணர், வ்யந்தரர், ஜ்யோதிஷ்கர், வைமானிகர்
ருத்திப்ராப்தர்
அந்ருத்திப்ராப்தர்
க்ஷேத்ரமிலேச்சர்
கர்மமிலேச்சர்
புத்தி ருத்தி, விக்ரியா ருத்தி, தப ருத்தி, பல ருத்தி, ஔஷதி ருத்தி, ரஸ ருத்தி, அக்ஷீண ருத்தி
க்ஷேத்ரார்யர் ஜாத்யார்யர் கர்மார்யர் சாரித்ரார்யர் தர்சனார்யர்

# விஷயஸூசிகை

## அத்யாயம் 1


| | | ஸூ. | பக். |
|---|---|---|---|
| மோக்ஷத்தின் வழி | ... | 1 | 1 |
| நற்காட்சியியல் | ... | 2 | 4 |
| நற்காட்சியின் வகை | ... | 3 | 5 |
| தத்துவங்களின் பெயர் | ... | 4 | 6 |
| நற்காட்சி முதலானவைகளையும் ஜீவன் முதலானவைகளையும் உணரும் வழி | ... | 5 | 7 |
| ஜீவன் முதலானவைகளைச் சுருக்கமாக உணரும் வழி | ... | 6 | 9 |
| ப்ரமாணங்களினாலும் நயங்களினாலும் உணர்ந்த பொருள்களை மற்றும் உணரும் வழி | ... | 7 | 9 |
| மற்றும் ஜீவன் முதலானவைகளை உணரும் வழி. | | 8 | 10 |
| ஸம்யக்ஜ்ஞானத்தின் வகை | ... | 9 | 11 |
| ப்ரமாண இயல் | ... | 10 | 12 |
| பரோக்ஷ ப்ரமாணத்தின் பேதம் | ... | 11 | 13 |
| ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தின் பேதம் | ... | 12 | 13 |
| மதிஜ்ஞானத்தின் மறு பெயர்கள் | ... | 13 | 14 |
| மதிஜ்ஞானத்தின் உற்பத்திக்காரணம் | ... | 14 | 15 |
| மதிஜ்ஞானத்தின் வகை | ... | 15 | 15 |
| அவக்ரஹம் முதலானவற்றிற்குத் தோன்றும் பொருள்கள் | ... | 16 | 16 |
| ஶ்ருதஜ்ஞான இயல் | ... | 20 | 22 |
| அவதிஜ்ஞான இயல் | ... | 21 | 28 |
| பவப்ரத்யய அவதிஜ்ஞானம் இன்னாருக்கு உண்டாகும் என்பது | ... | 21 | 2[illegible] |

| | | ஸூ. | பக். |
|---|---|---|---|
| க்ஷயோபஶமநிமித்த அவதிஜ்ஞானம் இன்னாருக்குஉண்டாகும் என்பது | ... | 22 | 29 |
| மநःபர்யயஜ்ஞானத்தின் வகை | ... | 23 | 31 |
| இருவகை மநःபர்யயஜ்ஞானங்களின் விஶேஷம். | | 24 | 32 |
| அவதிஜ்ஞானம் மநःபர்யயஜ்ஞானம் இவற்றின் விஶேஷம் | ... | 25 | 32 |
| மதிஜ்ஞானம் ஶ்ருதஜ்ஞானம் இவற்றின் இயல். | | 26 | 33 |
| அவதிஜ்ஞானத்தினது பொருளை யறியுந்தன்மை. | | 27 | 34 |
| மநःபர்யயஜ்ஞானத்தின் இயல் | ... | 28 | 34 |
| கேவலஜ்ஞானத்தின் இயல | ... | 29 | 35 |
| ஒரு சமயத்தில் ஒரு ஜீவனிடத்தில் இத்தனை ஜ்ஞானங்கள் இருக்கும் என்பது | ... | 30 | 35 |
| மதிஶ்ருத அவதிஜ்ஞானங்களினது மாறுதல். | | 31 | 36 |
| மித்யாத்ருஷ்டியின் ஜ்ஞானம் மித்யாஜ்ஞானமே. | | 32 | 37 |
| நயங்களின் வகை | ... | 33 | 38 |


---

## அத்யாயம் 2


| | | | |
|---|---|---|---|
| ஜீவனுடைய அஸாதாரண பாவம் | ... | 1 | 43 |
| ஐந்து பாவங்களின் பிரிவு | ... | 2 | 44 |
| ஔபஶமிக பாவம் இருவகை | ... | 3 | 45 |
| க்ஷாயிக பாவம் ஒன்பது வகை | ... | 4 | 46 |
| க்ஷாயோபஶமிக பாவம் பதினெட்டு வகை | ... | 5 | 47 |
| ஔதயிக பாவம் இருபத்தொரு வகை | ... | 6 | 48 |
| பாரிணாமிக பாவம் மூன்று வகை | ... | 7 | 48 |
| ஜீவனது லக்ஷணம் | ... | 8 | 49 |
| உபயோகத்தின் வகை | ... | 9 | 49 |
| ஜீவபேதம் | ... | 10 | 50 |
| ஸம்ஸாரி ஜீவன்களின் வகை | ..... | 11 | 50 |
| ஸ்தாவர ஜீவன்களின் வகை | ... | 13 | 51 |
| த்ரஸ ஜீவன்கள் வகை | ... | 14 | 51 |

| | | ஸூ. | பக். |
|---|---|---|---|
| ஐந்து ஐந்திரியங்கள் | ... | 15 | 52 |
| இந்திரியங்களின் வகை | ... | 16 | 52 |
| த்ரவ்யேந்திரியத்தின் லக்ஷணம் | ... | 17 | 52 |
| பாவேந்திரிய லக்ஷணம் | ... | 18 | 53 |
| ஐந்து இந்திரியங்கள் | ... | 19 | 54 |
| இந்திரியங்களின் விஷயங்கள் | ... | 20 | 54 |
| மனத்தின் விஷயம் | ... | 21 | 54 |
| இந்திரியங்களையுடைய ஜீவன்கள் | ... | 22 | 55 |
| ஸமநஸ்கருடைய மறு பெயர் | ... | 24 | 56 |
| விக்ரஹகதி | ... | 25 | 56 |
| கதி எப்படி ஆகும் | ... | 26 | 57 |
| முக்த ஜீவன்களின் கதி | ... | 27 | 58 |
| ஸம்ஸாரி ஜீவன்களின் கதி | ... | 28 | 58 |
| அவிக்ரஹாகதியின் காலம் | ... | 29 | 59 |
| விக்ரஹகதியில் அநாஹாரக அவஸ்தை | ... | 30 | 60 |
| ஜன்மத்தின் பேதம் | ... | 31 | 61 |
| யோனிகளின் பேதம் | ... | 32 | 61 |
| கர்ப்பஜன்மம் இன்னவருக்கு உண்டாகும் என்பது | ... | 33 | 63 |
| உபபாத ஜன்மம் இன்னவருக்கு உண்டாகும் என்பது | ... | 34 | 64 |
| ஸம்மூர்ச்சன ஜன்மம் இன்னவருக்கு உண்டாகும் என்பது | ... | 35 | 64 |
| ஶரீரங்களின் பெயர் | ... | 36 | 65 |
| ஶரீரங்களின் ஸூக்ஷ்மம் | ... | 37 | 66 |
| ஶரீரங்களின் ப்ரதேஶங்கள் | ... | 38 | 66 |
| தைஜஸஶரீரம் கார்மணஶரீரம் இவற்றின் விஶேஷம் | ... | 40 | 67 |
| ஒரு ஜீவனுக்கு இத்தனை ஶரீரங்கள் இருக்கும் என்பது | ... | 43 | 68 |
| கார்மண ஶரீரத்தின் விஶேஷம் | ... | 44 | 69 |

| | | ஸூ. | பக். |
|---|---|---|---|
| ஔதாரிக ஶரீரத்தின் லக்ஷணம் | ... | 45 | 69 |
| வைக்ரியிக ஶரீரத்தின் லக்ஷணம் | ... | 46 | 70 |
| ஆஹாரக ஶரீரத்தின் லக்ஷணமும் அதனை உடையவரும் | ... | 49 | 70 |
| லிங்கங்களுக்கு உடையவர் | ... | 50 | 71 |
| அகாலமரணம் யாருக்கு உண்டாகாது? | ... | 53 | 72 |

---

## அத்யாயம் 3

| | | | |
|---|---|---|---|
| நரக பூமிகள் ஏழு | ... | 1 | 74 |
| ஏழு பூமிகளிலும் உள்ள நரகங்கள் | ... | 2 | 74 |
| நாரகர்களின் துக்கம் | ... | 3 | 75 |
| நாரகர்களின் உத்கிருஷ்ட ஆயுள் | ... | 6 | 77 |
| மத்யம லோகத்தின் வர்ணனை | ... | 7 | 78 |
| த்வீப ஸமுத்திரங்களின் விஸ்தீர்ணம் | ... | 8 | 78 |
| ஜம்பூத்வீபத்தின் விஸ்தீரணமும் ஆகாரமும் | ... | 9 | 79 |
| ஏழு க்ஷேத்திரங்களின் பெயர் | ... | 10 | 80 |
| ஆறு பர்வதங்களின் பெயர் | ... | 11 | 80 |
| பர்வதங்களின் நிறம் | ... | 12 | 81 |
| பர்வதங்களின் உருவம் | ... | 13 | 81 |
| பர்வதங்களில் இருக்கும் பொய்கைகள் | ... | 14 | 81 |
| முதற் பொய்கையின் நீளமும் அகலமும் | ... | 15 | 82 |
| பொய்கையின் நடுவில் இருப்பது | ... | 17 | 83 |
| மஹாபத்மம் முதலான .பொய்கைகளும் அவைகளில் இருக்குங் கமலங்களும் இத்தகையன என்பது | ... | 18 | 83 |
| ஆறு தாமரைகளிலும் வசிக்கும் ஆறு தேவிகள் | ... | 19 | 83 |
| பதினான்கு நதிகள் | ... | 20 | 84 |
| நதிகள் பாயும் வழி | ... | 21 | 86 |
| உபநதிகள் | ... | 23 | 87 |

| | ஸூ. | பக். |
|---|---|---|
| பரதக்ஷேத்ரத்தின் விஸ்தீர்ணம் ... | 24 | 87 |
| ஏனைய க்ஷேத்ரங்கள் பர்வதங்கள் இவற்றின் விஸ்தீர்ணம் ... | 25 | 88 |
| விதேஹக்ஷேத்ரத்தின் வடக்கில் உள்ள பர்வதங்கள் க்ஷேத்ரங்கள் இவற்றின் விஸ்தாரம் ... | 26 | 88 |
| பரத க்ஷேத்ரத்திலும் ஐராவத க்ஷேத்ரத்திலும் கால பரிவர்த்தனே ... | 27 | 89 |
| ஆறு காலங்களின் அளவு ... | 27 | 90 |
| ஏனைய க்ஷேத்ரங்களின் தன்மை ... | 28 | 92 |
| ஹைமவதம் முதலான க்ஷேத்ரங்களில் உள்ளவர்களின் ஆயுள் ... | 29 | 92 |
| ஹைரண்யவதம் முதலான க்ஷேத்ரங்களில் உள்ளவர்களின் ஆயுள் ... | 30 | 93 |
| விதேஹக்ஷேத்ரத்தில் உள்ளவர்களின் ஆயுள் ... | 31 | 94 |
| பரதக்ஷேத்ரத்தின் விஸ்தீர்ணம் வேறு வகையாகக் கூறுகிறார் ... | 32 | 94 |
| தாதகீஷண்டத்வீபத்தின் வர்ணனே ... | 33 | 95 |
| புஷ்கரவரத்வீபத்தின் வர்ணனே ... | 34 | 95 |
| மநுஷ்ய க்ஷேத்ரம் ... | 35 | 96 |
| மனிதர்களின் பேதம் ... | 36 | 96 |
| கர்ம பூமிகளின் வர்ணனே ... | 37 | 98 |
| மனிதர்களின் உத்க்ருஷ்ட ஆயுளும் ஜகன்ய ஆயுளும் ... | 38 | 99 |
| விலங்குகளுடைய ஆயுள் ... | 39 | 99 |

## அத்யாயம் 4


| | ஸூ. | பக். |
|---|---|---|
| தேவர்களின் வகை ... | 1 | 101 |
| பவணர் வயந்தரர் ஜ்யோதிஷ்கர்களின் லேஶ்யை ... | 2 | 101 |
| தேவர்களின் உட்பிரிவு ... | 3 | 101 |
| தேவர்களின் ஸாமான்ய பேதம் ... | 4 | 102 |
| இந்திரர்கள் ... | 6 | 104 |
| தேவர்களின் ஸ்த்ரீசுகம் ... | 7 | 104 |
| பவண தேவர்களின் பத்து வகை ... | 10 | 106 |
| வ்யந்தர தேவர்களின் எட்டு வகை ... | 11 | 106 |
| ஜ்யோதிஷ்க தேவர்களின் ஐந்து வகை ... | 12 | 106 |
| ஜ்யோதிஷ்க தேவர்களின் விஶேஷம் ... | 13 | 107 |
| வைமாநிகரின் வகை ... | 17 | 109 |
| கல்பங்களின் அமைப்பு ... | 18 | 109 |
| வைமாநிக தேவர்கள் வசிக்கும் இடம் ... | 19 | 109 |
| மேன்மேல் இருக்கும் வைமானிக தேவர்களுக்கு அதிகமானவை ... | 20 | 110 |
| வைமானிக தேவர்களுக்கு மேன்மேல் குறைவானவை ... | 21 | 111 |
| வைமானிக தேவர்களின் லேஶ்யை ... | 22 | 112 |
| கல்போபபந்நர் இவர் என்பது ... | 23 | 113 |
| லௌகாந்திக தேவர்கள் ... | 24 | 113 |
| லௌகாந்திக தேவர்களின் பெயர் ... | 25 | 114 |
| அனுத்திசை விமாநதேவர்களினதும் அனுத்தர விமாநதேவர்களினதும் பிறப்பின் நியமம் ... | 26 | 114 |
| விலங்குகள் ... | 27 | 115 |
| பவணதேவர்களின் உத்கிருஷ்ட ஆயுள் ... | 28 | 115 |
| வைமாநகரின் உத்கிருஷ்ட ஆயுள் ... | 29 | 116 |
| ஜகன்ய ஆயுள் ... | 33 | 119 |
| நாரகர்களின் ஜகன்ய ஆயுள் ... | 35 | 120 |

| | | ஸூ. | பக். |
|---|---|---|---|
| முதல் நரகத்தில் இருப்பவர்களின் ஜகன்ய ஆயுள் | ... | 36 | 120 |
| பவணர்களின் ஜகன்ய ஆயுள் | ... | 37 | 120 |
| வ்யந்தரர்களின் ஜகன்ய ஆயுள் | ... | 38 | 121 |
| வ்யந்தரர்களின் உத்கிருஷ்ட ஆயுள் | ... | 39 | 121 |
| ஜ்யோதிஷ்க தேவர்களின் உத்கிருஷ்ட ஆயுள். | | 40 | 121 |
| ஜ்யோதிஷ்க தேவர்களின் ஜகன்ய ஆயுள் | ... | 41 | 121 |
| லௌகாந்திக தேவர்களின் ஆயுள் | ... | 42 | 122 |


## அத்யாயம் 5


| | | | |
|---|---|---|---|
| அஜீவதத்வம் | ... | 1 | 124 |
| த்ரவ்யங்கள் | ... | 2 | 124 |
| தரவ்யங்களின் விஶேஷம் | ... | 4 | 125 |
| புத்கலத்ரவ்யம் மாத்திரம் அரூபி அன்று | ... | 5 | 125 |
| த்ரவ்யங்களின் உட்பேதம | ... | 6 | 126 |
| த்ரவ்யங்களின் ப்ரதேஶங்கள் | ... | 8 | 127 |
| ஆகாஶத்ரவ்யத்தின் ப்ரதேஶங்கள் | ... | 9 | 127 |
| புத்கலத்ரவ்யத்தின் ப்ரதேஶங்கள் | ... | 10 | 128 |
| அணுவுக்கு அநேகப்ரதேஶங்கள் இல்லை | ... | 11 | 128 |
| எல்லா தரவ்யங்கட்கும் ஆதாரமான இடம் | ... | 12 | 129 |
| உருவமுள்ள புத்கலங்களின் ப்ரதேஶங்கள் | ... | 14 | 129 |
| ஜீவன்களின் நிவாஸஸ்தானம் | ... | 15 | 130 |
| தர்மத்ரவ்யம அதர்மத்ரவ்யம் இவைகளின் உபகாரம் | ... | 17 | 131 |
| ஆகாஶத்தினது உபகாரம் | ... | 18 | 132 |
| புத்கலதரவ்யத்தின் உபகாரம் | ... | 19 | 132 |
| ஜீவன்களின் உபகாரம் | ... | 21 | 133 |
| காலத்தின் உபகாரம் | ... | 22 | 134 |
| புத்கலத்தின் இயல் | ... | 23 | 135 |
| புத்கலத்தினது மாறுதல் | ... | 24 | 136 |

| | ஸூ. | பக். |
|---|---|---|
| புத்கலத்தின் வகை ... | 25 | 138 |
| ஸ்கந்தங்களின் உற்பத்தி ... | 26 | 139 |
| அணுவின் உற்பத்தி ... | 27 | 139 |
| கண்ணுக்குத் தோன்றும் ஸ்கந்தத்தின் உற்பத்தி ... | 28 | 140 |
| த்ரவ்யத்தின் இயல் ... | 29 | 140 |
| ஸத்தாவின் இயல் ... | 30 | 140 |
| நித்யத்தின் லக்ஷணம் ... | 31 | 141 |
| வேறுபட்ட தன்மையுடைய நித்யமும் அநித்யமும் ஒரு பொருளில் எவ்வாறு இருக்கும் என்பது ... | 32 | 142 |
| பரமாணுக்கள் பந்தித்தல் ... | 33 | 143 |
| பந்தம் இவற்றிக்கு உண்டாகும் என்பது ... | 36 | 145 |
| த்ரவ்யத்தின் லக்ஷணம் ... | 38 | 146 |
| காலத்ரவ்யம் ... | 39 | 146 |
| காலத்ரவ்யத்தின் விசேஷம் ... | 40 | 146 |
| குணத்தின் லக்ஷணம் ... | 41 | 147 |
| பர்யாயத்தின் லக்ஷணம் ... | 42 | 148 |


## அத்யாயம் 6


| | | |
|---|---|---|
| யோகத்தின் லக்ஷணமும் பேதமும் ... | 1 | 150 |
| ஆஸ்ரவத்தின் லக்ஷணம் ... | 2 | 151 |
| ஆஸ்ரவ வகை ... | 3 | 151 |
| ஆஸ்ரவத்தின் வகையும் அதனையுடையவரும். | 4 | 152 |
| ஸாம்பராயிக ஆஸ்ரவத்தின் பேதம் ... | 5 | 153 |
| ஆஸ்ரவத்தின் விசேஷம் ... | 6 | 156 |
| அதிகரணத்தின் வகை ... | 7 | 157 |
| ஜீவாதிகரணத்தின் வகை ... | 8 | 157 |
| அஜீவாதிகரணத்தின் வகை ... | 9 | 158 |
| ஜ்ஞானவரணம் வருங்காரணம் ... | 10 | 160 |

| | | ஸூ. | பக். |
|---|---|---|---|
| தர்ஶனுவரணம் வருங்காரணம் | ... | 10 | 160 |
| அஸாதாவேதநீயம் வருங்காரணம் | ... | 11 | 161 |
| ஸாதாவேதநீயம் வருங்காரணம் | ... | 12 | 162 |
| தர்ஶநமோஹநீயகர்மம் வருங்காரணம் | ... | 13 | 164 |
| சாரித்ரமோஹநீயகர்மம் வருங்காரணம் | ... | 14 | 165 |
| நரகப்பிறவிக்குக்காரணம் | ... | 15 | 165 |
| விலங்குபிறவிக்குக்காரணம் | ... | 16 | 166 |
| மனிதபிறவிக்குக்காரணம் | ... | 17/18 | 166 |
| நான்குவகை பிறவிகட்கும் காரணம் | ... | 19 | 167 |
| தேவப்பிறவிக்குக்காரணம் | ... | 20/21 | 167 |
| அஶுபநாமகர்மம் வரும்வழி | ... | 22 | 169 |
| ஶுபநாமகர்மம் வரும்வழி | ... | 23 | 169 |
| தீர்த்தங்கரபதவிக்குக்காரணம் | ... | 24 | 170 |
| நீசைர்கோத்ரத்திற்குக்காரணம் | ... | 25 | 171 |
| உச்சைர்கோத்ரத்திற்குக்காரணம் | ... | 26 | 172 |
| அந்தராயகர்மம் வருங்காரணம் | ... | 27 | 172 |


---

## அத்யாயம் 7


| | | | |
|---|---|---|---|
| விரதத்தின் லக்ஷணம் | ... | 1 | 175 |
| விரதத்தின் வகை | ... | 2 | 175 |
| விரதங்கள் ஸ்திரமாக இருத்தற்குக்காரணம். | | 3 | 176 |
| அஹிம்ஸாவிரதத்தின் ஐந்து பாவனைகள் | ... | 4 | 176 |
| ஸத்யவிரதத்தின் ஐந்து பாவனைகள் | ... | 5 | 177 |
| அசௌர்யவிரதத்தின் பாவனைகள் | ... | 6 | 177 |
| பிரம்மசர்யவிரதத்தின் பாவனைகள் | ... | 7 | 178 |
| பரிக்ரஹத்யாகவிரதத்தின் பாவனைகள் | ... | 8 | 179 |
| பஞ்சபாபங்களைப்பற்றி விசாரிக்கத்தகுந்தவை. | | 9/10 | 179 |
| எப்போதும் சிந்திக்கத்தக்க பாவனைகள் | ... | 11 | 181 |
| உலகையும் உடலையும் விசாரிக்க வேண்டியன. | | 12 | 182 |
| ஹிம்ஸையின் லக்ஷணம் | ... | 13 | 183 |

| | | ஸூ. | பக். |
|---|---|---|---|
| பொய்யின் லக்ஷணம் | ... | 14 | 184 |
| களவின் லக்ஷணம் | ... | 15 | 184 |
| அப்பிரம்மத்தின் லக்ஷணம் | ... | 16 | 185 |
| பரிக்ரஹத்தின் லக்ஷணம் | ... | 17 | 185 |
| விரதியின் லக்ஷணம் | ... | 18 | 185 |
| விரதிகள் வகை | ... | 19 | 186 |
| அகாரீ | ... | 20 | 186 |
| ஏழுசீலங்கள் | ... | 21 | 187 |
| ஸல்லேகனை செய்தல் அவச்யம் என்பது | ... | 22 | 189 |
| ஸம்யக்தர்ஶனத்தின் ஐந்து அதிசாரங்கள் | ... | 23 | 191 |
| விரதம் ஶீலம் இவைகளின் அதிசாரங்கள் | ... | 24 | 191 |
| அஹிம்ஸாணு விரதத்தின் அதிசாரங்கள் | ... | 25 | 191 |
| ஸத்யாணு விரதத்தின் அதிசாரங்கள் | ... | 26 | 192 |
| அசௌர்யாணு விரதத்தின் அதிசாரங்கள் | ... | 27 | 193 |
| பிரம்மசர்யாணு விரதத்தின் அதிசாரங்கள் | ... | 28 | 193 |
| பரிக்ரஹபரிமாணாணு விரதத்தின் அதிசாரங்கள் | ... | 29 | 194 |
| திக்விரதத்தின் அதிசாரங்கள் | ... | 30 | 195 |
| தேசவிரதத்தின் அதிசாரங்கள் | ... | 31 | 195 |
| அனர்த்ததண்ட விரதத்தின் அதிசாரங்கள் | ... | 32 | 196 |
| ஸாமாயிக விரதத்தின் அதிசாரங்கள் | ... | 33 | 197 |
| ப்ரோஷதோபவாஸ விரதத்தின் அதிசாரங்கள் | . | 34 | 197 |
| உபபோகபரிபோகபரிமாண விரதத்தின் அதிசாரங்கள் | ... | 35 | 198 |
| அதிதிஸம்விபாக விரதத்தின் அதிசாரங்கள் | ... | 36 | 198 |
| ஸல்லேகனையின் அதிசாரங்கள் | ... | 37 | 199 |
| தானத்தின் லக்ஷணம் | ... | 38 | 199 |
| தானவிஶேஷம் | ... | 39 | 200 |

## அத்யாயம் 8


| | | ஸூ. | டக். |
|---|---|---|---|
| பந்தத்தின் காரணம் | ... | 1 | 204 |
| பந்த லக்ஷணம் | ... | 2 | 207 |
| பந்தத்தின் பேதம் | ... | 3 | 208 |
| ப்ரக்ருதிபந்தவகை | ... | 4 | 209 |
| ப்ரக்ருதி பந்தத்தின் உட்பிரிவு | ... | 5 | 210 |
| ஜ்ஞாஞுவரணத்தின் ஐந்து பேதங்கள் | ... | 6 | 210 |
| தர்ஸஞுவரணத்தின் ஒன்பது பேதங்கள் | ... | 7 | 211 |
| வேதநீயத்தின் பிரிவு | ... | 8 | 212 |
| மோஹநீயத்தின் பேதம் | ... | 9 | 213 |
| ஆயுஷ்ய கர்மத்தின் பேதம் | ... | 10 | 217 |
| நாமகர்மத்தின் பேதம் | ... | 11 | 217 |
| கோத்ர கர்மத்தின் பேதம் | ... | 12 | 230 |
| அந்தராய கர்மத்தின் பேதம் | ... | 13 | 230 |
| ஜ்ஞாஞுவரணம் தர்ஸஞுவரணம் வேதநீயம் அந்தராயம் இவைகளின உத்கிருஷ்டஸ்திதி | | 14 | 231 |
| மோஹநீய கர்மத்தின் உத்கிருஷ்டஸ்திதி | ... | 15 | 232 |
| நாம கோத்ரங்களின் உத்கிருஷ்டஸ்திதி | ... | 16 | 232 |
| ஆயுஷ்ய கர்மத்தின் உத்கிருஷ்டஸ்திதி | ... | 17 | 232 |
| வேதநீயகர்மத்தின் ஜகன்ய ஸ்திதி | ... | 18 | 233 |
| நாமகோத்ரங்களின் ஜகன்ய ஸ்திதி | ... | 19 | 233 |
| ஏனைய கர்மங்களின் ஜகன்ய ஸ்திதி | ... | 20 | 233 |
| அநுபவ பந்தத்தின் லக்ஷணம் | ... | 21/22 | 234 |
| கர்மங்கள் பயனைத்தந்த பிறகு என்னவாகும். | | 23 | 234 |
| ப்ரதேச பந்தத்தின் வர்ணனை | ... | 24 | 235 |
| புண்ய ப்ரக்ருதிகள் | ... | 25 | 236 |
| பாப ப்ரக்ருதிகள் | ... | 26 | 237 |

## அத்யாயம் 9


| | | ஸூ. | பக். |
|---|---|---|---|
| ஸம்வரத்தின் லக்ஷணம் | ... | 1 | 239 |
| ஸம்வரத்தின் காரணம் | ... | 2/3 | 239 |
| குப்தியின் லக்ஷணம் | ... | 4 | 241 |
| ஸமிதியின் வகை | ... | 5 | 241 |
| பத்துவகை தர்மம் | ... | 6 | 242 |
| பன்னிரண்டு அநுப்ரேக்ஷைகள் | ... | 7 | 243 |
| பரிஷஹங்களை ஜயிக்கவேண்டும் என்பது | ... | 8 | 246 |
| பரிஷஹங்கள் இருபத்திரண்டு | ... | 9 | 246 |
| இன்னாருக்கு இத்தனை பரிஷஹங்கள் உண்டாகும என்பது | ... | 10/12 | 250 |
| பரிஷஹம் இவற்றால் உண்டாகும் என்பது | ... | 13/16 | 251 |
| ஒருங்கே இத்தனை பரிஷஹங்கள் உண்டாகும் என்பது | ... | 17 | 253 |
| சாரித்ரங்கள் | ... | 18 | 253 |
| பாஹ்ய தபஸ் | ... | 19 | 254 |
| அந்தரங்கதபஸ் | ... | 20 | 255 |
| அந்தரங்க தபஸ்ஸின் உட்பேதம் | ... | 21 | 256 |
| ப்ராயஸ்சித்தம் ஒன்பது வகை | ... | 22 | 256 |
| நான்கு வகை விநயம் | ... | 23 | 257 |
| பத்து வகை வையாவ்ருத்யம் | ... | 24 | 258 |
| ஐந்துவகை ஸ்வாத்யாயம் | ... | 25 | 259 |
| இருவகை வ்யுத்ஸர்க்கம் | ... | 26 | 259 |
| த்யானத்தின் லக்ஷணம் | ... | 27 | 260 |
| த்யானத்தின் வகை | ... | 28 | 261 |
| த்யானத்தின் பலன் (மோக்ஷத்திற்குரிய த்யானம்) | ... | 29 | 261 |
| ஆர்த்தத்யானத்தின் வகையும் லக்ஷணமும் | ... | 30/33 | 261 |
| ஆர்த்தத்யானம் இன்னாருக்கு உண்டாகும் என்பது | ... | 34 | 263 |
| ரௌத்ரத்யானம் | ... | 35 | 263 |

| | | ஸூ. | பக். |
|---|---|---|---|
| தர்மத்யானம் | ... | 36 | 264 |
| ஶுக்லத்யானம் இன்னாருக்கு உண்டாகும் என்பது | ... | 37/38 | 265 |
| ஶுக்லத்யானத்தின் நான்குவகை | ... | 39 | 266 |
| விதர்க்கத்தின் லக்ஷணம் | ... | 43 | 268 |
| விசாரத்தின் லக்ஷணம் | ... | 44 | 269 |
| நிர்ஜரையாகும் க்ரமம் | ... | 45 | 269 |
| ஸாதுக்கள் வகை | ... | 46 | 270 |
| புலாகர் முதலானவர்களின் விஶேஷம் | ... | 47 | 271 |

## அத்யாயம் 10

| | | | |
|---|---|---|---|
| கேவலஜ்ஞானம் உண்டாதற்குக் காரணம் | ... | 1 | 274 |
| மோக்ஷத்தின் காரணமும் லக்ஷணமும் | ... | 2 | 274 |
| த்ரவ்யகர்மங்களுடன் பாவகர்மங்களும் கெடும் என்பது | ... | 3/4 | 275 |
| கர்மங்கெட்ட பிறகு ஊர்த்வ கமனம் | ... | 5 | 276 |
| ஆத்மா மேல்நோக்கிச் செல்வதற்குக் காரணம் | | 6 | 277 |
| மேற்கூறப்பட்ட நான்கற்கும் நான்கு உதாரணங்கள் | ... | 7 | 277 |
| உலகத்தின் மேற்பாகத்தோடு முக்தாத்மா நிற்பதற்குக் காரணம் | ... | 8 | 278 |
| முக்த ஜீவன்களின் பேதம் | ... | 9 | 279 |

# பிழை திருத்தம்

| பக். | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 26 | 1 | அங்கமங்களின் | அங்காகமங்களின் |
| 48 | 10 | தர்ஶ்ந | தர்ஶந |
| 54 | 2 | ரஶந | ரஸந |
| 54 | 2/4 | ஹ்ஶ–ந | ஹ்ஶ–ந |
| 83 | 20 | ஹ்ரி | ஹ்ரீ |
| 110 | 11 | ஸஹ்ஸ்ரார | ஸஹஸ்ரார |
| 156 | 24 | அதிமும் | அதிகமும் |
| 178 | 20 | தந்மெஹாராத்ர | தந்மெநாஹாராத்ர |
| 180 | 28 | முதலாவை | முதலானவை |
| 183 | 2 | வ்யவஹாரவணம் | வ்யவஹாரவணம் |
| 184 | 2/4 | சுஹிதா நம் | சுஹியா நம் |
| 187 | 3 | பிறர்பொருனே | பிறர்பொருளே |
| 190 | 9 | கிருஷம் | க்ருஶம் |
| 200 | 22 | மூதலியவற்றை | முதலியவற்றை |
| 216 | 22 | ஸ்ஞ்ஜ்வலந | ஸஞ்ஜ்வலந |
| 223 | 17 | இணைப்புகக்ள் | இணைப்புக்கள் |
| 277 | 8 | பந்யெஹூதாக | பந்யெஹூதாக |
| 278 | 2 | மண்னே | மண்ணே |

குறிப்பு:—சில பக்கங்களில் க், த், ம், ல், ண், ட், ந், ர் முதலான மெய்யெழுத்துக்களின் புள்ளிகள் சரியாகத் தோன்றாமையால் அவை க, த, ம, ல, ண, ட, ந. ர என்று காணப்படுகின்றன. உதாரணம்—25-வது பக்கம் 22-வது வரியில் பூரவம், 40-7 எதிகால 44-2 தெளிந்தும, 66-20 யினூல, 144 கூடியிருத தல், 141 புத்கலததின், 146 மாறுதல போல்வது, 153 வருதல, கரமம, சமயம, ஆகும 247 இருபத்திரணடு, சௌர்யாநதம், 236 அந்தராயம முதலியன இவை போன்றவற்றைப் பார்த்து க், த், ம், ல், ட், ண், ந், ர் என்று திருத்தி ஓதுக.

# கடவுள்வணக்கம்

---

𑌮𑍋𑌕𑍍𑌷𑌮𑌾𑌰𑍍𑌗𑌸𑍍𑌯 𑌨𑍇𑌤𑌾𑌰𑌂 𑌭𑍇𑌤𑍍𑌤𑌾𑌰𑌂 𑌕𑌰𑍍𑌮𑌭𑍂𑌭𑍃𑌤𑌾𑌮𑍍।

𑌜𑍍𑌞𑌾𑌤𑌾𑌰𑌂 𑌵𑌿𑌶𑍍𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑌾𑌂 𑌵𑌨𑍍𑌦𑍇 𑌤𑌦𑍍𑌗𑍁𑌣𑌲𑌬𑍍𑌧𑌯𑍇 ॥

மோக்ஷ மார்கஸ்ய நேதாரம் பேத்தாரம் கர்மபூப்ருதாம் ।

ஜ்ஞாதாரம் விஸ்வதத்த்வாநாம் வந்தே தத்குண லப்தயே ॥

## (பதவுரை)

𑌮𑍋𑌕𑍍𑌷𑌮𑌾𑌰𑍍𑌗𑌸𑍍𑌯 ... முக்தியாகிற வீட்டின் வழியை

𑌨𑍇𑌤𑌾𑌰𑌂 ... அடைவிப்பவரும்

𑌕𑌰𑍍𑌮𑌭𑍂𑌭𑍃𑌤𑌾𑌂 ... கர்மங்களாகிற மலைகளை

𑌭𑍇𑌤𑍍𑌤𑌾𑌰𑌂 ... கெடுத்தவரும்

𑌵𑌿𑌶𑍍𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑌾𑌂 ... தத்துவங்கள் அனைத்தையும்

𑌜𑍍𑌞𑌾𑌤𑌾𑌰𑌂 ... அறிந்தவரும் ஆகிய ஸ்வாமியை

𑌤𑌦𑍍𑌗𑍁𑌣𑌲𑌬𑍍𑌧𑌯𑍇 ... மேற் கூறப்பட்ட அம் மூன்று குணங்களை யான் அடையும் பொருட்டு

𑌵𑌨𑍍𑌦𑍇 ... நமஸ்கரிக்கின்றேன்.

**மூன்று குணங்கள் :—**

1. மோக்ஷ மார்க்கத்தினை அடைவித்தல்.
2. கர்மங்களைக் கெடுத்தல்.
3. முற்றும் உணர்தல்.

ஸ்ரீ:

𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌥 𑌸𑍂𑌤𑍍𑌰𑌮𑍍

# தத்த்வார்த்த ஸூத்ரம்

## அத்யாயம் 1

### மோக்ஷத்தின் வழி

1. 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌜𑍍𑌞𑌾𑌨𑌚𑌾𑌰𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌮𑍋𑌕𑍍𑌷𑌮𑌾𑌰𑍍𑌗𑌃 || ௧ ||

ஸம்யக்தர்ஶனஜ்ஞாநசாரித்ராணி மோக்ஷமார்கஃ ||

(பதவுரை.) 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌜𑍍𑌞𑌾𑌨 𑌚𑌾𑌰𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 - நற்காட்சி நன்ஞானம் நல்லொழுக்கம் ஆகிய இவை மூன்றும், 𑌮𑍋𑌕𑍍𑌷𑌮𑌾𑌰𑍍𑌗𑌃 - முக்தியை அடைதற்கு உரிய வழியாகும்.

கருத்துரை :—இன்ன மருத்துவனுடைய மருந்தை உண்டால் இந்நோய் நீங்கும் என்னும் நம்பிக்கையும் இன்ன மருத்துவனிடத்தில் மருந்து பெறவேண்டும் என்னும் அறிவும், மருந்தை உண்ணுஞ் செயலும் ஆகிய மூன்றும் ஒருங்கே இருப்பின், அவை நோய் நீங்குதற்குக் காரணம் (உபாயம்) ஆகும். அதுபோல, ஸ்ரீ ஜிநபகவான் உரைத்த வசனங்களை நம்புதல், அவ் வசனங்களை உணர்தல் உணர்ந்தபடி நடத்தல் ஆகிய இம்மூன்றும் ஒருவனிடம் ஒருங்கு கூடின், அக்கூட்டம் அவன் மோக்ஷத்தினை அடைய வழியாகும்.

உயரமான இடத்தினை அடைய ஏறுதற்கு இரண்டு கால்களும் படிகளும் உள்ள ஏணி காரணமாகும். அந்தக்

கால்களும் படிகளும் சேர்ந்திராமல் தனித்தனியாய் இருந்தால் உயரமான இடத்திற்கு ஏற முடியாது. அது போல நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம் ஆகியவைகள் ஒருங்கு கூடி இருப்பின் மோக்ஷத்தினை அடையக் காரண மாகும். அவற்றுள் ஒவ்வொன்றுமட்டும் இருந்தால் மோக்ஷத்தினை அடைய முடியாது.

ஸம்யக்தர்ஶனம் :—பொருள்களின் உண்மைத் தன்மையினை நம்புதல். (தர்ஶனம் என்னும் பதத்திற்குப் பார்த்தல் என்பது பொருள். ஆயினும், இங்கு மோக்ஷத்தின் வழியைப்பற்றிக் கூறும் இடம் ஆதலால் நம்பிக்கை என்பதே பொருளாகும்.)

ஸம்யக்ஜ்ஞாநம் :—ஜீவன்முதலான பொருள்கள் எந்த எந்தப் பிரகாரமாய் உள்ளனவோ அந்த அந்தப் பிரகாரங்களை அநத்யவஸாயம் (இன்னது என்று துணிந் தறியாமை), ஸந்தேஹம்(ஐயம்) விபரீதம்(திரிபு) இன்றி (உயிர் முதலிய பொருள்களின் உண்மைத் தன்மையினை உள்ளபடி) உணர்தல்.

ஸம்யக்சாரித்ரம் :—ஸம்ஸாரதுக்கத்திற்குக் காரண மான கொலை, களவு, பொய், காமம், பொருட்பற்று ஆகிய பாபங்களை(ப் பாபத்தொழில்களை)ச் செய்யாதிருத்தல்.

மோக்ஷம் :—(வினைகள் யாவும் தன்னைவிட்டு நீங்கிய-பின் ஆன்மா இன்பமே நுகர்ந்துகொண்டிருக்கும்) முக்தி யாகிய வீடு. (1)

## நற்காட்சியியல்

2. 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌨𑌂 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍 ॥ ௨ ॥

தத்த்வார்த்தஶ்ரத்தாநம் ஸம்யக்தர்ஶநம் ॥

(ப - ரை.) தத்த்வார்த - ஜீவன்முதலான பொருள்களின் உண்மைத்தன்மையினை, ஶ்ரத்தாநம் - நம்புதல், ஸம்யக்தர்ஶநம் - நற்காட்சி.

கருத்துரை :—ஜீவன்முதலான தத்துவங்கள் உள்ளனவென்றும், அவைகளின் உண்மைத்தன்மைகள் இத்தகையனவென்றும் நம்புதலே நற்காட்சி என்பது. (2)

## நற்காட்சியின் வகை

3. தந்நிஸர்காததிகமாத்வா ||௩||

தந்நிஸர்க்கா ததிகமாத் வா ||

(ப - ரை.) தத் - அந்த நற்காட்சி, நிஸர்காத் - இயற்கையினாலும், வா - அல்லது, அதிகமாத் - பிறருபதேசத்தினாலும் ஆகும்.

கருத்துரை :—பிறருபதேசமின்றி இயற்கையினாலும், பிறருபதேசத்தினாலும் நற்காட்சி உண்டாகும்.

ஸம்யக்தர்ஶநம் இருவகை. அவை நிஸர்க்கஜ ஸம்யக்தர்சனம், அதிகமஜ ஸம்யக்தர்சனம் என்பன. அவற்றுள்—

நிஸர்க்கஜ ஸம்யக்தர்ஶநம்:—பிறருபதேசமின்றித் தானாக உண்டாதல். அஃதாவது, அந்தரங்கத்தில் மித்யாத்வம், ஸம்யங்மித்யாத்வம், ஸம்யக்த்வப்ரகிருதி, அனந்தானுபந்திக்ரோதம், அனந்தானுபந்திமானம், அனந்தானுபந்திமாயை, அனந்தானுபந்திலோபம் என்னும் ஏழுவகைப் பிரகிருதி(கர்மங்)களுடைய உபஶமம் (அடக்கம்), க்ஷயம் (நசித்தல்), க்ஷயோபஶமம் (நசித்தலும் அடக்கமும்) ஆகிய இவைகளுள் யாதானுமொன்றினால் உண்டாதல்.

**அதிகமஜ ஸம்யக்தர்ஶநம் :**—பிறருபதேசத்தால் உண்டாதல். அஃதாவது அந்தரங்கத்தில் மித்யாத்வம், ஸம்யங் மித்யாத்வம், ஸம்யக்த்வப்ரகிருதி, அனந்தானு-பந்திக்ரோதம், அனந்தானுபந்திமானம், அனந்தானுபந்தி மாயை, அனந்தானுபந்திலோபம் என்னும் எழு வகைக் கர்மங்களின் உபஶமம் (அடக்கம்), க்ஷயம் (நசித்தல்), க்ஷயோபஶமம் (நசித்தலும் அடக்கமும்) ஆகிய இவைகள் இருந்தும் பிறருபதேசத்தைக் கேட்டபிறகு உளதாதல்.

## தத்துவங்களின் பெயர்

4. ஜீவாஜீவாஸ்ரவபந்தஸம்வர
நிர்ஜரா மோக்ஷாஸ்தத்வம் || ௪ ||

ஜீவாஜீவாஸ்ரவபந்தஸம்வர
நிர்ஜரா மோக்ஷாஸ்தத்வம் ||

(ப - ரை.) ஜீவ - உயிருள்ளது (அறிவுள்ளது), அஜீவ-உயிர் இல்லாதது (அறிவில்லாதது), ஆஸ்ரவ - (வினைகள்) வருதல், பந்த - (ஆன்மாவினிடம் சேர்ந்த வினைகள்) பந்தித்தல் (பிணித்தல்), ஸம்வர - (வினைகள் வரும் வாயிலைத்) தடுத்தல், நிர்ஜரா - (ஆன்மாவினிடம் சேர்ந்த வினைகளுள் சில) கழிதல்; அஃதாவது ஆன்மாவினிடம் சேர்ந்த வினைகளுள் சிலவற்றைத் தவத்தினால் விலக்குதல், மோக்ஷ: - ஆன்மாவினிடம் சேர்ந்த வினைகள் யாவும் நீங்கல்; அஃதாவது ஆன்மாவினிடம் சேர்ந்த வினைகளைத் தவத்தினால் முற்றும் ஒழித்தல் ஆகிய இவை எழும், தத்வம் - தத்துவமாகும்.

**தத்துவம்** எழு வகை. அவை ஜீவதத்துவம், அஜீவ தத்துவம், ஆஸ்ரவதத்துவம், பந்ததத்துவம், ஸம்வர தத்துவம், நிர்ஜராதத்துவம், மோக்ஷதத்துவம் என்பன.

**குறிப்பு:**—இவ் வேழு தத்துவங்களோடு புண்யம், பாபம் ஆகிய இரண்டனையும் சேர்த்து நவபதார்த்தம் என்பர். பாபமும் புண்யமும் ஆஸ்ரவதத்துவத்திலும், பந்ததத்துவத்திலும் அடங்கியிருப்பதனால் பாபமும் புண்யமும் இங்குத் தனியாகக் கூறப்படவில்லை. (4)

## நற்காட்சி முதலானவைகளையும் ஜீவன் முதலானவைகளையும் உணரும் வழி

5. 𑌨𑌾𑌮𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌾𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌭𑌾𑌵𑌤𑌸𑍍𑌤𑌨𑍍𑌨𑍍𑌯𑌾𑌸𑌃 || ௫ ||
நாமஸ்தாபநா த்ரவ்யபாவதஸ்தந்ந்யாஸ: ||

(ப - ரை.) 𑌨𑌾𑌮 - பெயரிடுதல், 𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌾 - (அதுவே இது என) ஸ்தாபித்தல், 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯 - முன்னர் நடந்ததையும் பின்னர் நடக்கப்போகிறதையும் தற்காலத்தில் கூறுதல், 𑌭𑌾𑌵 - தற்காலத்தில் நடப்பதைக் கூறுதல் ஆகிய இவைகளால், 𑌤𑌤𑍍 𑌨𑍍𑌯𑌾𑌸𑌃 - அந்த நற்காட்சி முதலானவைகளின் நிக்ஷேபம் ஆகும்.

**கருத்துரை:**—பெயர்வைத்தல் முதலானவைகளினால் நற்காட்சி முதலானவைகளையும், ஜீவன் முதலானவைகளையும் அறியலாம்.

[1]**நிக்ஷேபம்** நான்கு வகை. அவை - நாம நிக்ஷேபம், ஸ்தாபநா நிக்ஷேபம், த்ரவ்ய நிக்ஷேபம், பாவ நிக்ஷேபம் என்பன. அவற்றுள்:—

**நாம நிக்ஷேபம்:**—குணம், ஜாதி, தொழில், திரவியம் ஆகிய இவைகளை அனுஸரிக்காமல், தம் இஷ்டப்படி உலகில் ஒருவரை ஒருவர் அழைத்தற்காக யாதானுமொரு பெயரை வைத்தல். அஃதாவது, ஒருவனிடத்தில் வர்த்த

---

1. நிக்ஷேமம்—குறிப்பிடல்.

மானஸ்வாமியின் குணம், ஜாதி முதலானவை இல்லாம லிருப்பினும் அவனுக்கு வர்த்தமானன் என்று பெயர் இடுதல்.

**ஸ்தாபநா நிக்ஷேபம்** :—பொன், வெள்ளி, பித்தளை, செம்பு, சிலை முதலானவைகளால் செய்யப்பட்ட பிம்பங்களில் 'இது வர்த்தமானர்', 'இது பார்ஶ்வநாதர்' என்று ஸ்தாபித்தல் (அமைத்தல்).

ஸ்தாபநா நிக்ஷேபம் இருவகை. அவை ததாகார ஸ்தாபநாநிக்ஷேபம், அததாகாரஸ்தாபநாநிக்ஷேபம் என்பன. அவற்றுள் :—

**ததாகார ஸ்தாபநாநிக்ஷேபம்** :—எப்பொருள் எந்த உருவத்தையுடையதோ அப்பொருளை அந்த உருவமாகவே (கல்பனை) ஸ்தாபனை செய்தல். எப்படியெனில், பார்ஶ்வநாதஸ்வாமியின் பிரதிபிம்பத்தில் (உருவத்தில்) பார்ஶ்வநாதர் என்று கல்பனை (ஸ்தாபனை) செய்தல் போல்வது.

**அததாகார ஸ்தாபநாநிக்ஷேபம்** :—வேறு உருவமுள்ள பொருளில் ஓர் உருவத்தைக் கல்பித்தல். எப்படியெனில், அரிசியை வைத்துப் பஞ்சபரமேஷ்டிகள் என்று கல்பித்தல் போல்வது.

**திரவிய நிக்ஷேபம்** :—முன்னர் மந்திரிபதவியிலிருந்து நீங்கினவரைப் பின்னரும் மந்திரி யென்று கூறுதலும், அரசனாக வரக்கூடிய இளவரசனை அரசன் என்று கூறுதலும் போல்வது.

**பாவ நிக்ஷேபம்** :—அவ்வப்பொழுது பொருள் எத்தன்மையாக வுள்ளதோ அவ்வத் தன்மையினைக் குறித்தல். எப்படி யெனில், மரம் விறகாக இருக்கும்போது விற

கென்றும், அவ் விறகு எரிக்கப்பட்டுக் கரியாயபோது கரி யென்றும், அக் கரி நீற்றுச்சாம்பலாகும்போது சாம்பல் என்றும் அறிதல்போல்வது. (5)

## ஜீவன் முதலானவைகளைச் சுருக்கமாக உணரும் வழி

6. 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌨𑌯𑌿𑌰𑌧𑌿𑌗𑌮𑌃 || 𑌸𑍂 ||

ப்ரமாணநயைரதிகம: ||

(ப - ரை.) 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌨𑌯𑌃 - பிரமாணங்களினுலும் நயங்களினுலும், 𑌅𑌧𑌿𑌗𑌮𑌃-(ஜீவன் முதலான தத்துவங்களை) அறியலாகும்.

குறிப்பு :—பிரமாணமாவது ஒவ்வொரு பொருளின்-கண்ணும் உள்ள தன்மைகள் பலவற்றையும் குறைவின்றி ஒரேகாலத்தில் அறிதல்.

நயமாவது—ஒவ்வொரு பொருளின் கண்ணும் உள்ள தன்மைகள் பலவற்றுள் ஒவ்வொரு தன்மையை அறிதல்.

இந்த நயம்—த்ரவ்யார்த்திகநயம் என்றும், பர்யாயார்த்திகநயம் என்றும் இரண்டு வகைப்படும். (6)

## பிரமாணங்களினுலும் நயங்களினுலும் உணர்ந்த பொருள்களை மற்றும் உணரும் வழி

7. 𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌵𑌸𑌾𑌧𑌨𑌾𑌧𑌿𑌕𑌰𑌣
𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌵𑌿𑌧𑌾𑌨𑌤𑌃 || ௭ ||

நிர்தேச ஸ்வாமித்வ ஸாதநாதி கரண
ஸ்திதி விதாநத: ||

(ப - ரை.) 𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌶 - (பொருளின்) ஸ்வரூபத்தைக் கூறுதல், 𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌵 - யஜமானத்தன்மை, 𑌸𑌾𑌧𑌨𑌂 - (பொருளின்) உற்பத்திகாரணம், 𑌅𑌧𑌿𑌕𑌰𑌣 - (பொருளின்) ஆதாரம், 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿 - (பொருளின்) காலஅளவு, 𑌵𑌿𑌧𑌾𑌨-(பொருளின்) வகை ஆகிய இவைகளினாலும் ஜீவன் முதலான தத்துவங்களை அறியலாகும். (7)

## மற்றும் ஜீவன்முதலானவைகளை உணரும் வழி

8. 𑌸𑌤𑍍𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌨𑌕𑌾𑌲𑌾𑌨𑍍𑌤𑌰
𑌭𑌾𑌵𑌾𑌲𑍍𑌪𑌬𑌹𑍁𑌤𑍍𑌵𑍈𑌶𑍍𑌚 ॥ ௮ ॥

ஸத்ஸங்க்யாக்ஷேத்ரஸ்பர்ஶநகாலாந்தர
பாவால்பபஹுத்வைஶ்ச ||

(ப - ரை.) 𑌸𑌤𑍍 - (வஸ்துவின்) அஸ்தித்வம்; அதாவது வஸ்துவின் தன்மை எந்நாளும் அழிவின்மை, 𑌸𑌂𑌖𑍍𑌯𑌾 - (வஸ்துவினுடைய வகைகளின்) தொகை, 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌂 - (பொருள்களின்) நிகழ்கால இருப்பிடம், 𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌨𑌂 - (பொருள்களின்) மூன்று கால சம்பந்தமான இருப்பிடம், 𑌕𑌾𑌲𑌃 - காலஅளவு, 𑌅𑌨𑍍𑌤𑌰𑌂 - இடைக்காலம், 𑌭𑌾𑌵𑌃 - இயற்கை (ஔபஶமிகபாவம் முதலியன), 𑌅𑌲𑍍𑌪𑌬𑌹𑍁𑌤𑍍𑌵𑍇𑌃 - சிறியனவாயும் பெரியனவாயும் இருத்தல் ஆகிய இவைகளினாலும் ஜீவன் முதலான தத்துவங்களை அறியலாகும். (8)

ஸம்யக்தர்ஶனத்தின் லக்ஷணம் முடிவு பெற்றது.

## ஸம்யக்ஜ்ஞானத்தின் வகை

9. 𑌮𑌤𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌾𑌵𑌧𑌿 𑌮𑌨𑌃𑌪𑌰𑍍𑌯𑌯 𑌕𑍇𑌵𑌲𑌾𑌨𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍍 ||௯||

மதிஶ்ருதாவதி மநঃபர்யய கேவலாநி ஜ்ஞாநம் ||

(ப - ரை.) 𑌮𑌤𑌿 - ஐம்புலன்களின் உதவியினாலும் மனத்தின் உதவியினாலும் அறிதல் ஆகிய அறிவு, 𑌶𑍍𑌰𑍁𑌤 - சாஸ்திரத்தை வாசித்து அறிதல் ஆகிய அறிவு, 𑌅𑌵𑌧𑌿 - ஐம்புலன்களின் உதவியும் மனத்தின் உதவியும் இன்றி ஆத்மனால் சில மூர்த்தப்பொருள்களை அறிதல் ஆகிய அறிவு, 𑌮𑌨𑌃𑌪𑌰𑍍𑌯𑌯 - பிறர்மனத்தில் நினைத்ததை அறிதல் ஆகிய அறிவு, 𑌕𑍇𑌵𑌲𑌾𑌨𑌿 - முற்றும் உணர்தல் ஆகிய அறிவு ஆகிய இவை ஐந்தும், 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 - ஸம்யக் ஜ்ஞானம் (நல்ல அறிவு) ஆகும்.

ஸம்யக்ஜ்ஞானம் ஐந்து வகை. அவை: மதிஜ்ஞானம், ஶ்ருத ஜ்ஞானம், அவதி ஜ்ஞானம், மனঃபர்யய ஜ்ஞானம், கேவல ஜ்ஞானம் என்பன. அவற்றுள்—

**மதி ஜ்ஞானம்** :—கைகளால் தொட்டு அறிதல், நாக்கினால் சுவைத்து அறிதல், மூக்கினால் முகர்ந்து அறிதல், கண்களால் பார்த்து அறிதல், காதுகளினால் கேட்டு அறிதல், மனத்தினால் நினைத்து அறிதல்.

**ஶ்ருத ஜ்ஞானம்** :—மதிஜ்ஞானத்தினால் அறியப்பட்ட பொருளை விஶேஷித்து (பாகுபாடுபடுத்தி) அறிதலும், அங்காகமம் முதலியவற்றை அறிதலும் ஆகும்.

**அவதி ஜ்ஞானம்** :—ஐம்புலன்களின் உதவியும் மனத்தின் உதவியும் இன்றிச் சில மூர்த்தப்பொருள்களை (உருவமுள்ள பொருள்களை) அளவுடன் அறிதல்.

மனஃபர்யய ஜ்ஞானம் :—பிறர்மனத்தில் நினைத்ததை அறிதல்.

கேவல ஜ்ஞானம் :—மூன்று காலங்களிலும் மூவுலகத்திலும் உள்ள பொருள்களையும், அப்பொருள்களின் மாறுதல்களையும், அலோகத்தையும் குறைவு இன்றி ஒருங்கே ஒரே சமயத்தில் உணர்தல். (9)

## பிரமாண இயல்

10. தத்ப்ரமாணே ॥ ௧௦ ॥

தத்ப்ரமாணே ॥

(ப - ரை.) தத் - (மேற் கூறப்பட்ட) அவை (ஐந்து ஞானங்களும்), ப்ரமாணே - பிரத்யக்ஷப்பிரமாணம் பரோக்ஷப் பிரமாணம் என இருவகைப்படும்.

கருத்துரை:—மதி ஜ்ஞானம், ச்ருத ஜ்ஞானம் இவை இரண்டும் பரோக்ஷப் பிரமாணம் ஆகும். அவதி ஜ்ஞானம் மனஃபர்யய ஜ்ஞானம் கேவல ஜ்ஞானம் ஆகிய இவை மூன்றும் பிரத்யக்ஷப் பிரமாணமாகும்.

பிரமாணம் இருவகை. அவை பிரத்யக்ஷப் பிரமாணம், பரோக்ஷப் பிரமாணம் என்பன. அவற்றுள் :—

பிரத்யக்ஷப் பிரமாணம் :—ஐம்புலன்களின் உதவியும், மனத்தின் உதவியும் இன்றி ஆத்மனால் அறியப்படுதல்.

பரோக்ஷப் பிரமாணம் :—ஐம்புலன்களின் உதவியினாலும் மனத்தின் உதவியினாலும் அறியப்படுதல். (10)

## பரோக்ஷப்பிரமாணத்தின் பேதம்

11. 𑌆𑌦𑍍𑌯𑍇 𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌮𑍍 || கக ||

ஆத்யே பரோக்ஷம் ||

(ப - ரை.) 𑌆𑌦𑍍𑌯𑍇 - (ஒன்பதாவது ஸூத்திரத்திற் கூறப்பட்ட வரிசையில் முதலில் உள்ள) இரண்டு ஜ்ஞானங்களும் (மதிஜ்ஞானமும் ஶ்ருதஜ்ஞானமும்), 𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌂 - பரோக்ஷப்பிரமாணமாகும். (11)

## பிரத்யக்ஷப்பிரமாணத்தின் பேதம்

12. 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌮𑌨𑍍𑌯𑌤𑍍 || கஉ ||

ப்ரத்யக்ஷமந்யத் ||

(ப - ரை.) 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍 - ஏனைய மூன்று ஜ்ஞானங்களும் (அவதிஜ்ஞானம் மன:பர்யய ஜ்ஞானம் கேவல ஜ்ஞானம் ஆகிய இவைகள்), 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌂 - பிரத்யக்ஷப் பிரமாணம் ஆகும்.

**பிரத்யக்ஷப் பிரமாணம் இருவகை:** அவை விகல ப்ரத்யக்ஷப் பிரமாணம், ஸகலப்ரத்யக்ஷப் பிரமாணம் என்பன. அவற்றுள்—

**விகலப்ரத்யக்ஷப் பிரமாணம்:**—குறிப்பிட்ட ப்ரதேசங்களில் உள்ள பொருள்களைமாத்திரம் அறியும் அவதி ஜ்ஞானமும், மன:பர்யய ஜ்ஞானமும் ஆகும்.

**ஸகலப்ரத்யக்ஷப் பிரமாணம்:**—முற்றும் உணருந் தன்மையுள்ள கேவலஜ்ஞானம்.

**பிரத்யக்ஷப் பிரமாணம்** மற்றொரு பிரகாரத்தினுல் இரண்டு வகையாகும். அவை ஸாம்வ்யவஹாரிகப்ரத்யக்ஷப் பிரமாணம், முக்யப்ரத்யக்ஷப் பிரமாணம் என்பன. அவற்றுள்—

**ஸாம்வ்யவஹாரிக ப்ரத்யக்ஷப் பிரமாணம்:**—கண்களால் பார்த்தல், காதுகளினுல் கேட்டல் முதலியன.

**முக்யப்ரத்யக்ஷப் பிரமாணம்:**—ஆத்மனுல் அறிதல்.

## மதிஜ்ஞானத்தின் மறுபெயர்கள்

13. 𑌮𑌤𑌿𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃 𑌸𑌂𑌜𑍍𑌞𑌾𑌚𑌿𑌨𑍍𑌤𑌾𑌽𑌭𑌿𑌨𑌿𑌬𑍋𑌧
𑌇𑌤𑍍𑌯𑌨𑌰𑍍𑌥𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑍍 || ௧௩ ||

மதிః ஸ்ம்ருதிః ஸம்ஜ்ஞாசிந்தாபிநிபோத
இத்யநர்த்தாந்தரம் ||

(ப - ரை.) 𑌮𑌤𑌿𑌃 - ஐம்புலன்களினுலும் மனத்தினுலும் தற்பொழுதுள்ள பொருள்களை அறிதல், 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃 - முதல் அனுபவித்த (முதலில் அறிந்த) பொருள்களைப் பின்னர் ஸ்மரித்தல் (நினைத்தல்), 𑌸𑌂𑌜𑍍𑌞𑌾 - ஒரு பொருளைக் கண்டு 'இதை நான் முன்பு கண்டிருக்கிறேன்' என்று நினைத்தல், 𑌚𑌿𑌨𑍍𑌤𑌾 - அவிநாபாவமாகிய வியாப்திஞானம்; அதாவது எங்கெங்குப் புகை யிருக்கிறதோ அங்கங்கு நெருப்பு இருத்தல் வேண்டும் என்று ஊஹித்தலும், பொருளின் ஒருகுறிப்பைக் கண்டு அக் குறிப்பினுல் அப்பொருளை உணர்தலும் ஆகும். 𑌅𑌭𑌿𑌨𑌿𑌬𑍋𑌧𑌃 - காரணத்தைக் கண்டு கார்யத்தை உணர்தல் ஆகிய, 𑌇𑌤𑌿 - இவை, 𑌅𑌨𑌰𑍍𑌥𑌾𑌨𑍍𑌤𑌰𑌂 - ஒரேபொருள் உள்ளதாகும்.

**கருத்துரை :**—மதி, ஸ்ம்ருதி, ஸம்ஜ்ஞா, சிந்தா, அபிநிபோதம் ஆகிய இவைகள் மதிஜ்ஞானாவரணத்தின் க்ஷயோபசமத்தினின்றும் (கேட்டினாலும், அடக்கத்தினாலும்) உண்டாகும். ஆதலால் ஒரு பொருள் உடையன என்று கூறப்பட்டது. ஆயினும் இவைகளுள் ஸ்வரூப பேதமும் அர்த்தபேதமும் உள்ளன.

**குறிப்பு :**—மதிஜ்ஞானம் அந்தரங்கத்தில் (அகத்தில்) மதிஜ்ஞானாவரணகர்மத்தின் க்ஷயோபசமத்தினாலும், பஹிரங்கத்தில் (வெளியில்) புலன்கள், வெளிச்சம் முதலான காரணத்தினாலும் உண்டாகும். (13)

## மதிஜ்ஞானத்தின் உத்பத்திகாரணம்

14. ததிந்த்ரியாநிந்த்ரிய நிமித்தம் || கச ||

ததிந்திரியாநிந்திரிய நிமித்தம் ||

(ப - ரை.) தத் - அந்த (மதிஜ்ஞானம்), இந்த்ரிய - ஐம்புலன்கள், அநிந்த்ரிய - மனம் ஆகிய இவைகளின், நிமித்தம் - காரணத்தினால் (துணையினால்) உண்டாகும்.

**கருத்துரை :**—ஐம்புலன்களின் உதவியினாலும், மனத்தின் உதவியினாலும் மதிஜ்ஞானம் உண்டாகும். (14)

## மதிஜ்ஞானத்தின் வகை

15. அவக்ரஹேஹாவாயதாரணா: || கரு ||

அவக்ரஹேஹாவாயதாரணா: ||

(ப - ரை.) அவக்ரஹ: - பொருளைச் சாமான்யமாக அறிதல், ஈஹா - அவக்ரஹத்தினால் சாமான்யமாக அறிந்த

பொருளை விசேஷித்தறிதல் (விசேஷித்தறிய முயலுதல்), அவாய - ஈஹாவினால் அறிந்த பொருளை நிச்சயித்தல், தாரணா: - அவாயத்தினால் அறிந்த பொருளை என்றும் மறவாதிருத்தல்.

மதிஜ்ஞானம் நான்கு வகை. அவை அவக்ரஹம், ஈஹை, அவாயம், தாரணை என்பன. அவற்றுள்—

அவக்ரஹம்:—ஒருபொருளைப் பார்த்தல் (தர்சனம்); அத் தர்சனத்திற்குப் பிறகு அப்பொருள் இன்ன நிறம் அதாவது வெளுப்பு என்று உணர்தல்.

ஈஹை :—அவக்ரஹத்தினால் அறிந்த அந்த வெளுப்பினைக் கொக்கா கொடியா என விசேஷித்து (அறிய முயற்சி செய்தல்) அறிதல்.

அவாயம் :—ஈஹாவினால் விசேஷித்து அறியப் பட்டதை இறக்கையை விரிப்பதனாலும் உயரப்பறப் பதனாலும் கீழுக்கு இறங்குவதினாலும் கொக்கே என்று நிச்சயம் செய்தல்.

தாரணை :—அவாயத்தினால் நிச்சயம் செய்த அக் கொக்கை என்றும் மறவாதிருத்தல். (15)

## அவக்ரஹம் முதலானவற்றிற்குத் தோன்றும் பொருள்கள்

16. 𑌬𑌹𑍁𑌬𑌹𑍁𑌵𑌿𑌧𑌕𑍍𑌷𑌿𑌪𑍍𑌰𑌾𑌨𑌿𑌃𑌸𑍃𑌤𑌾𑌨𑍁𑌕𑍍𑌤
𑌧𑍍𑌰𑍁𑌵𑌾𑌣𑌾𑌂 𑌸𑍇𑌤𑌰𑌾𑌣𑌾𑌂 ॥ ௧௬ ॥

பஹுபஹுவிதக்ஷிப்ராநிஸ்ருதாநுக்த
த்ருவாணாம் ஸேதராணாம் ॥

(ப - ரை.) ப³ஹு - அதிகம்; பல, ப³ஹுவித⁴ - பல வகை, க்ஷிப்ர - விரைவு, அநிஸ்ஸ்ருதம் - சிறிது வெளித் தோன்றுதல், அநுக்தம் - கூறுமை அல்லது குறிப்பு, த்⁴ருவாணாம் - எக்காலத்திலும் ஒரேவிதமாக இருத்தல், ஸேதராணாம் - (மேற்கூறியவற்றுக்கு) மாறுதலாகிய, ஏகம் - சிறிது (அல்லது) ஒன்று, ஏகவித⁴ - ஒருவகை, அக்ஷிப்ரம் - தாமதம், நிஸ்ஸ்ருதம் - முற்றும் வெளித்தோன்றுதல், உக்தம் - கூறுதல், அத்⁴ருவம் - மாறுதல் அடைதல் ஆகிய பன்னிரண்டு வகைப் பொருள்களுக்கும் அவக்ரஹம், ஈஹை, அவாயம், தாரணை இந்நான்கும் ஆகும்.

இப் பன்னிரண்டு வகைப் பொருள்களையும் அவக்ரஹத்துடன் சேர்த்துக் கூறுவோம்.

**1. பஹு அவக்ரஹம்** :—அதிகமாக உள்ள ஒரு வகைப் பொருளை அறிதல். அஃதாவது, ஒரு நெற் குவியலைக் காண்பதுபோல்வது.

**2. பஹுவித அவக்ரஹம்** :—பலவகைப் பொருள்களை அறிதல். அஃதாவது, நெற் குவியல், கேழ்வரகு குவியல், சோளக் குவியல் முதலிய பலவகைப் பொருள்களை அறிதல்போல்வது.

**3. க்ஷிப்ர அவக்ரஹம்** :—ஒரு பொருளை மிகவும் விரைவில் அறிதல்.

**4. அநிஸ்ருத அவக்ரஹம்** :—ஒரு பொருளின் ஒரு பகுதியைக் கண்டு அப்பொருளை முற்றும் உணர்தல். அஃதாவது, சிறிது வெளித்தோன்றும் யானையின் துதிக்கையைக் கண்டு யானை நீரினுள் இருக்கிறதென அறிதல்போல்வது.

**5.** **அநுக்த அவக்ரஹம்** :—ஒருவன் சொல்லாமலே அவனுடைய முகக்குறிப்பைக் கண்டு அறிதல். அதாவது, முகவாட்டமாக உள்ள ஒருவனைக் கண்டு, அவன் பசி அல்லது வருத்தத்துடன் இருக்கிறான் என்று உணர்தல் போல்வது. அல்லது ஒருபொருளின் பெயரை ஒருவர் முற்றும் கூறாமல் சிறிது கூறியதனால் அப்பொருளை அறிதல். அஃதாவது, உபாத்தியாயர் மாணுக்கனுக்குப் பாடம் ஓதுவிக்கும்போது, 'யானையின் படத்தைப் பார்த்தாயா' என்று கேள்வி கேட்க மனத்தில் நினைத்து, 'யானை' என்று கூறத் தொடங்கினவுடன், மாணுக்கன் யானைப் படம் என அறிதல்போல்வது.

**6.** **துருவாவக்ரஹம்** :—எக்காலத்திலும் ஒரேவிதமாக இருக்கும்பொருளை அறிதல். அஃதாவது, மதிஜ்ஞாநாவரண கர்மத்தின் க்ஷயோபஶமத்தினால் முதற்சமயத்தில் ஒரு பொருளை அறிந்தபடியே எச்சமயத்திலும் அறிதல். எப்படியெனில், எப்பொழுதும் நிலையாக இருக்கக்கூடிய பர்வதத்தை அறிதல்போல்வது.

**7.** **ஏக அவக்ரஹம்**:—ஒன்றனை அறிதல். அதாவது, ஒரு நெல்லை அறிதல்போல்வது.

**8.** **ஏகவித அவக்ரஹம்** :—ஒருவகைப் பொருள்களை அறிதல். அஃதாவது, ஒரே அளவான மாணுக்கர்களை அறிதல்போல்வது.

**9.** **அக்ஷிப்ரஅவக்ரஹம்** :—மிகவும் தாமதமாக அறிதல். அதாவது, ஆமை அசைதல்போல மெதுவாக் உணர்தல்.

**10.** **நிஸ்ருத அவக்ரஹம்**:—ஒரு பொருளின் எல்லாப் பகுதிகளும் வெளித்தோன்றிய பிறகு அறிதல். அஃதா

வது, நீரினுள் மூழ்கியிருந்த மனிதனுடைய உருவம் மேலுக்குத் தோன்றிய பிறகு அவனை மனிதன் என்று உணர்தல்போல்வது.

**11. உக்த அவக்ரஹம் :**—ஒருபொருளின் பெயரை முற்றும் உரைத்த பிறகு அறிதல். அதாவது, உபாத்தியாயர் மாணாக்கனுக்கு ஓதுவிக்கும்போது யானைப் படத்தைக் காட்டி, 'இது யானைப் படம்' என்று கூறிய பிறகு அவன் யானைப்படம் என்று உணர்தல்போல்வது. அல்லது, குறிப்பினால் அறிய இயலாமல் முற்றும் கூறிய பின் அறிதல். அஃதாவது, மிக்க பசியுள்ள ஒரு குழந்தை 'அம்மா! அம்மா! பசியாயிருக்கிறது' என்று கூறியபின், அவள், குழந்தை பசியோடு இருக்கிறதென்று அறிதல் போல்வது.

**12. அத்துருவ அவக்ரஹம் :**—அடிக்கடி மாறுதலடையும் பொருளை உணர்தல். அஃதாவது, அடிக்கடி மாறுதல் அடையும் மின்னல், சந்திரகலை முதலியவைகளை அறிதல்போல்வது. இவ்வாறு பஹு முதலான பன்னிரண்டு வகைப் பொருள்களுடன் ஈஹை, அவாயம், தாரணை ஆகிய இவைகளையும் கூட்டுக. (16)

**17.** அர்த்தஸ்ய || கஎ ||

அர்த்தஸ்ய ||

(ப - ரை.) அர்த்தஸ்ய - பதார்த்தத்திற்கு (பொருளுக்கு) அவக்ரஹம், ஈஹை, அவாயம், தாரணை ஆகிய நான்கும் ஆகும்.

**கருத்துரை :**—பஹு முதலான பன்னிரண்டு வகைகளையுடைய பதார்த்தத்திற்கு அவக்ரஹம், ஈஹை, அவாயம், தாரணை ஆகிய இவைகள் ஆகும்.

**குறிப்பு:**—பதார்த்தம் — ஐம்புலன்களுக்குத் தோன்றும் பொருள். (17)

18. வ்யஂஜநஸ்யாவக்ரஹ: ॥ ௧௮ ॥

வ்யஞ்ஜநஸ்யாவக்ரஹ: ॥

(ப - ரை.) வ்யஂஜநஸ்ய - ஸ்பஷ்டமாகத் (தெரியும்படி) தோன்றாத பொருளுக்கு, அவக்ரஹ: - அவக்ரஹம் மாத்திரம் ஆகும்.

**கருத்துரை:**—ஸ்பஷ்டமாகத் தோன்றாத (வெளியாகத் தெரியாத) ஶப்தம், ஸ்பரிசம், ரஸம், கந்தம் ஆகிய இவைகளுக்கு அவக்ரஹம்மாத்திரம் ஆகும். ஈஹை, அவாயம், தாரணை ஆகிய இம்மூன்றும் ஆகா. ஏனெனில், ஒரு புதிய மட்பாண்டத்தில் ஒரு துளி அல்லது இரண்டு மூன்று துளி நீரைத் தெளிப்பின் அப்பாண்டம் நனைதலில்லை. மேலும் மேலும் நீரை விடின் அப் பாண்டம் நனையும். அதைப்போல, செவி, மெய், வாய், மூக்கு ஆகிய இவைகளுக்கு ஶப்தம், ஸ்பர்ஶம், சுவை, கந்தம் ஆகிய இவைகள் ஒன்று இரண்டு சமயங்களில் தெளிவாகப் புலப்படுதல் இல்லை. மேலும் மேலும் சப்தம் முதலானவைகள் உண்டானால் மறு சமயங்களில் தெளிவாகப் புலப்படும். எப்படியெனில், தூங்குகிற ஒருவனை மற்றொருவர் அழைத்தால், யார் அழைக்கிறார் என்பது அவனுக்கு முதலில் புலப்படாது. மறுபடியும் அழைத்தால் புலப்படுதல்போல ஆகும்.

அவக்ரஹம் இருவகை. அவை— அர்த்தாவக்ரஹம், வ்யஞ்ஜநாவக்ரஹம் என்பன. அவற்றுள்—

**அர்த்தாவக்ரஹம் :**—தெளிவாகத் தோன்றும் பொருளின் அவக்ரஹம். அஃதாவது, மேற்கூறப்பட்ட உதாரணத்தில் அழைத்தவர் இன்னவர் எனத் தெளிவாக அறிதல்போல ஆம்.

**வ்யஞ்ஜநாவக்ரஹம் :**—தெளிவாகத் தோன்ருத பொருளின் அவக்ரஹம். அஃதாவது, மேற்கூறப்பட்ட உதாரணத்தில் அழைத்தவர் யார் எனத் தெளிவாகத் தெரியாமைபோல ஆம். (18)

19. ந சக்ஷுரநிந்த்ரியாப்யாம் ॥ கக ॥

ந சக்ஷுரநிந்திரியாப்யாம் ||

(ப - ரை,) சக்ஷு: - கண், அநிந்த்ரியாப்யாம் - மனம் ஆகிய இவைகளினுல் வ்யஞ்ஜநாவக்ரஹம், ந - ஆகாது.

**கருத்துரை :**—கண்ணுக்கும் மனத்திற்கும் வ்யஞ்ஜநாவக்ரஹம் ஆகாது. அஃதாவது கண்ணும் மனமும் எந்தெந்தப் பொருள்களை அறிந்தாலும் ஸ்பஷ்டமாக (தெளிவாக) அறியும்; அஸ்பஷ்டமாக (ஐயமாக) அறியாது. ஆதலால் அஸ்பஷ்டமாகிய (தெளிவாகத் தோன்ருத) வ்யஞ்ஜநாவக்ரஹம் கண்ணுக்கும் மனத்திற்கும் உண்டாவதில்லை. செவி, மூக்கு, நாக்கு, மெய் ஆகிய இவைகளுக்குத்தான் அஸ்பஷ்டமாக (ஐயமாக) அறியுந் தன்மை உண்டு. ஆதலால், அஸ்பஷ்டமாகிய (தெளிவற்ற) வ்யஞ்ஜநாவக்ரஹம் காது, மூக்கு, நாக்கு, மெய் ஆகிய இவைகளுக்கு உண்டாகும்.

**குறிப்பு :**—மதிஜ்ஞானத்தின் உற்பத்திகாரணமாகிய ஐம்புலன்களும், மனமும், அவக்ரஹம், ஈஹை, அவாயம்,

தாரணை ஆகிய இவைகளும் பஹு முதலானவைகளும் சேர்ந்து மதிஞானம் 336 பேதமாகும். அவை படத்தில் காண்க. (19)

## ஶ்ருதஜ்ஞான இயல்

20. 𑌶𑍍𑌰𑍁𑌤𑌂 𑌮𑌤𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌦𑍍𑌵𑍍𑌯𑌨𑍇𑌕
𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌭𑍇𑌦𑌮𑍍 ॥ ௨0 ॥

ஶ்ருதம் மதி பூர்வம் த்வ்யநேக
த்வாதஶ பேதம் ||

(ப-ரை.) 𑌶𑍍𑌰𑍁𑌤𑌂 - சுருதஜ்ஞானம், 𑌮𑌤𑌿𑌪𑍂𑌰𑍍𑌵𑌂- மதிஜ்ஞான பூர்வமாக உண்டாகும்; அஃதாவது மதிஜ் ஞானம் உண்டானபிறகு சுருதஜ்ஞானம் உண்டாகும். அல்லது, சுருதஜ்ஞானம் நிறைவதற்கு மதிஜ்ஞானம் காரணம் ஆகும். அந்தச் சுருதஜ்ஞானம், 𑌦𑍍𑌵𑌿-இருவகை. அவை அங்கபாஹ்யம், அங்கப்ரவிஷ்டம் என்பன. அவற்றுள் அங்கபாஹ்யம், 𑌅𑌨𑍇𑌕 - பலவகையை உடையதும், அங்கப்ரவிஷ்டம், 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌭𑍇𑌦𑌂 - பன்னிரண்டு வகையை உடையதும் ஆம்.

அங்கப்பிரவிஷ்டம் பன்னிரண்டு வகை. அவை— ஆசாராங்கம், ஸூத்ரக்ருதாங்கம், ஸ்தாநாங்கம், ஸமவா யாங்கம், வ்யாக்யாப்ரஜ்ஞப்திஅங்கம், ஜ்ஞாத்ருகதாங்கம், உபாஸகாத்யயநாங்கம், அந்தக்ருத்தஶாங்கம், அநுத்த ரோபபாதிக தஶாங்கம், ப்ரஶ்ன வ்யாகரணாங்கம், விபாக ஸூத்ராங்கம், திருஷ்டிவாதாங்கம் என்பன. அவற்றுள்—

1. ஆசாராங்கம் :—துறவறத்தார்களின் ஒழுக்கங் களைக் கூறும் நூல்.

**2. ஸூத்ரக்ருதாங்கம் :—**ஞானம், தர்சனம் ஆகிய இவைகளை வணக்கஞ் செய்யும் முறையைக் கூறும் நூல்.

**3. ஸ்தானுங்கம்:—**ஜீவத்திரவியம், புத்கலத்திரவியம், தர்மத்திரவியம், அதர்மத்திரவியம், ஆகாசத்திரவியம், காலத்திரவியம் ஆகிய ஆறு திரவியங்களைக் கூறும் நூல்.

**4. ஸமவாயாங்கம் :—**த்ரவ்ய, க்ஷேத்ர, கால, பாவங்களினுல் பரஸ்பரம் ஸமானமாய் இருப்பவற்றைக் கூறும் நூல். அஃதாவது, திரவியத்தினுல் ஜீவத்திரவியம், தர்மத்திரவியம், அதர்மத்திரவியம், லோகாகாசம் ஆகிய இவைகள் சமானமாக இருக்கின்றன வென்றும், க்ஷேத்திரத்தினுல் ஜம்பூத்வீபம், ஏழாம்நரகம், நந்தீஸ்வர த்வீபத்திலுள்ள வாபீ, ஸர்வார்த்தஸித்தி (விமானம்) ஆகிய இவைகள் அளவில் சமானமாக இருக்கின்றன வென்றும், காலத்தினுல் உத்ஸர்ப்பிணி, அவஸர்ப்பிணி ஆகிய இவைகள் சமானமாக இருக்கின்றன வென்றும், பாவாபேக்ஷையினுல் க்ஷாயிகஜ்ஞானம், க்ஷாயிகதர்சனம் இவைகள் சமானமாக இருக்கின்றன வென்றும் ஒத்திட்டுக் கூறும் நூல்.

**5. வ்யாக்யாப்ரஜ்ஞப்தி :—**ஜீவன் அஸ்தி (இருக்கிறது), நாஸ்தி (இல்லை) என்ற விஷயத்தைப்பற்றி 60000 வினுக்களுக்கு விடை அளிக்கும் நூல்.

**6. ஜ்ஞாத்ருகதாங்கம் :—**தீர்த்தங்கரர், கணதரர் முதலானவர்களின் கதையை (வரலாற்றை)க் கூறும் நூல்.

**7. உபாஸகாத்யயநாங்கம் :—**இல்லறத்தார்களின் ஒழுக்கத்தைக் கூறும் நூல்.

**8. அந்தக்ருத்தஶாங்கம் :—**ஒவ்வொரு தீர்த்தங்கரர்-காலத்திலும் பிறரால் செய்யப்படும் கோரஉபஸர்க்கங்

களை (கொடிய துன்பங்களை) அடைந்த ஒவ்வொரு பத்து முனிவர்களின் வரலாற்றைக் கூறும் நூல்.

**9.** அநுத்தரோபபாதிகதஸாங்கம் :—ஒவ்வொரு தீர்த்தங்கரர்காலத்திலும் பிறரால் செய்யப்படும் கோரஉபஸர்க்கங்களை (கொடிய துன்பங்களை) வென்று விஜய, வைஜயந்த, ஜயந்த, அபராஜித, ஸர்வார்த்தஸித்தி என்னும் ஐந்து அநுத்தரவிமானங்களில் பிறந்த ஒவ்வொரு பத்து முனிவர்களின் வரலாற்றைக் கூறும் நூல்.

**10.** ப்ரச்னவ்யாகரணுங்கம் :—நஷ்ட, முஷ்டி, சிந்தை, லாபம், அலாபம் முதலான விணுக்களுக்கு விடை அளிக்கும் நூல்.

**11.** விபாகஸூத்ராங்கம் :—புண்ய பாப பலன்களைக் கூறும் நூல்.

**12.** திருஷ்டிவாதாங்கம் :— 363 மித்யாவாதிகளின் தன்மைகளையும் அவர்களுடைய கூற்றுக்களையும் மறுக்கும் முறைகளைக் கூறும் நூல்.

திருஷ்டிவாதாங்கம் ஐந்து வகை. அவை—பரிகர்மம், ஸூத்ரம், பிரதமாநுயோகம், பூர்வகதம், சூலிகா என்பன. அவற்றுள்—

**1.** பரிகர்மம் ஐந்து வகை. அவை சந்த்ரப்ரஜ்ஞப்தி, ஸூர்யப்ரஜ்ஞப்தி, ஜம்பூத்வீபப்ரஜ்ஞப்தி, த்வீபஸாகர ப்ரஜ்ஞப்தி, வ்யாக்யா ப்ரஜ்ஞப்தி என்பன. அவற்றுள்—

(1) சந்த்ரப்ரஜ்ஞப்தி :— சந்திரன்விஷயத்தைக் கூறும் நூல்.

(2) ஸூர்ய ப்ரஜ்ஞப்தி :— ஸூர்யன்விஷயத்தைக் கூறும் நூல்.

(3) ஜம்பூத்வீப ப்ரஜ்ஞப்தி :—ஜம்பூத்வீபத்தின் ஸ்வரூபத்தைக் கூறும் நூல்.

(4) த்வீபஸாகர ப்ரஜ்ஞப்தி:—த்வீபங்கள் சமுத்திரங்-கள் இவற்றின் ஸ்வரூபத்தைக் கூறும் நூல்.

(5) வ்யாக்யா ப்ரஜ்ஞப்தி :—ஜீவன், புத்கலம், தர்மம், அதர்மம், ஆகாஶம், காலம் என்னும் ஆறு திரவியங்களின் மூர்த்தம், அமூர்த்தம் ஆகிய இவைகளின் ஸ்வரூபத்தைக் கூறும் நூல்.

**2.** ஸூத்ரக்ருதம்:—அஸ்தி நாஸ்திகளின் ஸ்வரூபத்தை (இயலை)க் கூறும் நூல்.

**3.** பிரதமாநுயோகம் :—திரிஷஷ்டி ஶலாகா புருஷர்களின் கதைகளை (நல்ல மாணிக்க மணிக்கட்கு ஒப்பான அறுபத்துமூன்று உத்தம புருஷர்களின் வரலாற்றை)க் கூறும் நூல்.

**4.** பூர்வகதம் :—பதினான்கு வகை. அவை உத்பாத பூர்வம், ஆக்ராயணீ பூர்வம், வீர்யாநுவாத பூர்வம், அஸ்தி நாஸ்திப் பிரவாதபூர்வம், ஞானப் பிரவாத பூர்வம், ஸத்யப் பிரவாத பூர்வம், ஆத்மப் பிரவாத பூர்வம், கர்மப் பிரவாத பூர்வம், பிரத்யாக்யான பூர்வம், வித்யானுவாத பூர்வம், கல்யாணவாத பூர்வம், ப்ராணாவாத பூர்வம், கிரியா விஶால பூர்வம், லோகபிந்துஸார பூர்வம் என்பன. அவற்றுள்—

(1) உத்பாத பூர்வம் :—ஜீவன்முதலான திரவியங்களின் உத்பத்தி, நாசம், ஸ்திதி ஆகிய இவை-களைக் கூறும் நூல்.

(2) ஆக்ராயணீ பூர்வம் :— அங்கமங்களின் முக்ய மான அர்த்தத்தைக் கூறும் நூல்.

(3) வீர்யாநுவாத பூர்வம்: —கேவலிகள் (கேவல ஞானமுடையவர்கள்), தரணேந்திரன், ஸுரேந்திரன், சக்ரவர்த்தி ஆகிய இவர்களின் வீர்யத்தை (சக்தியை)க் கூறும் நூல்.

(4) அஸ்தி நாஸ்தி ப்ரவாத பூர்வம் :—ஜீவன் முதலான ஆறு திரவியங்களின் அஸ்தி நாஸ்திகளைக் கூறும் நூல்.

(5) ஞானப்பிரவாத பூர்வம் :—மதிஜ்ஞானம் முத லான எட்டுவகை ஜ்ஞானங்களின் தன்மை களையும், அவைகளின் உத்பத்தி, ஆதாரம் முதலானவைகளின் காரணங்களையும் கூறும் நூல்.

(6) ஸத்யப் பிரவாத பூர்வம் :—வசன்குப்தி, வசன ஸம்ஸ்காரம், த்வீந்திரியம்முதலான ஜீவன்-களின் பாஷை (ஈரறிவு முதல் ஐயறிவு உடைய உயிர்களின் பாஷை) ஆகிய இவை-களைக் கூறும் நூல்.

(7) ஆத்மப்பிரவாத பூர்வம் :—ஆத்ம ஸம்பந்தமான கர்த்ருத்வம் (கருத்தாவாதற்றன்மை), போக்த்ருத்வம் (நுகர்தற்றன்மை), அஜ்ஞானம், துக்கம் ஆகிய இவைகளின் தன்மைகளைக் கூறும் நூல்.

(8) கர்மப் பிரவாத பூர்வம் :— கர்மங்களின் பந்தம், உதயம், ஸத்வம், உதீர்ணம், உத்கர்ஷணம், அபகர்ஷணம், ஸம்வரை, நிர்ஜரை ஆகிய இவைகளின் தன்மைகளைக் கூறும் நூல்.

(9) **பிரத்யாக்யான நாமதேயபூர்வம்** :—திரவியங்களையும், அவைகளின் பர்யாயங்களையும் (மாறுதல்களையும்) கூறும் நூல்.

(10) **வித்யாநுவாத பூர்வம்** :—அங்குஷ்டம், பிரஸேனே முதலான 700 க்ஷுல்லக (சிறிய) வித்தைகளையும், ரோஹிணீ, பிரஜ்ஞப்தி முதலான 500 மஹா வித்தைகளையும், அஷ்டாங்க மஹா நிமித்தசாஸ்திரங்களையும் கூறும் நூல்.

(11) **கல்யாணவாத பூர்வம்** :—பலதேவர், வாஸுதேவர், சக்ரவர்த்தி முதலானவர்களின் கல்யாணங்களைக் கூறும் நூல்.

(12) **ப்ராணுவாத பூர்வம்** :—ஸ்வாஸ உச்ச்வாஸம், ஆயுர்வேதம், மந்த்ரவாதம், காருடவித்தை முதலானவைகளைக் கூறும் நூல்.

(13) **கிரியாவிசால பூர்வம்** :—அலங்காரசாஸ்திரம் முதலானவைகளைக் கூறும் நூல்.

(14) **லோகபிந்துஸார பூர்வம்**:—உத்தமமாகிய மோக்ஷஸுகத்தினை அடைதற்கு உரிய வழியைக் கூறும் நூல்.

**5.** **சூலிகை** ஐந்து வகை. அவை—ஜலகதம், ஸ்தலகதம், மாயாகதம், ஆகாசகதம், ரூபகதம் என்பன. அவற்றுள் :—

(1) **ஜலகதம்** :—நீரின்மீது நடத்தல், ஜலஸ்தம்பனம் செய்தல் (மழை வாராமல் தடுத்தல்)

முதலானவற்றிக்குக் காரணமாகிய மந்த்ரம், தந்த்ரம் ஆகிய இவைகளைக் கூறும் நூல்.

(2) ஸ்தலகதம் :—மேருபர்வதம், பூமி இவைகள் மீது விரைவாகச் செல்லுதல், வாஸ்து வித்தை முதலானவற்றைக் கூறும் நூல்.

(3) மாயாகதம் :—இந்த்ரஜாலவித்தை முதலானவைகளைக் கூறும் நூல்.

(4) ஆகாசகதம் :— ஆகாயத்தில் நடப்பதற்குக் காரணமான மந்த்ர தந்த்ரங்களைக் கூறும் நூல்.

(5) ரூபகதம் :—சிங்கம், புலி, யானை, குதிரை, மனிதன், மரம் முதலான உருவங்களாக மாற்றிக்கொள்ளக் காரணமாகிய மந்த்ர தந்த்ரங்களையும், கல், மண் முதலான உருவங்களையும், சித்ரகர்மங்களையும், ரஸங்களையும் கூறும் நூல். (20)

## அவதிஜ்ஞான இயல்

அவதிஜ்ஞானம் இரு வகை. அவை—பவப்பிரத்யய அவதிஜ்ஞானம், க்ஷாயோபஶமிக அவதிஜ்ஞானம் என்பன. அவற்றுள்—

## பவப்பிரத்யய அவதிஜ்ஞானம் இன்னருக்கு உண்டாகும் என்பது

21. ஹவவுரதூயொ௨வயி ஜெ௨வ நாரகாணாழ || உக ||

பவப்ரத்யயோவதிர் தேவ நாரகாணாம் ||

(ப - ரை.) ஹவவ்ரத்யயः - பிறப்பே காரணமாக வுடைய, ஃவயிः - அவதிஜ்ஞானம், தேவ நாரகாணாம் - தேவர்களுக்கும் நாரகர்களுக்கும் உண்டாகும்.

கருத்துரை:—பறவைகளுக்குக் கற்பனையின்றி, பறவை ஜாதியில் பிறந்த உரிமையால் பறக்குந்தன்மை உண்டாதல் போலத் தேவர்களுக்கும் நாரகர்களுக்கும் தபம், விரதம், சீலம் ஆகிய இவைகள் இன்றி அந்தக் கதியில் பிறந்த காரணத்தினாலே அவதிஜ்ஞானம் உண்டாகும்.

குறிப்பு :—ஸம்யக்திருஷ்டிகளாகிய தேவர்களுக்கும், நாரகர்களுக்கும் அவதிஜ்ஞானம் உண்டாகும். மித்யா திருஷ்டிகளாகிய தேவர்களுக்கும் நாரகர்களுக்கும் குஅவதி (விபங்க) ஜ்ஞானம் உண்டாகும். தீர்த்தங்கரர்களுக்கும் இந்தப் பவப்பிரத்யய அவதிஜ்ஞானம் இருக்கும். அஃதாவது, தீர்த்தங்கரர் ஜனித்தவுடன் இருக்கும் அவதிஜ்ஞானம் பவப்பிரத்யய அவதிஜ்ஞானம் ஆகும்.

## க்ஷயோபஶமநிமித்த அவதிஜ்ஞானம் இன்னாருக்கு உண்டாகும் என்பது

22. க்ஷயொவஶஃநிமித்தः ஷட்விகல்பः ஶேஷாணாம் ||உஉ||

க்ஷயோபஶமநிமித்தः ஷட்விகல்பः ஶேஷாணாம் ||

(ப - ரை.) க்ஷயொவஶஃ நிமித்தः - கர்மங்களின் க்ஷயோபஶம (கர்மங்கள் கெடுதலும் அடங்குதலும் ஆகிய) காரணத்தினால் உண்டானதும், ஷட்விகல்பः - அநுகாமி, அநநுகாமி, ஹீயமாநம், வர்த்தமானம்,

அவஸ்திதம், அநவஸ்திதம் என்னும் ஆறு வகையினை உடையதும் ஆகிய அவதிஜ்ஞானம், ஶேஷாணாம்-(நாரகர், தேவர், தீர்த்தங்கரர் ஆகிய இவர்கள் நீங்க) ஏனைய ஸம்யக்திருஷ்டிகளாகிய மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் உண்டாகும்.

**கருத்துரை** :—தபம், விரதம், சீலம் ஆகிய இவைகளினால் மனிதர்களுக்கும், விரதத்தினை யுடைய விலங்குகளுக்கும் அவதிஜ்ஞானாவரண கர்மத்தின் க்ஷயோபஶமத்தினால் (அவதிஜ்ஞானாவரணகர்மம் கெடுதலும் அடங்குதலும் ஆகிய காரணத்தால்) அவதிஜ்ஞானம் உண்டாகும். அதை க்ஷயோபஶமிக அவதிஜ்ஞானம் என்றும் குணப்பிரத்யய அவதிஜ்ஞானம் என்றும் கூறுவர்.

க்ஷயோபஶமிக அவதிஜ்ஞானம் ஆறுவகை. அவை— அநுகாமி அவதிஜ்ஞானம், அநநுகாமி அவதிஜ்ஞானம், ஹீயமான அவதிஜ்ஞானம், வர்த்தமான அவதிஜ்ஞானம், அவஸ்தித அவதிஜ்ஞானம், அநவஸ்தித அவதிஜ்ஞானம் என்பன. அவற்றுள்—

**1. அநுகாமி அவதிஜ்ஞானம்** :-பின்தொடர்தல் அல்லது உடன்செல்லுதல் ஆகிய அவதிஜ்ஞானம். அதாவது, ஸூர்யன் செல்லும் இடங்களிலெல்லாம் ஸூர்யனுடைய ஒளி செல்லுதல்போல ஜீவன் செல்லும் இடங்களிலெல்லாம் ஜீவனோடு செல்லும் அவதிஜ்ஞானம்.

**2. அநநுகாமி அவதிஜ்ஞானம்** :—ஜீவன் செல்லும் இடங்களிலெல்லாம் ஜீவனுடன் செல்லாமல், உண்டான இடத்திலேயே நின்று விடும் அவதிஜ்ஞானம்.

**3.** **வர்த்தமான அவதிஜ்ஞானம்** :—சுக்லபக்ஷத்துச் சந்திரனுடைய கலைகள் வளர்தலைப்போல் வளரும் அவதிஜ்ஞானம்.

**4.** **ஹீயமான அவதிஜ்ஞானம்**:—கிருஷ்ணபக்ஷத்துச் சந்திரனுடைய கலைகள் தேய்தல்போலக் குறையும் அவதிஜ்ஞானம்.

**5.** **அவஸ்தித அவதிஜ்ஞானம்** :—ஸூர்யமண்டலம் உயர்வும் தாழ்வும் இன்றி நிலையாய் இருத்தல்போல உள்ள அவதி ஜ்ஞானம்.

**6.** **அநவஸ்தித அவதிஜ்ஞானம்**:—காற்றினால் அலைக்கப்பட்ட அலை உயர்தலும் தாழ்தலும் போல, உயர்தலும் தாழ்தலும் உள்ள அவதிஜ்ஞானம். (22)

## மநःபர்யயஜ்ஞானத்தின் வகை

23. 𑌋𑌜𑍁 𑌵𑌿𑌪𑍁𑌲𑌮𑌤𑍀 𑌮𑌨𑌃𑌪𑌰𑍍𑌯𑌯𑌃 || ௨௩ ||

ருஜு விபுலமதீ மநःபர்யய: ||

(ப - ரை.) 𑌮𑌨𑌃𑌪𑌰𑍍𑌯𑌯𑌃 - பிறர்மனத்தில் நினைத்ததை அறியும் ஞானம். அது இருவகை. அவை, 𑌋𑌜𑍁 𑌵𑌿𑌪𑍁𑌲𑌮𑌤𑍀 - ருஜுமதி, விபுலமதி என்பன.

அவற்றுள், 𑌋𑌜𑍁𑌮𑌤𑌿—பிறர்மனத்தில் நினைக்கப்பட்ட ஸரலமான (விளக்கமான) பொருள்களை அறிதல். 𑌵𑌿𑌪𑍁𑌲𑌮𑌤𑌿—பிறர்மனத்தில் நினைக்கப்பட்ட கடினமான (விளக்கமற்ற) பொருள்களை அறிதல். (23)

## இருவகை மநஃபர்யயஜ்ஞானங்களின் விசேஷம்

24. விஶுத்⁴யப்ரதிபாதாப்⁴யாம் தத்³விஶேஷ꞉ || ௨௪ ||

விசுத்த்யப்ரதிபாதாப்யாம் தத்விஶேஷ꞉ ||

(ப - ரை.) விஶுத்³தி⁴ - பரிணாமங்களின் சுத்தம், அப்ரதிபாதாப்⁴யாம் - நழுவாமல் இருத்தல் ஆகிய இவை களினுல், தத்³விஶேஷ꞉ - ருஜுமதி விபுலமதி இவற்றின் விசேஷ மாகும்.

**கருத்துரை :**—ருஜுமதியைக்காட்டிலும் விபுலமதி திரவிய, க்ஷேத்திர, கால, பாவங்களினுல் விசுத்தம் ஆனது. ருஜுமதி—கேவலஜ்ஞானம் அடைதற்குமுன்னர் நீங்கு- வது. விபுலமதி—கேவலஜ்ஞானம் அடைகிறவரையில் நீங்காமல் இருப்பது. மனஃபர்யயஜ்ஞானுவரண கர்மத்தின் க்ஷயோபஶமத்தின் தாரதம்யத்தினுல் இருவகை மனஃபர்யய ஜ்ஞானங்களுள் உயர்வும் தாழ்வும் உண்டு. அதாவது, ருஜுமதியினும் விபுலமதி சிறந்தது. (24)

## அவதிஜ்ஞானம் மநஃபர்யயஜ்ஞானம் இவற்றின் விசேஷம்

25. விஶுத்³தி⁴க்ஷேத்ரஸ்வாமிவிஷயேப்⁴யோ(அ)வதி⁴
மந꞉பர்யயயோ꞉ || ௨௫ ||

விஶுத்தி க்ஷேத்ரஸ்வாமி விஷயேப்யோऽவதி
மனப்பர்யயயோ꞉ ||

(ப - ரை.) விஶுத்³தி⁴ - நிர்மலம், க்ஷேத்ர - இருப்பிடம், ஸ்வாமி - யஜமானன், உடையவன்; விஷயேப்⁴ய꞉ - அறியுந்

தன்மை ஆகிய இவைகளால், அவதிமனஃபர்யயயோஃ—அவதிஜ்ஞானத்தினதும் மனப்பர்யயஜ்ஞானத்தினதும் விசேஷம் ஆகும்.

**கருத்துரை :—** அவதிஜ்ஞானத்தைக்காட்டிலும் மனப்பர்யயஜ்ஞானம் ஸூக்ஷ்மமான பொருள்களை அறிதலாலும், அவதிஜ்ஞானம் சதுர்கதிஜீவன்களுக்கும் உண்டாக, மனப்பர்யயஜ்ஞானம் உத்தமருத்தியைப் பெற்ற முனிகளுக்குமாத்திரமே உண்டாதலாலும், அவதிஜ்ஞானத்தைக்காட்டிலும் மனப்பர்யயஜ்ஞானம் நிர்மலமானதனாலும், மனப்பர்யயஜ்ஞானம் அவதிஜ்ஞானத்தினும் சிறந்ததாகும். (25)

## மதிஜ்ஞானம் ஶ்ருதஜ்ஞானம் இவற்றின் இயல்

26. மதிஶ்ருதயோர்நிபந்தோ த்ரவ்யேஷ்வ
ஸர்வபர்யாயேஷு ॥ ௨௬ ॥

மதிஶ்ருதயோர்நிபந்தோ த்ரவ்யேஷ்
வஸர்வபர்யாயேஷு ॥

(ப - ரை.) மதி ஶ்ருதயோ: - மதிஜ்ஞானம் சுருதஜ்ஞானம் ஆகிய இவைகளினது, நிபந்த: - பொருளை அறியும் ஸம்பந்தம், த்ரவ்யேஷு - ஜீவன்முதலான ஆறுதிரவியங்களுள், அஸர்வ பர்யாயேஷு - சிற்சில பர்யாயங்களில் ஆகும்.

**கருத்துரை :—** மதிஜ்ஞானமும் சுருதஜ்ஞானமும் திரவியங்களின் பர்யாயங்களுள் சிலவற்றைமட்டும் அறியுந் தன்மை உடையன. ஆதலால் மதிஜ்ஞானத்தினாலும் சுருதஜ்ஞானத்தினாலும் வஸ்துவின் எல்லாக்குணங்

களையும் பர்யாயங்களையும் அறிய முடியாது. அஃதாவது, மதிஜ்ஞானமும் சுருதஜ்ஞானமும் முற்றும் உணருஞ் சக்தி இல்லாதவை என்பதாம். (26)

## அவதிஜ்ஞானத்தினது பொருளையறியுந் தன்மை

27. 𑌰𑍂𑌪𑌿𑌷𑍍𑌵𑌵𑌧𑍇𑌃 || ௨௭ ||
ரூபிஷ்வவதே: ||

(ப - ரை.) 𑌅𑌵𑌧𑍇𑌃 - அவதிஜ்ஞானத்தினது பொருளையறியுந் தன்மை, 𑌰𑍂𑌪𑌿𑌷𑍁 - மூர்த்தவஸ்துக்களில் (உருவமுள்ள பொருள்களில்) ஆகும்.

கருத்துரை :—அவதிஜ்ஞானம் மூர்த்தவஸ்துக்களைத்-தான் அறியும்.

குறிப்பு :—மூர்த்தவஸ்துவாவது — வண்ணம், சுவை, ஸ்பர்ஶம், கந்தம் ஆகியவை யுள்ள பொருள். அஃதாவது, ஐம்புலன்களுக்குத் தோன்றக்கூடிய பொருள். (27)

## மநःபர்யயஜ்ஞானத்தின் இயல்

28. 𑌤𑌦𑌨𑌨𑍍𑌤𑌭𑌾𑌗𑍇 𑌮𑌨𑌃𑌪𑌰𑍍𑌯𑌯𑌸𑍍𑌯 || ௨௮ ||
ததநந்தபாகே மந:பர்யயஸ்ய ||

(ப-ரை.) 𑌤𑌤𑍍 - அந்த அவதிஜ்ஞானத்தினல் அறியப்பட்ட பொருளினுடைய, 𑌅𑌨𑌨𑍍𑌤𑌭𑌾𑌗𑍇 - அனந்தபாகத்தில், 𑌮𑌨𑌃𑌪𑌰𑍍𑌯𑌯𑌸𑍍𑌯 - மனப்பர்யயஜ்ஞானத்தினது அறியுஞ்சக்தி செல்லுகிறது.

கருத்துரை :—ஸர்வாவதிஜ்ஞானம் மிக்க ஸூக்ஷ்மம் ஆகிய மூர்த்தவஸ்துக்களை அறியும். மனப்பர்யயஜ்ஞானம்

அவ் வவதிஜ்ஞானத்தைக்காட்டிலும் அனந்தம்மடங்கு ஸூக்ஷ்மமாகிய பொருள்களை அறியும். (28)

## கேவலஜ்ஞானத்தின் இயல்

29. 𑌸𑌰𑍍𑌵𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌪𑌰𑍍𑌯𑌾𑌯𑍇𑌷𑍁 𑌕𑍇𑌵𑌲𑌸𑍍𑌯 || ௨௯ ||

ஸர்வத்ரவ்யபர்யாயேஷு கேவலஸ்ய ||

(ப - ரை.) 𑌸𑌰𑍍𑌵𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌪𑌰𑍍𑌯𑌾𑌯𑍇𑌷𑍁 - ஸமஸ்த திரவியங்களிலும் பர்யாயங்களிலும், 𑌕𑍇𑌵𑌲𑌸𑍍𑌯 - கேவல ஜ்ஞானத்தினது பொருளையறியும் ஸம்பந்தம் ஆகும்.

கருத்துரை:—கேவலஜ்ஞானமாவது—ஜீவன் முதலான எல்லாத் திரவியங்களையும் அத் திரவியங்களில் உண்டாகும் எல்லாமாறுதல்களையும் ஒரேஸமயத்தில் முற்றும் உணர்வது.

ஞானத்தை மறைக்கும் ஞானவரணீயகர்மம் முற்றும் நசித்தபின் கேவலஜ்ஞானம் உண்டாகும். (29)

## ஒரு சமயத்தில் ஒரு ஜீவனிடத்தில் இத்தனை ஞானங்கள் இருக்கும் என்பது

30. 𑌏𑌕𑌾𑌦𑍀𑌨𑌿 𑌭𑌾𑌜𑍍𑌯𑌾𑌨𑌿 𑌯𑍁𑌗𑌪𑌦𑍇𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌾
𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍍𑌯𑌃 || ௩௦ ||

ஏகாதீநி பாஜ்யாநி யுகபதேகஸ்மிந்நா
சதுர்ப்யః ||

(ப - ரை) 𑌏𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 - ஒரு ஜீவனிடத்தில், 𑌯𑍁𑌗𑌪𑌤𑍍 — ஒருசமயத்தில் அல்லது ஒருங்கே, 𑌏𑌕𑌾𑌦𑍀𑌨𑌿 — ஒன்று

முதல், சதுர்ப்ய: - நான்கு ஜ்ஞானங்கள்வரைக்கும், பாஜ்யாநி - பிரிக்கத்தக்கன.

**கருத்துரை** :—ஒருவனிடத்தில் ஒருசமயத்தில் ஒன்று-முதல் நான்கு ஜ்ஞானங்கள்வரை இருக்கும். ஒரு ஜ்ஞானமாவது—கேவலஜ்ஞானம். இரண்டு ஜ்ஞானமாவன—மதிஜ்ஞானம், சுருதஜ்ஞானம் என்பன. மூன்று ஜ்ஞானமாவன—மதிஜ்ஞானம், சுருதஜ்ஞானம், அவதிஜ்ஞானம் என்பன. நான்கு ஜ்ஞானமாவன—மதிஜ்ஞானம், சுருதஜ்ஞானம், அவதிஜ்ஞானம், மனப்பர்யயஜ்ஞானம் என்பன. (30)

## மதி ஶ்ருத அவதிஜ்ஞானங்களினது மாறுதல்

31. மதி ஶ்ருதாவதயோ விபர்யயஶ்ச ॥ ௩௧ ॥

மதி ஶ்ருதாவதயோ விபர்யயஶ்ச ॥

(ப - ரை.) மதிஶ்ருதாவதய: - மதிஜ்ஞானம் சுருதஜ்ஞானம் அவதிஜ்ஞானம் ஆகிய இவைகள், விபர்யய: - மித்யையாகவும், ச - ஸம்யக்காகவும் மாறும்.

**கருத்துரை** :—நல்ல சுவையுள்ள பசுவின்பாலைக் கைப்புத்தன்மையுடைய சுரைக்குடுக்கையில் ஊற்றின-வுடன் அப் பாலின் சுவையும் நிறமும் மாறுதல்போல, மித்யாதிருஷ்டிகளைப் பொருந்திய மதிஜ்ஞானமும் சுருதஜ்ஞானமும அவதிஜ்ஞானமும் மித்யாஜ்ஞானங்கள் ஆகும்.

**குறிப்பு** :—ஒன்பதாம் ஸூத்திரத்தில் கூறப்பட்ட ஐந்து ஸம்யக்ஜ்ஞானங்களுள் மதிஜ்ஞானம், சுருதஜ்ஞானம், அவதிஜ்ஞானம் ஆகிய இம்மூன்றும் மித்யை

ஆகவும் மாறும். அவைகளைக் குமதிஜ்ஞானம், கு 𑌶𑍍𑌰𑍁𑌤 ஜ்ஞானம், கு அவதிஜ்ஞானம் அல்லது விபங்கஜ்ஞானம் என்று கூறுவர்.

மனப்பர்யயஜ்ஞானமும் கேவலஜ்ஞானமும் மித்யா ஜ்ஞானங்களாக மாறுதல் இல்லை. அவை எப்பொழுதும் ஸம்யக்ஜ்ஞானங்களாகவே இருக்கும். (31)

**ஸம்யக்திருஷ்டியாகிய ஒருவன் பொருள்களை எப்படி அறிகிறுனே அப்படியே மித்யாதிருஷ்டியாகிய ஒருவனும் அறிகிறுன். ஆயின், ஸம்யக்திருஷ்டியின் ஞானத்தை ஸம்யக்ஜ்ஞானம் என்றும், மித்யாதிருஷ்டியின் ஞானத்தை மித்யாஜ்ஞானம் என்றும் கூறுவதற்குக் காரணம் யாது என்பதற்கு விடை.**

32. 𑌸𑌦𑌸𑌤𑍋𑌰𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌦𑍍𑌯𑌦𑍃𑌚𑍍𑌛𑍋𑌪𑌲𑌬𑍍𑌧𑍇
𑌰𑍁𑌨𑍍𑌮𑌤𑍍𑌤𑌵𑌤𑍍 || ௩௨ ||

ஸதஸதோரவிசேஷாத்யத்ருச்சோபலப்தே
ருன்மத்தவத் ||

(**ப - ரை.**) 𑌯𑌦𑍃𑌚𑍍𑌛𑍋𑌪𑌲𑌬𑍍𑌧𑍇𑌃 - தன் மனம் போன வாறு (இஷ்டப்படி) அறிதலால், 𑌸𑌤𑍍 - (இது) உண்டு, நல்லது, 𑌅𑌸𑌤𑌃 - (இது) இல்லை, கெட்டது என்று, 𑌅𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌤𑍍 - பிரித்து உணர முடியாமையால், 𑌉𑌨𑍍𑌮𑌤𑍍𑌤𑌵𑌤𑍍 - பைத்தியக்காரனுடைய அறிவைப்போல் மித்யாதிருஷ்டிகளுடைய அறிவும் ஆகின்றது.

**கருத்துரை :—** பைத்தியத்தைப்போலவே மித்யாஜ் ஞானமும் வஸ்துவின் உண்மைத்தன்மையினை அறிய முடியாமல் வேறுவிதமாகவே அறியுந் தன்மை வாய்ந்ததா

யுளது. பைத்தியக்காரன், மனைவியை மனைவி யென்றும் தாயைத் தாய் என்றும் அறிந்தாலும் அவனுடையஞானம் மித்யை ஆகும். ஏனெனில், தாய்க்கும் மனைவிக்கும் உள்ள வித்யாஸத்தை அவன் எப்பொழுதும் நிலையாகக் கொண்டிருப்பதில்லை; அறிவதுமில்லை. அதைப்போல, மித்யாதிருஷ்டியாகிய ஒருவன் பொருள்களை அறிந்தாலும் நல்லது கெட்டது என்ற நிச்சயம் அவனிடத்தில் இல்லாமையால் அவனுடைய ஜ்ஞானம் மித்யாஜ்ஞானம் எனப் படுகின்றது. (32)

## நயங்களின் வகை

33. 𑌨𑍈𑌗𑌮𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌰𑍍𑌜𑍁𑌸𑍂𑌤𑍍𑌰𑌶𑌬𑍍𑌦
𑌸𑌮𑌭𑌿𑌰𑍂𑌢𑍈𑌵𑌂𑌭𑍂𑌤𑌾 𑌨𑌯𑌾𑌃 || ௩௩ ||

நைகமஸங்க்ரஹவ்யவஹாரர்ஜுஸூத்ரஶப்த
ஸமபிரூடைவம்பூதா நயா: ||

(ப - ரை.) 𑌨𑍈𑌗𑌮 - கல்பனையினால் அறிதல், 𑌸𑌂𑌗𑍍𑌰𑌹 - சேர்த்து அறிதல், 𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰 - பிரித்து அறிதல், 𑌋𑌜𑍁𑌸𑍂𑌤𑍍𑌰 - நிகழ்காலத்தில் பதார்த்தங்களை அறிதல், 𑌶𑌬𑍍𑌦 - ஶப்தத்தால் அறிதல், 𑌸𑌮𑌭𑌿𑌰𑍂𑌢 - ரூடியானதை(ப் பழக்கத்திலிருப்பதை) அறிதல், 𑌏𑌵𑌂𑌭𑍂𑌤𑌾𑌃 - ஒரு காரியஞ் செய்யும் பொருளை அக்காரியஞ் செய்யும்போது கண்டு அறிதல் ஆகிய இவை ஏழும், நயா: — நயங்கள் ஆகும்.

நயம் ஏழு வகை. அவை—நைகம நயம், ஸங்க்ரஹ நயம், வியவஹார நயம், ருஜுஸூத்ர நயம், ஶப்த நயம், ஸமபிரூட நயம், ஏவம்பூத நயம் என்பன. அவற்றுள்—

**நைகம நயம்** :—பூர்த்தி யாகாமல் இருக்குங் கார்யத்தைக் கற்பனையினுல் அறிதல். எப்படியெனில், சமையல் செய்வதற்காக அரிசி, பருப்பு, நீர், விறகு ஆகிய இவை-களைச் சேகரித்துக்கொண்டிருக்கும் ஒருவனை மற்றொரு-வன் 'ஐயா நீர் என்ன செய்கிறீர்' என்று கேட்க, அவன் 'நான் சமையல் செய்கிறேன்' என்று விடை அளித்தான். ஆனால் அதுவரைக்கும் அரிசியைக் கழுவிப் பாத்திரத்தில் போடவில்லை; அடுப்புமாத்திரம் எரித்துக்கொண்டிருக்கிறான். அப்படியாயினும் நைகமநயத்தினுல், 'சமையல் செய்கிறேன்' என்று கூறலாம். அப்படியே, உத்தரம் செய்வதற்கு மரம் வெட்டிவரக் கோடாலி எடுத்துக் கொண்டு போகும் ஒருவனைக் கண்டு மற்றொருவன், 'ஐயா, நீர் எங்கே போகிறீர்?' என்று கேட்க, அவன் 'நான் உத்தரம் கொண்டு வரப் போகிறேன்' என்று கூறினான். ஆனால், அப்பொழுது உத்தரம் செய்யவில்லை. ஆயினும் நைகம நயத்தினுல், முன்னர் ஆகப்போவதைக் கூறலாமாதலால் 'உத்தரம் கொண்டுவரப் போகிறேன்' என்று கூறுதல் அமையும்.

**ஸங்க்ரஹ நயம்** :—ஒரு ஜாதியில் விரோதபாவமின்றி எல்லாவற்றையும் ஒருங்கே சேர்த்துஅறிதல். எப்படியெனில், திரவியம் என்ற பதத்தினுல் ஜீவன்முதலான திரவியங்களையும், அவைகளின் உட்பிரிவுகளையும் அறிதல் போல்வது.

**வியவஹார நயம்** :—ஸங்க்ரஹ நயத்தினுல் அறியப் பட்ட பொருள்களைப் பிரித்துஅறிதல். எப்படியெனில் திரவியம் என்று உரைத்தவுடன் அநேகம் பிரிவுகளுள்ள எல்லாத்திரவியங்களின் ஸாமான்யஜ்ஞானம் உண்டாகும்.

அதனல், அத்திரவியத்தை ஜீவன், அஜீவன் என இரு.பிரிவாகவும், ஜீவத்திரவியத்தை நாரக, திரியஞ்ச, மனுஷ்ய, தேவகதிகள் என நான்கு பிரிவுகளாகவும், அஜீவத்திரவியத்தைப் புத்கலம், தர்மம், அதர்மம், ஆகாசம், காலம் என ஐந்து பிரிவுகளாகவும் அறிதல்போல்வது.

ருஜுஸூத்ர நயம் :—இறந்தகால பர்யாயங்களையும் எதிர்கால பர்யாயங்களையும் விடுத்து, நிகழ்கால பர்யாயங்களைமட்டும் அறிதல். அஃதாவது, தற்சமயத்தில் உண்டாகும் மாறுதல்களைமாத்திரம் அறிதல்.

ஶப்தநயம் :—இலக்கண ஸம்பந்தமான குற்றங்களை நீக்கிப் பொருளை உணர்தல். எப்படி யெனில், 'அவன் போகிறேன்', 'நான் போகிறுன்' என்று ஒருவன் கூறினல், அந்த வாக்கியம் இலக்கணவிதிப்படி குற்றமாயினும் 'அவன் போகிறுன்', 'நான் போகிறேன்' என்னும் பொருளைக் குறிப்பதனல் அது ஶப்தநயமாகும். அதாவது, ஶப்தம் தப்பாயிருப்பினும் பொருளை உணர்தல் ஶப்தநய மாகும்.

ஸமபிரூட நயம் :—ஒரு வஸ்துவின் அல்லது பதத்தின் பிரஸித்தமான பொருளை உணர்தல். எப்படி யெனில், 'கௌ' என்னும் பதத்திற்கு நீர், வாக்கு, பூமி, பசு, திக்கு, மயிர், வஜ்ரம், ஆகாசம், அம்பு, கிரணம் ஆகிய பல பொருள் இருப்பினும் ரூடியால் பசு என்று பொருள்கொள்ளல் போல்வது.

ஏவம் பூத நயம் :—ஒரு காரியஞ் செய்யும் பொருளை அக்காரியஞ் செய்யும்போது கண்டு அறிதல். எப்படி யெனில், அர்ச்சனை (பூசை) செய்யும்பொழுது கண்டு அர்ச்சகர் என்று அறிதல்.

குறிப்பு:—

ஜ்ஞானவிகல்போ நய:—ஞானத்தின் அம்சம் நயம்

ஜ்ஞாத்ருரபிப்ராயோ நய:—அறிபவனுடைய அபிப்ராயம் நயம்.

விகலாதேஶோ நய:—பிரமாணத்தினால் அறியப்பட்டதை ஏகதேசமாக அறிதல் நயம். அதாவது, ஜீவனில் அஸ்தித்வம், வஸ்துத்வம், திரவியத்வம், பிரமேயத்வம், அகுருலகுத்வம், நித்யத்வம், பிரதேஶித்வம், மூர்த்தத்வம், அமூர்த்தத்வம், சேதனத்வம், அசேதனத்வம் ஆகிய குணங்கள் இருப்பினும் அவைகளை முற்றும் உணருந் தன்மை யின்றி, 'சேதனா லக்ஷணோ ஜீவ:' (ஜீவன் அறிவுள்ளது) என்று ஒரு குணத்தினால் ஜீவனை அறிதல் நயமாகும் என்பதாம்.

ஒருவனிடத்தில் பணம், நிலம், வீடு, தோட்டம் முதலியவை இருந்தாலும் பணமாகிய ஒரு தன்மையைக் குறித்து அவனைப் பணக்காரன் என்று கூறுதல் நயமாகும்.

ஒருவனிடத்தில் தயவு, நன்னடத்தை, தானஞ் செய்தல், ஸத்யம் ஆகிய அநேக குணங்கள் இருந்தாலும் தயவு என்னும் ஒரு தன்மையினால் அவனை, 'தயாவான்' என்று கூறுதல் நயமாகும். (33)

இதி ஸ்ரீ உமாஸ்வாமிவிரசிதே தத்வார்த்தஸூத்ரே

மோக்ஷஶாஸ்த்ரே ப்ரதமோத்யாய:

ஸ்ரீ உமாஸ்வாமியாரால் செய்யப்பட்ட

தத்த்வார்த்த ஸூத்ரம் என்னும் மோக்ஷஶாஸ்த்ரத்தின்

முதல் அத்யாயம் முற்றிற்று.

## கேள்விகள்

1. தத்த்வம் எத்தனை?
2. ஸம்யக்சாரித்திரத்தினல்மாத்திரம் மோக்ஷம் அடைய முடியுமா?
3. நிக்ஷேபம் என்றால் என்ன?
4. நயத்திற்கும், பிரமாணத்திற்கும் உள்ள பேதம் என்ன?
5. முதலில் உண்டாவது மதிஜ்ஞானமா? சுருத ஜ்ஞானமா?
6. அவதிஜ்ஞானத்தின் பேதத்தைக் கூறுக.
7. மனப்பர்யயஜ்ஞானத்திற்கும், அவதிஜ்ஞானத் திற்கும் உள்ள வித்தியாஸம் என்ன?
8. அவதிஜ்ஞானம் இல்லாமல் மனப்பர்யயஜ்ஞானம் உண்டாகுமா?
9. ஸங்க்ரஹநயத்தை உதாரணத்துடன் கூறுக.
10. நயத்திற்கும், நிக்ஷேபத்திற்கும் உள்ள வித்தி யாஸம் என்ன?

## அத்யாயம் 2

34\. 𑌔𑌪𑌶𑌮𑌿𑌕𑌕𑍍𑌷𑌾𑌯𑌿𑌕𑍌 𑌭𑌾𑌵𑍌 𑌮𑌿𑌶𑍍𑌰𑌶𑍍𑌚
𑌜𑍀𑌵𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑍌𑌦𑌯𑌿𑌕𑌪𑌾𑌰𑌿𑌣𑌾𑌮𑌿𑌕𑍌 𑌚 ॥ ௧ ॥

ஔபஶமிகக்ஷாயிகௌ பாவௌ மிஶ்ரஶ்ச
ஜீவஸ்ய ஸ்வதத்த்வமௌதயிகபாரிணாமிகௌ ச ॥

(ப - ரை) 𑌜𑍀𑌵𑌸𑍍𑌯 - ஜீவனுடைய, 𑌸𑍍𑌵𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 - நிஜத் தன்மை (அஸாதாரணலக்ஷணம்) அதாவது ஜீவனைத் தவிர ஏனையதிரவியங்களில் தோன்ருத இயல், 𑌔𑌪𑌶𑌮𑌿𑌕 𑌕𑍍𑌷𑌾𑌯𑌿𑌕𑍌 𑌭𑌾𑌵𑍌 - ஔபஶமிகபாவம் க்ஷாயிகபாவம், 𑌮𑌿𑌶𑍍𑌰 - மிஶ்ரபாவம் அதாவது க்ஷாயோபஶமிகபாவம், 𑌔𑌦𑌯𑌿𑌕𑌪𑌾𑌰𑌿𑌣𑌾𑌮𑌿𑌕𑍌 - ஔதயிகபாவம், பாரிணாமிகபாவம் என ஐந்தாகும். அவற்றுள்—

ஔபஶமிகபாவம் :—சேற்றுடன் கலந்த நீரில் தேற்ருங் கொட்டையைத் தேய்ப்பின் சேறு அடியில் நிற்க நீர் தெளிதல்போலக் கர்மங்களின் சக்தி வெளித் தோன்ருமல் அடங்கியிருத்தல் உபஶமம் எனப்படும். அந்த உபஶமத்துடன் கூடிய பாவம் ஔபஶமிகபாவமாகும்.

க்ஷாயிக பாவம் :—முன்னர்க் கூறப்பட்ட உதாரணத்தில் அடியில்நின்ற சேறு, அந்த ஜலத்தினின்றும் நீங்கிவிடுதல்போலக் கர்மங்கள் முற்றும் கெடுதல் க்ஷயம் எனப்படும். அந்த க்ஷயத்துடன் கூடிய பாவம் க்ஷாயிக பாவம் ஆகும்.

க்ஷாயோபஶமிகபாவம் :—நீரின் தெளிவைக் கெடுக்குஞ் சேறு அந் நீரின் அடியில் நின்றிருப்பதனாலும்,

சிறிது தெளிவான சேறு (அந்நீரின்) மேல் இருப்பதனுலும் அந்நீர் தெளிந்ததும் தெளியாததுமாயிருத்தல்-போலக் கர்மங்களின் ஸர்வகாதிஸ்பர்த்தகத்தின் (கூட்டத்தின்) உதயமில்லாத க்ஷயமும், பின்னர் உதயத்திற்கு வரக்கூடிய மேற்கூறப்பட்ட ஸர்வகாதிஸ்பர்த்தகத்தின் ஸத் (இருத்தல்) அவஸ்தை ஆன உபஶமமும், தேசகாதிஸ்பர்த்தகத்தின் உதயமும் (ஆகிய இவைகள்) இருத்தல் க்ஷயோபஶமம் எனப்படும். அந்த க்ஷயோபஶமத்துடன் கூடிய பாவம் க்ஷாயோபஶமிகபாவம் ஆகும்.

**ஔதயிக பாவம்** :—கர்மங்களின் ஸ்திதி (ஆயுள், காலம்) முடிந்தவுடன் கர்மங்கள் பலனைக் கொடுத்தல் உதயம் எனப்படும். அந்த உதயத்துடன் கூடிய பாவம் ஔதயிகபாவம் ஆகும்.

**பாரிணுமிகபாவம்** :—கர்மங்களின் சேர்க்கையின்றி ஆத்மஸ்வபாவத்திஞல் உண்டாவது பரிணமம் எனப்படும். அந்தப் பரிணமத்துடன்கூடிய பாவம் பாரிணமிகபாவம் ஆகும். (1)

## ஐந்து பாவங்களின் பிரிவு

35. 𑌦𑍍𑌵𑌿𑌨𑌵𑌾𑌷𑍍𑌟𑌾𑌦𑌶𑍈𑌕𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌤𑍍𑌰𑌿𑌭𑍇𑌦𑌾 𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌮𑌮𑍍 ॥

த்விநவாஷ்டாதஶைகவிம்ஶதித்ரிபேதா யதாக்ரமம் ॥

(ப - ரை) மேற்கூறப்பட்ட பாவங்கள் ஐந்தும், 𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌮𑌮𑍍 – முறையே, 𑌦𑍍𑌵𑌿 – இரண்டு, 𑌨𑌵 – ஒன்பது, 𑌅𑌷𑍍𑌟𑌾𑌦𑌶–பதினெட்டு, 𑌏𑌕𑌵𑌿𑌂𑌶𑌤𑌿 –இருபத்தொன்று, 𑌤𑍍𑌰𑌿 – மூன்று, 𑌭𑍇𑌦𑌾𑌃 - பிரிவுகளாய் இருக்கின்றன.

**கருத்துரை** :—ஔபஶமிகபாவம் இரண்டு வகையாகவும், க்ஷாயிகபாவம் ஒன்பது வகையாகவும், க்ஷாயோப

ஶமிகபாவம் பதினெட்டு வகையாகவும், ஔதயிகபாவம் இருபத்தொரு வகையாகவும், பாரிணாமிகபாவம் மூன்று வகையாகவும் இருக்கின்றன. (2)

## ஔபஶமிகபாவம் இருவகை

36. 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌚𑌾𑌰𑌿𑌤𑍍𑌰𑍇 ॥ ௩ ॥

ஸம்யக்த்வசாரித்ரே ॥

(ப - ரை.) 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌚𑌾𑌰𑌿𑌤𑍍𑌰𑍇-ஔபஶமிகஸம்யக்த்வம் ஔபஶமிகசாரித்ரம் என ஔபஶமிகபாவம் இருவகை. அவற்றுள்—

ஔபஶமிக ஸம்யக்த்வம்:—அனந்தானுபந்திக்குரோதம், அனந்தானுபந்திமானம், அனந்தானுபந்திமாயை, அனந்தானுபந்திலோபம், மித்யாத்வம், ஸம்யங்மித்யாத்வம், ஸம்யக்த்வப்பிரகிருதி என்னும் ஏழு பிரகிருதி (கர்மங்)களின் உபஶமத்தினால் (அடக்கத்தினால்) உண்டாவது.

ஔபஶமிக சாரித்ரம்:—அப்ரத்யாக்யானாவரணக்குரோதம், அப்ரத்யாக்யானாவரணமானம், அப்ரத்யாக்யானாவரணமாயை, அப்ரத்யாக்யானாவரண லோபம், ப்ரத்யாக்யானாவரணக்குரோதம், ப்ரத்யாக்யானாவரணமானம், ப்ரத்யாக்யானாவரணமாயை, ப்ரத்யாக்யானாவரணலோபம், ஸஞ்ஜ்வலனக்குரோதம், ஸஞ்ஜ்வலனமானம், ஸஞ்ஜ்வலனமாயை, ஸஞ்ஜ்வலனலோபம் என்னும் கஷாயபேதம் 12-ம், ஹாஸ்ய, ரதி முதலான நோகஷாயபேதம் 9-ம் ஆக சாரித்ரமோஹநீயகர்மத்தின் இருபத்தொரு பிரகிருதிகளும் உபஶமிப்பதனால் (அடங்குதலால்) உண்டாவது.

## க்ஷாயிகபாவம் ஒன்பது வகை

37. 𑌜𑍍𑌞𑌾𑌨𑌦𑌰𑍍𑌶𑌨𑌦𑌾𑌨𑌲𑌾𑌭𑌭𑍋𑌗𑍋𑌪
𑌭𑍋𑌗𑌵𑍀𑌰𑍍𑌯𑌾𑌣𑌿 𑌚 ॥ ௪ ॥

ஜ்ஞாநதர்ஶநதாநலாபபோகோப
போகவீர்யாணி ச ॥

(ப - ரை.) 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 - கேவலஜ்ஞானம், 𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 - கேவல தர்ஶனம், 𑌦𑌾𑌨𑌂 - க்ஷாயிக தானம், 𑌲𑌾𑌭𑌃 - க்ஷாயிக லாபம், 𑌭𑍋𑌗 உப𑌭𑍋𑌗𑌂 - க்ஷாயிகபோகம் க்ஷாயிக உபபோகம், 𑌵𑍀𑌰𑍍𑌯𑌂 - க்ஷாயிக (அனந்த) வீர்யம், 𑌚 - முன்ஸூத்திரத்தில் கூறப்பட்ட, 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌂 - க்ஷாயிகஸம்யக்த்வம், 𑌚𑌾𑌰𑌿𑌤𑍍𑌰𑌂 - க்ஷாயிகசாரித்ரம் என்பன. அவற்றுள் —

**கேவலஜ்ஞானம்** :—ஞானவரணகர்மம் முற்றும் கெடுதலால் உண்டாவது.

**கேவலதர்ஶனம்** :—தர்சனவரணகர்மம் முற்றும் கெடுதலால் உண்டாவது.

**க்ஷாயிகதானம்** :—தானந்தராயகர்மம் முற்றும் நசித்தலால் உண்டாவது. அது அர்ஹத்பரமேஷ்ட்டியினிடத்து உள்ளதும் ஸமஸ்தபிராணிகளுக்கும் நன்மையைச் செய்வதும் ஆகிய க்ஷாயிகஅபயதானம்.

**க்ஷாயிகலாபம்** :—லாபாந்தராயகர்மம் முற்றும் கெடுதலால் உண்டாவது. அதனல் நான்கு வகை உணவு-களை உட்கொள்ளுந் தன்மை யற்ற அர்ஹத்பரமேஷ்ட்டி-யாகிய ஜினபகவானுக்குச் சரீரம் பலமாய் இருத்தற்-பொருட்டு, பிறருக்குக் கிடைக்கத்தகாததாகிய நுண்ணிய பரம புத்கலஅணுக்கள் பிரதிசமயமும் (ஜினபகவானுடைய உடலில்) சேரும்.

க்ஷாயிகபோகம் :—போகாந்தராயகர்மம் முற்றும் கெடுதலால் உண்டாவது. அதனுல் ஜினபகவானுக்குப் புஷ்பவிருஷ்டி முதலான அதிசயங்கள் உண்டாகும்.

க்ஷாயிக உபபோகம்:—உபபோகாந்தராயகர்மம் முற்றும் கெடுதலால் உண்டாவது. அதனுல் ஜினபகவானுக்கு ஸிம்மாஸனம், சாமரை, முக்குடை முதலானவை உண்டாகும்.

க்ஷாயிகவீர்யம் —வீர்யாந்தராயகர்மம் முற்றும் கெடுதலால் உண்டாவது. அதனுல் ஜினபகவானுக்கு அளவற்ற சக்தி உண்டாகும்.

க்ஷாயிகஸம்யக்த்வம் :—முன்னர்க்கூறப்பட்ட அனந்தாநுபந்திமுதலான ஏழு பிரகிருதிகள் முற்றும் கெடுதலால் உண்டாவது.

க்ஷாயிக சாரித்ரம் :—முன்னர்க்கூறப்பட்ட அப்ரத்யாக்யானுவரணக் குரோதம் முதலான இருபத்தொரு பிரகிருதிகள் முற்றும் நசித்தலால் உண்டாவது. (4)

## க்ஷாயோபஶமிகபாவம் பதினெட்டு வகை

38. 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌦𑌰𑍍𑌶𑌨𑌲𑌬𑍍𑌧𑌯𑌶𑍍𑌚𑌤𑍁
𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌤𑍍𑌰𑌿𑌪𑌞𑍍𑌚𑌭𑍇𑌦𑌾𑌃 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌚𑌾𑌰𑌿𑌤𑍍𑌰
𑌸𑌂𑌯𑌮𑌾𑌸𑌂𑌯𑌮𑌾𑌶𑍍𑌚 ॥ ௫ ॥

ஜ்ஞாநாஜ்ஞாநதர்ஶநலப்தயஶ்
சதுஸ்த்ரித்ரிபஞ்சபேதா:
ஸம்யக்த்வசாரித்ரஸம்யமாஸம்யமாஶ்ச ॥

க்ஷாயோபஶமிகபாவம் பதினெட்டு வகை. அவை—மதிஜ்ஞானம், ஶ்ருதஜ்ஞானம், அவதிஜ்ஞானம், மனப்பர்யயஜ்ஞானம், குமதிஜ்ஞானம், குஶ்ருதஜ்ஞானம், குஅவதிஜ்ஞானம், சக்ஷுர்தர்ஶனம், அசக்ஷுர்தர்ஶனம்,

அவதிதர்ஶனம், க்ஷாயோபஶமிகதானம், க்ஷாயோபஶமிக லாபம், க்ஷாயோபஶமிகபோகம், க்ஷாயோபஶமிக உப போகம், க்ஷாயோபஶமிகவீர்யம், க்ஷாயோபஶமிக ஸம்யக்த்வம், க்ஷாயோபஶமிகசாரித்ரம், ஸம்யமாஸம்யமம் என்பன. (5)

## ஔதயிகபாவம் இருபத்தொரு வகை

39. 𑌗𑌤𑌿𑌕𑌷𑌾𑌯𑌲𑌿𑌂𑌗𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌾
𑌸𑌂𑌯𑌤𑌾𑌸𑌿𑌦𑍍𑌧𑌲𑍇𑌶𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌤𑍁𑌶𑍍𑌚𑌤𑍁𑌸𑍍
𑌤𑍍𑌰𑍍𑌯𑍇𑌕𑍈𑌕𑍈𑌕𑍈𑌕𑌷𑌡𑍍𑌭𑍇𑌦𑌾𑌃 || ௬ ||

கதிகஷாயலிங்கமித்யா தர்ஶ்நாஜ்ஞாநா
ஸம்யதாஸித்தலேஶ்யாஶ்சதுஶ்
சதுஸ்த்ர்யேகைகைகைகஷட்பேதாః ||

ஔதயிகபாவம் இருபத்தொரு வகை. அவை—நரக கதி, திரியஞ்ச கதி, மனுஷ்ய கதி, தேவகதி, குரோதம், மானம், மாயை, லோபம், ஸ்த்ரீவேதம், பும்வேதம், நபும்ஸக வேதம், மித்யாதர்ஶனம், அஜ்ஞானம், அஸம்யமம், அஸித்தத்வம், கிருஷ்ணலேஶ்யை, நீலலேஶ்யை, காபோதலேஶ்யை, பீதலேஶ்யை, பத்மலேஶ்யை, சுக்ல லேஶ்யை என்பன. (6)

## பாரிணாமிகபாவம் மூன்றுவகை

40. 𑌜𑍀𑌵𑌭𑌵𑍍𑌯𑌾𑌭𑌵𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌨𑌿 𑌚 || ௭ ||

ஜீவபவ்யாபவ்யத்வாநி ச ||

(ப - ரை.) 𑌜𑍀𑌵𑌭𑌵𑍍𑌯𑌾𑌭𑌵𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌨𑌿 - ஜீவத்வம், பவ்யத்வம், அபவ்யத்வம் எனப் பாரிணாமிகபாவம் மூன்று வகை.

குறிப்பு :—ஸூத்திரத்தில் கூறப்பட்டுள்ள 'ச' காரத்தினால் அஸ்தித்வம், வஸ்துத்வம், பிரமேயத்வம் முதலான ஸாமான்ய குணங்களும் ஸ்வீகரிக்கப்படுகின்றன. (7)

## ஜீவனது லக்ஷணம்

41. உவயோமோ லக்ஷணம் || அ ||

உபயோகோ லக்ஷணம் ||

(ப - ரை) லக்ஷணம் - (ஜீவனுடைய) தன்மை, உவயோமஃ—உபயோகம் ஆகும்.

உபயோகமாவது — ஆத்மாவினுடைய சைதன்ய குணத்துடன் ஸம்பந்தப்பட்ட பரிணாமம். (8)

## உபயோகத்தின் வகை

42. ஸ விவியோ௨ஷ்ட வதுர்ஹேடிஃ || க ||

ஸ த்விவிதோ௨ஷ்டசதுர்பேதஃ ||

(ப - ரை) ஸஃ - (அந்த) உபயோகம், விவிடஃ - இரண்டு வகை. அவை ஞானோபயோகம், தர்சனோபயோகம் என்பன. அவற்றுள் ஞானோபயோகம், அஷ்டஹேடஃ—எட்டு வகை. அவை - மதிஜ்ஞானம், ஶ்ருத ஜ்ஞானம், அவதிஜ்ஞானம், மனப்பர்யயஜ்ஞானம், கேவல ஜ்ஞானம், குமதிஜ்ஞானம், குஶ்ருதஜ்ஞானம், குஅவதி ஜ்ஞானம் என்பன. தர்சனோபயோகம், வதுர்ஹேடஃ - நான்கு வகை. அவை—சக்ஷுர்தர்சனம், அசக்ஷுர்தர்சனம், அவதிதர்சனம், கேவலதர்சனம் என்பன. அவற்றுள்—

சக்ஷுர்தர்சனம் :— கண்களால் பார்த்தல்.

அசக்ஷுர்தர்சனம்: — கண்கள் தவிர ஏனைய மெய், வாய், மூக்கு, செவி ஆகிய நான்குபுலன்களால் அறிதல்.

அவதிதர்சனம் : — அவதிஜ்ஞானத்திற்கு முன்னர் உண்டாகும் அவ்யக்தமான (ஒருவகை) ஜ்ஞானம்.

கேவலதர்சனம் :—கேவலஜ்ஞானத்திற்கு முன்னர் உண்டாகும் அவ்யக்த ஜ்ஞானம். (9)

## ஜீவபேதம்

**43.** 𑌸𑌂𑌸𑌾𑌰𑌿𑌣𑍋 𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌶𑍍𑌚 ॥ ௰ ॥

ஸம்ஸாரிணோமுக்தாஶ்ச

(ப - ரை.) 𑌸𑌂𑌸𑌾𑌰𑌿𑌣𑌃 - ஸம்ஸாரி ஜீவன்கள், 𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 — முக்த ஜீவன்கள் என ஜீவன்கள் இருவகை. அவற்றுள்—

ஸம்ஸாரி ஜீவன்கள் :—கர்ம சம்பந்தத்தினால் இறப்பும் பிறப்பும் உள்ளவைகள்.

முக்த ஜீவன்கள்:—எல்லாக் கர்மங்களையும் கெடுத்தவைகள். (10)

## ஸம்ஸாரிஜீவன்கள் வகை

**44.** 𑌸𑌮𑌨𑌸𑍍𑌕𑌾𑌽𑌮𑌨𑌸𑍍𑌕𑌾𑌃 ॥ ௰௧ ॥

ஸமநஸ்காऽமநஸ்காஃ

(ப - ரை.) 𑌸𑌮𑌨𑌸𑍍𑌕𑌾𑌃 - மனம் உள்ள ஜீவன்கள், 𑌅𑌮𑌨𑌸𑍍𑌕𑌾𑌃 - மனம் இல்லாத ஜீவன்கள் என ஸம்ஸாரி ஜீவன்கள் இருவகை.

கருத்துரை :—ஓரறிவு, ஈரறிவு, மூவறிவு, நாலறிவு, உள்ள ஜீவன்கள் யாவும் மனம் இல்லாதவைகள். ஐயறிவுள்ள உடும்பு, ஓணான் முதலிய ஜீவன்களுக்கு மனம் இல்லை. ஐயறிவுள்ள யானை, குதிரை, கிளி, மைனா, மனிதர் முதலிய பிறப்பையுடைய ஜீவன்கள் மனம் உள்ளவைகள். (11)

**45.** 𑌸𑌂𑌸𑌾𑌰𑌿𑌣𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌾𑌃 ॥ ௰௨ ॥

ஸம்ஸாரிணஸ்த்ரஸஸ்தாவராஃ

(ப - ரை.) 𑌸𑌂𑌸𑌾𑌰𑌿𑌣𑌃 - ஸம்ஸாரி ஜீவன்கள் (மற்றொரு வகையில்) இருவகை. அவை—𑌤𑍍𑌰𑌸𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌾𑌃 - த்ரஸ ஜீவன்கள் ஸ்தாவர ஜீவன்கள் என்பன. (12)

## ஸ்தாவரஜீவன்களின் வகை (பேதம்)

46. வ்ருயிவ்யப்தேஜோவாயுவநஸ்பதயஃ ஸ்தாவராஃ ॥௪௬ ॥
ப்ருத்வ்யப்தேஜோவாயுவநஸ்பதயஃ ஸ்தாவராஃ

(ப - ரை.) ஸ்தாவராஃ - ஸ்தாவர ஜீவன்கள் (ஐந்து வகை). அவை — வ்ருயிவீ - பிருத்வீகாயிக ஜீவன், அவ - ஜலகாயிக ஜீவன், தேஜஃ - அக்நிகாயிக ஜீவன், வாயு - வாயுகாயிக ஜீவன், வநஸ்பதயஃ - வனஸ்பதி காயிக ஜீவன் என்பன.

**ஸ்தாவரம் :**—ஸ்தாவரநாம கர்மோதயத்தினுல் உண்டாகும் ஜீவனுடைய பர்யாயம்.

ஸ்பர்ஶனேந்திரியம் (மெய்) என்னும் ஓரறிவுள்ள ஜீவன்கள்யாவும் ஸ்தாவர ஜீவன்கள். (13)

## த்ரஸஜீவன்கள் வகை

47. த்வீந்த்ரியாதயஸ்த்ரஸாஃ ॥ ௪௭ ॥
த்வீந்திரியாதயஸ்த்ரஸா: ||

(ப - ரை.) த்ரஸாஃ - த்ரஸஜீவன்கள், த்வீந்த்ரியாதயஃ - த்வீந்திரியஜீவன்கள் த்ரீந்திரியஜீவன்கள் சதுரிந்திரிய ஜீவன்கள் பஞ்சேந்திரியஜீவன்கள் என நான்கு வகை.

**த்ரஸ:** —த்ரஸநாம கர்மோதயத்தினுல் உண்டாகும் ஜீவனுடைய பர்யாயம்.

ஈரறிவு, மூவறிவு, நாலறிவு, ஐயறிவு உள்ள ஜீவன்கள் யாவும் த்ரஸஜீவன்கள். (14)

## ஐந்து இந்திரியங்கள்

48. 𑌪𑌂𑌚𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 || ௧௫ ||
பஞ்சேந்த்ரியாணி ||

(ப - ரை.) 𑌪𑌂𑌚𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌿 - இந்திரியங்கள் (பொறிகள்) ஐந்து. (15)

## இந்திரியங்களின் வகை

49. 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌨𑌿 || ௧௬ ||
த்விவிதானி ||

(ப - ரை.) 𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌨𑌿 - இந்திரியங்கள் இரண்டு வகை. அவை-த்ரவ்யேந்திரியம் பாவேந்திரியம் என்பன.

## த்ரவ்யேந்திரியத்தின் லக்ஷணம்

50. 𑌨𑌿𑌰𑍍𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌕𑌰𑌣𑍇 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌂 || ௧௭ ||
நிர்வ்ருத்யுபகரணே த்ரவ்யேந்த்ரியம் ||

(ப - ரை.) 𑌨𑌿𑌰𑍍𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑍁𑌪𑌕𑌰𑌣𑍇 - நிர்விருத்தியும் உபகரணமும் உள்ளது, 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌂 - த்ரவ்யேந்திரியம் ஆகும்.

கருத்துரை :—நிர்விருத்தியையும் உபகரணத்தையும் உடையது த்ரவ்யேந்திரியமாகும்.

குறிப்பு : — நிர்விருத்திநாமகர்மத்தின் உதயத்தினால் இந்திரிய ஆகாரம் (வடிவு) அமைதல் இரண்டு வகை. அவை - பாஹ்யநிர்விருத்தி, ஆப்யந்தர நிர்விருத்தி என்பன. அவற்றுள்—

பாஹ்ய நிர்விருத்தி :—புத்கலபரமாணுக்கள் இந்திரிய ரூபமாக (வடிவாக) அமைதல்.

**ஆப்யந்தர நிர்விருத்தி** :—ஆத்மப் பிரதேசங்கள் இந்திரியரூபமாகத் தோன்றுதல். அஃதாவது, ஆத்மப்பிரதேசத்தில் (ஆத்மனிடத்துள்) மஸூரிகா (சிவப்புத் துவரம்பருப்பு) அளவு சக்ஷுரிந்திரியஆகாரம் இருத்தல்.

நிர்விருத்திக்கு எது உபகாரம் செய்கிறதோ அது உபகரணம். உபகரணம் இரண்டு வகை. அவை-பாஹ்ய உபகரணம், ஆப்யந்தர உபகரணம் என்பன. அவற்றுள் —

**பாஹ்ய உபகரணம்**—கண்களின் இமைகள் முதலியன.

**ஆப்யந்தர உபகரணம்**— சிவப்புத்துவரம்பருப்பளவினவாய்க் கண்ணின் சுற்றிலும் இருக்குங் கறுப்பு (மண்டலம்), வெளுப்பு (மண்டலம்) முதலியன. இப்படியே எல்லாஇந்திரியங்களையும் அந்தந்த அடையாளங்களால் அறிக. (17)

## பாவேந்திரிய லக்ஷணம்

51. ளுஸ்யூவயொமெள ஹாவெஷீ்யழ || ௫௧ ||

லப்த்யுபயோகௌ பாவேந்த்ரியம் ||

(ப - ரை.) ஹாவெஷீ்யம் - பாவேந்திரியமாவது, ளுஸ்ரி உவயொமெள - லப்தியும் உபயோகமும் உள்ளது.

குறிப்பு: லப்தி—ஞானுவரணகர்மத்தின் க்ஷயோபஶமத்தினுல் உண்டாவது (ஞானுவரணகர்மம் கெடுதலாலும் அடங்குதலாலும் உண்டாவது)

**உபயோகம்**— ஆத்மா, இந்திரியங்களின் வழியாகப் பொருள்களை அறிதற்கு ஆகும் ஹேது. (18)

## ஐந்து இந்திரியங்கள்

52. 𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌨𑌰𑌸𑌨𑌘𑍍𑌰𑌾𑌣𑌚𑌕𑍍𑌷𑍁𑌃𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 ||

ஸ்பர்ஶநரஸநக்ராணசக்ஷுஃஶ்ரோத்ராணி ||

(ப - ரை.) 𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌨𑌂 - ஸ்பர்சனேந்திரியம் (மெய்), 𑌰𑌸𑌨𑌂 — ரஸனேந்திரியம் (நாக்கு), 𑌘𑍍𑌰𑌾𑌣𑌂—க்ராணேந்திரியம் (மூக்கு), 𑌚𑌕𑍍𑌷𑍁𑌃 - நேத்ரேந்திரியம் (கண்), 𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌂 - ஶ்ரோத்ரேந்திரியம் (செவி) என இந்திரியங்கள் ஐந்து. (19)

## இந்திரியங்களின் விஷயங்கள் (தொழில்கள்)

53. 𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌰𑌸𑌗𑌨𑍍𑌧𑌵𑌰𑍍𑌣𑌶𑌬𑍍𑌦𑌾𑌸𑍍𑌤𑌦𑌰𑍍𑌥𑌾𑌃 || ௨௰ ||

ஸ்பர்ஶரஸகந்தவர்ணஶப்தாஸ்ததர்த்தாஃ ||

(ப - ரை.) 𑌸𑍍𑌪𑌰𑍍𑌶 - தொடுதல், 𑌰𑌸 - சுவை (அறிதல்), 𑌗𑌨𑍍𑌧 - வாசனை (அறிதல்), 𑌵𑌰𑍍𑌣 - நிறம் ரூபம் முதலியவை (பார்த்தல்), 𑌶𑌬𑍍𑌦𑌾𑌃 - கேட்டல் ஆகிய இவைகள், 𑌤𑌦𑌰𑍍𑌥𑌾𑌃 - ஐந்து இந்திரியங்களின் விஷயங்கள் (தொழில்) ஆம். (20)

## மனத்தின் விஷயம் (தொழில்)

54. 𑌶𑍍𑌰𑍁𑌤𑌮𑌨𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯 || ௨௧ ||

ஶ்ருதமநிந்த்ரியஸ்ய ||

(ப - ரை.) 𑌅𑌨𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌯 - மனத்தின் விஷயம், 𑌶𑍍𑌰𑍁𑌤𑌂 — கேட்டதை அறிதல், அதாவது சாஸ்திரத்தில் கூறப்பட்ட பொருள்களை அறிதல் ஆம். (21)

## இந்திரியங்களையுடைய ஜீவன்கள்

55. 𑌵𑌨𑌸𑍍𑌪𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌾𑌨𑌾𑌮𑍇𑌕𑌮𑍍 ॥ ௨௨ ॥
வநஸ்பத்யந்தாநாமேகம் ||

(ப - ரை.) 𑌵𑌨𑌸𑍍𑌪𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 - வனஸ்பதியே கடைசியாக உள்ள ஜீவன்களுக்கு, அதாவது பிருத்வீகாயிக ஜீவன்கள் ஜலகாயிக ஜீவன்கள் அக்னிகாயிக ஜீவன்கள் வாயுகாயிக ஜீவன்கள் வனஸ்பதிகாயிக ஜீவன்கள் ஆகிய இவைகளுக்கு, 𑌏𑌕𑌮𑍍 - ஸ்பர்ஶனேந்திரியம் (மெய்) ஒன்று தான் இருக்கும். (22)

56. 𑌕𑍃𑌮𑌿𑌪𑌿𑌪𑍀𑌲𑌿𑌕𑌾𑌭𑍍𑌰𑌮𑌰𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌦𑍀𑌨𑌾
𑌮𑍇𑌕𑍈𑌕𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌨𑌿 ॥ ௨௩ ॥
க்ருமிபிபீலிகாப்ரமரமநுஷ்யாதீநா
மேகைகவ்ருத்தாநி ||

(ப - ரை,) 𑌕𑍃𑌮𑌿 – புழு (முதலியன), 𑌪𑌿𑌪𑍀𑌲𑌿𑌕𑌾 - எறும்பு (முதலியன), 𑌭𑍍𑌰𑌮𑌰 - வண்டு (முதலியன), 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 - மனிதர்முதலானவர் இவைகளுக்கு முறையே, 𑌏𑌕𑍈𑌕𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌨𑌿 - ஒவ்வோர் இந்திரியம் அதிகமாகின்றது.

கருத்துரை:—புழுமுதலான ஜீவன்களுக்கு ஸ்பர்சனேந்திரியம் (மெய்) ரஸனேந்திரியம் (நாக்கு, வாய்) என்னும் இரண்டு இந்திரியங்களும், எறும்பு முதலிய ஜீவன்களுக்கு ஸ்பர்சனேந்திரியம், ரஸனேந்திரியம், க்ராணேந்திரியம் (மூக்கு) என்னும் மூன்று இந்திரியங்களும், வண்டுமுதலான ஜீவன்களுக்கு ஸ்பர்ஶனேந்திரியம், ரஸனேந்திரியம், க்ராணேந்திரியம், சக்ஷுரிந்திரியம் (கண்) என்னும் நான்கு இந்திரியங்களும், மனிதர் முதலானவர்-களுக்கு ஸ்பர்ஶனேந்திரியம், ரஸனேந்திரியம், க்ராணேந்

திரியம், சக்ஷுரிந்திரியம், சுரோத்ரேந்திரியம் (காது) என்னும் ஐந்து இந்திரியங்களும் இருக்கின்றன. (23)

## ஸமநஸ்கருடைய மறுபெயர்

57. ஸஂஜ்ஞிநः ஸமநஸ்காः ॥ ௨௪ ॥

ஸஞ்ஜ்ஞிந: ஸமநஸ்கா: ॥

(ப - ரை.) ஸமநஸ்காः - மனம் உள்ள ஜீவன்கள், ஸஂஜ்ஞிநः - ஸஂஜ்ஞிஜீவன்கள் எனப்படும்.

குறிப்பு : ஸஂஜ்ஞிஜீவன்கள் — உபதேசம் முதலிய-வற்றை ஸ்வீகரிக்குந் தன்மை யுள்ளவை.

அஸஂஜ்ஞிஜீவன்கள் — உபதேசம் முதலியவற்றை ஸ்வீகரிக்குந் தன்மை யில்லாதவை. (24)

ஜீவன் மனத்தின் துணையால் நன்மையும் தீமையம் செய்வது ஆயின், விக்ரஹகதியில் மனம் இல்லாமல் புதிய சரீரத்தை அடைய எப்படிச் செல்கின்றது என்ற கேள்விக்கு விடை கூறப்படுகின்றது.

58. விக்ரஹகதௌ கர்மயோகः ॥ ௨௫ ॥

விக்ரஹகதௌ கர்மயோக: ॥

(ப - ரை) விக்ரஹகதௌ - (ஜீவன்) பழைய வுடலை விட்டுப் புதியவுடலைத் தரிக்கச் செல்லுஞ் சமயத்தில் (ஜீவனுடன்), கர்மயோகः - கார்மணகாய யோகம் இருக்கின்றது. அதனால்தான் ஜீவன் ஒரு கதியைவிட்டு மறுகதிக்குச் செல்கிறது.

விக்ரஹகதி :—ஜீவன் ஓர்உடலை விட்டு மற்றோர் உடலைத் தரிக்கச் செல்லுதல்.

கர்மயோக :—ஜ்ஞாநாவரணம் முதலான எட்டுக்கர்மங்களும் கார்மணம் எனப்படும். கார்மணசரீரத்தினுடைய

தொடர்பினால் ஆத்மப்பிரதேசத்தில் உண்டாகும் அசைவு யோகம் எனப்படும். அதைக் கர்மயோகம் அல்லது கார்மண யோகம் என்று கூறுவர். (25)

## கதி (செல்லுகை) எப்படி ஆகும்?

59. 𑌅𑌨𑍁𑌶𑍍𑌰𑍇𑌣𑌿 𑌗𑌤𑌿𑌃 || ௨௬ ||

அநுஶ்ரேணி கதிஃ ||

(ப - ரை.) 𑌗𑌤𑌿𑌃 - (ஜீவன்களினதும், புத்கலங்களினதும்) செல்லுகை, 𑌅𑌨𑍁𑌶𑍍𑌰𑍇𑌣𑌿 - ஶ்ரேணியைக் குறித்து ஆகும். ஜீவன் பழைய சரீரத்தை விட்டுப் புதிய சரீரத்திற்காக (விக்ர கதியில்) செல்லும்போது ஶ்ரேணியைக்குறித்தே செல்கிறது.

குறிப்பு:—யாதொரு சுத்தபுத்கலபரமாணு ஒரு சமயத்தில் பதினான்கு ரஜ்ஜூ (கயிறு) உயரம் செல்லுமோ அது ஶ்ரேணியைக்குறித்துச் செல்லும். எல்லாப் புத்கல பரமாணுக்களும் ஶ்ரேணியைக்குறித்துச் செல்வதில்லை.

ஶ்ரேணி:— உலகத்தின் மத்தியபாகத்திலிருந்து மேலும் கீழும் பக்கங்களிலும் (இடையிலும்) கிரமமாக அமைந்திருக்கும் ஆகாஶப்பிரதேஶங்களின் வரிசை.

ஜீவன் (இறந்து) மறுகதியை அடையும் போது விதிக்குக்களை (மூலைகளை) விட்டுத் திக்குக்களைக்குறித்தே வளைவு இன்றி நேராகச் செல்லும். அஃதாவது, மத்திய பாகத்தில் இருக்கும் ஒருஜீவன் (இறந்து) அக்னிமூலையின் சமீபத்தில் (கிழக்குத்திக்குக்கும் தென்கிழக்கு மூலைக்கும் இடையில்) பிறக்க வேண்டுமானால், மத்திய பாகத்திலிருந்து பிறக்கவேண்டிய இடத்திற்குச் செல்லாமல், கிழக்குத்திக்குச் சென்று அங்கிருந்து பிறக்கவேண்டிய இடமாகிய அக்னிமூலையின் சமீபம் செல்லும் என்பதாம்.

## முக்த ஜீவன்களின் கதி

60. அவிக்ரஹா ஜீவஸ்ய ॥ ௨௭ ॥

அவிக்ரஹா ஜீவஸ்ய ||

(ப - ரை.) ஜீவஸ்ய - முக்தஜீவனுடைய செல்லுகை, அவிக்ரஹா - வளைவு இன்றி நேராக ஆகும்.

**கருத்துரை**:—முக்தஜீவன் கர்மங்களைக் கெடுத்தவுடன் வளைந்து செல்லாமல் நேராக மேல்நோக்கி ஸித்த க்ஷேத்திரத்திற்கு (முக்தியாகிய வீட்டிற்கு)ச் சென்று விடும்.

கதி இருவகை. அவை—விக்ரஹாகதி, அவிக்ரஹா கதி என்பன. அவற்றுள் அவிக்ரஹாகதி—கர்மங்களைக் கெடுத்து முக்தியாகிய வீட்டினை அடையும் ஜீவன்களுக்கு ஆகும். (27)

## ஸம்ஸாரி ஜீவன்களின் கதி

61. விக்ரஹவதீ ச ஸம்ஸாரிண:
ப்ராக் சதுர்ப்ய: ॥ ௨௮ ॥

விக்ரஹவதீ ச ஸம்ஸாரிண: ப்ராக் சதுர்ப்ய: ||

(ப - ரை.) ஸம்ஸாரிண: - ஸம்ஸாரிஜீவனுடைய கதி (செல்லுகை), ப்ராக்சதுர்ப்ய: - நான்குசமயத்திற்குமுன்னர், அஃதாவது ஒன்றுமுதல் மூன்றுசமயம் வரையில், விக்ரஹவதீ ச - வளைந்து செல்லுதல் வளையாமல் செல்லுதல் என இருவகையாகும்.

**கருத்துரை** :—ஸம்ஸாரி ஜீவன்களுடைய கதி (செல்லுகை) விக்ரஹாகதி (வளைந்து செல்லுதல்), அவிக்ரஹா கதி (வளையாமல் செல்லுதல்) என இருவகை. அவற்றுள் வளைந்து செல்லாமல் நேராகச் செல்லும் அவிக்ரஹா

கதிக்கு ஒருசமயம் என்னுங் காலமும், ஒருவளைவு வளைந்து செல்லும் விக்ரஹாகதிக்கு இரண்டு சமயமும், இரண்டுவளைவு வளைந்து செல்லும் விக்ரஹாகதிக்கு மூன்று சமயமும், மூன்றுவளைவு வளைந்து செல்லும் விக்ரஹா கதிக்கு நான்கு சமயமும் பிடிக்கும். ஆனால், நான்காவது சமயத்தில் ஜீவன் புதியவுடலைத் தரித்துக்கொள்ளும். அதனால், விக்ரஹாகதியினுடைய காலம் 'நான்கு சமயத் திற்கு முன்னர்' என்று கூறப்பட்டது.

கதி நான்குவகை. அவை - இஷுகதி, பாணிமுக்தா கதி, லாங்குலிகா கதி, கோமூத்ரிகா கதி என்பன. அவற்றுள்—

**இஷுகதி:**—வளைந்து செல்லாமல் நேராகச் செல் லுவதும், ஒருசமயகால முள்ளதும் ஆகிய அவிக்ரஹாகதி.

**பாணிமுக்தாகதி:**—ஒரு வளைவு வளைந்து செல்லு தலும், இரண்டுசமயகால முள்ளதும் ஆகிய விக்ரஹாகதி.

**லாங்குலிகாகதி:**—இரண்டுவளைவு வளைந்து செல்லு வதும், மூன்றுசமயகால முள்ளதும் ஆகிய விக்ரஹாகதி.

**கோமூத்ரிகாகதி:**—மூன்று வளைவு வளைந்து செல்லு வதும், நான்குசமயகால முள்ளதும் ஆகிய விக்ரஹாகதி.

ஜீவன் இந்த நான்குசமயத்திற்குள் புதிய வுடலைத் தரிக்கும். (28)

## அவிக்ரஹாகதியின் (ஸமயம்) காலம்

62. ஏகஸமயாऽவிக்ரஹா || ௨௯ ||

ஏகஸமயாऽவிக்ரஹா ||

(ப - ரை.) அவிக்ரஹா - வளைதல் இல்லாத கதி (வளைந்து செல்லாத செல்கை), ஏகஸமயா—ஒரு சமயம் ஆகும். (29)

## விக்ரஹகதியில் அநாஹாரக அவஸ்தை

## (ஆஹாரம் இன்மையானநிலை)

63. 𑌏𑌕𑌂 𑌦𑍍𑌵𑍌 𑌤𑍍𑌰𑍀𑌨𑍍𑌵𑌾𑌽𑌨𑌾𑌹𑌾𑌰𑌕𑌃 ॥ ௩௰ ॥
ஏகம் த்வௌ த்ரீந்வாऽநாஹாரக: ||

**(ப - ரை.)** விக்ரஹகதியில் ஜீவன், 𑌏𑌕𑌂 - ஒன்று, 𑌦𑍍𑌵𑍌 - இரண்டு, 𑌵𑌾 - அல்லது, 𑌤𑍍𑌰𑍀𑌨𑍍 - மூன்றுசமயங்கள் வரையில், 𑌅𑌨𑌾𑌹𑌾𑌰𑌕𑌃 - ஆஹாரமில்லாமலிருக்கும் (கர்ம நோகர்மங்களைப் பற்றாமல் இருக்கும்).

அநாஹாரகம்:—ஔதாரிகம், வைக்ரியிகம், ஆஹாரகம் என்னும் மூன்று சரீரங்களுக்கும் ஆஹாரம், சரீரம், இந்திரியம், ஸ்வாஸோச்ச்வாஸம், பாஷை, மனம் என்னும் ஆறு பர்யாப்திகளுக்கும் யோக்யமான புத்கலபரமாணுக்களை எவ்வளவுகாலம்வரையில் ஜீவன் ஸ்வீகரிப்பதில்லையோ அவ்வளவுகாலம்வரைக்கும் அநாஹாரகஅவஸ்தை எனப்படும்.

ஆஹாரம் —உடலுக்குத் தகுந்த புத்கலங்களை ஸ்வீகரித்தல்; அஃதாவது கர்ம நோகர்மங்களை யடைதல்.

அவிக்ரஹாகதியில் ஸம்ஸாரிஜீவன்களுக்கு ஆஹாரம் உண்டு. ஆனால், ஒன்று இரண்டு மூன்று வளைவுகள் உள்ள விக்ரஹாகதியில் ஒன்று, இரண்டு, மூன்று ஸமயங்கள் வரைக்கும் ஜீவன் அநாஹாரகமாகவே (கர்ம நோகர்மங்களைப் பற்றாமலே) இருக்கும்; நான்காவது ஸமயத்தில் நிச்சயமாக ஆஹாரம் உண்டு. அதாவது ஜீவன் இறந்த நான்காவது ஸமயத்தில் புதியவுடலுக்கு வேண்டிய புத்கலஅணுக்களை ஸ்வீகரிக்கும் (பற்றும்). (30)

## ஜன்மத்தின் பேதம்

64. 𑌸𑌂𑌮𑍂𑌰𑍍𑌛𑌨𑌗𑌰𑍍𑌭𑍋𑌪𑌪𑌾𑌦𑌾 𑌜𑌨𑍍𑌮 ॥௬௪॥
ஸம்மூர்ச்சந கர்போபபாதா ஜந்ம ॥

(ப-ரை.) 𑌜𑌨𑍍𑌮 - பிறப்பு (புதிய வுடலைத் தரித்தல்) மூன்று வகை. அவை—𑌸𑌂𑌮𑍂𑌰𑍍𑌛𑌨𑌗𑌰𑍍𑌭𑍋𑌪𑌪𑌾𑌦𑌾—ஸம்மூர்ச்சன ஜன்மம், கர்ப்ப ஜன்மம், உபபாதஜன்மம் என்பன. அவற்றுள்—

**ஸம்மூர்ச்சன ஜன்மம்:**—ஆண் பெண்களுடைய சுக்ல ஶோணிதங்களின் சேர்க்கையின்றிப் புத்கலபரமாணுக்களினால் (மண், சாணி, குப்பை முதலியவைகளால்) உடல் உண்டாதல்.

**கர்ப்ப ஜன்மம்:**—பெண்களின் வயிற்றில் (கருப்பையில்) அவரது ஶோணிதமும், ஆண்களின் சுக்லமும் கலத்தலால் உடல் உண்டாதல்.

**உபபாத ஜன்மம்:**—ஆண் பெண்களின் சேர்க்கையின்றி உபபாதசய்யையில் பிறத்தல்.

**உபபாத சய்யை:**—தாமரைமொட்டுப்போன்ற உருவுள்ள படுக்கை. அப் படுக்கையிலிருந்து, உறங்கினவர் உறக்கத்தைவிட்டு விழித்து எழுந்திருந்தாற்போலத் தோன்றுதல் தேவப்பிறப்பு.

தேன்கூடுபோன்ற வடிவுள்ள இடத்திலிருந்து தலைகீழாகத் தொங்கினவர்போலப் பிறத்தல் நரகப்பிறப்பு.

## யோனிகளின் பேதம்

65. 𑌸𑌚𑌿𑌤𑍍𑌤𑌶𑍀𑌤𑌸𑌂𑌵𑍃𑌤𑌾𑌃 𑌸𑍇𑌤𑌰𑌾
𑌮𑌿𑌶𑍍𑌰𑌾𑌶𑍍𑌚𑌐𑌕𑌶𑌸𑍍𑌤𑌦𑍍𑌯𑍋𑌨𑌯𑌃 ॥௬௫॥

ஸசித்தஶீதஸம்வ்ருதா: ஸேதரா
மிஶ்ராஶ்சைகஶஸ்தத்யோநய: ||

(ப - ரை.) ஸசித்தஶீதஸம்வ்ருதா: - ஸசித்தம் - ஜீவன் கூடியது, ஶீதம் - குளிர்ச்சி, ஸம்வ்ருதம் - மூடியிருத்தல், ஸேதரா - (மேற்கூறப்பட்டவைகளுக்கு மாறுதலான) அசித்தம் (ஜீவன் இல்லாதது), உஷ்ணம், விவ்ருதம், ச-மற்றும், ஏகஶ: - ஒவ்வொன்றும், மிஶ்ரா:- முறையே கூடிய ஸசித்தாசித்தம், சீதோஷ்ணம், ஸம்வ்ருதவிவ்ருதம் ஆகிய இவைகள் (ஒன்பதும்) தத்யோநய: - அந்த ஸம்மூர்ச்சன, கர்ப்ப, உபபாத ஜன்மங்களின் (யோனிகள் ஆகும்) உத்பத்திஸ்தான மாகும்.

யோனி :—கருத் தங்கும் இடம் (ஜீவன் உற்பத்தியாகும் இடம்)

யோனி இருவகை. அவை - குணயோனி, ஆகார யோனி என்பன. அவற்றுள் குணயோனி ஒன்பது வகை: அவை—ஸசித்தயோனி, சீதயோனி, ஸம்வ்ருதயோனி, அசித்தயோனி, உஷ்ணயோனி, விவ்ருதயோனி, ஸசித்தாசித்த யோனி, சீதோஷ்ண யோனி, ஸம்வ்ருத விவ்ருத யோனி என்பன. அவற்றுள்—

ஸசித்தயோனி :—ஜீவனுடன் கூடிய யோனி.

ஸம்வ்ருதயோனி :—யாருக்கும் புலப்படாமல் இருக்கும் யோனி.

விவ்ருதயோனி :—எல்லாருக்கும் புலப்படும் யோனி.

ஆகாரயோனி மூன்று வகை. அவை—ஶங்காவர்த்த யோனி, கூர்மோன்னத யோனி, வம்ஶபத்ர யோனி என்பன. அவற்றுள் —

ஶங்காவர்த்த யோனி :—சங்கைப்போல் சுழியுள்ள யோனி. இந்த யோனியில் கர்ப்பம் தரிப்பதே இல்லை.

கூர்மோன்னதயோனி :—ஆமையின் முதுகைப்போல் உயரமாக வுள்ள யோனி. இந்தயோனியில் சக்ரவர்த்திகள், வாஸுதேவர், பிரதிவாஸுதேவர், பலதேவர், தீர்த்தங்கரர் ஆகிய இவர்கள் பிறப்பார்கள்.

வம்ஶபத்ர யோனி : — மூங்கில்இலையைப்போன்ற யோனி. இந்த யோனியில் மற்ற ஜீவன்கள் பிறக்கும்.

குறிப்பு : ஜன்மம் — பிறத்தல். யோனி — உத்பத்தியாகும் இடம். இவ்விரண்டிற்கும் ஆதார ஆதேய ஸம்பந்தம் உண்டு. எப்படி எனில், யோனி ஆதாரம்; ஜன்மம் ஆதேயம். ஆதேயம் என்றால் தங்கும் பொருள். ஆதாரம் என்றால் தங்கும் இடம். (32)

## கர்ப்பஜன்மம் இன்னவருக்குண்டாகும் என்பது

66\. ஜராயுஜாண்டஜபோதாநாம் கர்ப்ப: || ௩௩ ||

ஜராயுஜாண்டஜபோதாநாம் கர்ப்ப: ||

(ப - ரை.) ஜராயுஜ - ஜராயுவினுடன் பிறந்தவை, அண்டஜ - முட்டையில் பிறந்தவை, போதாநாம் - போத ஜீவன்கள் ஆகிய இவைகளுடைய பிறப்பு, கர்ப்ப:-கர்ப்பப் பிறப்பு ஆகும்.

ஜராயுஜ : — வலையைப்போல், மாம்ஸம் ரக்தம் நிரம்பிய ஒருவிதத் தோலினால் சுற்றப்பட்டு ஜீவன் உதித்தல். ஜராயு என்பது எருமைக்கன்று, பசுவின்கன்று, குழந்தைகள் ஆகிய இவைகள் பிறந்தவுடன் உடல்மேல் காணப்படும் ஒருவகை மாம்ஸப்பசை.

அண்டஜ : — முட்டையிலிருந்து பிறத்தல்.

போதஜ: — மேற்கூறப்பட்ட ஜராயுஸம்பந்தம் இல்லாமல், பிறந்தவுடன் நடத்தலும் ஓடுதலும் உடைய மான்கன்று போன்றவை. (33)

## உபபாத ஜன்மம் இன்னவருக்குண்டாகும் என்பது

67. ஜெவ நாரகாணாமுவவாஃ ॥ ௩௪ ॥
தேவநாரகாணுமுபபாத: ||

(ப - ரை.) ஜெவநாரகாணாം - தேவர்களினதும் நாரகரினதும் பிறப்பு, உவவாஃ - உபபாதப் பிறப்பு ஆகும்.

கருத்துரை:—பவணர், வியந்தரர், ஜ்யோதிஷ்கர், வைமானிகர் என்னும் நான்கு வகை தேவர்களும், நாரகர்களும் உபபாதப் பிறப்பினர். (34)

## ஸம்மூர்ச்சனஜன்மம் இன்னவருக்கு உண்டாகும் என்பது

68. ஸெஷாணாം ஸംமுஜ்ஜிநம் ॥ ௩௫ ॥
ஶேஷாணும் ஸம்மூர்ச்சநம் ||

(ப - ரை.) ஸெஷாணாം — கர்ப்பத்திலும் உபபாதத்திலும் பிறப்பவர்கள் அல்லாத ஏனைய ஜீவன்களுடைய பிறப்பு, ஸംமுஜ்ஜிநழ - ஸம்மூர்ச்சனப் பிறப்பு ஆகும்.

ஏகேந்திரிய ஜீவன்கள், த்வீந்திரிய ஜீவன்கள், த்ரீந்திரிய ஜீவன்கள், சதுரிந்திரிய ஜீவன்கள் ஆகிய நான்கு வகை ஜீவன்களும் ஸம்மூர்ச்சனப் பிறப்பாகப் பிறக்கும். பஞ்சேந்திரிய விலங்குஜீவன்கள் கர்ப்பப் பிறப்பாகவும், ஸம்மூர்ச்சனப்பிறப்பாகவும் பிறக்கும். லப்தி அபர்யாப்தக மனுஷ்யஜீவன்கள் ஸம்மூர்ச்சனப்பிறப்பாகவும் பிறக்கும். அதாவது பெண்களுடைய யோனி, அக்குள், ஸ்தனத்தின் இடை, கீழ், கொப்பூழ் ஆகிய இவ்விடங்களில் லப்தி அபர்யாப்த ஜீவன்கள் பிறக்கும் என்பதாம். (35)

## சரீரங்களின் பெயர்

69. ஔதா³ரிகவைக்ரியிகாஹாரக
தைஜஸகார்மணாநி ஶரீராணி ॥ ௩௬ ॥

ஔதாரிகவைக்ரியிகாஹாரகதைஜஸ
கார்மணாநி ஶரீராணி ||

(ப - ரை.) ஶரீராணி - சரீரங்கள், ஔதா³ரிக... கார்மணாநி—ஔதாரிகசரீரம், வைக்ரியிகசரீரம், ஆஹாரக சரீரம், தைஜஸசரீரம், கார்மணசரீரம் என ஐந்து வகை. அவற்றுள்—

**ஔதாரிக ஶரீரம்** :—பிறபொருள்களால் தடுக்கப் படுதலும் பிறபொருள்களைத் தடுத்தலும் ஆகிய பெரிய வுடல். அது மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் மரம் செடி கொடிகளுக்கும் உண்டாகும். (நமது உடல் ஔதாரிகசரீரம் எனப்படும்).

**வைக்ரியிக ஶரீரம்** :—அநேகவித உருவங்களைத் தரிக்கும் உடல். அது தேவருக்கும் நாரகருக்கும் உண்டாகும்.

**ஆஹாரக ஶரீரம்** :—ஆறாங் குணஸ்தானத்து முனிவர்களுக்குத் தத்துவத்தில் ஸந்தேஹமுண்டாகில் அதை நீக்கும்பொருட்டும், அம் முனிவர்களுடைய ஸம்யமத்தைக் காப்பாற்றும்பொருட்டும் அம் முனிவர்களின் தலையிலிருந்து வெளிக்கிளம்பும் உடல். அது, கேவலிகள் சுருத கேவலிகள் ஆகியோர் இருக்கும் இடத்தைச் சேர்ந்தவுடன் முனிவர்களுக்குச் சந்தேஹம் நீங்கிவிடும்.

**தைஜஸ ஶரீரம்** :—உடலில் காந்தி (மேனி, ஒளி) இருப்பதற்குக் காரணமானது. செத்த பிணத்தில் தைஜஸ ஶரீரம் இல்லாமையால் காந்தி குறைந்துவிடுகிறது.

**கார்மண ஶரீரம்**:—ஜ்ஞாநாவரணம்முதலான கர்மங்களின் கூட்டம். அது எல்லாஸம்ஸாரிஜீவன்கட்கும் இருக்கும்.

**ஶரீரங்களின் ஸூக்ஷ்மம்**

70. 𑌪𑌰𑌂𑌪𑌰𑌂 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌮𑍍 ॥ ௩௭ ॥

பரம்பரம் ஸூக்ஷ்மம் ||

(ப - ரை.) 𑌪𑌰𑌂𑌪𑌰𑌂 - (முதலில் இருப்பதனினும்), அனந்தரமுள்ள சரீரங்கள், 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌂 - நுண்மையன வாகும்.

கருத்துரை :—ஔதாரிகஶரீரத்தைக்காட்டிலும் வைக்ரியிகஶரீரம் சிறியது. வைக்ரியிகஶரீரத்தைக் காட்டிலும் ஆஹாரகஶரீரம் சிறியது. ஆஹாரகஶரீரத்தைக் காட்டிலும் தைஜஸஶரீரம் சிறியது. தைஜஸஶரீரத்தைக் காட்டிலும் கார்மணஶரீரம் சிறியது. வைக்ரியிகம் முதலான ஶரீரங்கள் புலன்களுக்குப் புலப்படும் விஷயத்தைப்பற்றி ஸூக்ஷ்மம் எனப்பட்டது. (37)

**ஶரீரங்களின் ப்ரதேசங்கள்**

71. 𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑌤𑍋𑌽𑌸𑌂𑌖𑍍𑌯𑍇𑌯𑌗𑍁𑌣𑌂
𑌪𑍍𑌰𑌾𑌕𑍍𑌤𑍈𑌜𑌸𑌾𑌤𑍍 ॥ ௩௮ ॥
ப்ரதேஶதோऽஸங்க்யேயகுணம்
ப்ராக்தைஜஸாத் ||

(ப - ரை.) 𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑌤𑌃-பிரதேசங்களின் அபேக்ஷையினால், 𑌤𑍈𑌜𑌸𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍 - தைஜஸஶரீரத்திற்கு மேற்கூறப்பட்டுள்ள ஶரீரங்கள், அவையாவன: ஔதாரிக வைக்ரியிக ஆஹாரக ஶரீரங்கள், 𑌅𑌸𑌂𑌖𑍍𑌯𑍇𑌯𑌗𑍁𑌣𑌂 - அஸங்க்யாத குணப்பிரதேசங்களை உடையன.

கருத்துரை : — ஔதாரிகஶரீரத்தைக்காட்டிலும் வைக்ரியிகஶரீரத்தில் அஸங்க்யாத குணப்பிரதேசங்கள் (பரமாணுக்கள்) அதிகமாய் இருக்கின்றன. வைக்ரியிக ஶரீரத்தைக்காட்டிலும் ஆஹாரகஶரீரத்தில் அஸங்க்யாத குணப்பிரதேசங்கள் அதிகமாய் இருக்கின்றன. (38)

72. 𑌅𑌨𑌨𑍍𑌤𑌗𑍁𑌣𑍇 𑌪𑌰𑍇 ॥ ௩௯ ॥

அநந்தகுணே பரே ||

(ப - ரை.) பரே - ஏனைய (தைஜஸஶரீரம், கார்மண ஶரீரம் என்னும்) இரண்டு ஶரீரங்களும், அநந்தகுணே - அனந்தகுண பரமாணுக்களை அதிகமாக உடையன.

**கருத்துரை :**—ஆஹாரகஶரீரத்திலுள்ள பரமாணுக்களைக்காட்டிலும் தைஜஸஶரீரத்தில் பரமாணுக்கள் அனந்தகுணம் இருக்கின்றன. தைஜஸஶரீரத்திலுள்ள பரமாணுக்களைக்காட்டிலும் கார்மணஶரீரத்தில் பரமாணுக்கள் அனந்தகுணம் இருக்கின்றன.

**குறிப்பு:**—வைக்ரியிகம் முதலான ஶரீரங்கள் முறையே ஒன்றின்ஒன்று அதிகப்பிரதேசங்கள் (பரமாணுக்கள்) உள்ளவை ஆயினும், இரும்புக்குண்டிற்போல அணுக்கள் ஒன்றின்ஒன்று நெருங்கிச் செறிந்திருத்தலால் அவை ஸூக்ஷ்மமாக (சிறியதாக)க் காணப்படும். (39)

## தைஜஸஶரீரம் கார்மணஶரீரம் இவற்றின் விஶேஷம்

73. 𑌅𑌪𑍍𑌰𑌤𑍀𑌘𑌾𑌤𑍇 ॥ ௪௦ ॥

அப்ரதீகாதே ||

(ப - ரை.) அப்ரதீகாதே - (தைஜஸஶரீரமும் கார்மணஶரீரமும்) பாதை(தடை)யில்லாதவை.

**கருத்துரை :**—தைஜஸஶரீரமும் கார்மணஶரீரமும் பிறபொருள்களைத் தடுப்பதும் இல்லை; பிறபொருள்களால் தடுக்கப்படுவதும் இல்லை. அதனால்தான் ஜீவன் மறுபிறப்பிற்குப் போகுமிடமெல்லாம் அவையிரண்டும் ஜீவனோடு போகின்றன. (40)

**74.** அநாதிஸம்பந்தே ச || ௪௧ ||

அநாதிஸம்பந்தே ச ||

**(ப - ரை.)** அநாதிஸம்பந்தே - (தைஜஸஶரீரமும் கார்மணஶரீரமும் ஜீவனுடன்) அநாதிகாலத்திலிருந்து ஸம்பந்தமுள்ளனவும், ச - (ஒவ்வொரு பிறப்பின் அபேக்ஷையினுல்) ஸாதியும் (அப்போதைக்கப்போது தோன்றுவனவும்) ஆகும்.

**கருத்துரை :—** அநாதிகாலத்திலிருந்து ஜீவனுடன் தைஜஸஶரீரமும் கார்மணஶரீரமும் சம்பந்தப்பட்டுள்ளன. அதனுல் அநாதிஸம்பந்தமென்றும், ஒவ்வொரு பிறப்பிலும் புதிய புதிய வுடல் உண்டாவதனுல் ஸாதி (ஆதியுள்ளது) என்றும் கூறப்படும்.

**குறிப்பு :—** மோக்ஷம் அடையும்வரையில் தைஜஸஶரீரமும் கார்மணஶரீரமும் ஜீவனைவிட்டு நீங்குவதில்லை. (41)

**75.** ஸர்வஸ்ய || ௪௨ ||

ஸர்வஸ்ய ||

**(ப - ரை.)** ஸர்வஸ்ய—எல்லாஸம்ஸாரிஜீவன்களுக்கும் (தைஜஸஶரீரமும் கார்மணஶரீரமும் உண்டு). (42)

## ஒரு ஜீவனுக்கு இத்தனை ஶரீரங்கள் இருக்கும் என்பது

**76.** ததாதீநி பாஜ்யாநி யுகபதேகஸ்மிந்நாசதுர்ப்ய: || ௪௩ ||

ததாதீநி பாஜ்யாநியுகபதேகஸ்மிந்நாசதுர்ப்ய:||

**(ப - ரை.)** ஏகஸ்மிந் – ஒருவனுக்கு (ஒரு ஜீவனிடத்தில்), **யுகபத்** - ஒருங்கு, ததாதீநி - அந்தத் தைஜஸ கார்மணசரீரங்கள்முதல், ஆசதுர்ப்ய: - நான்கு சரீரங்கள்வரையில், பாஜ்யாநி - பிரிக்கத் தகுந்தனவாகும்.

**கருத்துரை** :—ஒரு ஜீவனிடத்தில் ஒருங்கே இரண்டு, மூன்று, நான்கு ஶரீரங்கள் இருக்கும். இரண்டு என்பன தைஜஸஶரீரமும் கார்மணஶரீரமும். மூன்று என்பன ஔதாரிகஶரீரம், தைஜஸஶரீரம், கார்மணஶரீரம் அல்லது வைக்ரியிகஶரீரம் தைஜஸஶரீரம் கார்மணஶரீரம். நான்கு என்பன ஔதாரிகஶரீரம் ஆஹாரகஶரீரம் தைஜஸஶரீரம் கார்மணஶரீரம். (43)

## கார்மண ஶரீரத்தின் விஶேஷம்

**77.** நிருபபோகமந்த்யம் ॥ ௪௪ ॥

நிருபபோகமந்த்யம் ॥

(ப - ரை.) அந்த்யம் - கடைசியில் கூறப்பட்ட கார்மண ஶரீரம், நிருபபோகம் - உபபோகம் இல்லாதது.

**உபபோகமாவது**—பொறிகளினால் ஶப்தம் முதலானவைகளை ஸ்வீகரிப்பது.

**கருத்துரை** :—கார்மணஶரீரத்திற்கு ஐம்பொறிகளும், ஐம்பொறிகளால் ஸ்வீகரிக்கக்கூடிய ஸ்பர்ஶம் முதலானவைகளும் இல்லை. (44)

## ஔதாரிக ஶரீரத்தின் லக்ஷணம்

**78.** கர்ப்பஸம்மூர்ச்சநஜமாத்யம் ॥ ௪௫ ॥

கர்ப்பஸம்மூர்ச்சநஜமாத்யம் ॥

(ப - ரை.) கர்ப்பஸம்மூர்ச்சநஜம் - கர்ப்பத்திலிருந்தும் ஸம்மூர்ச்சனத்திலிருந்தும் உண்டாகும் ஶரீரம் ஆத்யம் - முதலாவதான ஔதாரிகஶரீரம் எனப்படும்.

**கருத்துரை** : — கர்ப்பத்தில் பிறந்தவைகளுக்கும், ஸம்மூர்ச்சனத்தில் பிறந்தவைகளுக்கும் ஔதாரிகஶரீரம் உண்டு. (45)

## வைக்ரியிக ஶரீரத்தின் லக்ஷணம்

79. ஔவவாதிகං வெகிரயிகං ॥ ௪௬ ॥
ஔபபாதிகம் வைக்ரியிகம் ॥

(ப - ரை.) ஔவவாதிகං - உபபாதஜன்மத்தில் பிறக்குந் தேவர்ஶரீரமும் நாரகர்ஶரீரமும், வெகிரயிகං - வைக்ரியிகஶரீரம் எனப்படும்.

**கருத்துரை** :—தேவர்களுக்கும் நாரகர்களுக்கும் வைக்ரியிகஶரீரம் உண்டு. (46)

80. லஜ்ஜிவரதுயயං வ ॥ ௪௭ ॥
லப்திப்ரத்யயஞ் ச ॥

(ப - ரை.) லஜ்ஜிவரதுயயං வ - தபோமஹிமையின் காரணத்தினாலும் வைக்ரியிகஶரீரம் உண்டாகும். (47)

81. தெஜஸமவி ॥ ௪௮ ॥
தைஜஸமபி ॥

(ப - ரை.) தெஜஸமவி - தைஜஸஶரீரமும் தபோமஹிமையினால் உண்டாகும். (48)

## ஆஹாரகஶரீரத்தின் லக்ஷணமும் அதனை யுடையவரும்

82. ஶுஹං விஶுஜமவ்வாவாதி வாஹாரகං
வமதஸஂயதஸெஷவ ॥ ௪௯ ॥
ஶுபம் விஶுத்தமவ்யாகாதி சாஹாரகம்
ப்ரமத்தஸம்யதஸ்யைவ ॥

(ப - ரை.) ஆஹாரகං - ஆஹாரகஶரீரம், ஶுஹං— நற்காரியங்களைச் செய்வதும், விஶுஜං - நற்கருமத்தினால் உண்டானதும், வ - மற்றும், அவ்வாவாதி - பிற பொருள்களுக்குப் பாதை உண்டுபண்ணாததும் பிற பொருள்களால் பாதிக்கப்படாததுமாக இருக்கும்.

அது, வ்யுச்சித்தஸம்யதஸ்யைவ - பிரமத்த குணஸ்தான மென்னும் ஆறுங்குணஸ்தானத்தில் வர்த்திக்கின்ற முனிவர்களுக்கே உண்டாகும்; வேறு எவருக்கும் உண்டாகாது. (49)

## லிங்கங்களுக்கு உடையவர்

83. நாரகஸம்மூர்ச்சினோ நபும்ஸகாநி ॥ ருo ॥
நாரகஸம்மூர்ச்சினோ நபும்ஸகாநி ॥

(ப - ரை.) நாரகஸம்மூர்ச்சினः - நாரகஜீவன்களும் ஸம்மூர்ச்சனத்தில் பிறந்த ஜீவன்களும், நபும்ஸகாநி - அலித்தன்மையினை உடையன.

**கருத்துரை :—** நாரகர்களும் ஸம்மூர்ச்சனத்தில் பிறந்தவைகளும் அலிகளாயே இருப்பார்கள். (50)

84. ந தேவா: ॥ ருக ॥
ந தேவா: ॥

(ப - ரை.) தேவா: - பவணர் வியந்தரர் ஜ்யோதிஷ்கர் வைமானிகர் ஆகிய நான்குவகைத் தேவர்களும், ந - அலித்தன்மையினை அடைதலில்லை. அதாவது, தேவர்கள் ஆண்களாகவும் பெண்களாகவும் பிறப்பார்கள்; அலிகளாகப் பிறக்கமாட்டார்கள் என்பதாம். (51)

85. ஶேஷாஸ்த்ரிவேதா: ॥ ருஉ ॥
ஶேஷாஸ்த்ரிவேதாः ॥

(ப - ரை.) ஶேஷாः - ஏனைய மனிதர்களும் விலங்குகளும், த்ரிவேதாः - ஸ்த்ரீலிங்கம் புல்லிங்கம் நபும்ஸக லிங்கம் என்னும் மூன்று லிங்கங்களையும் உடையர்.

**கருத்துரை :—**மனிதர்களும் விலங்குகளும் ஆண் பெண், அலி என்னும் மூன்று வகையாகப் பிறப்பார்கள்

86. 𑌔𑌪𑌪𑌾𑌦𑌿𑌕𑌚𑌰𑌮𑍋𑌤𑍍𑌤𑌮𑌦𑍇𑌹𑌾𑌽𑌸𑌂𑌖𑍍𑌯𑍇𑌯
𑌵𑌰𑍍𑌷𑌾𑌯𑍁𑌷𑍋𑌽𑌨𑌪𑌵𑌰𑍍𑌤𑍍𑌯𑌾𑌯𑍁𑌷𑌃 ॥ ௫௩ ॥

ஔபபாதிகசரமோத்தமதேஹாऽஸங்க்யேய
வர்ஷாயுஷோऽநபவர்த்யாயுஷ: ॥

(ப - ரை.) 𑌔𑌪𑌪𑌾𑌦𑌿𑌕 - உபபாத ஜன்மத்தில் பிறந்த தேவர்களும் நாரகர்களும், 𑌚𑌰𑌮𑍋𑌤𑍍𑌤𑌮𑌦𑍇𑌹𑌾𑌃 - அந்தப் பிறப்பிலேயே மோக்ஷத்தை அடையக்கூடிய உத்தம சரீரத்தையுடைய தீர்த்தங்கர பரமதேவர்களும், 𑌅𑌸𑌂𑌖𑍍𑌯𑍇𑌯𑌵𑌰𑍍𑌷𑌾𑌯𑍁𑌷𑌃 - போகபூமியிற் பிறந்தவர்களும், 𑌅𑌨𑌪𑌵𑌰𑍍𑌤𑍍𑌯𑌾𑌯𑍁𑌷𑌃 - அபமிருத்யு இல்லாதவர்கள்.

கருத்துரை :—தேவர், நாரகர், தீர்த்தங்கரர், போக-பூமியில் பிறந்தவர் ஆகிய இவர்கள் தங்கட்குக் கட்டிய ஆயுள் முடிந்தபிறகு இறப்பார்கள்; ஆயுள் முற்றும் கழியும்முன் (அகாலத்தில்) இறப்பதில்லை. 𑌸𑍂𑌤𑍍𑌰த்தில் கூறப்பட்டவர்கள்தவிர ஏனைய மனிதர்களும் விலங்கு-களும் தங்கட்குக் கட்டிய ஆயுள் பூர்ணமாகக் கழியாத முன் (அகாலத்தில்) இறந்தாலும் இறப்பார்கள். அவ்விறப்பே அபமிருத்யு என்பது. (53)

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌉𑌮𑌾𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑍇 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌾𑌧𑌿𑌗𑌮𑍇
𑌮𑍋𑌕𑍍𑌷𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

ஸ்ரீஉமாஸ்வாமியார் இயற்றிய
தத்த்வார்த்த ஸூத்ரம் என்னும் மோக்ஷஶாஸ்த்ரத்தின்
இரண்டாம் அத்யாயம் முற்றிற்று.

---

## கேள்விகள்

1. ஜீவனுடைய அஸாதாரணபாவங்கள் எத்தனை ?

2. இப்போது உனக்கு எத்தனை பாவங்கள் உண்டு ?

3. விக்ரஹகதியில் ஜீவன் அநாஹாரகனாய் எது வரைக்கும் இருக்கும் ?

4. ஜன்மத்திற்கும் யோனிக்கும் என்ன வித்தியாசம் ?

5. மனிதர்களுக்கு எந்தெந்த ஜன்மங்கள் உண்டாகும் ?

6. உனக்கு எத்தனை ஶரீரங்கள் இருக்கின்றன ?

7. தேவர்களுக்கு ஆஹாரகசரீரம் உண்டா, இல்லையா ?

8. ஒருவனுக்கு அபமிருத்யு உண்டாயிற்றென்று நீ எப்படி அறிவாய் ?

9. நாரகர் எந்த லிங்கம் உடையர்?

## அத்யாயம் 3

## கீழுலகத்தின் வர்ணனை

### நரகபூமிகள் ஏழு

87. 𑌰𑌤𑍍𑌨𑌶𑌰𑍍𑌕𑌰𑌾𑌵𑌾𑌲𑍁𑌕𑌾𑌪𑌙𑍍𑌕𑌧𑍂𑌮𑌤𑌮𑍋
𑌮𑌹𑌾𑌤𑌮𑌃𑌪𑍍𑌰𑌭𑌾𑌭𑍂𑌮𑌯𑍋 𑌘𑌨𑌾𑌮𑍍𑌬𑍁𑌵𑌾𑌤𑌾𑌕𑌾𑌶
𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌃 𑌸𑌪𑍍𑌤𑌾𑌧𑍋𑌽𑌧𑌃 ॥ ௧ ॥

ரத்நஶர்கராவாலுகாபங்கதூமதமோ
மஹாதமஃப்ரபாபூமயோ கநாம்புவாதாகாஶ
ப்ரதிஷ்டாஃ ஸப்தாऽதோऽதஃ ||

(ப - ரை.) 𑌰𑌤𑍍𑌨...𑌭𑍂𑌮𑌯𑌃 𑌸𑌪𑍍𑌤 - ரத்னப்பிரபை, சர்க்கராப்பிரபை, வாலுகாப்பிரபை, பங்கப்பிரபை, தூமப்பிரபை, தமப்பிரபை, மஹாதமப்பிரபை என்னும் பூமிகள் ஏழும், 𑌅𑌧𑍋𑌽𑌧𑌃 - ஒன்றன்கீழ் ஒன்றாய், 𑌘𑌨𑌾𑌮𑍍𑌬𑍁...𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌃 - கனோததிவாதவலயம், கனவாதவலயம், தனுவாதவலயம் என்னும் மூன்றுகாற்றுக்களினால் சூழப்பட்டிருக்கின்றன. (1)

### ஏழு பூமிகளிலும் உள்ள நரகங்கள் (பிலங்கள்)

88. 𑌤𑌾𑌸𑍁 𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌤𑍍𑌪𑌞𑍍𑌚𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌪𑌞𑍍𑌚𑌦𑌶
𑌦𑌶𑌤𑍍𑌰𑌿𑌪𑌞𑍍𑌚𑍋𑌨𑍈𑌕𑌨𑌰𑌕𑌶𑌤𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑌿
𑌪𑌞𑍍𑌚 𑌚𑍈𑌵 𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌮𑌮𑍍 ॥ ௨ ॥

தாஸு த்ரிம்ஶத்பஞ்சவிம்ஶதிபஞ்சதஶ
தஶத்ரிபஞ்சோநைகநரகஶதஸ்ஹஸ்ராணி
பஞ்ச சைவ யதாக்ரமம் ||

(ப - ரை.) தாஸு - மேற்கூறப்பட்ட அவ் வேழு நரகங்களிலும், யதாக்ரமம் - முறையே, த்ரிம்ஸத்...பஞ்ச - முப்பது லக்ஷம், இருபத்தைந்து லக்ஷம், பதினைந்து லக்ஷம், பத்து லக்ஷம், மூன்று லக்ஷம், ஐந்து குறைவான ஒரு லக்ஷம், ஐந்து ஆகிய பிலங்கள் இருக்கின்றன. அதாவது, ரத்னப் பிரபையில் முப்பது லக்ஷம் பிலங்களும், சர்க்கராப் பிரபையில் இருபத்தைந்து லக்ஷம் பிலங்களும், வாலுகாப் பிரபையில் பதினைந்து லக்ஷம் பிலங்களும், பங்கப் பிரபையில் பத்து லக்ஷம் பிலங்களும், தூமப்பிரபையில் மூன்று லக்ஷம் பிலங்களும், தமப்பிரபையில் ஐந்து குறைவான ஒரு லக்ஷம் பிலங்களும், மஹாதமப் பிரபையில் ஐந்து பிலங்களும் இருக்கின்றன.

குறிப்பு:—பிலம் என்பது நாரகர் வசிக்குமிடம். நாம் வசிக்கும் இடத்திற்கு வீடு என்பதுபோல நாரகர் வசிக்குமிடம் பிலம் எனப்படும். (2)

## நாரகர்களின் துக்கம்

89. நாரகா நித்யாஸுபதரலேஸ்யா
வரிணாமதேஹவேதநா விக்ரியாঃ ॥ ௩ ॥
நாரகா நித்யாஸுபதரலேஸ்யா
பரிணாமதேஹவேதநா விக்ரியாঃ ॥

(ப - ரை.) நாரகாঃ-நரகஜீவன்கள், நித்ய...விக்ரியாঃ- எப்பொழுதும் கெட்டலேஸ்யை (கருநிறம்) உடையவர்களாயும், மிக்க தீய எண்ணமுடையவர்களாயும், பார்வைக்குப் பயங்கரமான சரீரமுள்ளவர்களாயும், துக்கமுள்ளவர்களாயும், நாய், புலி, கரடி, பாம்புகள்போன்ற கொடிய உருவங்களைத்தரிக்குந் தன்மை வாய்ந்தவர்களாயும் இருப்பார்கள். (3)

90. 𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑍋𑌦𑍀𑌰𑌿𑌤𑌦𑍁𑌃𑌖𑌾𑌃 ॥ ௪ ॥
பரஸ்பரோதீரிததுக்கா: ॥

(ப - ரை.) 𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑍋𑌦𑍀𑌰𑌿𑌤𑌦𑍁𑌃𑌖𑌾𑌃 - (நாய்கள் ஒன்றைஒன்று சந்தித்தவுடன் கௌவிக்கொண்டு சண்டையிடுதல்போல) நரகஜீவன்கள் ஒருவருக்கொருவர் பார்த்தவுடன் குஅவதி(விபங்க) ஜ்ஞானத்தினுல், முன்செய்த கொடுமைகளை நினைத்துச் சண்டை செய்வர். அதனுல் மேன்மேலும் துக்கத்தை அனுபவிப்பர். (4)

91. 𑌸𑌙𑍍𑌕𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌾𑌽𑌸𑍁𑌰𑍋𑌦𑍀𑌰𑌿𑌤𑌦𑍁𑌃𑌖𑌾𑌶𑍍𑌚
𑌪𑍍𑌰𑌾𑌕𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍍𑌯𑌾𑌃 ॥ ௫ ॥
ஸங்க்லிஷ்டா஽ஸுரோதீரிததுக்காஶ்ச
ப்ராக்சதுர்த்யா: ॥

(ப - ரை.) 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍍𑌯𑌾𑌃𑌪𑍍𑌰𑌾𑌕𑍍 - நான்காவது நரகத்தின்மேல் உள்ளனவாகிய மூன்றுநரகங்களிலும் இருக்கின்ற நாரகர்கள், 𑌸𑌂𑌕𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌾𑌽𑌸𑍁𑌰𑍋𑌦𑍀𑌰𑌿𑌤𑌦𑍁𑌃𑌖𑌾𑌃 - கெட்ட பரிணமத்தையுடைய அம்பாபரீஷஜாதியில் பிறந்த அஸுரகுமாரனுல் தூண்டப்பட்ட துக்கமுடையவர் ஆவர்.

கருத்துரை :—எவ்வாறு பாபிகளாகிய ஜனங்கள் வெள்ளாடு, சேவல், எருமைக்கடா முதலியவைகளைப் பந்தயச்சண்டை செய்வித்து அவைகளைக் கண்டு ஆனந்தம் அடைகிறுர்களோ அவ்வாறு அம்பாபரீஷ ஜாதியில் பிறந்த அஸுரகுமாரன், ஒன்றுமுதல் மூன்றும் நரகம்வரைக்கும் சென்று அங்கிருக்கும் நாரகர்களுக்கு முன்பிறப்பின் பகையைச் சொல்லி அவர்களை ஒருவருக்கொருவர் சண்டை செய்யும்படி செய்வித்து அச்சண்டையைக் கண்டு களிப்பான். (5)

## நாரகர்களின் உத்கிருஷ்ட ஆயுள்

92. 𑌤𑍇𑌷𑍍𑌵𑍇𑌕𑌤𑍍𑌰𑌿𑌸𑌪𑍍𑌤𑌦𑌶𑌸𑌪𑍍𑌤𑌦𑌶𑌦𑍍𑌵𑌾𑌵𑌿𑌂𑌶𑌤𑌿
𑌤𑍍𑌰𑌯𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌤𑍍𑌸𑌾𑌗𑌰𑍋𑌪𑌮𑌾 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑌾𑌂
𑌪𑌰𑌾 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 ॥ ௬ ॥

தேஷ்வேகத்ரிஸப்ததஶஸப்ததஶத்வாவிம்ஶதி
த்ரயஸ்த்ரிம்ஶத்ஸாகரோபமா ஸத்த்வாநாம்
பரா ஸ்திதி: ॥

(ப - ரை.) 𑌤𑍇𑌷𑍁 - அந்த ஏழுநரகங்களில் (வஸிக்கின்ற), 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑌾𑌂 - நாரகர்களுடைய, 𑌪𑌰𑌾 - உத்கிருஷ்டமான (உயர்ந்த அளவான), 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 - ஆயுள், முறையே, 𑌏𑌕 𑌤𑍍𑌰𑌿 𑌸𑌪𑍍𑌤 𑌦𑌶 𑌸𑌪𑍍𑌤𑌦𑌶 𑌦𑍍𑌵𑌾𑌵𑌿𑌂𑌶𑌤𑌿 𑌤𑍍𑌰𑌯𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌤𑍍𑌸𑌾𑌗𑌰𑍋𑌪𑌮𑌾 - ஒரு கடற்காலமும், மூன்று கடற்காலமும், ஏழு கடற்காலமும், பத்துக் கடற்காலமும், பதினேழு கடற்காலமும், இருபத்திரண்டு கடற்காலமும், முப்பத்துமூன்று கடற்காலமும் ஆகும்.

அதாவது முதல்நரகத்தில் இருப்பவர்களின் (உயர்ந்த கால அளவு) உத்கிருஷ்டஆயுள் ஒரு கடற்காலமும், இரண்டாம்நரகத்தில் இருப்பவர்களின் உத்கிருஷ்டஆயுள் மூன்று கடற்காலமும், மூன்றும் நரகத்தில் இருப்பவர்களின் உத்கிருஷ்ட ஆயுள் ஏழு கடற்காலமும், நான்காம் நரகத்தில் இருப்பவர்களின் உத்கிருஷ்ட ஆயுள் பத்துக் கடற்காலமும், ஐந்தாம்நரகத்தில் இருப்பவர்களின் உத்கிருஷ்ட ஆயுள் பதினேழு கடற்காலமும், ஆறும்நரகத்தில் இருப்பவர்களின் உத்கிருஷ்ட ஆயுள் இருபத்திரண்டு கடற்காலமும், ஏழாம்நரகத்தில் இருப்பவர்களின் உத்கிருஷ்ட ஆயுள் முப்பத்துமூன்று கடற்காலமும் ஆகும்.

## மத்ய லோகத்தின் வர்ணனை

93. 𑌜𑌂𑌬𑍂𑌦𑍍𑌵𑍀𑌪𑌲𑌵𑌣𑍋𑌦𑌾𑌦𑌯𑌃
𑌶𑍁𑌭𑌨𑌾𑌮𑌾𑌨𑍋 𑌦𑍍𑌵𑍀𑌪𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌾𑌃 || ௭ ||

ஜம்பூத்வீபலவணோதாதய:
ஶுபநாமாநோ த்வீபஸமுத்ரா: ||

(ப - ரை.) இந்த மத்யம லோகத்தில், 𑌶𑍁𑌭𑌨𑌾𑌮𑌾𑌨𑌃 - நல்ல பெயர்களையுடைய, **𑌜𑌂𑌬𑍂𑌦𑍍𑌵𑍀𑌪𑌲𑌵𑌣𑍋𑌦𑌾𑌦𑌯𑌃 𑌦𑍍𑌵𑍀𑌪𑌸𑌮𑍁𑌦𑍍𑌰𑌾𑌃** - ஜம்பூத்வீபம் முதலான த்வீபங்களும் லவணசமுத்திரம் முதலான சமுத்திரங்களும் இருக்கின்றன.

**கருத்துரை** :—எல்லா த்வீபங்களுக்கும் ஸமுத்திரங்களுக்கும் மத்தியில் ஜம்பூத்வீபம் உளது. அதனைச் சுற்றி லவணசமுத்திரமும், அதனைச்சுற்றித் தாதகீஷண்ட த்வீபமும், அதனைச் சுற்றிக் காளோததிஸமுத்திரமும், அதனைச் சுற்றிப் புஷ்கரவரத்வீபமும், அதனைச் சுற்றிப் புஷ்கரவரஸமுத்திரமும் ஆக இவ்வாறு அஸங்க்யாத த்வீபஸமுத்திரங்கள் இருக்கின்றன. எல்லாவற்றிற்கும் கடைசியில் ஸ்வயம்பூரமணத்வீபமும், ஸ்வயம்பூரமண ஸமுத்திரமும் இருக்கின்றன. (7)

## த்வீப ஸமுத்திரங்களின் விஸ்தீர்ணம்

94. 𑌦𑍍𑌵𑌿𑌰𑍍𑌦𑍍𑌵𑌿𑌰𑍍𑌵𑌿𑌷𑍍𑌕𑌮𑍍𑌭𑌾𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌪𑍂𑌰𑍍𑌵
𑌪𑌰𑌿𑌕𑍍𑌷𑍇𑌪𑌿𑌣𑍋 𑌵𑌲𑌯𑌾𑌕𑍃𑌤𑌯𑌃 || ௮ ||

த்விர்த்விர்விஷ்கம்பா: பூர்வபூர்வ
பரிக்ஷேபிணோ வலயாக்ருதய: ||

(ப - ரை.) த்விர்த்விர்விஷ்கம்பா: - ஒவ்வொரு த்வீபமும் ஸமுத்திரமும் முறையே ஒன்றின் ஒன்று இருமடங்கு விஸ்தீர்ணமுள்ளதாயும், பூர்வபூர்வபரிக்ஷேபிண: - ஒன்றை ஒன்று வளைந்து சூழ்ந்ததாயும், வலயாக்ருதய: - வளையல்போன்ற வடிவு உடையதாயும் இருக்கும்.

கருத்துரை :—ஜம்பூத்வீபத்தைக்காட்டிலும் லவணஸமுத்திரம் இருமடங்கும், லவணஸமுத்திரத்தைக்காட்டிலும் தாதகீஷண்டத்வீபம் இருமடங்கும், தாதகீஷண்டத்வீபத்தைக்காட்டிலும் காளோததிஸமுத்திரம் இருமடங்கும் அதிகமான விஸ்தீர்ணங்களை உடையனவாகும். இவ்வாறு ஒவ்வொருத்வீபமும் ஒவ்வொரு ஸமுத்திரமும் இருமடங்கு அதிகமான விஸ்தீர்ணத்தை உடையனவாகும். (8)

## ஜம்பூத்வீபத்தின் விஸ்தீர்ணமும் ஆகாரமும்

95. தந்மத்யே மேருநாபிர்வ்ருத்தோ யோஜநஶத
ஸஹஸ்ரவிஷ்கம்போ ஜம்பூத்வீப: ॥ ௯ ॥
தந்மத்யே மேருநாபிர்வ்ருத்தோ யோஜநஶத
ஸஹஸ்ரவிஷ்கம்போ ஜம்பூத்வீப: ॥

(ப - ரை.) தந்மத்யே - அந்த த்வீப ஸமுத்திரங்களின் மத்தியில், ஜம்பூத்வீப: - ஜம்பூத்வீபம் உளது. அது, மேருநாபி: - (தன் மத்தியில்) நாபியைப்போல் மேருபர்வதத்தையும், வ்ருத்த: - சூர்யமண்டலம்போன்ற வட்டமான வடிவையும், யோஜநஶதஸஹஸ்ரவிஷ்கம்ப:— ஒரு லக்ஷம் யோஜனை விஸ்தீர்ண அளவையும் உடையது.

கருத்துரை: — ஜம்பூத்வீபம் ஒருலக்ஷம் யோசனை விஸ்தீர்ணமும் வட்டவடிவமும் உள்ளதாய், மத்யத்தில் மேருபர்வதத்தை உடையது ஆகும். (9)

## ஏழு க்ஷேத்திரங்களின் பெயர்

96. 𑌭𑌰𑌤𑌹𑍈𑌮𑌵𑌤𑌹𑌰𑌿𑌵𑌿𑌦𑍇𑌹𑌰𑌮𑍍𑌯𑌕
𑌹𑍈𑌰𑌣𑍍𑌯𑌵𑌤𑍈𑌰𑌾𑌵𑌤𑌵𑌰𑍍𑌷𑌾𑌃
𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 ॥ ௰ ॥

பரதஹைமவதஹரிவிதேஹரம்யக
ஹைரண்யவதைராவதவர்ஷா: க்ஷேத்ராணி ॥

(ப - ரை.) 𑌭𑌰𑌤......𑌵𑌰𑍍𑌷𑌾𑌃 - (ஜம்பூத்வீபத்தில்) பரதம், ஹைமவதம், ஹரி, விதேஹம், ரம்யகம், ஹைரண்யவதம், ஐராவதம் என்னும் (ஏழு), 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 - க்ஷேத்திரங்கள் இருக்கின்றன. (10)

## ஆறு பர்வதங்களின் பெயர்

97. 𑌤𑌦𑍍𑌵𑌿𑌭𑌾𑌜𑌿𑌨𑌃 𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌪𑌰𑌾𑌯𑌤𑌾
𑌹𑌿𑌮𑌵𑌨𑍍𑌮𑌹𑌾𑌹𑌿𑌮𑌵𑌨𑍍𑌨𑌿𑌷𑌧𑌨𑍀𑌲𑌰𑍁𑌕𑍍𑌮𑌿
𑌶𑌿𑌖𑌰𑌿𑌣𑍋 𑌵𑌰𑍍𑌷𑌧𑌰𑌪𑌰𑍍𑌵𑌤𑌾𑌃 ॥ ௰௧ ॥

தத்விபாஜிந: பூர்வாபராயதா ஹிமவந்மஹா
ஹிமவந்நிஷதநீலருக்மிஶிகரிணோ வர்ஷதர
பர்வதா: ॥

(ப - ரை.) 𑌤𑌦𑍍𑌵𑌿𑌭𑌾𑌜𑌿𑌨𑌃 - அந்தப் பரதம் முதலான ஏழுக்ஷேத்திரங்களைப் பிரிக்கக்கூடியவைகளாயும், 𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌪𑌰𑌾𑌯𑌤𑌾𑌃 - கிழக்கு மேற்கில் நீளம் உள்ளவைகளாயும் உள்ள, 𑌹𑌿𑌮𑌵𑌨𑍍𑌮𑌹𑌾𑌹𑌿𑌮𑌵𑌨𑍍𑌨𑌿𑌷𑌧𑌨𑍀𑌲𑌰𑍁𑌕𑍍𑌮𑌿𑌶𑌿𑌖𑌰𑌿𑌣𑌃 𑌵𑌰𑍍𑌷𑌧𑌰𑌪𑌰𑍍𑌵𑌤𑌾𑌃 - ஹிமவன், மஹா ஹிமவன், நிஷத, நீல, ருக்மி, சிகரி என்னும் (ஆறு) பர்வதங்கள் இருக்கின்றன. (11)

### பர்வதங்களின் நிறம்

98. 𑌹𑍇𑌮𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌤𑌪𑌨𑍀𑌯𑌵𑍈𑌡𑍂𑌰𑍍𑌯
𑌰𑌜𑌤𑌹𑍇𑌮𑌮𑌯𑌾𑌃 ॥ 𑍧𑍨 ॥

ஹேமார்ஜுநதபநீயவைடூர்யரஜதஹேமமயாঃ ||

(ப - ரை.) 𑌹𑍇𑌮𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌤𑌪𑌨𑍀𑌯𑌵𑍈𑌡𑍂𑌰𑍍𑌯𑌰𑌜𑌤𑌹𑍇𑌮𑌮𑌯𑌾𑌃 - (மேற்கூறப்பட்ட ஆறு பர்வதங்களும் முறையே) பொன், வெள்ளி, தங்கம், நீலம், வெள்ளி, பொன் ஆகிய நிறமாய் இருக்கின்றன.

கருத்துரை :—ஹிமவன் பொன்னிறமாயும், மஹா ஹிமவன் வெள்ளிநிறமாயும், நிஷதம் நன்றாகக் காய்ச்சப் பட்ட தங்கநிறமாயும், நீலபர்வதம நீலமணியின் நிறமாயும், ருக்மிபர்வதம் வெள்ளிநிறமாயும், சிகரிபர்வதம் பொன்னிற மாயும் இருக்கின்றன. (12)

### பர்வதங்களின் உருவம்

99. 𑌮𑌣𑌿𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌾 𑌉𑌪𑌰𑌿 𑌮𑍂𑌲𑍇 𑌚
𑌤𑍁𑌲𑍍𑌯𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌾𑌃 ॥ 𑍧𑍩 ॥

மணிவிசித்ரபார்ஸ்வா உபரி மூலே ச
துல்யவிஸ்தாராঃ ||

(ப-ரை.) 𑌮𑌣𑌿𑌵𑌿𑌚𑌿𑌤𑍍𑌰𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌾𑌃 -(அந்தப் பர்வதங்கள்) அநேகவித மணிகள் பொருந்திய பக்கங்களையும், 𑌉𑌪𑌰𑌿 𑌮𑍂𑌲𑍇 𑌚 𑌤𑍁𑌲𑍍𑌯𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌾𑌃 - முடியிலும் இடையிலும் அடியிலும் ஒரே அளவையும் உடையன. (13)

### பர்வதங்களிலிருக்கும் பொய்கைகள்

100. 𑌪𑌦𑍍𑌮𑌮𑌹𑌾𑌪𑌦𑍍𑌮𑌤𑌿𑌗𑌿𑌞𑍍𑌛𑌕𑍇𑌸𑌰𑌿𑌮𑌹𑌾𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕
𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌾 𑌹𑍍𑌰𑌦𑌾𑌸𑍍𑌤𑍇𑌷𑌾𑌮𑍁𑌪𑌰𑌿 ॥

பத்மமஹாபத்மதிகிஞ்சகேஸரிமஹாபுண்டரீக
புண்டரீகா ஹ்ருதாஸ்தேஷாமுபரி ||

(ப - ரை.) (அந்த ஆறு பர்வதங்களின்) உவரி - மேலிடத்தில் (முறையே), வஜ...வுண்டரீகாঃ - பத்மம், மஹாபத்மம், திகிஞ்சம், கேஸரி, மஹாபுண்டரீகம், புண்டரீகம் என்னும், ஹ்ரதாঃ - (ஆறு) பொய்கைகள் இருக்கின்றன.

கருத்துரை: — ஹிமவன்பர்வதத்தின்மேல் பத்மம் என்னும் பொய்கையும், மஹாஹிமவன்பர்வதத்தில் மஹாபத்மம் என்னும் பொய்கையும், நிஷதபர்வதத்தில் திகிஞ்சம் என்னும் பொய்கையும், நீலபர்வதத்தில் கேஸரி என்னும் பொய்கையும், ருக்மிபர்வதத்தில் மஹா புண்டரீகம் என்னும் பொய்கையும், சிகரிபர்வதத்தில் புண்டரீகம் என்னும் பொய்கையும் இருக்கின்றன. (14)

## முதற்பொய்கையின் நீளமும் அகலமும்

101\. ப்ரதமோ யோஜநஸஹஸ்ராயாமஸ்தத³ர்த்த விஷ்கம்போ ஹ்ருதঃ ॥ ௧௫ ॥

ப்ரதமோ யோஜநஸஹஸ்ராயாமஸ்ததர்த்த விஷ்கம்போ ஹ்ருதঃ ||

(ப - ரை.) ப்ரதமঃ ஹ்ரதঃ - முதலாவதாகிய பத்மம் என்னும் பொய்கை, யொஜநஸஹஸ்ராயாமঃ - ஆயிரம் யோஜனை நீளத்தையும், தத³ர்த்தவிஷ்கம்பঃ - அந்நீளத்திற் பாதி அகலத்தையும் அதாவது ஐந்நூறு யோஜனை அகலத்தையும் உடையது. (15)

102\. தஶயொஜநாவகாஹঃ || ௧௬ ||

தஶயோஜநாவகாஹঃ ||

(ப - ரை.) தஶ...காஹঃ - (அந்தப் பொய்கை) பத்து யோஜனை ஆழம் உள்ளது, (16)

## போய்கையின் நடுவில் இருப்பது

103. 𑌤𑌨𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 𑌯𑍋𑌜𑌨𑌂 𑌪𑍁𑌷𑍍𑌕𑌰𑌮𑍍 ॥ ௧௭ ॥

தந்மத்யே யோஜநம் புஷ்கரம் ॥

(ப - ரை.) 𑌤𑌨𑍍𑌮𑌧𑍍𑌯𑍇 - அந்தப் பொய்கையின் நடுவில், 𑌯𑍋𑌜𑌨𑌂 - ஒரு யோஜனை விஸ்தாரம் உள்ள, 𑌪𑍁𑌷𑍍𑌕𑌰𑌂 - தாமரை உளது. (17)

## மஹாபத்மம் முதலான பொய்கைகளும் அவைகளில் இருக்குங் கமலங்களும் இத்தகையன என்பது

104. 𑌤𑌦𑍍𑌦𑍍𑌵𑌿𑌗𑍁𑌣𑌦𑍍𑌵𑌿𑌗𑍁𑌣𑌾 𑌹𑍍𑌰𑌦𑌾𑌃 𑌪𑍁𑌷𑍍𑌕𑌰𑌾𑌣𑌿 𑌚 ।

தத்த்விகுணத்விகுணா ஹ்ருதாஃ புஷ்கராணி ச ॥

(ப - ரை.) 𑌹𑍍𑌰𑌦𑌾𑌃 - மஹாபத்ம, திகிஞ்ச ஆகிய இரண்டு பொய்கைகளும், 𑌪𑍁𑌷𑍍𑌕𑌰𑌾𑌣𑌿 – தாமரைகளும், 𑌤𑌦𑍍𑌦𑍍𑌵𑌿𑌗𑍁𑌣𑌦𑍍𑌵𑌿𑌗𑍁𑌣𑌾𑌃 - பத்மப்பொய்கையின் விஸ்தீர்ணத்தினும் ஆழத்தினும் தாமரையினுங்காட்டில் இருமடங்காக உள்ளன. (18)

## ஆறு தாமரைகளிலும் வசிக்கும் ஆறு தேவிகள்

105. 𑌤𑌨𑍍𑌨𑌿𑌵𑌾𑌸𑌿𑌨𑍍𑌯𑍋 𑌦𑍇𑌵𑍍𑌯𑌃 𑌶𑍍𑌰𑍀𑌹𑍍𑌰𑍀𑌧𑍃𑌤𑌿𑌕𑍀𑌰𑍍𑌤𑌿-
𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌃 𑌪𑌲𑍍𑌯𑍋𑌪𑌮𑌸𑍍𑌥𑌿𑌤𑌯𑌃
𑌸𑌸𑌾𑌮𑌾𑌨𑌿𑌕𑌪𑌰𑌿𑌷𑌤𑍍𑌕𑌾𑌃 ॥ ௧௯ ॥

தந்நிவாஸிந்யோ தேவ்யஃ ஶ்ரீஹ்ரீத்ருதிகீர்த்தி
புத்திலக்ஷ்ம்யஃ பல்யோபமஸ்திதயஃ
ஸஸாமாநிகபரிஷத்காஃ ॥

(ப - ரை.) 𑌶𑍍𑌰𑍀𑌹𑍍𑌰𑍀𑌧𑍃𑌤𑌿𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌃 - ஶ்ரீ ஹ்ரீ த்ருதிகீர்த்தி புத்தி லக்ஷ்மீ என்னும் பெயர்களையுடைய

தேவியர் அறுவரும், தஙிவாஸிந்ய: - முன்னர்க் கூறப் பட்ட அந்த ஆறு பொய்கைகளிலும் உள்ள ஆறு தாமரை-மலர்களிலும் வசிப்பார்கள். அவர்களுள் ஒவ்வொருவரும், ஸபல்யோபமஸ்தி2தயஃ - ஒருபல்லம் காலம் ஆயுளும், ஸஸாமாநிகபாரிஷத்3தா: - ஸாமாநிக தேவர்களையும் பாரி-ஷத்க தேவர்களையும் உடையவர்.

கருத்துரை:—பத்மப்பொய்கையில் உள்ள தாமரையின் கர்ணிகையினுடைய நடுவில் இருக்கும் மாளிகையில் ஸ்ரீதேவியும், மஹாபத்மப்பொய்கையில் உள்ள தாமரை-யின் கர்ணிகையினுடைய நடுவில் இருக்கும் மாளிகையில் ஹ்ரீதேவியும், திகிஞ்சப்பொய்கையில் உள்ள தாமரையின் கர்ணிகைகையினுடைய நடுவில் இருக்கும் மாளிகையில் த்ருதிதேவியும், கேஸரிப்பொய்கையில் உள்ள தாமரையின் கர்ணிகையினுடைய நடுவில் இருக்கும் மாளிகையில் கீர்த்திதேவியும், மஹாபுண்டரீகப் பொய்கையில் உள்ள தாமரையின் கர்ணிகையினுடைய நடுவில் இருக்கும் மாளிகையில் புத்திதேவியும், புண்டரீகப்பொய்கையில் உள்ள தாமரையின் கர்ணிகையினுடைய நடுவில் இருக்கும் மாளிகையில் லக்ஷ்மீதேவியும் வசிக்கின்றனர் (19)

## பதினான்கு நதிகள்

106. கங்காஸிந்து4ரோஹித்3ரோஹிதாஸ்யா
ஹரித்3ஹரிகாந்தாஸீதாஸீதோதா3
நாரீநரகாந்தாஸுவர்ணரூப்யகூலா
ரக்தாரக்தோதா3: ஸரிதஸ்தந்மத்4யகா3: ॥ உ0 ॥

கங்காஸிந்துரோஹித்ரோஹிதாஸ்யாஹரித்தரிகாந்தா
ஸீதாஸீதோதாநாரீநரகாந்தாஸுவர்ணரூப்யகூலா
ரக்தாரக்தோதா: ஸரிதஸ்தந்மத்யகா: ॥

(ப - ரை.) ஶம்ஶா......ஸரிதஃ - கங்கா, ஸிந்து, ரோஹித், ரோஹிதாஸ்யா, ஹரித், ஹரிகாந்தா, ஸீதா, ஸீதோதா, நாரீ, நரகாந்தா, ஸுவர்ணகூலா, ரூப்யகூலா, ரக்தா, ரக்தோதா என்னும் பெயருடைய நதிகள், தந்மத்யகாஃ - அந்தப் பரதக்ஷேத்திரம்முதலான க்ஷேத்திரங்களின் மத்தியில் பாய்கின்றன.

**கருத்துரை** :—பத்மப்பொய்கையின் கிழக்குத்துவாரத்தின் வழியாகப் புறப்படுங் கங்காநதியும், பத்மப்பொய்கையின் மேற்குத்துவாரத்தின் வழியாகப் புறப்படும் ஸிந்துநதியும் பரதக்ஷேத்திரத்தின் மத்தியில் பாய்கின்றன. பத்மப்பொய்கையின் வடக்குத்துவாரத்தின் வழியாகப் புறப்படும் ரோஹிதாஸ்யாநதியும் மஹாபத்மப்பொய்கையின் தெற்குத்துவாரத்தின் வழியாகப்புறப்படும் ரோஹித்நதியும் ஹைமவதக்ஷேத்திரத்தின் மத்தியில் பாய்கின்றன. மஹாபத்மப்பொய்கையின் வடக்குத்துவாரத்தின் வழியாகப் புறப்படும் ஹரிகாந்தாநதியும் திகிஞ்சப்பொய்கையின் தெற்குத்துவாரத்தின் வழியாகப் புறப்படும் ஹரித்நதியும் ஹரிக்ஷேத்திரத்தின் மத்தியில் பாய்கின்றன. திகிஞ்சப்பொய்கையின் வடக்குத்துவாரத்தின் வழியாகப் புறப்படும் ஸீதோதாநதியும் கேஸரிப்பொய்கையின் தெற்குத்துவாரத்தின் வழியாகப் புறப்படும் ஸீதாநதியும் விதேஹக்ஷேத்திரதகின் மத்தியில் பாய்கின்றன. கேஸரிப்பொய்கையின் வடக்குத்துவாரத்தின் வழியாகப் புறப்படும் நரகாந்தாநதியும், மஹாபுண்டரீகப்பொய்கையின் தெற்குத்

துவாரத்தின் வழியாகப் புறப்படும் நாரீநதியும் ரம்யக க்ஷேத்திரத்தின் மத்தியில் பாய்கின்றன. மஹாபுண்டரீகப் பொய்கையின் வடக்குத்துவாரத்தின் வழியாகப்புறப்படும் ரூப்யகூலாநதியும், புண்டரீகப்பொய்கையின் தெற்குத் துவாரத்தின் வழியாகப் புறப்படும் ஸுவர்ணகூலா நதியும் ஹைரண்யவதக்ஷேத்திரத்தின் மத்தியில் பாய்கின்றன. புண்டரீகப்பொய்கையின் கிழக்குத்துவாரத்தின் வழியாகப் புறப்படும் ரக்தாநதியும், புண்டரீகப்பொய்கையின் மேற்குத்துவாரத்தின் வழியாகப் பாயும் ரக்தோதா நதியும் ஐராவதக்ஷேத்திரத்தின் மத்தியில் பாய்கின்றன.

## நதிகள் பாயும் வழி

107. த்வயோர்த்வயோ: பூர்வா: பூர்வகா: || உக ||

த்வயோர்த்வயோ: பூர்வா: பூர்வகா: ||

(ப - ரை.) த்வயோர்த்வயோ: - (இருபதாம் ஸூத்திரத்தில் கூறப்பட்ட ஏழு) இரண்டு இரண்டு நதிகளில் (ஒவ்வோர் இரண்டு நதிகளிலும்), பூர்வா: - முதலாகக் கூறப்பட்ட கங்கா, ரோஹித், ஹரித், ஸீதா, நாரீ, ஸுவர்ணகூலா, ரக்தா என்னும் நதிகள் (ஏழும்), பூர்வகா: - கிழக்கு ஸமுத்திரத்தை நோக்கிச் செல்கின்றன. (21)

108. ஶேஷாஸ்த்வபரகா: || உஉ ||

ஶேஷாஸ்த்வபரகா: ||

(ப - ரை.) ஶேஷா: - எஞ்சிய (அந்த ஏழு இரண்டு இரண்டு நதிகளில் ஒவ்வோர் இரண்டு நதிகளுள் இரண்டாவதாகக் கூறப்பட்ட) ஸிந்து, ரோஹிதாஸ்யா, ஹரிகாந்தா, ஸீதோதா, நரகாந்தா, ரூப்யகூலா, ரக்தோதா என்னும் நதிகள் ஏழும், அபரகா: - மேற்குச் சமுத்திரத்தை நோக்கிச் செல்கின்றன. (22)

## உபநதிகள்

109. 𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶𑌨𑌦𑍀𑌸𑌹𑌸𑍍𑌰𑌪𑌰𑌿𑌵𑍃𑌤𑌾
𑌗𑌙𑍍𑌗𑌾𑌸𑌿𑌨𑍍𑌧𑍍𑌵𑌾𑌦𑌯𑍋 𑌨𑌦𑍍𑌯𑌃 ॥ ௨௩ ॥
சதுர்தஶநதீஸஹஸ்ரபரிவ்ருதா கங்கா
ஸிந்த்வாதயோ நத்யஃ ॥

(ப - ரை) 𑌗𑌙𑍍𑌗𑌾𑌸𑌿𑌨𑍍𑌧𑍍𑌵𑌾𑌦𑌯𑌃 𑌨𑌦𑍍𑌯𑌃 - கங்கா ஸிந்து முதலான யுகலநதிகள் (ஒவ்வோர் இரண்டுநதிகளும்), 𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶𑌨𑌦𑍀𑌸𑌹𑌸𑍍𑌰𑌪𑌰𑌿𑌵𑍃𑌤𑌾𑌃 - பதினான்காயிரம் உபநதிகளோடு கூடியிருக்கின்றன.

விதேஹக்ஷேத்திரத்தின்வரைக்கும் உள்ள ஒவ்வோர் யுகலநதிகளும் முறையே இருமடங்கு உபநதிகளை யுடையன. விதேஹக்ஷேத்திரத்திற்கு வடக்கில் உள்ள யுகலநதிகள் பாதி பாதி குறைவான உபநதிகளை யுடையன. அதாவது, கங்காநதியும் ஸிந்துநதியும் 14000 உபநதிகளை உடையன. ரோஹித்நதியும் ரோஹிதாஸ்யாநதியும் 28000 உபநதிகளை உடையன. ஹரித்நதியும் ஹரிகாந்தா நதியும் 56000 உபநதிகளை உடையன. ஸீதாநதியும் ஸீதோதாநதியும் 112000 உபநதிகளை உடையன. நாரீ நதியும் நரகாந்தாநதியும் 56000 உபநதிகளை உடையன. ஸுவர்ணகூலாநதியும் ருப்யகூலாநதியும் 28000 உபநதிகளை உடையன. ரக்தாநதியும் ரக்தோதாநதியும் 14000 உபநதிகளை உடையன. (23)

## பரதக்ஷேத்திரத்தின் விஸ்தீர்ணம்

110. 𑌭𑌰𑌤𑌃 𑌷𑌡𑍍𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌪𑌞𑍍𑌚𑌯𑍋𑌜𑌨𑌶𑌤𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌃
𑌷𑌟𑍍𑌚𑍈𑌕𑍋𑌨𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌭𑌾𑌗𑌾𑌯𑍋𑌜𑌨𑌸𑍍𑌯 ॥

பரத: ஷட்விம்ஶதிபஞ்சயோஜநஶதவிஸ்தார:
ஷட்சைகோநவிம்ஶதி பாகாயோஜநஸ்ய ||

(ப - ரை.) ஹாத: - பரத க்ஷேத்திரம், ஷட்விம்ஶதி பஞ்சயோஜநஶதவிஸ்தார: - ஐந்நூற்றுஇருபத்தாறு யோஜனையும், யோஜநஸ்ய - ஒரு யோஜனையினுடைய, ஏகோநவிம்ஶதிபாகாஷட் ச - பத்தொன்பது பாகங்களில் ஆறு பாகமும் உடைய விஸ்தீரணத்தை உடையது.

**கருத்துரை:** — பரதக்ஷேத்திரத்தின் விஸ்தீர்ணம் $526\frac{6}{19}$ யோஜனைகளாகும். (24)

## ஏனைய க்ஷேத்திரங்கள் பர்வதங்கள் இவற்றின் விஸ்தாரம்

111. தத்3 த்3விகு3ணத்3விகு3ணவிஸ்தாரா வர்ஷத4ர
வர்ஷா விதே3ஹாந்தா: || உரு ||
தத்த்விகுண த்விகுணவிஸ்தாரா
வர்ஷதர வர்ஷா விதேஹாந்தா: ||

(ப - ரை.) விதே3ஹாந்தா: - விதேஹ க்ஷேத்திரத்தின் வரைக்கும் உள்ள, வர்ஷத4ரவர்ஷா: - பர்வதங்களும் க்ஷேத்திரங்களும், தத்3 த்3விகு3ண த்3விகு3ணவிஸ்தாரா: - அந்தப் பரதக்ஷேத்ரத்தைக்காட்டிலும் இருமடங்கு விஸ்தீர்ணத்தை உடையன. (25)

## விதேஹக்ஷேத்திரத்தின் வடக்கில் உள்ள பர்வதங்கள் க்ஷேத்திரங்கள் இவற்றின் விஸ்தாரம்

112. உத்தரா த3க்ஷிணதுல்யா: || உசு ||
உத்தரா தக்ஷிணதுல்யா: ||

(ப - ரை.) உத்தரா: - விதேஹக்ஷேத்திரத்தின் வடக்கில் உள்ள நீல ருக்மி சிகரி என்னும் பர்வதங்களும்,

ரம்யகம் ஹைரண்யவதம் ஐராவதம் என்னும் மூன்று க்ஷேத்திரங்களும், 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌤𑍁𑌲𑍍𑌯𑌾𑌃 - விதேஹக்ஷேத்திரத்தின் தெற்கில் உள்ள ஹிமவன் மஹாஹிமவன் நிஷதம் என்னும் மூன்று பர்வதங்களுக்கும், பரதம் ஹைமவதம் ஹரி என்னும் மூன்று க்ஷேத்திரங்களுக்கும் ஸமானமாகும்.

அதாவது, ஹிமவன்பர்வதம் எவ்வளவு விஸ்தீர்ணத்தை உடையதோ அவ்வளவு விஸ்தீர்ணத்தைச் சிகரி பர்வதம் உடையதாகும். பரதக்ஷேத்திரம் எவ்வளவு விஸ்தீர்ணத்தை உடையதோ அவ்வளவு விஸ்தீர்ணத்தை ஐராவதக்ஷேத்திரம் உடையதாகும். இவ்வாறு எல்லாவற்றையும் அறிக.

### பரதக்ஷேத்திரத்திலும் ஐராவதக்ஷேத்திரத்திலும் கால பரிவர்த்தனை

113. 𑌭𑌰𑌤𑍈𑌰𑌾𑌵𑌤𑌯𑍋𑌰𑍍𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌹𑍍𑌰𑌾𑌸𑍌
𑌷𑌟𑍍𑌸𑌮𑌯𑌾𑌭𑍍𑌯𑌾𑌮𑍁𑌤𑍍𑌸𑌰𑍍𑌪𑌿𑌣𑍍𑌯𑌵
𑌸𑌰𑍍𑌪𑌿𑌣𑍀𑌭𑍍𑌯𑌾𑌮𑍍 || ௨௭ ||

பரதைராவதயோர்வ்ருத்திஹ்ராஸௌ
ஷட்ஸமயாப்யாமுத்ஸர்ப்பிண்யவ
ஸர்ப்பிணீப்யாம் ||

(ப - ரை.) 𑌷𑌟𑍍𑌸𑌮𑌯𑌾𑌭𑍍𑌯𑌾𑌮𑍍 - ஆறு பிரிவுகளையுடைய, 𑌉𑌤𑍍𑌸𑌰𑍍𑌪𑌿𑌣𑍍𑌯𑌵𑌸𑌰𑍍𑌪𑌿𑌣𑍀𑌭𑍍𑌯𑌾𑌮𑍍 - உத்ஸர்ப்பிணீ காலத்தாலும் அவஸர்ப்பிணீகாலத்தாலும், 𑌭𑌰𑌤𑍈𑌰𑌾𑌵𑌤𑌯𑍋𑌃 — பரதக்ஷேத்திரத்திலும் ஐராவதக்ஷேத்திரத்திலும் உள்ள மனிதர்களுடைய ஆயுள் உயரம் போகம் முதலியன, 𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌹𑍍𑌰𑌾𑌸𑍌 — உயர்தலும் தாழ்தலும் உடையனவாகின்றன.

(வி - ரை.) இருபது கோடாகோடி கடற்காலம் ஒரு கல்பகாலம் எனப்படும். அது உத்ஸர்ப்பிணீ என்றும் அவஸர்ப்பிணீ என்றும் இரண்டு பேதம் ஆகும். அவற்றுள் **அவஸர்ப்பிணீகாலம்** ஆறு பேதம். அவை—(ஸுஷமஸுஷமா) நல்நற்காலம், (ஸுஷமா) நற்காலம், (ஸுஷமதுஷ்ஷமா) நல்தீக்காலம், (துஷ்ஷமஸுஷமா) தீநற்காலம், (துஷ்ஷமா) தீக்காலம், (அதி துஷ்ஷமா) தீத்தீக்காலம் என்பன.

**உத்ஸர்ப்பிணீகாலம்** ஆறுபேதம்: அவை — தீத்தீக்காலம், தீக்காலம், தீநற்காலம், நல்தீக்காலம், நற்காலம், நல்நற்காலம் என்பன.

## ஆறுகாலங்களின் அளவு

(1) **நல்நற்காலம்**:—நான்கு கோடாகோடி ஸாகரோபம காலத்தை (கடற்காலத்தை) உடையது.

(2) **நற்காலம்**:—மூன்று கோடாகோடி ஸாகரோபம காலத்தை உடையது.

(3) **நல்தீக்காலம்** :—இரண்டு கோடாகோடி ஸாகரோபமகாலத்தை உடையது.

(4) **தீநற்காலம்** :—நாற்பத்திரண்டாயிரம் வருஷம் குறைந்த ஒரு கோடாகோடி ஸாகரோபமகால அளவை உடையது.

(5) **தீக்காலம்** :—21000 வருஷங்களை உடையது.

(6) **தீத்தீக்காலம்** :—21000 வருஷங்களை உடையது.

உத்ஸர்ப்பிணீ (உயர்தல்) காலத்தில், மனிதர்களுடைய ஆயுள், பலம், ஐச்வரியம் முதலியன வளரும். அவஸர்ப்பிணீ (தாழ்தல், குறைதல்) காலத்தில், மனிதர்களுடைய ஆயுள், பலம் முதலியன குறையும்.

பரதக்ஷேத்திரத்திலும் ஐராவதக்ஷேத்திரத்திலும் ஆறு பேதங்களை உடைய உத்ஸர்ப்பிணீகாலமும், அவஸர்ப்பிணீகாலமும் பரிவர்த்தனை (மாறுதல்) ஆகும்.

அஸங்க்யாத அவஸர்ப்பிணீகாலங்கள் கழிந்தபிறகு, ஒரு ஹுண்டாவஸர்ப்பிணீகாலம் வரும். இப்பொழுது நடக்குங் காலம் ஹுண்டாவஸர்ப்பிணீகால மாகும்.

**நல்நற்காலம்** உத்தமபோகபூமிக்கு ஒப்பானது. அதாவது, தேவகுரு உத்தரகுரு என்னும் உத்தமபோக-பூமியில் உள்ள மக்களுடைய ஆயுள், போகம், உயரம் முதலானவற்றிற்கு ஒப்பாகப் பரதக்ஷேத்திரத்தில் உள்ள மக்களும் நல்நற்காலத்தில் ஆயுள் முதலியவற்றைப் பெறுவர்.

**நற்காலம்** மத்தியமபோகபூமிக்கு ஒப்பானது. அதாவது, ஹரிக்ஷேத்திரம் ரம்யகக்ஷேத்திரம் என்னும் மத்தியமபோகபூமியில் உள்ள மக்களுடைய ஆயுள், போகம், உயரம் முதலானவற்றிற்கு ஒப்பாகப் பரதக்ஷேத்திரத்தில் உள்ள மக்களும் நற்காலத்தில் ஆயுள் முதலிய-வற்றைப் பெறுவர்.

**நற்றீக்காலம்** ஜகன்யபோகபூமிக்கு ஒப்பானது. அதாவது, ஹைமவதக்ஷேத்திரம் ஹைரண்யவதக்ஷேத்திரம் என்னும் ஜகன்யபோகபூமியில் உள்ள மக்களுடைய ஆயுள், போகம், உயரம் முதலானவைகளுக்கு ஒப்பாகப் பரதக்ஷேத்திரத்தில் உள்ள மக்களும் நற்றீக்காலத்தில் ஆயுள் முதலியவற்றைப் பெறுவர்.

**தீநற்காலம்** விதேஹக்ஷேத்திரத்திற்கு ஒப்பானது. அதாவது, விதேஹக்ஷேத்திரத்தில் இருக்கும் மக்க

ளுடைய ஆயுள், போகம், உயரம் முதலானவைகளுக்கு ஒப்பாகப் பரதக்ஷேத்திரத்தில் உள்ள மக்களும் தீநற் காலத்தில் ஆயுள் முதலியவற்றைப் பெறுவர்.

**தீக்காலம், தீத்தீக்காலம்**-இக்காலங்களில் மனிதர்களின் ஆயுள் முதலியன மிகக் குறைவடையும்.

குறிப்பு:—தற்போது நடக்குங் காலம் பஞ்சமகால மாகிய தீக்காலமாகும். (27)

## ஏனைய க்ஷேத்திரங்களின் தன்மை

**114.** தாப்யாமபரா பூமயோऽவஸ்திதா: ॥ ௨அ ॥

தாப்யாமபரா பூமயோऽவஸ்திதா: ॥

(ப - ரை.) தாப்யாம் - (பரதம், ஐராவதம் என்னும்) அந்த இரண்டு க்ஷேத்திரங்கள் தவிர, **அபரா:** பூமய: - ஏனைய (ஹைமவதம், ஹரி, விதேஹம், ரம்யகம், ஹைரண்யவதம் என்னும் ஐந்து) க்ஷேத்திரங்கள், **அவஸ்திதா:** - வளர்தலும் குறைதலும் இன்றி ஒரே விதமாய் இருக்கும். அதாவது, ஹைமவதம் முதலான ஐந்து க்ஷேத்திரங்களில் இருப்பவர்களுடைய ஆயுள், பலம், போகம் முதலியன வளர்தலும் குறைதலும் இன்றி ஒரேவிதமாக இருக்கும். (28)

## ஹைமவதம் முதலான க்ஷேத்திரங்களில் உள்ளவர்களின் ஆயுள்

**115.** ஏகத்வித்ரிபல்யோபமஸ்திதயோ ஹைமவதக ஹாரிவர்ஷகதைவகுரவகா: ॥ ௨௯ ॥

ஏகத்வித்ரிபல்யோபமஸ்திதயோஹைமவதக

ஹாரிவர்ஷகதைவகுரவகா: ||

(ப - ரை) ஹைமவதகஹாரிவர்ஷகதைவ குரவகா: - ஹைமவதக்ஷேத்திரத்திலும் ஹரிக்ஷேத்திரத்திலும் தேவகுரு என்னும் பூமியிலும் பிறந்த மனிதர் விலங்குகள் முறையே, ஏகத்விதிரபல்யோபம ஸ்திதய: - ஒன்று, இரண்டு, மூன்று பல்யோபமம் ஆயுளை உடையவர்.

**கருத்துரை:**—ஹைமவதம் என்னும் ஜகன்யபோக பூமியில் பிறந்தவர்களுக்கு ஒரு பல்லம் (பல்யோபமம்) ஆயுளும், ஹரி என்னும் மத்தியமபோகபூமியில் பிறந்தவர்களுக்கு இரண்டு பல்லம் ஆயுளும், தேவகுரு என்னும் உத்தமபோகபூமியில் பிறந்தவர்களுக்கு மூன்று பல்லம் ஆயுளும் உள்ளன.

**போகபூமி:**—பத்து வகைக் கல்பதருக்களால் அளிக்கப்படும் ஸுகங்களை அனுபவிக்கும் இடம். (29)

## ஹைரண்யவதம்முதலான க்ஷேத்திரங்களில் உள்ளவர்களின் ஆயுள்

116. ததோத்தரா: || ௩௰ ||

ததோத்தரா: ||

(ப - ரை.) உத்தரா: - வடபாகத்திலுள்ள ஹைரண்யவதம், ரம்யகம், உத்தரகுரு என்னும் மூன்று க்ஷேத்திரங்களில் இருப்பவர்கள், ததா - தெற்குப் பாகத்திலுள்ள ஹைமவதம், ஹரி, தேவகுரு என்னும் மூன்று க்ஷேத்திரங்களில் இருப்பவர்களுக்குச் சமானம் ஆவர்.

**கருத்துரை:**—ஹைமவதக்ஷேத்திரத்தில் உள்ளவர்களைப்போல் ஹைரண்யவதக்ஷேத்திரத்தில் உள்ளவர்கள் இருப்பர். ஹரிக்ஷேத்திரத்தில் உள்ளவர்களைப்போல்

ரம்யகக்ஷேத்திரத்தில் உள்ளவர்கள் இருப்பர். தேவகுரு என்னும் பூமியில் உள்ளவர்களைப்போல் உத்தரகுரு என்னும் பூமியில் உள்ளவர்கள் இருப்பர். (30)

## விதேஹக்ஷேத்திரத்தில் உள்ளவர்களின் ஆயுள்

117. விதேஹேஷு ஸங்க்யேயகாலா: ॥ ௩க ॥

விதேஹேஷு ஸங்க்யேயகாலா: ॥

(ப - ரை.) விதேஹேஷு - விதேஹக்ஷேத்திரங்களில் பிறந்தவர்கள், ஸங்க்யேயகாலா: - ஸங்க்யாத (பூர்வகோடி) வர்ஷம் ஆயுளை உடையவர்.

கருத்துரை:—விதேஹக்ஷேத்திரத்தில் இருப்பவர்கள் பூர்வகோடி வருஷம் ஆயுளை உடையவர். அவர்களின் உயரம் ஐந்நூறு வில் ஆகும். அவர்கள் தினந்தோறும் உணவு கொள்வர். (31)

## பரதக்ஷேத்திரத்தின் விஸ்தீர்ணம் வேறுவகையாகக் கூறுகிறார்

118. பரதஸ்ய விஷ்கம்போ ஜம்பூத்வீபஸ்ய நவதிஶததபாக: ॥ ௩௨ ॥

பரதஸ்ய விஷ்கம்போ ஜம்பூத்வீபஸ்ய நவதிஶதபாக: ॥

(ப - ரை.) ஜம்பூத்வீபஸ்ய - ஜம்பூத்வீபத்திற்குரிய ஒருலக்ஷம் யோஜனை விஸ்தீர்ணத்தில், நவதிஶததபாக: - நூற்றுத் தொண்ணூறில் ஒரு பாகம், பரதஸ்ய - பரத க்ஷேத்திரத்தினுடைய, விஷ்கம்ப: - விஸ்தீரணம் ஆகும்.

குறிப்பு:—24-வது ஸூத்திரத்தில் கூறப்பட்ட பரத க்ஷேத்திரத்தின் விஸ்தீர்ணமும், இந்த ஸூத்திரத்தில் கூறப்பட்ட விஸ்தீர்ணமும ஒன்றே. யாதொரு வித்யாஸ

மும் இல்லை. ஆனால் கூறப்படும் முறை மாத்திரம் வேறு. ஒரு லக்ஷத்தை 190-ல் வகுத்தால் 24-வது ஸூத்திரத்தில் கூறப்பட்ட $526\frac{6}{19}$ யோஜனைகள் வரும். (32)

## தாதகீஷண்டத்வீபத்தின் வர்ணனை

119. द्विर्धातकीखण्डे ॥ ३३ ॥
த்விர்தாதகீகண்டே ॥

(ப - ரை.) धातकीखण्डे—தாதகீஷண்டம் என்னும் இரண்டாவது த்வீபத்தில், द्वि – க்ஷேத்திரம் குலபர்வதம் மேரு நதி முதலானவைகள் ஜம்பூத்வீபத்திலுள்ளவை-களைக்காட்டிலும் இருமடங்கு அதிகமாயிருக்கின்றன.

கருத்துரை: — தாதகீஷண்டத்வீபத்தில் இரண்டு பரதம், இரண்டு மேரு, இரண்டு கங்கை, இரண்டு ஹிமவான் முதலியவைகள் இருக்கின்றன. (33)

## புஷ்கரவரத்வீபத்தின் வர்ணனை

120. पुष्करार्धे च ॥ ३४ ॥
புஷ்கரார்த்தே ச ॥

(ப - ரை.) पुष्करार्धे च - புஷ்கரார்த்தத்வீபத்திலும் க்ஷேத்திரம், குலபர்வதம், மேரு, நதி முதலியன ஜம்பூத்வீபத்திலுள்ளவைகளைக்காட்டிலும் இரட்டிப்பாய் இருக்கின்றன.

விசேஷவுரை:—புஷ்கரவரத்வீபத்தின் விஸ்தீர்ணம் 16 லக்ஷம் யோசனை ஆகும். அதன் மத்தியில் வளையல் வடிவுபோன்ற மாநுஷோத்தரபர்வதம் இருக்கின்றது. அதனால் அந்தத்வீபம் இரண்டு பிரிவாய் இருக்கின்றது. முதற்பகுதியில் எல்லா அமைப்புக்களும் (தாதகீஷண்டத்வீபத்திலுள்ளவைகளைப்போல்) ஜம்பூத்வீபத்திலுள்ளவைகளைக்காட்டிலும் இரட்டிப்பாய் இருக்கின்றன. (34)

## மநுஷ்ய க்ஷேத்திரம்

121. 𑌪𑍍𑌰𑌾𑌙𑍍𑌮𑌾𑌨𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌰𑌾𑌨𑍍𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌃 ॥ ௩௫ ॥
ப்ராங்மாநுஷோத்,தராந் மநுஷ்யாঃ ॥

(ப - ரை.) 𑌮𑌾𑌨𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌰𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍 - மாநுஷோத்தர பர்வதத்திற்குள், 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌃 - மனிதர்கள் இருக்கின்றனர்.

கருத்துரை : — மாநுஷோத்தரபர்வதத்திற்குள் அடங்கிய இரண்டரைத்வீபங்களில்மட்டும் மனிதர்கள் உத்பன்னமாகின்றனர். அவைகட்கு வெளியில் மனிதர்களின் உத்பத்தி இல்லை. ருத்திபெற்ற முனிவர்களும் வித்யாதரர்களும் செல்வதும் இல்லை. (இரண்டரை த்வீபத்தைக் கடந்து செல்ல மனிதர்களால் முடியாது.) (35)

## மனிதர்களின் பேதம்

122. 𑌆𑌰𑍍𑌯𑌾 𑌮𑍍𑌲𑍇𑌚𑍍𑌛𑌾𑌶𑍍𑌚 ॥ ௩௬ ॥
ஆர்யா ம்லேச்சாஸ் ச ॥

(ப - ரை.) 𑌆𑌰𑍍𑌯𑌾𑌃 - ஆர்யர்என்றும், 𑌮𑍍𑌲𑍇𑌚𑍍𑌛𑌾𑌃 - மிலேச்சர் என்றும் மனிதர் இருவகையினர்.

மனிதர் — ஆர்யர் மிலேச்சர் என இருவகையினர். அவர்களுள் —

ஆர்யர் — நற்குணங்களோடு கூடியவரும் நற்குணங்கள் உள்ளவர்களால் பூஜிக்கப்படுபவரும் ஆவர். அவர் - ருத்திப்பிராப்த ஆர்யர், அங்ருத்திப்பிராப்த ஆர்யர் என இருவகையினர். அவர்களுள், ருத்திப்பிராப்த ஆர்யர் ஏழுவகையினர். அவர் — புத்தி, விக்ரியா, தபம், பலம், ஔஷதம், ரஸம், அக்ஷீணம் என்னும் ருத்திகளை அடைந்தவர்.

அந்ருத்திப்பிராப்த ஆர்யர் :—க்ஷேத்திர ஆர்யர், ஜாதி ஆர்யர், கர்மஆர்யர், சாரித்திர ஆர்யர், தர்ஶனஆர்யர் என ஐந்து வகையினர். அவர்களுள்—

1. க்ஷேத்திரஆர்யர் :—காசி, கோசலம் முதலான தேசத்தில் பிறந்தவர்கள்.

2. ஜாதிஆர்யர்:—இக்ஷ்வாகுவம்ஶம், ஸூர்யவம்ஶம், ஸோமவம்ஶம், குருவம்ஶம், நாதவம்ஶம், ஹரிவம்ஶம், யாதவவம்ஶம், உக்ரவம்ஶம் இவைகளில் பிறந்தவர்.

3. கர்மஆர்யர்:—ஸாவத்யகர்மஆர்யர், அல்பஸாவத்ய கர்மஆர்யர், அஸாவத்யகர்மஆர்யர் என மூன்று வகையினர். அவர்களுள்—

(i) ஸாவத்யகர்மஆர்யர்:—வாள், வரைவு, பயிர்த் தொழில், வித்தை, சில்பம், வணிகம் என்னும் ஆறு வகைத் தொழில்களைச் செய்து ஜீவிப்பவர்.

(ii) அல்பஸாவத்யகர்மஆர்யர் :—அணுவிரதம் முதலான கிருஹஸ்த்ததர்மத்தை மேற்கொண்டு ஒழுகும் (ஶ்ராவகர்) இல்லறத்தார்.

(iii) அஸாவத்யகர்மஆர்யர் :—பாபகார்யங்கள் இல்லாத முனிவர்யர்.

4. சாரித்திரஆர்யர்:—ஸம்யக்சாரித்திரத்தை உடையவர்.

5. தர்ஶனஆர்யர்:—ஸம்யக்தர்ஶனத்தைஉடையவர்.

மிலேச்சர் : — அந்தர்த்வீபஜர், கர்மபூமிஜர் என இருவகையினர். அவர்களுள் —

1. அந்தர்த்வீபஜர் :—லவணசமுத்திரத்தின் இடையிலும், ஹிமவன், சிகரி என்னும் பர்வதங்களின் இடையிலும், விஜயார்த்த பர்வதத்தின் இடையிலும் வசிப்பவர். அவர்,

ஒரு கால் உள்ளவராயும், வால் உள்ளவராயும், தலையில் கொம்புகளை உடையவராயும், முயல்செவியைப்போன்ற நீண்ட செவியுள்ளவராயும், குதிரை, ஸிம்மம், நாய், எருமை, பன்றி, புலி, காகம், குரங்கு ஆகிய இவைகளின் முகத்தைப்போல் முகத்தை உடையவராயும் இருப்பர். அவர்களின் ஆயுள் பல்யோபமம் ஆகும்.

**2. கர்மபூமிஜர்:—**கர்மபூமியில் பிறந்தவர்; ஶக, யவந, ஶபர, புலிந்தர் (வேடர், இருளர்) முதலானவர். (36)

## கர்மபூமிகளின் வர்ணனை

123. 𑌭𑌰𑌤𑍈𑌰𑌾𑌵𑌤𑌵𑌿𑌦𑍇𑌹𑌾𑌃 𑌕𑌰𑍍𑌮𑌭𑍂𑌮𑌯𑍋𑌽𑌨𑍍𑌯𑌤𑍍𑌰
𑌦𑍇𑌵𑌕𑍁𑌰𑍂𑌤𑍍𑌤𑌰𑌕𑍁𑌰𑍁𑌭𑍍𑌯𑌃 ‖ ௩௭ ‖

பரதைராவதவிதேஹாஃ கர்மபூமயோऽந்யத்ர
தேவகுரூத்தரகுருப்யஃ ‖

(ப - ரை.) 𑌦𑍇𑌵𑌕𑍁𑌰𑍂𑌤𑍍𑌤𑌰𑌕𑍁𑌰𑍁𑌭𑍍𑌯𑌃 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 - விதேஹக்ஷேத்திரத்தின் பிரிவாகிய தேவகுருவும் உத்தர குருவும், ஹைமவதம், ஹரி, ரம்யகம், ஹைரண்யவதம் ஆகிய இவைகளும் நீங்கலாக ஏனைய, 𑌭𑌰𑌤𑍈𑌰𑌾𑌵𑌤𑌵𑌿𑌦𑍇𑌹𑌾𑌃 - (ஐந்து)பரதம் (ஐந்து)ஐராவதம் (ஐந்து) விதேஹம் ஆகிய இவைகள், 𑌕𑌰𑍍𑌮𑌭𑍂𑌮𑌯𑌃 - கர்மபூமிகள்.

**கருத்துரை :—**ஐந்துபரதம், ஐந்துஐராவதம், ஐந்து விதேஹம் என்னும் க்ஷேத்திரங்கள் கர்மபூமிகள். தேவகுரு, உத்தரகுரு, ஹைமவதம், ஹரி, ரம்யகம், ஹைரண்யவதம் என்னும் க்ஷேத்திரங்கள் போகபூமிகள்.

**கர்மபூமி :—**அஸி (வாள்) மஷி, (வரைவு), கிருஷி (பயிர்த்தொழில்), வாணிஜ்யம் (வியாபாரம்), வித்யா, சில்பம் (சித்திரக்கலை) என்னும் ஆறு தொழில்களால் மக்கள் ஜீவித்தற்கு உரிய இடம்.

**போகபூமி :—**மேற்கூறப்பட்ட தொழில்கள் இன்றி, கல்பதருக்கள் அளிக்குஞ் சுகத்தை அனுபவிக்கும் இடம்.

## மனிதர்களின் உத்கிருஷ்ட ஆயுளும் ஜகன்ய ஆயுளும்

124. 𑌨𑍃𑌸𑍍𑌥𑌿𑌤𑍀 𑌪𑌰𑌾𑌵𑌰𑍇 𑌤𑍍𑌰𑌿𑌪𑌲𑍍𑌯𑍋𑌪𑌮𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑍇 ॥ ௩௮ ॥

ந்ருஸ்திதீ பராபரே த்ரிபல்யோபமாந்தர் முஹூர்த்தே ॥

(ப - ரை.) 𑌪𑌰𑌾𑌵𑌰𑍇 𑌨𑍃𑌸𑍍𑌥𑌿𑌤𑍀 - மனிதர்களுடைய உத்கிருஷ்டஆயுளும் ஜகன்யஆயுளும், 𑌤𑍍𑌰𑌿𑌪𑌲𑍍𑌯𑍋𑌪𑌮𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑍇 - மூன்று பல்யோபமமும் அந்தர் முஹூர்த்தமும் ஆகும்.

**கருத்துரை** :—மனிதர்களின் உத்கிருஷ்ட ஆயுள் (ஆயுளின் உயர்ந்த அளவு) மூன்று பல்யோபமமும், ஜகன்ய ஆயுள் (ஆயுளின் குறைந்த அளவு) அந்தர் முகூர்த்தமும் (இரண்டு நாழிகைக்குட்பட்ட காலமும்) ஆகும். (38)

## விலங்குகளுடைய ஆயுள்

125. 𑌤𑌿𑌰𑍍𑌯𑌗𑍍𑌯𑍋𑌨𑌿𑌜𑌾𑌨𑌾𑌂 𑌚 ॥ ௩௯ ॥

திர்யக்யோனிஜாநாஞ்ச ॥

(ப - ரை.) 𑌤𑌿𑌰𑍍𑌯...𑌚 - விலங்குகளுடைய உத்கிருஷ்ட ஆயுள் (ஆயுளின் உயர்ந்த அளவு) மூன்று பல்யோபமமும் ஜகன்யஆயுள் (ஆயுளின் குறைந்த அளவு) அந்தர் முஹூர்த்தமும் ஆகும். (39)

இதி 𑌶𑍍𑌰𑍀𑌉𑌮𑌾𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑍇 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌾𑌧𑌿𑌗𑌮𑍇
𑌮𑍋𑌕𑍍𑌷𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌤𑍃𑌤𑍀𑌯𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃 ॥

**ஸ்ரீ உமாஸ்வாமியார் இயற்றிய தத்த்வார்த்த ஸூத்ரம் என்னும் மோக்ஷஶாஸ்த்ரத்தின் மூன்றும் அத்யாயம் முற்றிற்று.**

## கேள்விகள்

1. நாரகர்களுடைய துக்கங்கள் எப்படிப்பட்டன? அவர்களுடைய உத்கிருஷ்ட ஆயுள் எவ்வளவு?
2. ஜம்பூத்வீபத்தின் விஸ்தீர்ணம் எவ்வளவு?
3. கர்மபூமிகள் யாவை? போகபூமிகள் யாவை?
4. தாதகிஷண்டத்வீபத்தின் படம் எழுதுக.
5. கங்கா, ஸிந்து, ரக்தோதா, ஹரிகாந்தா என்னும் இந்த நதிகள் எங்கிருந்து புறப்படுகின்றன? எந்த வழியாகச் சென்று எங்குச் சேர்கின்றன?
6. மாநுஷோத்தரபர்வதம் எங்கே இருக்கிறது?
7. மனிதர்களின் வகைகளைக் கூறி, அவர்களின் உத்கிருஷ்ட ஆயுளையும் ஜகன்யஆயுளையும் கூறுக.
8. நீங்கள் எந்த க்ஷேத்திரத்தில் இருக்கிறீர்கள்?
9. ஜம்பூத்வீபத்தில் பரதக்ஷேத்திரத்தினது படத்தை எழுதுக.
10. தீர்த்தங்கரர் எந்தெந்த க்ஷேத்திரத்தில் உத்பவிக்கின்றனர்?

## அத்யாயம் 4

### தேவர்களின் வகை

**126.** தெவாஶ்சதுர்ணிகாயாঃ || க ||

தேவாஸ்சதுர்ணிகாயா: ||

(ப - ரை.) தெவா: - தேவர்கள், சதுர்ணிகாயா: - பவணர், வியந்தரர், ஜ்யோதிஷ்கர், வைமானிகர் என நான்கு ஸமூஹத்தினர் (வகையினர்). (1)

### பவணர் வியந்தரர் ஜ்யோதிஷ்கர்களின் லேஸ்யை

**127.** ஆதிதஸ்த்ரிஷு பீதாந்தலெஶ்யா: || உ ||

ஆதிதஸ்த்ரிஷு பீதாந்தலேஸ்யா: ||

(ப - ரை:) ஆதித: - முதல், த்ரிஷு - பவணர், வியந்தரர், ஜ்யோதிஷ்கர் ஆகிய மூன்று ஸமூஹத்தினருக்கு, பீதாந்தலெஶ்யா: - பீதலேஸ்யைவரைக்கும் உள்ள லேஸ்யை (கிருஷ்ண, நீல, காபோத, பீதம் என்னும் நான்கு லேஸ்யைகள்) இருக்கும். (2)

### தேவர்களின் உட்பிரிவு

**128.** தஶாஷ்டபஞ்சத்வாதஶவிகல்பா: கல்பொபபந்நபர்யந்தா: || ௩ ||

தஸாஷ்டபஞ்சத்வாதஸவிகல்பா: கல்போபபந்நபர்யந்தா: ||

(ப - ரை.) கல்பொபபந்நபர்யந்தா:- கல்போபபன்னர்வரைக்கும் (பவணர், வியந்தரர், ஜ்யோதிஷ்கர், கல்பவாஸிகள் என்னும் நான்கு வகைத் தேவர்கள்) முறையே, தஶாஷ்டபஞ்சத்வாதஶவிகல்பா: - பத்து, எட்டு, ஐந்து, பன்னிரண்டு பேதமாக இருப்பார்கள்.

ஒ13 67939

கருத்துரை :—பவணதேவர் பத்து வகையர், வியந்தரதேவர் எட்டுவகையர், ஜ்யோதிஷ்கதேவர் ஐந்து வகையர், கல்பவாஸிதேவர் பன்னிரண்டு வகையர் என்க. (3)

## தேவர்களின் ஸாமான்ய பேதம்

129 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑌾𑌮𑌾𑌨𑌿𑌕𑌤𑍍𑌰𑌾𑌯𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌪𑌾𑌰𑌿𑌷𑌦𑌾𑌤𑍍𑌮𑌰𑌕𑍍𑌷
𑌲𑍋𑌕𑌪𑌾𑌲𑌾𑌨𑍀𑌕𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌣𑌕𑌾𑌭𑌿𑌯𑍋𑌗𑍍𑌯
𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑌿𑌕𑌾𑌶𑍍𑌚𑍈𑌕𑌶𑌃 ॥ ௪ ॥

இந்த்ரஸாமாநிகத்ராயஸ்த்ரிம்ஶபாரிஷதாத்ம
ரக்ஷலோகபாலாநீகப்ரகீர்ணகாபியோக்ய
கில்பிஷிகாஶ்சைகஶ: ||

(ப-ரை.) (நான்கு வகைத் தேவர்களுள்ளும்) 𑌏𑌕𑌶𑌃 - ஒவ்வொருவகையினரும், 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰......𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑌿𑌕𑌾𑌃 - இந்திரர், ஸாமாநிகர், த்ராயஸ்த்ரிம்ஶர், பாரிஷதர், ஆத்மரக்ஷகர், லோகபாலர், அநீகர், ப்ரகீர்ணகர், ஆபியோக்யர், கில்பிஷிகர் எனப் பத்துப்பிரிவினராய் இருக்கின்றனர்.

இந்திரர் :—அன்யதேவர்கட்கு இல்லாத அணிமா முதலான ருத்திகளை உடையவர். இவர் அரசருக்குச் சமானமானவர்.

ஸாமாநிகர் :—இந்திரருக்கு (அரசருக்கு)ச் சமானமானவர். ஆனால், இந்திரரைப்போல் (அரசரைப்போல்) ஆக்ஞை செய்வதுமட்டும் இல்லாதவர். இவர், அரசு செலுத்தும் அரசருடைய தாயார், தகப்பனார், குரு ஆகிய இவர்களுக்குச் சமானமானவர்.

த்ராயஸ்த்ரிம்ஶர் :—முப்பத்துமூவர்; மந்திரி, புரோஹிதர்களைப்போன்றவர். இவர் ஒவ்வோர் இந்திரன்ஸபையிலும் முப்பத்துமூவரே இருப்பர்.

**பாரிஷதர்** :—இந்திரருடைய ஸபையில் இருப்பவர். இவர், நண்பன் ஸந்தானம் (ஹிதமானவை) அறிவிப்பவன் ஆகிய இவர்கட்குச் சமானமானவர்.

**ஆத்மரக்ஷகர்** :—இந்திரரைக் காப்பாற்றுபவர். இவர் அங்கரக்ஷகரைப் போன்றவர்.

**லோகபாலர்** :—தலையாரிகளைப்போல் உலகத்தைக் காப்பவர்.

**அநீகர்** :—யானை, குதிரை, தேர், காலாட்படை, கந்தருவர், நர்த்தகர், வ்ருஷபம் ஆகிய ஏழுவகைச்சேனைகளைப்போன்றவர்.

**ப்ரகீர்ணகர்** :—அரசன்கீழ் உள்ள குடிகளுக்குச் சமமாக இருப்பவர்.

**ஆபியோக்யர்** :—அடிமையாட்களைப்போல் (யானை முதலான உருவத்தைத் தரித்து) ஊழியம் செய்பவர்.

**கில்பிஷிகர்** :—சண்டாளருக்குச் சமமாக இழிவான செயலைச் செய்பவர். இவ்வாறு ஒவ்வொருவகைத் தேவர்களுள்ளும் பத்துவகையினர் இருக்கின்றனர். ஆனால், வியந்தரதேவர்களிலும், ஜ்யோதிஷ்கதேவர்களிலும் எட்டு வகையினரே. (4)

130. 𑌤𑍍𑌰𑌾𑌯𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌲𑍋𑌕𑌪𑌾𑌲𑌵𑌰𑍍𑌜𑍍𑌯𑌾

𑌵𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑍍𑌕𑌾𑌃 ॥ ௫ ॥

த்ராயஸ்த்ரிம்ஶலோகபாலவர்ஜ்யா

வ்யந்தரஜ்யோதிஷ்கா: ॥

(ப - ரை.) 𑌵𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑍍𑌕𑌾𑌃 - வியந்தரரும் ஜ்யோதிஷ்கரும், 𑌤𑍍𑌰𑌾𑌯𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌲𑍋𑌕𑌪𑌾𑌲𑌵𑌰𑍍𑌜𑍍𑌯𑌾𑌃 - த்ராயஸ்த்ரிம்ஶரையும் லோகபாலரையும் விட்டிருக்கின்றனர் (இலர்).

**கருத்துரை :**—வியந்தர, ஜ்யோதிஷ்கதேவர்களுள் த்ராயஸ்த்ரிம்ஶர், லோகபாலர் என இரண்டு வகையினர் இல்லை. ஏனைய எட்டு வகையினரும் இருக்கின்றனர். (5)

## இந்திரர்கள்

**131.** 𑌪𑍂𑌰𑍍𑌵𑌯𑍋𑌰𑍍𑌦𑍍𑌵𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌃 || ௬ ||

பூர்வயோர்த்வீந்த்ராஃ ||

(ப - ரை) **𑌪𑍂𑌰𑍍𑌵𑌯𑍋𑌃** - முதல் இரண்டு ஸமூஹத்தினருள் (பவணர், வியந்தரர் என்னும் இரண்டு வகைத் தேவர்களுள்), 𑌦𑍍𑌵𑌿-இரண்டு, 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌃 - இந்திரர் (இருப்பர்).

**கருத்துரை :**—பவணதேவர் பத்து வகையினர். அவர்களுள் ஒவ்வொரு வகைத்தேவருக்கும் இருவர் இந்திரர் உளர். ஆதலால் அவர்கட்கு இருபது இந்திரர். வியந்தர தேவர் எட்டு வகையினர். அவர்களுள் ஒவ்வொரு வகையினருக்கும் இருவர் இந்திரர். ஆதலால் அவர்கட்குப் பதினாறு இந்திரர். (6)

## தேவர்களின் ஸ்த்ரீசுகம்

**132.** 𑌕𑌾𑌯𑌪𑍍𑌰𑌵𑍀𑌚𑌾𑌰𑌾 𑌆 𑌐𑌶𑌾𑌨𑌾𑌤𑍍 || ௭ ||

காயப்ரவீசாரா ஆ ஐஶாநாத் ||

(ப - ரை.) **𑌆 𑌐𑌶𑌾𑌨𑌾𑌤𑍍** - ஐஶாநஸ்வர்க்கத்துத் தேவர்கள்வரையில் உள்ளவர் (பவணர், வியந்தரர், ஜ்யோதிஷ்கர், ஸௌதர்மதேவர், ஐஶானதேவர் ஆகிய இவர்கள்), 𑌕𑌾𑌯𑌪𑍍𑌰𑌵𑍀𑌚𑌾𑌰𑌾𑌃 - (மனிதர்களைப்போல் ஆணும் பெண்ணுங் கூடி) காமஸேவை செய்பவர்கள். (7)

**133.** 𑌶𑍇𑌷𑌾𑌃 𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌰𑍂𑌪𑌶𑌬𑍍𑌦𑌮𑌨𑌃𑌪𑍍𑌰𑌵𑍀𑌚𑌾𑌰𑌾𑌃 || ௮ ||

ஶேஷாஃ ஸ்பர்ஶரூபஶப்தமநஃப்ரவீசாராஃ ||

(ப - ரை.) ஶேஷா꞉ - ஏனைய கல்பவாஸி தேவர்கள், (தமக்குரிய தேவப்பெண்களை), ஸ்பர்ஶ - தொடுதல், ரூப - பார்த்தல், ஶப்த - (அவர்களின்) வசனத்தைக் கேட்டல், மந꞉ - மனத்தினால் நினைத்தல் ஆகிய இவை-களால், ப்ரவீசாரா꞉ - காமஸேவை செய்பவர்கள்.

கருத்துரை :—ஸாநத்குமார ஸ்வர்க்கத்துத் தேவர்களும், மாஹேந்திர ஸ்வர்க்கத்துத் தேவர்களும் தந்தமக்குரிய தேவப்பெண்களைத்தொடுதலாலும், பிரம்ம, பிரம்மோத்தர, லாந்தவ, காபிஷ்டம் என்னும் நான்கு ஸ்வர்க்கத்துத் தேவர்களும் தந்தமக்குரிய தேவாங்கனைகளைக் காணுதலினாலும், ஶுக்ரம், மஹாஶுக்ரம், ஶதாரம், ஸஹஸ்ராரம் என்னும் நான்கு ஸ்வர்க்கத்துத் தேவர்களும் தந்தமக்குரிய தேவிமார்களின் இனிமையான சொற்களைக் கேட்பதனாலும், ஆனதம், பிராணதம், ஆரணம், அச்யுதம் என்னும் நான்கு ஸ்வர்க்கத்துத் தேவர்களும் தந்தமக்குரிய தேவியர்களை மனத்தினால் நினைத்தலினாலும் காமத்தை நுகர்ந்தபடி மகிழ்பவர் ஆவர். தேவப்பெண்களும் தந்தமக்குரிய தேவர்களைத் தொடுதலாலும், பார்த்தலாலும், வார்த்தையைக் கேட்டலாலும், மனத்தால் நினைத்தலாலும் காமத்தை நுகர்ந்தபடி மகிழ்பவர் ஆவர். (8)

131. பரேऽப்ரவீசாரா꞉ ॥ ௯ ॥
பரேऽப்ரவீசாரா꞉ ॥

(ப - ரை.) பரே - பதினாறாவதாகிய அச்யுத ஸ்வர்க்கத்தின்மேல் உள்ள நவக்ரைவேயகத்துத் தேவர்களும், நவாநுத்திசைத் தேவர்களும், பஞ்சாநுத்தரத்துத் தேவர்களும், அப்ரவீசாரா꞉ - காமஸேவை இல்லாதவர்கள் (அவர்களுக்குக் காமத்தின் இச்சையே உண்டாவதில்லை).

## பவணதேவர்களின் பத்து வகை

135. 𑌭𑌵𑌨𑌵𑌾𑌸𑌿𑌨𑍋𑌽𑌸𑍁𑌰𑌨𑌾𑌗𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌤𑍍
𑌸𑍁𑌪𑌰𑍍𑌣𑌾𑌗𑍍𑌨𑌿𑌵𑌾𑌤𑌸𑍍𑌤𑌨𑌿𑌤𑍋𑌦𑌧𑌿
𑌦𑍍𑌵𑍀𑌪𑌦𑌿𑌕𑍍𑌕𑍁𑌮𑌾𑌰𑌾𑌃 ॥ ௰ ॥

பவநவாஸிநோऽஸுரநாகவித்யுத்ஸுபர்ணாக்நி
வாதஸ்தநிதோததித்வீபதிக்குமாராः ||

(ப - ரை.) 𑌭𑌵𑌨𑌵𑌾𑌸𑌿𑌨𑌃 - பவணதேவர் (பத்து வகையினர். அவர்) 𑌅𑌸𑍁𑌰......𑌦𑌿𑌕𑍍𑌕𑍁𑌮𑌾𑌰𑌾𑌃 - அஸுர குமாரர், நாககுமாரர், வித்யுத்குமாரர், ஸுபர்ணகுமாரர், அக்நிகுமாரர், வாதகுமாரர், ஸ்தநிதகுமாரர், உததிகுமாரர், த்வீபகுமாரர், திக்குமாரர் என்பவர். (10)

## வியந்தரதேவர்களின் எட்டுவகை

136. 𑌵𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌾𑌃 𑌕𑌿𑌨𑍍𑌨𑌰𑌕𑌿𑌂𑌪𑍁𑌰𑍁𑌷𑌮𑌹𑍋𑌰𑌗
𑌗𑌨𑍍𑌧𑌰𑍍𑌵𑌯𑌕𑍍𑌷𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌭𑍂𑌤𑌪𑌿𑌶𑌾𑌚𑌾𑌃 ॥

வ்யந்தரா: கிந்நரகிம்புருஷமஹோரக
கந்தர்வயக்ஷராக்ஷஸபூதபிஶாசாः ||

(ப - ரை.) 𑌵𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌾𑌃 - வ்யந்தர தேவர்கள், 𑌕𑌿𑌨𑍍𑌨𑌰𑌕𑌿𑌂𑌪𑍁𑌰𑍁𑌷...𑌪𑌿𑌶𑌾𑌚𑌾𑌃 - கிந்நரர், கிம்புருஷர், மஹோரகர், கந்தர்வர், யக்ஷர், ராக்ஷஸர், பூதங்கள், பிசாசர்கள் (என எட்டு வகையினர்.) (11)

## ஜ்யோதிஷ்கதேவர்களின் ஐந்துவகை

137. 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑍍𑌕𑌾𑌃 𑌸𑍂𑌰𑍍𑌯𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌸𑍌
𑌗𑍍𑌰𑌹𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌣𑌕𑌤𑌾𑌰𑌕𑌾𑌶𑍍𑌚 ॥

ஜ்யோதிஷ்காः ஸூர்யாசந்த்ரமஸௌ
க்ரஹநக்ஷத்ரப்ரகீர்ணக தாரகாஶ்ச ||

(ப - ரை.) ஜ்யோதிஷ்காः - ஜ்யோதிஷ்க தேவர்கள், ஸூர்யா... தாரகாஶ்ச - ஸூர்யர், சந்திரர், கிரஹங்கள், நக்ஷத்திரங்கள், ப்ரகீர்ணதாரகைகள் (என ஐந்து வகையினர்.)

குறிப்பு :—ஜ்யோதிஷ்கதேவர்கள் மத்ய லோகத்தின் (பூலோகத்தின்) தளத்தில் (அடியில்) இருந்து 790 யோஜனைக்குமேல் 900 யோஜனைவரைக்கும் ஸஞ்சரிக்கின்றனர். அதாவது, பூமியிலிருந்து 790 யோஜனைக்குமேல் தாரகைகளும், அதற்குமேல் பத்து யோஜனை உயரத்தில் ஸூர்யரும, அதற்குமேல் எண்பது யோஜனை உயரத்தில் சந்திரரும், அதற்குமேல் நான்கு யோஜனை உயரத்தில் நக்ஷத்திரங்களும், அதற்குமேல் நான்கு யோஜனை உயரத்தில் புதக்ரஹங்களும், அதற்குமேல் மூன்று யோஜனை உடரத்தில் சுக்ரர்களும், அதற்குமேல் மூன்று யோஜனை உயரத்தில் பிருஹஸ்பதிகளும், அதற்குமேல் மூன்று யோஜனை உயரத்தில் அங்காரகர்களும், அதற்குமேல் மூன்று யோஜனை உயரத்தில் சனிகளும் ஸஞ்சரிப்பர். (12)

## ஜ்யோதிஷ்கதேவர்களின் விசேஷம்

138. மேருப்ரதக்ஷிணா நித்யகதயோ

ந்ருலோகே || १३ ||

மேருப்ரதக்ஷிணா நித்யகதயோந்ருலோகே ||

(ப - ரை.) ந்ருலோகே - மனிதவுலகத்தில் (இரண்டரைத்வீபத்தில்) உள்ள ஜ்யோதிஷ்கதேவர்கள், மேருப்ரதக்ஷிணாः - மேருபர்வதத்தைப் பிரதக்ஷிணஞ் செய்துகொண்டு (வலமாக), நித்யகதயः - எப்பொழுதும் சுற்றுகின்றனர். (13)

139. தத்க்ருத: காலவிபாக: ॥ ௧௪ ॥

தத்க்ருத: காலவிபாக: ॥

(ப - ரை.) காலவிபாக: - நாழிகை, முஹூர்த்தம், பகல், இரவு முதலான வியவஹாரகாலத்தின் பிரிவு, தத்க்ருத: - (செல்லுந் தன்மையினையுடைய) ஜ்யோதிஷ்க தேவர்களால் உண்டானது. (14)

140. பஹிரவஸ்திதா: ॥ ௧௫ ॥

பஹிரவஸ்திதா: ॥

(ப - ரை.) பஹி: - (ஜம்பூத்வீபம், தாதகீஷண்ட த்வீபம், புஷ்கரார்த்தத்வீபம் என்னும் இரண்டரை த்வீபத்தின்) வெளியில் இருக்கும் ஜ்யோதிஷ்கதேவர்கள், அவஸ்திதா: - நிலையாய் இருக்கிறார்கள்.

கருத்துரை:—மனிதவுலகத்தின் (இரண்டரை த்வீபத்தின்) வெளியில் இருக்கும் ஸூர்யர், சந்திரர் முதலானவர் ஸஞ்சாரமற்றவர்; எப்பொழுதும் தம் இருப்பிடத்திலேயே இருப்பவர். அவர்கள் மனிதவுலகத்தில் உள்ள ஸூர்யர் சந்திரர்களைப்போல் மேருபர்வதத்தைச் சுற்றுவதில்லை.

141. வைமாநிகா: ॥ ௧௬ ॥

வைமாநிகா: ॥

(ப - ரை.) வைமாநிகா: - விமானத்தில் பிறந்தவர் வைமானிகர்.

கருத்துரை :—பிறந்தவுடன் புண்யவந்தர் என்று கருதப்படும் இடம் (மிக்க புண்யம் செய்தவர்கள் பிறக்கும் இடம்) விமானம். அந்த விமானத்தில் பிறந்தவர் வைமானிகர்.

குறிப்பு :—நாம் வசிக்கும் இடத்திற்கு வீடு என்பது போல வைமானிகதேவர் வசிக்கும் இடம் விமானம் எனப்படும். (16)

## வைமானிகரின் வகை

142. 𑌕𑌲𑍍𑌪𑍋𑌪𑌪𑌨𑍍𑌨𑌾𑌃 𑌕𑌲𑍍𑌪𑌾𑌤𑍀𑌤𑌾𑌶𑍍𑌚 || ௧௭ ||
கல்போபபந்நாः கல்பாதீதாஶ்ச ||

(ப - ரை.) 𑌕𑌲𑍍𑌪𑍋𑌪𑌪𑌨𑍍𑌨𑌾𑌃 𑌕𑌲𑍍𑌪𑌾𑌤𑍀𑌤𑌾𑌶𑍍𑌚 - (வைமானிகர்) கல்போபபந்நர், கல்பாதீதர் (என இருவகையினர்.) அவர்களுள்—

**கல்போபபன்னர்**:—இந்திரர் முதலான பத்துவகை- களைக் கல்பிக்கும் இடமாகிய ஸௌதர்மஸ்வர்க்கம்முதல் அச்யுதஸ்வர்க்கம்வரையில் உள்ள பதினாறு ஸ்வர்க்கங்களில் பிறப்பவர்.

**கல்பாதீதர்** :—இந்திரர்முதலான கல்பனையில்லாத நவக்ரைவேயகம்முதலான விமானங்களில் பிறப்பவர். (17)

## கல்பங்களின் அமைப்பு

143. 𑌉𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌰𑌿 || ௧௮ ||
உபர்யுபரி ||

(ப - ரை.) 𑌉𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌰𑌿 - (எட்டு யுகலம் ஆகிய பதினாறு ஸ்வர்க்கங்களும், நவக்ரைவேயகம், நவாணுத் திசை, பஞ்சாணுத்தரம் ஆகிய விமானங்கள் யாவும்) ஒன்றன்மேல் ஒன்றாய் (இருக்கின்றன.) (18)

## வைமானிகதேவர்கள் வசிக்கும் இடம்

144. 𑌸𑍌𑌧𑌰𑍍𑌮𑍈𑌶𑌾𑌨𑌸𑌾𑌨𑌤𑍍𑌕𑍁𑌮𑌾𑌰𑌮𑌾𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍋𑌤𑍍𑌤𑌰𑌲𑌾𑌨𑍍𑌤𑌵𑌕𑌾𑌪𑌿𑌷𑍍𑌠𑌶𑍁𑌕𑍍𑌰
𑌮𑌹𑌾𑌶𑍁𑌕𑍍𑌰𑌶𑌤𑌾𑌰𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌰𑍇𑌷𑍍𑌵𑌾𑌨𑌤
𑌪𑍍𑌰𑌾𑌣𑌤𑌯𑍋𑌰𑌾𑌰𑌣𑌾𑌚𑍍𑌯𑍁𑌤𑌯𑍋𑌰𑍍𑌨𑌵𑌸𑍁
𑌗𑍍𑌰𑍈𑌵𑍇𑌯𑌕𑍇𑌷𑍁𑌵𑌿𑌜𑌯𑌵𑍈𑌜𑌯𑌨𑍍𑌤𑌜𑌯𑌨𑍍𑌤𑌾
𑌪𑌰𑌾𑌜𑌿𑌤𑍇𑌷𑍁𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌸𑌿𑌦𑍍𑌧𑍌𑌚 || ௧௯ ||

ஸௌதர்மைஶாநஸாநத்குமாரமாஹேந்த்ர
ப்ரஹ்மப்ரஹ்மோத்தரலாந்தவகாபிஷ்டஶுக்ர-
மஹாஶுக்ரஸதாரஸஹஸ்ராரேஷ்வாநத
ப்ராணதயோராரணச்யுதயோர்நவஸு
க்ரைவேயகேஷு விஜயவைஜயந்தஜயந்தா
பராஜிதேஷு ஸர்வார்த்தஸித்தௌ ச ||

(ப - ரை.) ஸௌதர்மைஶாந.........ஸஹஸ்ராரேஷு - (வைமானிகதேவர்கள்) ஸௌதர்ம ஐஶான, ஸாநத்குமார மாஹேந்த்ர, ப்ரஹ்ம ப்ரஹ்மோத்தர, லாந்தவ காபிஷ்ட, ஶுக்ர மஹாஶுக்ர, ஶதார ஸஹ்ஸ்ரார என்னும் ஆறு யுகலங்களிலும் (பன்னிரண்டு ஸ்வர்க்கங்களிலும்), ஆநத ப்ராணதயோ: - ஆநதம் பிராணதம் ஆகிய இரண்டு ஸ்வர்க்கங்களிலும், ஆரணாச்யுதயோ: - ஆரணம் அச்யுதம் ஆகிய இரண்டு ஸ்வர்க்கங்களிலும், நவஸு க்ரைவேயகேஷு - நவக்ரைவேயகவிமானங்களிலும், நவாணுத்திசைவிமானங்களிலும், விஜய.........தேஷு - விஜய, வைஜயந்த, ஜயந்த, அபராஜிதம் என்னும் விமானங்களிலும், ஸர்வார்த்தஸித்தௌ ச - ஸர்வார்த்தஸித்தியிலும் (வசிக்கின்றனர்.)

## மேன்மேல் இருக்கும் வைமானிகதேவர்களுக்கு அதிகமானவை

145. ஸ்திதிப்ரபாவஸுகத்யுதிலேஶ்யா
விஶுத்தீந்த்ரியாவதிவிஷயதோऽதிகா: ||

ஸ்திதிப்ரபாவஸுகத்யுதிலேஶ்யா
விஶுத்தீந்த்ரியாவதிவிஷயதோऽதிகா: ||

(ப - ரை.) ஸ்திதி - ஆயுள், ப்ரபாவ - பிரபாவம், ஸுக - சுகம், த்யுதி - காந்தி, லேஶ்யாவிஶுத்தி - லேஶ்

யையின் சுத்தம், ஊநிரியாவயிவிஷயதஃ - புலன்களின் தோற்றம், அவதிஜ்ஞானத்தினுல் அறிதல் ஆகிய இவைகள் மேன்மேல் விமானங்களில் உள்ள தேவர்களுக்கு, ஃயிகாஃ- அதிகமாகும்.

அதாவது ஸௌதர்ம ஐஸானஸ்வர்க்கத்துத் தேவர் களினும் ஸாநத்குமார மாஹேந்திரஸ்வர்க்கத்துத் தேவர் களுக்கு ஆயுள் பிரபாவம் சுகம் முதலியன அதிகமாகும். ஸானத்குமார மாஹேந்திரஸ்வர்க்கத்துத் தேவர்களுடைய ஆயுள் முதலியவற்றைக்காட்டிலும் பிரஹ்ம பிரஹ்மோத் தரஸ்வர்க்கத்துத் தேவர்களுக்கு ஆயுள் முதலியன அதிக மாகும். இவ்வாறு மேன்மேல் ஸ்வர்க்கத்துத் தேவர் களுடைய ஆயுள் முதலியன கீழ் கீழ் ஸ்வர்க்கத்துத் தேவர் களுடைய ஆயுள் முதலியவற்றினும் அதிகம் என்றறிக.

## வைமாநிகதேவர்களுக்கு மேன்மேல் குறைவானவை

146. மதிஶரீரவரிமஹாஹிமாநதோ ஹீநாஃ ॥
கதிஶரீரபரிக்ரஹாபிமாநதோ ஹீநாஃ ॥

(ப - ரை.) மதி - (ஓர் இடத்தைவிட்டு மற்றோர் இடம்) செல்லுதல், ஶரீர - சரீரத்தின் உயரம், வரிமஹ - லோப (கஷாயத்தினுல்)த் தன்மையினுல் பொருள்கள்மேல் உண்டாகும் பற்று, ஃஹிமாநதஃ - மானகஷாயத்தினுல் உண்டாகும் அஹங்காரம் ஆகிய இவைகள் மேன்மேல் ஸ்வர்க்கங்களில் உள்ள தேவர்களுக்கு, ஹீநாஃ - குறை வாகும்.

அதாவது, ஸௌதர்ம ஐஸான ஸ்வர்க்கத்துத் தேவர் களினும், ஸானத்குமார மாஹேந்திர ஸ்வர்க்கத்துத்தேவர் களுக்குச் செல்லுகை, உடல்அளவு, பொருட்பற்று, அஹங்காரம் ஆகிய இவைகள் குறைவாகும். இவ்வாறு, கீழ்ஸ்வர்க்கத்துத் தேவர்களுக்கு இருக்கும் கதி

சரீரத்தின் உயரம், பொருட்பற்று, அஹங்காரம் ஆகிய இவைகளைக்காட்டிலும் மேன்மேல் ஸ்வர்க்கத்துத் தேவர்களுக்கு கதி முதலியன குறைவு என்று அறிக.

குறிப்பு:—நவக்ரைவேயகம், நவாணுத்திசை, பஞ்சாணுத்தரம் ஆகிய இடங்களில் உள்ள தேவர்கள் தம் விமானங்களைவிட்டு வேறு எங்கும் செல்வதில்லை. (21)

## வைமானிகதேவர்களின் லேஶ்யை

147. पीतपद्मशुक्ललेश्या द्वित्रिशेषेषु ॥ २२ ॥
பீதபத்மஶுக்லலேஶ்யாத்வித்ரிஶேஷேஷு ||

(ப-ரை.) த்வி - ஸௌதர்ம ஐஶான, ஸானத்குமார மாஹேந்திர என்னும் இரண்டு யுகலங்களிலும், த்ரி - பிரம பிரமோத்தர, லாந்தவ காபிஷ்ட, ஶுக்ர மஹாஶுக்ரம் என்னும் மூன்று யுகலங்களிலும், ஶேஷேஷு - மிகுதியான எல்லா விமானங்களிலும் (இருப்பவர்களுக்கு முறையே), पीतपद्मशुक्ललेश्याः - பீதலேஶ்யை பத்ம லேஶ்யை ஶுக்ல லேஶ்யை ஆகிய இவை யிருக்கும்.

கருத்துரை:—ஸௌதர்மஸ்வர்க்கத்திலும் ஐஶான ஸ்வர்க்கத்திலும் உள்ள தேவர்களுக்குப் பீதலேஶ்யையும், ஸானத்குமாரஸ்வர்க்கத்திலும் மாஹேந்திரஸ்வர்க்கத்திலும் உள்ள தேவர்களுக்குப் பீதலேஶ்யையும் பத்மலேஶ்யையும், பிரம, பிரமோத்தர, லாந்தவ, காபிஷ்ட ஸ்வர்க்கங்களில் இருப்பவர்களுக்குப் பத்மலேஶ்யையும், ஶுக்ர, மஹாஶுக்ர, ஶதார, ஸஹஸ்ரார ஸ்வர்க்கங்களில் இருப்பவர்களுக்குப் பத்மலேஶ்யையும் ஶுக்லலேஶ்யையும், ஆனதஸ்வர்க்கம் முதல்கொண்டு எல்லா விமானங்களிலும் உள்ள தேவர்களுக்கு ஶுக்ல லேஶ்யையும் இருக்கும். நவஅணுத்திசை விமானஙகளிலும் பஞ்சஅணுத்தர விமானங்களிலும் உள்ள தேவர்களுக்குப் பரமஶுக்லலேஶ்யை இருக்கும். (22)

## கல்போபபந்நர் இவர் என்பது

148. 𑌪𑍍𑌰𑌾𑌗𑍍𑌗𑍍𑌰𑍈𑌵𑌯𑌕𑍇𑌭𑍍𑌯𑌃 𑌕𑌲𑍍𑌪𑌾𑌃 ॥ ௨௩ ॥

ப்ராக்க்ரைவேயகேப்ய: கல்பா: ॥

(ப - ரை.) 𑌗𑍍𑌰𑍈𑌵𑌯𑌕𑍇𑌭𑍍𑌯𑌃 𑌪𑍍𑌰𑌾𑌕𑍍 - க்ரைவேயகங்களின் அடியில் உள்ள பதினாறு ஸ்வர்க்கங்களில் உள்ளவர்கள், 𑌕𑌲𑍍𑌪𑌾𑌃 - கல்போபபந்நர் எனப்படுவர்.

**கருத்துரை :**—நவக்ரைவேயகத்திற்குக் கீழ் உள்ள பதினாறு ஸ்வர்க்கங்களில் இருப்பவர் கல்போபபந்நர் எனப்படுவர். நவக்ரைவேயகம், நவாணுத்திசை, பஞ்சாணுத்தரம் ஆகிய விமானங்கள் கல்பாதீத விமானங்கள். அவை-களில் வசிப்பவர்கள் ஒரேவிதமான (சமானமான) ஐஶ்வர்யங்களை உடையர். ஆதலால் அவர்கள் (கல்பாதீதர்) அஹமிந்திரர் எனப்படுவர். (23)

## லௌகாந்திகதேவர்கள்

149. 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌾𑌲𑌯𑌾 𑌲𑍌𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌾𑌃 ॥ ௨௪ ॥

ப்ரம்ஹலோகாலயா லௌகாந்திகா: ॥

(ப - ரை.) 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌲𑍋𑌕𑌾𑌲𑌯𑌾𑌃 - ஐந்தாவது ஸ்வர்க்கமாகிய ப்ரஹ்ம ஸ்வர்க்கத்தின் மேல்பாகத்தில் இருப்பவர், 𑌲𑍌𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌾𑌃 - லௌகாந்திகதேவர்கள்.

**கருத்துரை :**—ப்ரஹ்ம ஸ்வர்க்கத்தின் மேல்பாகத்தில் இருப்பதனாலும், மறுபிறப்பில் மோக்ஷம் அடையக்கூடிய-வர் ஆனதனாலும், லோகத்தின் (ஸம்ஸாரத்தின்) அந்தத்தில் (கடைசியில்) இருப்பதனாலும் அவர்கள் லௌகாந்திகர் எனப்படுவர். அவர்கள் துவாதஶாங்கங்களை வாசித்தவ

ராயும், பிரம்மசாரிகளாயும், தீர்த்தங்கரருடைய தீக்ஷா கல்யாணத்திற்குமாத்திரம் பூலோகத்திற்கு வருபவர்களாயும் இருப்பர். அவர்களைத் தேவருஷிகள் என்றும் கூறுவர். (24)

## லௌகாந்திகதேவர்களின் பெயர்

150. 𑌸𑌾𑌰𑌸𑍍𑌵𑌤𑌾𑌦𑌿𑌤𑍍𑌯𑌵𑌹𑍍𑌨𑍍𑌯𑌰𑍁𑌣𑌗𑌰𑍍𑌦𑌤𑍋𑌯
𑌤𑍁𑌷𑌿𑌤𑌾𑌵𑍍𑌯𑌾𑌬𑌾𑌧𑌾𑌰𑌿𑌷𑍍𑌟𑌾𑌶𑍍𑌚 ‖ ௨௫ ‖
ஸாரஸ்வதாதித்யவஹ்ந்யருணகர்த்ததோய
துஷிதாவ்யாபாதாரிஷ்டாஶ்ச ‖

(ப - ரை.) 𑌸𑌾𑌰𑌸𑍍𑌵𑌤𑌾𑌦𑌿......𑌰𑌿𑌷𑍍𑌟𑌾𑌶𑍍𑌚 - ஸாரஸ்வதர், ஆதித்யர், வஹ்நியர், அருணர், கர்த்ததோயர், துஷிதர், அவ்யாபாதர், அரிஷ்டர் என லௌகாந்திக தேவர்கள் எட்டு வகையினர். அவர்கள் பிரமஸ்வர்க்கத்தின் ஈஶானம் முதலான எட்டுத் திக்குக்களிலும் முறையே வசிக்கின்றார்கள். (25)

## அணுத்திசைவிமானதேவர்களினதும் அணுத்தரவிமான தேவர்களினதும் பிறப்பின் நியமம்

151. 𑌵𑌿𑌜𑌯𑌾𑌦𑌿𑌷𑍁 𑌦𑍍𑌵𑌿𑌚𑌰𑌮𑌾𑌃 ‖ ௨௬ ‖
விஜயாதிஷு த்விசரமா: ‖

(ப - ரை.) 𑌵𑌿𑌜𑌯𑌾𑌦𑌿𑌷𑍁 - விஜய, வைஜயந்த, ஜயந்த, அபராஜிதம் என்னும் நான்கு விமானங்களிலும் அணுத்திசை விமானங்களிலும் இருப்பவர்கள், 𑌦𑍍𑌵𑌿𑌚𑌰𑌮𑌾𑌃-இரண்டு ஜன்மத்தில் மோக்ஷமடைவார்கள். (இரண்டு மனிதஜன்மமெடுத்து மோக்ஷமடைவார்கள்). அதாவது, அவர்கள் தம் தேவாயுள் முடிந்தபின் மனிதர்களாகப் பிறந்து அப்பிறவியில் ஸம்யமத்தைப் பெற்று, அதனால் விஜயம்

முதலான விமானங்களில் ஜனித்து மறுபடியும் அங்கிருந்து வந்து மனிதர்களாய்ப் பிறந்து மோக்ஷமடைவர் என்பதாம். ஸர்வார்த்தஸித்திதேவர்கள் ஒரு ஜன்மத்திலேயே (அடுத்தபிறவியிலேயே) மோக்ஷமடைவர். (26)

## விலங்குகள்

152. 𑌔𑌪𑌪𑌾𑌦𑌿𑌕𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑍇𑌭𑍍𑌯𑌃
𑌶𑍇𑌷𑌾𑌸𑍍𑌤𑌿𑌰𑍍𑌯𑌗𑍍𑌯𑍋𑌨𑌯𑌃 ॥ ௨௭ ॥
ஔபபாதிகமநுஷ்யேப்ய: ஶேஷாஸ்
திர்யக்யோநய: ॥

(ப - ரை.) 𑌔𑌪𑌪𑌾𑌦𑌿𑌕𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑍇𑌭𑍍𑌯𑌃 - உபபாத ஜன்மத்தில் பிறந்தவர்கள் (நாரகர், தேவர்) மனிதர் ஆகிய இவர்கள் தவிர, 𑌶𑍇𑌷𑌾𑌃 - ஏனையவை, 𑌤𑌿𑌰𑍍𑌯𑌗𑍍𑌯𑍋𑌨𑌯𑌃 - திர்யக்ஜீவன்கள் (விலங்குகள்).

குறிப்பு :—திர்யஞ்சங்கள் உலகமெங்கும் பரவியிருக்கின்றன. ஆனால், த்ரஸஜீவன்களாகிய திர்யஞ்சங்கள் த்ரஸநாளியில்மாத்திரம் இருக்கும். (27)

## பவணதேவர்களின் உத்கிருஷ்ட ஆயுள்

153. 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌰𑌸𑍁𑌰𑌨𑌾𑌗𑌸𑍁𑌪𑌰𑍍𑌣𑌦𑍍𑌵𑍀𑌪
𑌶𑍇𑌷𑌾𑌣𑌾𑌂 𑌸𑌾𑌗𑌰𑍋𑌪𑌮𑌤𑍍𑌰𑌿𑌪𑌲𑍍𑌯𑍋𑌪𑌮𑌾
𑌰𑍍𑌧𑌹𑍀𑌨𑌮𑌿𑌤𑌾𑌃 ॥ ௨௮ ॥
ஸ்திதிரஸுரநாகஸுபர்ணத்வீபஶேஷாணும்
ஸாகரோபம த்ரிபல்யோபமார்த்தஹீநமிதா: ॥

(ப—ரை.) 𑌅𑌸𑍁𑌰𑌨𑌾𑌗𑌸𑍁𑌪𑌰𑍍𑌣𑌦𑍍𑌵𑍀𑌪𑌶𑍇𑌷𑌾𑌣𑌾𑌂- அஸுரகுமாரர், நாககுமாரர், ஸுபர்ணகுமாரர், த்வீபகுமாரர், ஏனையகுமாரர் (வித்யுத்குமாரர், அக்னிகுமாரர், வாதகுமாரர், ஸ்தனிதகுமாரர், உததிகுமாரர், திக்குமாரர்)

ஆகிய இவர்களுடைய, 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿 - ஆயுள். 𑌸𑌾𑌗𑌰𑍋𑌪𑌮𑌤𑍍𑌰𑌿𑌪𑌲𑍍𑌯𑍋𑌪𑌮𑌾𑌰𑍍𑌧𑌹𑍀𑌨𑌮𑌿𑌤𑌾𑌃 - முறையே ஒரு கடற் காலமும், மூன்று பல்யோபமமும், $2\frac{1}{2}$ பல்யோபமமும் 2 பல்யோபமமும், $1\frac{1}{2}$ பல்யோபமமும் ஆவன.

**கருத்துரை :**—அஸுரகுமாரரின் ஆயுள் ஒருகடற் காலமும், நாககுமாரரின் ஆயுள் மூன்று பல்யோபமமும், ஸுபர்ணகுமாரரின் ஆயுள் $2\frac{1}{2}$ பல்யோபமமும், த்வீப குமாரரின் ஆயுள் 2 பல்யோபமமும் வித்யுத்குமாரர், அக்னிகுமாரர், வாதகுமாரர், ஸ்தனிதகுமாரர், உததி குமாரர், திக்குமாரர் ஆகிய ஆறுவகைத் தேவர்களுடைய ஆயுள் $1\frac{1}{2}$ பல்யோபமமும் ஆகும். (28)

## வைமானிகரின் உத்கிருஷ்ட ஆயுள்

154. 𑌸𑍌𑌧𑌰𑍍𑌮𑍈𑌶𑌾𑌨𑌯𑍋𑌃
𑌸𑌾𑌗𑌰𑍋𑌪𑌮𑍇 𑌅𑌧𑌿𑌕𑍇 || ௨௯ ||

ஸௌதர்மைஸாநயோ: ஸாகரோபமே அதிகே ||

(ப - ரை.) 𑌸𑍌𑌧𑌰𑍍𑌮𑍈𑌶𑌾𑌨𑌯𑍋𑌃 - ஸௌதர்ம ஸ்வர்க்கத்துத் தேவர் ஐஸானஸ்வர்க்கத்துத் தேவர் ஆகிய இவர்களின் உத்கிருஷ்ட ஆயுள், 𑌸𑌾𑌗𑌰𑍋𑌪𑌮𑍇 𑌅𑌧𑌿𑌕𑍇 - இரண்டு (ஸாகரோபமத்துடன்) கடற்காலத்துடன் சிறிது அதிக காலம் ஆகும். (29)

155. 𑌸𑌾𑌨𑌤𑍍𑌕𑍁𑌮𑌾𑌰𑌮𑌾𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌯𑍋𑌃 𑌸𑌪𑍍𑌤 || ௩௰ ||

ஸாநத்குமாரமாஹேந்த்ரயோ: ஸப்த ||

(ப - ரை.) 𑌸𑌾𑌨𑌤𑍍𑌕𑍁𑌮𑌾𑌰𑌮𑌾𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌯𑍋𑌃 - ஸானத் குமாரஸ்வர்க்கத்துத் தேவர் மாஹேந்திரஸ்வர்க்கத்துத் தேவர் ஆகிய இவர்களின் உத்கிருஷ்ட ஆயுள், 𑌸𑌪𑍍𑌤 - ஏழு கடற்காலத்தோடு சிறிது அதிககாலம் ஆகும்.

**குறிப்பு :**—இந்த சூத்திரத்தில் அதிகம் என்னும் பொருள், மேற்சூத்திரத்திலிருந்து வருவிக்கப்பட்டது.

156. 𑌤𑍍𑌰𑌿𑌸𑌪𑍍𑌤𑌨𑌵𑍈𑌕𑌾𑌦𑌶𑌤𑍍𑌰𑌯𑍋𑌦𑌶
𑌪𑌞𑍍𑌚𑌦𑌶𑌭𑌿𑌰𑌧𑌿𑌕𑌾𑌨𑌿 𑌤𑍁 ॥ ௩௧ ॥

த்ரிஸப்தநவைகாதஶத்ரயோதஶ
பஞ்சதஶபிரதிகாநி து ॥

(ப - ரை.) 𑌅𑌧𑌿𑌕𑌾𑌨𑌿 - சிறிது அதிகம் ஆகிய, 𑌤𑍍𑌰𑌿 - மூன்று, 𑌸𑌪𑍍𑌤 - ஏழு, நவ - ஒன்பது, 𑌏𑌕𑌾𑌦𑌶 - பதினொன்று, 𑌤𑍍𑌰𑌯𑍋𑌦𑌶 - பதின்மூன்று, 𑌪𑌞𑍍𑌚𑌦𑌶 - பதினைந்து கடற்காலமும் ஆகும்.

கருத்துரை :—பிரம்ம, பிரம்மோத்தர தேவர்களுக்குப் பத்துக் கடற்காலத்திற்குமேல் கொஞ்சம் அதிக ஆயுளும், லாந்தவ, காபிஷ்டதேவர்களுக்குப் பதினன்குகடற்காலத்துடன் கொஞ்சம் அதிக ஆயுளும், ஶுக்ர, மஹாஶுக்ர தேவர்களுக்குப் பதினறு கடற்காலத்துடன் கொஞ்சம் அதிக ஆயுளும், ஶதார, ஸஹஸ்ரார தேவர்களுக்குப் பதினெட்டுக் கடற்காலத்துடன் கொஞ்சம் அதிக ஆயுளும், ஆனத, பிராணத தேவர்களுக்கு இருபது கடற்கால ஆயுளும், ஆரண, அச்யுத தேவர்களுக்கு இருபத்திரண்டு கடற்கால ஆயுளும் ஆகும்.

குறிப்பு :—இந்த ஸூத்திரத்தில் இருக்கும் "து" என்னும் எழுத்தினல் அதிகம் என்னும் பொருள் 12-வது ஸ்வர்க்கம்வரைக்கும் கொள்ளப்பட்டது. (31)

157. 𑌆𑌰𑌣𑌾𑌚𑍍𑌯𑍁𑌤𑌾𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌮𑍇𑌕𑍈𑌕𑍇𑌨
𑌨𑌵𑌸𑍁 𑌗𑍍𑌰𑍈𑌵𑍇𑌯𑌕𑍇𑌷𑍁 𑌵𑌿𑌜𑌯𑌾𑌦𑌿𑌷𑍁
𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌸𑌿𑌦𑍍𑌧𑍌 𑌚 ॥ ௩௨ ॥

ஆரணச்யுதாதூர்த்வமேகைகேந
நவஸு க்ரைவேயகேஷு விஜயாதிஷு
ஸர்வாத்தஸித்தௌ ச ||

(ப - ரை.) ஆரணாச்யுதாத் - ஆரண ஸ்வர்க்கத்தினும் அச்யுத ஸ்வர்க்கத்தினும், ஊர்த்வம் - மேல், நவஸு க்ரைவேயகேஷு - ஒன்பது க்ரைவேயகங்களிலும், ஒன்பது அணுத்திசைகளிலும், விஜயாதிஷு - விஜயம் முதலான நான்கு விமானங்களிலும், ஸர்வார்த்தஸித்தௌ - ஸர்வார்த்தஸித்தி விமானத்திலும், ஏகைகேந - (முறையே) ஒவ்வொரு ஸாகரோபமம் உயர்ந்த ஆயுள் ஆகும்.

**கருத்துரை:**—முதல் க்ரைவேயகத்தில் 23 கடற்காலம் ஆயுளும், இரண்டாம் க்ரைவேயகத்தில் 24 கடற்காலம் ஆயுளும், மூன்றும் க்ரைவேயகத்தில் 25 கடற்காலம் ஆயுளும், நான்காம் க்ரைவேயகத்தில் 26 கடற்காலம் ஆயுளும், ஐந்தாம் க்ரைவேயகத்தில் 27 கடற்காலம் ஆயுளும், ஆரும் க்ரைவேயகத்தில் 28 கடற்காலம் ஆயுளும், ஏழாம் க்ரைவேயகத்தில் 29 கடற்காலம் ஆயுளும், எட்டாம் க்ரைவேயகத்தில் 30 கடற்காலம் ஆயுளும், ஒன்பதாம் க்ரைவேயகத்தில் 31 கடற்காலம் ஆயுளும், ஒன்பது அணுத்திசைகளில் 32 கடற்காலம் ஆயுளும், பஞ்சஅணுத்தரங்களில் 33 கடற்காலம் ஆயுளும் ஆகும்.

குறிப்பு :—இந்த ஸூத்திரத்தில் "ஸர்வார்த்தஸித்தௌ" என்னும் வாக்யம் விஜயம் முதலானவைகளோடு சேர்க்காமல் தனியாகக் கூறப்பட்டதனுல் ஸர்வார்த்த ஸித்தியில் உத்கிருஷ்ட ஆயுள்மாத்திரம் இருக்கும். ஜகன்ய ஆயுள் இல்லை என்பது ஸூசிக்கப்படும். (32)

## ஜகன்ய ஆயுள்

**158.** ஸவரா வமௌராவமமயிகழ || ருரு ||

அபரா பல்யோபமமதிகம் ||

(ப - ரை.) **ஸவரா** - (ஸௌதர்ம ஐஶான ஸ்வர்க்கங்களில் இருப்பவர்களுடைய) ஜகன்ய ஆயுள், வமௌரா**வம** **மயி**கழ - ஒரு பல்யோபமத்தோடு கொஞ்சம் அதிக காலம் ஆகும். அதாவது, ஸௌதர்ம ஐஶான ஸ்வர்க்கத்துத் தேவர்களின் ஜகன்ய ஆயுள் கொஞ்சமதிகமான ஒரு பல்லமாகும். (33)

**159.** வர தஃவர தஃவஷுவஹாவஷுவஹா நஞரா: || ருச ||

பரதஃ பரதஃ பூர்வாபூர்வாநந்தரா: ||

(ப - ரை.) வஷுவஹாவஷுவஹா - கீழ் யுகலங்களில் இருப்பவர்களின் உத்கிருஷ்ட ஆயுள், வரதஃ வரதஃ - மேல் யுகலங்களில் உள்ளவர்களுக்கு, ஸநஞரா - ஜகன்ய ஆயுள் ஆகும்.

**கருத்துரை :**—ஸௌதர்ம, ஐஶான ஸ்வர்க்கங்களில் இருப்பவர்களின் உத்கிருஷ்ட ஆயுள், ஸானத்குமார, மாஹேந்திர ஸ்வர்க்கங்களில் இருப்பவர்களுக்கு ஜகன்ய ஆயுள் ஆகும். இவ்வாறு, கீழ் கீழ் ஸ்வர்க்கங்களில்இருப்பபவர்களின் உத்கிருஷ்டஆயுள், மேல்மேல் ஸ்வர்க்கங்களில் இருப்பவர்களுக்கு ஜகன்யஆயுள் ஆகும். ஆனல் ஸர்வார்த்தஸித்திவிமானத்தில் இருப்பவாகளுக்கு ஜகன்ய ஆயுள் இல்லை. (34)

## நாரகர்களின் ஜகன்யஆயுள்

160. 𑌨𑌾𑌰𑌕𑌾𑌣𑌾𑌂 𑌚 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌾𑌦𑌿𑌷𑍁 ॥ ௩௫ ॥

நாரகாணாஞ் ச த்விதீயாதிஷு ॥

(ப-ரை.) 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌾𑌦𑌿𑌷𑍁-(மேற்கூறப்பட்டபடி) இரண்டாம் நரகம் முதல் எல்லா நரகங்களிலும், 𑌨𑌾𑌰𑌕𑌾𑌣𑌾𑌂 - நாரகர்களுடைய ஜகன்ய ஆயுளும் ஆகும்.

கருத்துரை :—முதல்நரகத்தில் உள்ளவர்களின் உத்கிருஷ்ட ஆயுள், இரண்டாம் நரகத்தில் உள்ளவர்களுக்கு ஜகன்ய ஆயுள் ஆகும். இவ்வாறு, மேல்மேல் நரகங்களில் இருப்பவர்களின் உத்கிருஷ்ட ஆயுள், கீழ் கீழ் நரகங்களில் உள்ளவர்களுக்கு ஜகன்ய ஆயுள் ஆகும். (35)

## முதல்நரகத்தில் இருப்பவரின் ஜகன்ய ஆயுள்

161. 𑌦𑌶𑌵𑌰𑍍𑌷𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑌿 𑌪𑍍𑌰𑌥𑌮𑌾𑌯𑌾𑌂 ॥ ௩௬ ॥

தஶவர்ஷஸஹஸ்ராணி ப்ரதமாயாம் ॥

(ப-ரை.) 𑌪𑍍𑌰𑌥𑌮𑌾𑌯𑌾𑌂—முதல்நரகத்தின் ஸீமந்தகம் என்னும் முதல்படலத்தில் இருக்கும் நாரகர்களுடைய ஜகன்ய ஆயுள், 𑌦𑌶𑌵𑌰𑍍𑌷𑌸𑌹𑌸𑍍𑌰𑌾𑌣𑌿 - பத்தாயிரம் வருஷங்கள் ஆகும். (36)

## பவணர்களின் ஜகன்ய ஆயுள்

162. 𑌭𑌵𑌨𑍇𑌷𑍁 𑌚 ॥ ௩௭ ॥

பவநேஷு ச ॥

(ப-ரை.) 𑌭𑌵𑌨𑍇𑌷𑍁 𑌚 - பவணதேவர்களின் ஜகன்ய ஆயுளும் பத்தாயிரம் வருஷங்கள் ஆகும். (37)

## வியந்தரர்களின் ஜகன்ய ஆயுள்

163. 𑌵𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌾𑌣𑌾𑌂 𑌚 || ௩௮ ||

வ்யந்தராணாஞ்ச ||

(ப - ரை.) 𑌵𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌾𑌣𑌾𑌂 𑌚 - வியந்தரதேவர்களின் ஜகன்ய ஆயுளும் பத்தாயிரம் வருஷங்கள் ஆகும். (38)

## வியந்தரர்களின் உத்கிருஷ்ட ஆயுள்

164. 𑌪𑌰𑌾 𑌪𑌲𑍍𑌯𑍋𑌪𑌮𑌮𑌧𑌿𑌕𑌮𑍍 || ௩௯ ||

பரா பல்யோபமமதிகம் ||

(ப - ரை.) 𑌪𑌰𑌾 - (வியந்தர தேவர்களுடைய) உத்கிருஷ்ட ஆயுள், 𑌪𑌲𑍍𑌯𑍋𑌪𑌮𑌮𑌧𑌿𑌕𑌂 - ஒருபல்யோமத்தோடு கொஞ்சம் அதிகம் ஆகும். (39)

## ஜ்யோதிஷ்கதேவர்களின் உத்கிருஷ்ட ஆயுள்

165. 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑍍𑌕𑌾𑌣𑌾𑌂 𑌚 || ௪௰ ||

ஜ்யோதிஷ்காணாஞ்ச ||

(ப - ரை.) 𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑍍𑌕𑌾𑌣𑌾𑌂 𑌚 - ஜ்யோதிஷ்க தேவர்களுடைய உத்கிருஷ்டஆயுளும் ஒருபல்யோபமத்தோடு கொஞ்சம் அதிககாலம் ஆகும். (40)

## ஜ்யோதிஷ்கதேவர்களின் ஜகன்ய ஆயுள்

166. 𑌤𑌦𑌷𑍍𑌟𑌭𑌾𑌗𑍋𑌽𑌪𑌰𑌾 || ௪௧ ||

ததஷ்டபாகோऽபரா ||

(ப - ரை.) 𑌽𑌪𑌰𑌾 - (ஜ்யோதிஷ்க தேவர்களுடைய) ஜகன்ய ஆயுள், 𑌤𑌦𑌷𑍍𑌟𑌭𑌾𑌗𑌃 - ஒருபல்யோபமத்தில் எட்டில் ஒரு பகுதியாகும் (அரைக்கால் பல்லம் ஆகும்).

**கருத்துரை :**—ஜ்யோதிஷ்கதேவர்களுடைய ஜகன்ய ஆயுள் $\frac{1}{8}$ பல்யோபமம் ஆகும். (41)

## லௌகாந்திகதேவர்களின் ஆயுள்

167. 𑌲𑍌𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌾𑌨𑌾𑌮𑌷𑍍𑌟𑍌 𑌸𑌾𑌗𑌰𑍋𑌪𑌮𑌾𑌣𑌿
𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑍍 ॥ ௪௨ ॥

லௌகாந்திகாநாமஷ்டௌ ஸாகரோபமாணி
ஸர்வேஷாம் ॥

(ப - ரை.) 𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 - ஸமஸ்த, 𑌲𑍌𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌾𑌨𑌾𑌂 - லௌகாந்திகதேவர்களுடைய ஆயுள், 𑌅𑌷𑍍𑌟𑍌 - எட்டு, 𑌸𑌾𑌗𑌰𑍋𑌪𑌮𑌾𑌣𑌿 - கடற்காலம் ஆகும்.

**குறிப்பு :**—லௌகாந்திக தேவர்களுக்கு ஜகன்ய ஆயுள் இல்லை. எல்லாருக்கும் எட்டுக்கடற்காலம் ஆயுளே இருக்கும்.

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀 𑌉𑌮𑌾𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑍇 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌾𑌧𑌿𑌗𑌮𑍇
𑌮𑍋𑌕𑍍𑌷𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃

ஸ்ரீ உமாஸ்வாமியார் இயற்றிய
தத்த்வார்த்தஸூத்ரம் என்னும் மோக்ஷசாஸ்த்ரத்தின்
நான்காம் அத்யாயம் முற்றிற்று.

## கேள்விகள்

1. பவணர், வியந்தரர், ஜ்யோதிஷ்கர் ஆகிய இவர்களுக்கு எந்தெந்த லேஶ்யைகள் இருக்கும்?

2. நவக்ரைவேயகத்துத் தேவர்கள் காமஸேவையின்றி எப்படிச் சுகம் உள்ளவர்களாய் இருக்கிறார்கள்?

3. ஸாமானிகர், ஆத்மரக்ஷகர், கில்பிஷிகர் ஆகிய இவர்களுடைய லக்ஷணம் என்னே?

4. ஸ்வர்க்கலோகத்தின் படம் எழுதி, யார் யார் எங்கெங்கே இருக்கிறார்கள் எனக் காட்டுக.

5. ஸர்வார்த்தஸித்தியில் ஜகன்ய ஆயுள் எவ்வளவு?

6. வியந்தர தேவர்கள் வசிக்கும் இடம் யாது?

7. இரண்டரைத்வீபத்திற்கு வெளியில் உள்ள சூர்யர் சந்திரர்நிலை எப்படி?

8. பகல் முதலான பிரிவு எப்படி உண்டானது?

9. ஸ்வர்க்கத்தில் இரவு, பகல் உண்டா, இல்லையா?

10. லௌகாந்திகதேவர்களின் ஜகன்யஆயுள் எவ்வளவு?

# அத்யாயம் 5

## அஜீவதத்த்வம்

168. 𑌅𑌜𑍀𑌵𑌕𑌾𑌯𑌾𑌧𑌰𑍍𑌮𑌾𑌧𑌰𑍍𑌮𑌾𑌕𑌾𑌶𑌪𑍁𑌦𑍍𑌗𑌲𑌾𑌃 || ௧ ||

அஜீவகாயா தர்மாதர்மாகாஶபுத்கலா: ||

(ப - ரை.) 𑌧𑌰𑍍𑌮𑌾𑌧𑌰𑍍𑌮𑌾𑌕𑌾𑌶𑌪𑍁𑌦𑍍𑌗𑌲𑌾𑌃 - தர்மம் அதர்மம் ஆகாஶம் புத்கலம் ஆகிய இவை நான்கும், 𑌅𑌜𑍀𑌵𑌕𑌾𑌯𑌾𑌃 - உயிரில்லாதவைகளாயும் அநேக ப்ரதேசங்களை உடையவைகளாயும் இருக்கும். (1)

## த்ரவ்யங்கள்

169. 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌣𑌿 || ௨ ||

த்ரவ்யாணி ||

(ப - ரை.) 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌣𑌿 - (மேற் கூறப்பட்ட நான்கும்) த்ரவ்யங்கள் ஆகும். (2)

170. 𑌜𑍀𑌵𑌾𑌶𑍍𑌚 || ௩ ||

ஜீவாஶ்ச ||

(ப - ரை.) 𑌜𑍀𑌵𑌾𑌶𑍍𑌚 - ஜீவன்களும் த்ரவ்யமாகும்.

கருத்துரை :— மேற் கூறப்பட்டவைகளுடன் 39-ம் ஸூத்திரத்தில் கூறப்படும் காலமும் சேர்ந்து ஆறு த்ரவ்யங்கள் ஆகும். அவை ஜீவத்ரவ்யம், புத்கலத்ரவ்யம், தர்மத்ரவ்யம், அதர்மத்ரவ்யம், ஆகாஶத்ரவ்யம், காலத்ரவ்யம் என்பன.

குறிப்பு:—ஜீவா: என்னும் பதம் பன்மையாக ஆண்டிருப்பதனால் ஜீவத்ரவ்யத்தினுள் பலவகை உண்டென அறியப்படும். (3)

## த்ரவ்யங்களின் விஶேஷம்

171. 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌨𑍍𑌯𑌰𑍂𑌪𑌾𑌣𑌿 || ௪ ||

நித்யாவஸ்திதாந்யரூபாணி ||

(ப - ரை.) 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌨𑌿 - (மேற் கூறப்பட்ட எல்லா த்ரவ்யங்களும்) எல்லாக்காலத்திலும் இருப்பவைகளும், 𑌅𑌰𑍂𑌪𑌾𑌣𑌿 - உருவமில்லாதவைகளும் ஆகும்.

குறிப்பு :—நித்ய:—அழிவில்லா திருத்தல்.

அவஸ்திதாநி :—அதிகமும் குறைவும் இன்றி ஒரே அளவாய் இருத்தல். அதாவது த்ரவ்யங்கள் ஆறே; அவை எக்காலத்திலும் எக்காரணத்தினாலும் அதிகமும் குறைவும் ஆகாதிருக்கும்.

அரூபாணி :—உருவமற்றவை. வண்ணம், சுவை, நாற்றம், ஸ்பர்ஶம் ஆகிய இவை இல்லாதவை; ஐம்புலனுக்குத் தோன்றாதவை. (4)

## புத்கலத்ரவ்யம்மாத்திரம் அரூபி அன்று

172. 𑌰𑍂𑌪𑌿𑌣𑌃 𑌪𑍁𑌦𑍍𑌗𑌲𑌾𑌃 || ௫ ||

ரூபிண: புத்கலா: ||

(ப - ரை.) 𑌪𑍁𑌦𑍍𑌗𑌲𑌾𑌃 - புத்கலங்கள், 𑌰𑍂𑌪𑌿𑌣𑌃 - உருவமுள்ளவை.

கருத்துரை :—புத்கலங்கள் அனைத்தும் வண்ணம், சுவை, நாற்றம், ஸ்பர்ஶம் ஆகிய இவைகளை உடையனவாகி ஐம்புலன்களுக்குத் தோன்றக்கூடியவை. (5)

## த்ரவ்யங்களின் உட்பேதம்

173. ஆ ஆகாஶாதேகத்ரவ்யாணி ‖ ௬ ‖
ஆ ஆகாஶாதேகத்ரவ்யாணி ‖

(ப - ரை.) ஆ ஆகாஶாத் - ஆகாஶம் வரைக்கும் உள்ளவை; அதாவது தர்மம், அதர்மம், ஆகாஶம் ஆகிய இவை, ஏகத்ரவ்யாணி - தனித்தனி த்ரவ்யங்களாகும்.

**கருத்துரை:**—தர்மத்ரவ்யம், அதர்மத்ரவ்யம், ஆகாஶத்ரவ்யம் ஆகிய இவை மூன்றும் தனித்தனி த்ரவ்யங்களாகும்.

**குறிப்பு:**—புத்கலத்ரவ்யமும் ஜீவத்ரவ்யமும் பலவகையாகவுள்ளன. தர்மம், அதர்மம், ஆகாஶம் ஆகிய இவை மூன்றும் ஒவ்வொருத்ரவ்யந்தான். (6)

174. நிஷ்க்ரியாணி ச ‖ ௭ ‖
நிஷ்க்ரியாணி ச ‖

(ப - ரை.) ச - மற்றும், நிஷ்க்ரியாணி - (தர்மம், அதர்மம், ஆகாஶம் ஆகிய இவை) கிரியை இல்லாதவை.

**கருத்துரை :**—தர்மம், அதர்மம், ஆகாஶம் ஆகிய இவை மூன்று த்ரவ்யங்களும் அசைவின்றி இருந்த இடத்திலேயே இருக்கும் ; ஏனைய த்ரவ்யங்களைப்போல இடம் விட்டு வேறுஇடம் செல்லுந் தன்மை இல்லாதவை.

**குறிப்பு :**—தர்மமும் அதர்மமும் உலக முழுவதிலும் நிரம்பியிருக்கும். ஆகாஶம் லோகத்திலும் அலோகத்திலும் பரவியிருக்கும். ஆதலின் அவை செல்லுதற்கு வேறு இடங்கள் இன்மையால் அவைகட்குக் கிரியை இல்லை என்பதாம்.

**க்ரியா** — ஓர் இடத்தைவிட்டு மற்றோரிடம் செல்லுதல். (7)

## த்ரவ்யங்களின் ப்ரதேஶங்கள்

175. 𑌅𑌸𑌂𑌖𑍍𑌯𑍇𑌯𑌾𑌃 𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑌾
𑌧𑌰𑍍𑌮𑌾𑌧𑌰𑍍𑌮𑍈𑌕𑌜𑍀𑌵𑌾𑌨𑌾𑌂 ॥ ௮ ॥
அஸங்க்யேயா: ப்ரதேஶா
தர்மாதர்மைகஜீவாநாம் ॥

(ப-ரை.) 𑌧𑌰𑍍𑌮𑌾𑌧𑌰𑍍𑌮𑍈𑌕𑌜𑍀𑌵𑌾𑌨𑌾𑌂 — தர்மத்ரவ்யம், அதர்மத்ரவ்யம் ஒருஜீவன் ஆகிய இவைகட்கு, 𑌅𑌸𑌂𑌖𑍍𑌯𑍇𑌯𑌾𑌃 - அஸங்க்யாத (எண்ண முடியாத), 𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑌾𑌃- ப்ரதேசங்கள் இருக்கும்.

ப்ரதேஶ:—மறுபடி துண்டிக்க முடியாத ஒரு நுண்ணிய புத்கலபரமாணுவானது தங்குதற் குரிய இடம்.

## ஆகாஶத்ரவ்யத்தின் ப்ரதேஶங்கள்

176. 𑌆𑌕𑌾𑌶𑌸𑍍𑌯𑌾𑌨𑌨𑍍𑌤𑌾𑌃 ॥ ௯ ॥
ஆகாஶஸ்யாநந்தா: ॥

(ப-ரை.) 𑌆𑌕𑌾𑌶𑌸𑍍𑌯 - ஆகாஶத்ரவ்யத்திற்கு 𑌅𑌨𑌨𑍍𑌤𑌾𑌃 - அனந்த ப்ரதேஶங்கள் (முடிவற்ற ப்ரதேஶங்கள்) உள்ளன.

குறிப்பு:—ஆகாஶம் இருவகை. அவை—லோகாகாஶம் அலோகாகாஶம் என்பன அவற்றுள்—

லோகாகாஶம் :—ஆறுத்ரவ்யங்களும் இருக்கும் இடம். அது அஸங்க்யாத ப்ரதேஶங்களை உடையது.

அலோகாகாஶம் :—ஆகாஶத்ரவ்யம் ஒன்று மாத்திரம் உள்ள இடம். அது அனந்தப்ரதேஶங்களை உடையது.

## புத்கலத்ரவ்யத்தின் ப்ரதேஶங்கள்

177. 𑌸𑌂𑌖𑍍𑌯𑍇𑌯𑌾𑌸𑌂𑌖𑍍𑌯𑍇𑌯𑌾𑌶𑍍𑌚 𑌪𑍁𑌦𑍍𑌗𑌲𑌾𑌨𑌾𑌮𑍍 ॥ ௰ ॥
ஸங்க்யேயாஸங்க்யேயாஶ்ச புத்கலாநாம் ||

(ப - ரை.) 𑌪𑍁𑌦𑍍𑌗𑌲𑌾𑌨𑌾𑌂 - புத்கலங்களுக்கு, 𑌸𑌂𑌖𑍍𑌯𑍇𑌯𑌾𑌸𑌂𑌖𑍍𑌯𑍇𑌯𑌾𑌃 𑌚 - ஸங்க்யாதப்ரதேஶம் அஸங்க்யாத ப்ரதேஶம் அனந்தப்ரதேஶம் ஆகிய மூன்று வகை இருக்கும்.

வினா:—அஸங்க்யாதப்ரதேஶமுள்ள லோகாகாஶத்தினுள், அனந்தப்ரதேஶமுள்ள புத்கலத்ரவ்யம் எப்படி அடங்கியிருக்கும்?

விடை :—புத்கலத்ரவயத்தினுள் ஸூக்ஷ்மம் ஸ்தூலம் என இருவகைப் பரிணமனம் (மாறுதல்) உண்டு. ஸூக்ஷ்ம பரிணமனம் ஆகும்போது, லோகாகாஶத்தினது ஒரு-ப்ரதேஶத்தில் அனந்தப்ரதேஶங்களை உடைய புத்கல ஸ்கந்தமானது அடங்குந்தன்மையுள்ளதனால் அஸங்க்யாத ப்ரதேஶமுள்ள லோகாகாஶத்தினுள் அனந்தப்ரதேஶமுள்ள புத்கலத்ரவ்யம் அடங்கும். (10)

## அணுவுக்கு அநேகப்ரதேஶங்கள் இல்லை

178. 𑌨𑌾𑌣𑍋𑌃 ॥ ௰௧ ॥
நாணோ: ||

(ப - ரை.) 𑌅𑌣𑍋𑌃 - அணுவிற்கு, 𑌨 - அநேக ப்ரதேஶங்கள் இல்லை.

கருத்துரை :—"புத்கலாநாம்" என்ற ஸூத்திரத்தில் பாகுபாடு இன்றி, பொதுவாக புத்கலங்களுக்கு ஸங்க்யாதம், அஸங்க்யாதம், அனந்தம் ஆகிய மூன்று வகை ப்ரதேஶங்கள் இருக்கும் என்று கூறப்பட்டதனால், அணுவுக்கு அவ்வாறு ஸங்க்யாதம் முதலானவையின்றி ஒரு ப்ரதேஶம்மாத்திரம் உண்டென்று இந்த ஸூத்திரத்தினால் அறியப்படும். (11)

## எல்லாத்ரவ்யங்கட்கும் ஆதாரமான இடம்

**179.** ஔொகாகாஶெ௨வ஗ாஹः ॥ ௰௨ ॥

லோகாகாஶே௨வகாஹः ॥

(ப - ரை.) ஔொகாகாஶெ - லோகாகாஶத்தில், ஃவ஗ாஹः - (எல்லாத்ரவ்யங்களுடைய) நிவாஸஸ்தானம் உளதாகும்.

கருத்துரை :—தர்மம் முதலான எல்லாத்ரவ்யங்களும் லோகாகாஶத்திலேயே இருக்கும். (12)

**180.** யஃாயஃயொः கூரத்ஸ்நெ ॥ ௰௩ ॥

தர்மாதர்மயோः க்ருத்ஸ்நே ॥

(ப - ரை) யஃாயஃயொः - தர்மத்ரவ்யம் அதர்மத்ரவ்யம் ஆகிய இவைகளின் நிவாஸஸ்தானம், கூரத்ஸ்நெ - லோகாகாஶமுழுமையும் உளதாகும்.

கருத்துரை :—எள்ளின் எல்லாஅம்ஶங்களிலும் எண்ணெய் இருத்தல்போல, தர்மத்ரவ்யமும் அதர்மத்ரவ்யமும் லோகாகாஶத்தின் எல்லாஅம்ஶங்களிலும் பரவியிருக்கும். அதாவது, தர்மத்ரவ்யமும் அதர்மத்ரவ்யமும் லோகம் முழுமையும் நிரம்பியிருக்கும். (13)

## உருவமுள்ளபுத்கலங்களின் ப்ரதேஶங்கள்

**181.** வகாவ்ரதெஶாஷிஷு ஹாஜ்யः வுஜலாநாம் ॥ ௰௪ ॥

ஏகப்ரதேஶாதிஷு பாஜ்யः புத்கலாநாம் ॥

(ப - ரை.) வுஜலாநாம் - புத்கலத்ரவ்பங்களுடைய நிவாஸஸ்தானமானது, வகாவ்ரதெஶாஷிஷு - லோகாகாஶத்தின் ஒருப்ரதேஶம்முதலாக (ஸங்க்யாதம் அஸங்க்யாதம்) அனந்தம்ப்ரதேஶங்கள்வரை, ஹாஜ்யः - பாகம் செய்யத்தக்கது.

கருத்துரை :—லோகாகாஶத்தினது ஒரு ப்ரதேஶத்தில் பரமாணுவானது இருக்கும். இரண்டு பரமாணுக்கள் ஒருங்கு கூடியும் அல்லது கூடாமலும் லோகாகாஶத்தின் இரண்டு ப்ரதேஶங்களினுள் அல்லது ஒரு ப்ரதேஶத்தினுள் இருக்கும். மூன்று பரமாணுக்கள் ஒன்றாகச் சேர்ந்தும் சேராமலும் லோகாகாஶத்தின் மூன்றுப்ரதேஶங்களினுள் அல்லது ஒரு ப்ரதேஶத்தினுள் இருக்கும். இப்படியே ஸங்க்யாதம் அஸங்க்யாதம் அனந்தம் ஆகியவைகளையும் அறிக. (14)

## ஜீவன்களின் நிவாஸஸ்தானம்

182. அஸம்க்யேயபாகாதிஷு ஜீவாநாம் ॥ ௧௫ ॥

அஸங்க்யேயபாகாதிஷு ஜீவாநாம் ॥

(ப - ரை.) அஸம்க்யேயபாகாதிஷு - உலகத்தினது அஸங்க்யாதத்தில் ஒருபாகம்முதல் உலகமுழுமையும், ஜீவாநாம் - ஜீவன்களுடைய நிவாஸஸ்தானமாகும்.

கருத்துரை : — உலகத்தினை அஸங்க்யாதபாகமாகப் பங்கிட்டு வந்த ஒருபாகத்தில் ஒருஜீவன் இருக்கும். ஒரு ஜீவனே இரண்டு மூன்று நான்கு முதலான அஸங்க்யேய பாகங்களிலும் லோகம்முழுவதிலும் இருக்கும். (15)

## அஸங்க்யாத ப்ரதேஶங்களையுடைய ஒரு ஜீவன் அஸங்க்யாத ப்ரதேஶங்களையுடைய லோகத்தின் அஸங்க்யேயபாகம்முதலியவற்றில் எப்படி இருக்கும் என்பது

183. ப்ரதேஶஸம்ஹாரவிஸர்ப்பாப்யாம்

ப்ரதீபவத் ॥ ௧௬ ॥

ப்ரதேஶஸம்ஹாரவிஸர்பாப்யாம்

ப்ரதீபவத் ॥

(ப - ரை.) ப்ரதீபவத் - தீபத்தினது ஒளியைப்போல், ப்ரதேஶஸம்ஹார விஸர்ப்பாப்யாம் - ப்ரதேஶங்கள் சுருங்குதல் பரவுதல் ஆகிய இவைகளினின்றும் அஸங்க்யாத ப்ரதேஶமுள்ள ஜீவன் லோகாகாஶத்தினது அஸங்க்யாதத்தின் ஒரு பாகத்தில் இருக்கும்.

கருத்துரை :—ஒரு விளக்கைப் பெரிய வீட்டில் வைத்தால் அதன் ஒளி வீடுமுழுவதும் பரவியிருக்கும். அவ் விளக்கையே ஒரு சிறிய இடத்தில் வைத்தால் அதன் ஒளி அதனுள் அடங்கியிருக்கும். அதுபோல, ஜீவனும் தன் வினைக்குத் தக்கவாறு தான் அடைந்த (பெரியதாயும் சிறியதாயும் உள்ள) சரீரத்தில் பரவியும் சுருங்கியும் இருக்கும். (16)

## தர்மத்ரவ்யம் அதர்மத்ரவ்யம் ஆகிய இவைகளின் உபகாரம்

184. ஗திஸ்தித்யுபக்ரஹௌ
ധர்மாதர்மயோருபகார꞉ ॥ ൧൭ ॥
கதிஸ்தித்யுபக்ரஹௌ
தர்மாதர்மயோருபகாரঃ ॥

(ப - ரை.) ஗திஸ்தித்யுபக்ரஹௌ - செல்லுதல் நிற்றல் ஆகிற உபகாரம் இரண்டும், ധர்மாதர்மயோ꞉ உபகார꞉ - தர்மத்ரவ்யம் அதர்மத்ரவ்யம் ஆகிய இவைகளின் உபகாரமாகும்.

கருத்துரை :—இயற்கையாக நீந்துந் தன்மையுடைய மீன் நீந்துதற்கு நீர் உதவி புரிதல்போல இயற்கையாகச் செல்லுந்தன்மையுடைய ஜீவபுத்கலங்கள் செல்லுவதற்கு தர்மத்ரவ்யம் உதவி புரியும். தங்குந் தன்மையுடைய ஜீவபுத்கலங்கள் தங்குவதற்கு அதர்மத்ரவ்யம் உதவி புரியும்.

ஜீவன் செல்லுவதற்குத் தர்மத்ரவ்யத்தின் உதவியும் நிற்பதற்கு அதர்மத்ரவ்யத்தின் உதவியும் உளது. இவை இரண்டும் இல்லாவிடில் மனிதர்முதலியோர் செல்லவும் நிற்கவும் முடியாது.

புத்கலம் ஓரிடத்தில் தங்குவதற்கு அதர்மத்ரவ்யத்தின் உபகாரமும், மற்றோர் இடம் செல்லுவதற்குத் தர்மத்ரவ்யத்தின் உபகாரமும் உளது. (17)

## ஆகாஶத்தினது உபகாரம்

185. 𑌆𑌕𑌾𑌶𑌸𑍍𑌯𑌾𑌵𑌗𑌾𑌹𑌃 || ௧௮ ||
ஆகாஶஸ்யாவகாஹ: ||

(ப - ரை.) 𑌅𑌵𑌗𑌾𑌹𑌃 - இடம்தருதல் ஆகிற உபகாரமானது, 𑌆𑌕𑌾𑌶𑌸𑍍𑌯 - ஆகாஶத்ரவ்யத்தினுடையதாகும்.

**கருத்துரை :** — த்ரவ்யங்கள் அனைத்தும் இருத்தற்கு ஆகாஶத்ரவ்யம் இடம் தரும். (18)

## புத்கலத்ரவ்யத்தின் உபகாரம்

186. 𑌶𑌰𑍀𑌰𑌵𑌾𑌙𑍍𑌮𑌨𑌃𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌪𑌾𑌨𑌾𑌃
𑌪𑍁𑌦𑍍𑌗𑌲𑌾𑌨𑌾𑌮𑍍 || ௧௯ ||
ஶரீரவாங்மந:ப்ராணபாநா:
புத்கலாநாம் ||

(ப - ரை.) 𑌶𑌰𑍀𑌰 - உடல், 𑌵𑌾𑌕𑍍 - வசனம், 𑌮𑌨𑌃 - மனம், 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌪𑌾𑌨𑌾𑌃 - சுவாசித்தல் ஆகிய இவை உண்டாதல், 𑌪𑍁𑌦𑍍𑌗𑌲𑌾𑌨𑌾𑌮𑍍 - புத்கலங்களின் உபகாரமாகும்.

**கருத்துரை:** — உடல்முதலானவை புத்கலத்தினுல் உண்டாகும். (19)

187. ஸுஹதுஃக்ஜீவிதமரணோபக்ரஹாஶ்ச ॥ ௨0 ॥
ஸுகதுக்கஜீவிதமரணோபக்ரஹாஶ்ச ||

(ப - ரை.) ஸுஹ - சுகம், துஃக - துக்கம், ஜீவித - ஜீவித்தல், மரண - இறத்தல் ஆகிய இவைகளும், உபக்ரஹாஃ - புத்கலத்தினது உபகாரத்தால் ஆகும்.

**கருத்துரை:**—சுகம் துக்கம் முதலியனவும் புத்கலத்தினது நிமித்தத்தினுல் உண்டாகும்.

**குறிப்பு :**—இந்த ஸூத்திரத்தில் "உபக்ரஹ" என்னும் பதத்தை மீண்டும் ஆண்டிருப்பதனுல், புத்கலம் புத்கலத்திற்கும் உபகாரம் செய்யும் என்பது அறியப் படும். அதாவது, வெண்கலம் சுத்தமாதற்குச் சாம்பலும், நீர் தெளிதற்குத் தேற்ருங்கொட்டையும், துணி வெளுத்தற்குச் சோப்பும் உதவியாதல் போல்வது.

உபகாரம் என்னும் பதத்திற்கு நிமித்தம் என்று இங்குப் பொருள் கொள்ளப்படும். ஏனெனில், துக்கம் இறத்தல் முதலியவற்றை உபகாரம் என்று கூறுதல் வழக்கில் இல்லை யன்ருே! (20)

## ஜீவன்களின் உபகாரம்

188. பரஸ்பரோபக்ரஹோ ஜீவாநாம் ॥ ௨௧ ॥
பரஸ்பரோபக்ரஹோ ஜீவாநாம் ||

(ப - ரை.) பரஸ்பரோபக்ரஹஃ - ஒருவருக்கொருவர் உபகாரஞ் செய்தல், ஜீவா நாம - ஜீவன்களுடைய உபகார மாகும்.

**கருத்துரை:**—ஒருவருக்கொருவர் உதவிபுரிதல் ஜீவன்-களின் உபகாரமாகும். அதாவது, கணவனுக்கு மனைவி, மனைவிக்குக் கணவன், யஜமானனுக்கு அடிமையாள்,

அடிமையாளுக்கு யஜமானன், குருவுக்குச் சிஷ்யன், சிஷ்ய னுக்குக் குரு உதவிபுரிதல் போல்வது.

குறிப்பு:—இந்த ஸூத்ரத்தில் "உபக்ரஹ" என்னும் பதத்தினை மீண்டும் ஆண்டுள்ளதனால் 20-ஆவது ஸூத்ரத்தில் கூறப்பட்ட சுகம் முதலியன ஜீவன்களுக்கு ஜீவன் செய்யும் உபகாரமுமாகும். (21)

## காலத்தின் உபகாரம்

189. வர்தநாபரிணாமக்ரியா:
பரத்வாபரத்வே ச காலஸ்ய ॥ ௨௨ ॥

வர்த்தநாபரிணாமக்ரியாஃ
பரத்வாபரத்வே ச காலஸ்ய ॥

(ப - ரை.) வர்தநா - (வஸ்துக்களை) இருக்கச் செய் தல், பரிணாம - மாறுதல், க்ரியா: - சலித்தல், பரத்வா பரத்வே - சிறியது பெரியது என்னும் பகுப்பு ஆகிய இவைகள், காலஸ்ய - காலத்ரவ்யத்தினுடைய உபகார மாகும்.

வர்த்தநா — இயற்கையாக வர்த்திக்கும் (இருக்குந்) தன்மையுள்ள வஸ்துக்களை வர்த்திக்க (இருக்க)ச் செய்தல். அதாவது, ஓதுந் தன்மையுள்ள மாணாக்கனுக்கு உபாத்தி யாயர் ஓதும்படி செய்தல் போல்வது.

பரிணாமம்—ஒரு குணம் மாறி மற்றோர்குணம் உண் டாதல். அதாவது,மாங்காயின் பச்சைநிறம் மாறி மஞ்சள்- நிறம் உண்டாதல் போல்வது.

க்ரியா—இருவகை. அவை—ப்ராயோகிகா, வைஸ்ர ஸிகா என்பன. அவற்றுள்—

(1) ப்ராயோகிக க்ரியா—வண்டி முதலானவற்றை இடம்விட்டு மற்றோரிடம் செலுத்துதல் (ஓட்டுதல்).

(2) வைஸ்ரஸிகக்ரியா — மேகம் முதலானவை செல்லுதல்.

பரத்வாபரத்வம் என்பதில், பரத்வம் அபரத்வம் என இரண்டு பதங்கள் உள. அவற்றுள்—

(i) பரத்வம்:—சமீபம், முதுமை, விரதம்முதலான குணம் இவை இன்மை.

(ii) அபரத்வம் :—தூரம், இளமை, விரதம் முதலான குணம் இவை உடைமை. (22)

## புத்கலத்தின் இயல்

190. 𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌰𑌸𑌗𑌨𑍍𑌧𑌵𑌰𑍍𑌣𑌵𑌨𑍍𑌤𑌃 𑌪𑍁𑌦𑍍𑌗𑌲𑌾𑌃 ॥ ௨௩ ॥
ஸ்பர்ஶரஸகந்தவர்ணவந்தஃ புத்கலாஃ ||

(ப - ரை.) 𑌸𑍍𑌪𑌰𑍍𑌶 - ஸ்பர்ஶம், 𑌰𑌸 - சுவை, 𑌗𑌨𑍍𑌧 - வாசனை, 𑌵𑌰𑍍𑌣𑌵𑌨𑍍𑌤𑌃 - நிறம் ஆகிய இவைகளை உடையவை, 𑌪𑍁𑌦𑍍𑌗𑌲𑌾𑌃 - புத்கலங்கள்.

கருத்துரை :—வண்ணம், சுவை, கந்தம், ஸ்பர்ஶம் ஆகிய இவை நான்கும் உள்ளது புத்கலமாகும்.

ஸ்பர்ஶம்—எட்டு வகை. அவை—மிருது, கடினம், பாரம், பாரமின்மை, சீதம், உஷ்ணம், மழமழப்பு, சுறசுறப்பு என்பன.

ரஸம்—ஐந்து வகை. அவை—உறைப்பு, துவர்ப்பு, கசப்பு, இனிப்பு, புளிப்பு என்பன.

கந்தம்—இருவகை, அவை— ஸுகந்தம், துர்க்கந்தம் என்பன.

**வர்ணம்**—ஐந்து வகை. அவை—நீலம், சிவப்பு, பச்சை, மஞ்சள், வெளுப்பு என்பன. (23)

## புத்கலத்தினது மாறுதல்

191. 𑌶𑌬𑍍𑌦𑌬𑌨𑍍𑌧𑌸𑍌𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌸𑍍𑌥𑍌𑌲𑍍𑌯𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨
𑌭𑍇𑌦𑌤𑌮𑌶𑍍𑌛𑌾𑌯𑌾𑌽𑌽𑌤𑌪𑍋𑌦𑍍𑌯𑍋𑌤𑌵𑌨𑍍𑌤𑌶𑍍𑌚 ॥𑍨𑍪॥

**ஶப்தபந்தஸௌக்ஷ்ம்யஸ்தௌல்யஸம்ஸ்தாந**
**பேததமஶ்சாயாऽऽதபோத்யோதவந்தஶ்ச ||**

(ப - ரை.) 𑌶𑌬𑍍𑌦-ஒலி, 𑌬𑌨𑍍𑌧-பந்தித்தல், 𑌸𑍌𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯-நுண்ணியது, 𑌸𑍍𑌥𑍌𑌲𑍍𑌯-பரியது, 𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨-உருவம், 𑌭𑍇𑌦-பிரித்தல், 𑌤𑌮𑌃-இருள், 𑌛𑌾𑌯𑌾-நிழல், 𑌆𑌤𑌪-வெய்யில், 𑌉𑌦𑍍𑌯𑍋𑌤-வெளிச்சம் ஆகிய இவை புத்கலத்தின் மாறுதல்களாகும்.

**ஶப்தம்** இருவகை. அவை— **பாஷாத்மகஶப்தம், அபாஷாத்மகஶப்தம்** என்பன. அவற்றுள்—

**1.** பாஷாத்மகஶப்தம் இருவகை. அவை— அக்ஷராத்மகஶப்தம், அநக்ஷராத்மகஶப்தம் என்பன. அவற்றுள்—

(i) **அக்ஷராத்மகஶப்தம்**—மனிதர் பேசும் ஸம்ஸ்கிருதம், ப்ராகிருதம், தமிழ், கன்னடம், தெலுங்கு முதலான பாஷை.

(ii) **அநக்ஷராத்மகஶப்தம்**—பறவை மிருகம் புழு வண்டு முதலானவை பேசும் பாஷை.

**2.** அபாஷாத்மகஶப்தம் இருவகை. அவை—ப்ராயோகிகஶப்தம், வைஸ்ரஸிகஶப்தம் என்பன. அவற்றுள்—

(i) ப்ராயோகிகஶப்தம் :—வீணை, மத்தளம், தாளம் முதலியவற்றில் உண்டாக்கும் ஒலி.

(ii) வைஸ்ரஸிகசப்தம்—மேகம் முதலியவற்றில் உண்டாகும் ஒலி.

பந்தம் இருவகை. அவை—வைஸ்ரஸிக பந்தம், ப்ராயோகிகபந்தம் என்பன. அவற்றுள்—

1. வைஸ்ரஸிகபந்தம் :—மனிதருடைய முயற்சியின்றித் தானகச் சேர்தல். அதாவது மின்னல், இந்திர தனுஷ் முதலானவைகளுள் அணுக்கள் சேர்ந்திருத்தல் போல்வது.

2. ப்ராயோகிகபந்தம் இருவகை. அவை—அஜீவ சம்பந்தமானபந்தம், ஜீவாஜீவசம்பந்தமான பந்தம் என்பன. அவற்றுள்—

(i) அஜீவசம்பந்தமானபந்தம் :—மரம் முதலியவற்றை ஒன்றுகச் சேர்த்தல (இணைத்தல்).

(ii) ஜீவாஜீவசம்பந்தமானபந்தம் :—கர்மம், நோகர்மம் ஆகிய இவை ஜீவனோடு கூடுதல்.

ஸௌக்ஷ்ம்யம் இருவகை. அவை — அந்த்யம் ஆபேக்ஷிகம் என்பன. அவற்றுள்—

(1) அந்த்யம்— மிக நுண்ணியது. அதாவது பரமாணு போல்வது.

(2) ஆபேக்ஷிகம்—ஒன்றைப்பற்றி ஒன்றைச் சிறியதென்பது. அதாவது, விளங்காயினும் சிறியது நெல்லிக் காய் என்பதுபோல்வது.

ஸ்தௌல்யம் இருவகை. அவை—அந்த்யம், ஆபேக்ஷிகம் என்பன. அவற்றுள்—

(1) அந்த்யம்—உலகவ்யாபகமான மஹாஸ்கந்தம்.

(2) ஆபேக்ஷிகம்:—ஒன்றைப்பற்றிஒன்று பெரியது என்றல். அதாவது, மாங்காயினும் தேங்காய் பெரியது என்பது போல்வது.

ஸம்ஸ்தானம் இருவகை. அவை—இத்தம்லக்ஷணம், அநித்தம்லக்ஷணம் என்பன. அவற்றுள் —

(i) **இத்தம்லக்ஷணம்** :—வட்டம், முக்கோணம், சதுஷ்கோணம், உருண்டை முதலான உருவம்.

(ii) **அநித்தம் லக்ஷணம்** :—இன்ன உருவம் என்று கூறுதற்கு இயலாதது. அதாவது, மேகம் முதலானவற்றின் உருவம் போல்வது.

பேதம் ஆறுவகை. அவை—உத்கரம், சூர்ணம், கண்டம், சூர்ணிகா, ப்ரதர, அணுசடனம் என்பன. அவற்றுள் —

(i) **உத்கரம்**:—மரம் முதலானவற்றைப் பிளத்தல்.

(ii) **சூர்ணம்**:—அரிசி, கோதுமை முதலியவற்றை மாவு அல்லது நொய்யாக அரைத்தல்.

(iii) **கண்டம்**(ஷண்ஜ):—பானை முதலானவற்றைத் துண்டு துண்டாக அல்லது பாதியாக உடைத்தல்.

(iv) **சூர்ணிகா** :—துவரை, உளுந்து முதலியவற்றைப் பருப்பாக உடைத்தல்.

(v) **ப்ரதர** :—மேகபடலம் நீங்குதல்.

(vi) **அணுசடனம்** :—காய்ச்சின இரும்பைப்பணைமீதிட்டுச் சம்மட்டியால் அடிக்கும்போது அதனினின்றும் பொறி கிளம்புதல். **(24)**

## புத்கலத்தின் வகை

**192.** அணவ: ஸ்கந்தாஶ்ச ॥ ௨௫ ॥

அணவ: ஸ்கந்தாஶ்ச ||

(ப - ரை.) அணவ: - அணுக்கள், ஸ்கந்தா: - ஸ்கந்தங்கள் எனப் புத்கலங்கள் இரண்டு வகை. அவற்றுள்—

**அணுக்கள்**—மறுபடியும் பிரிக்க (துண்டிக்க) முடியாதவை.

**ஸ்கந்தங்கள்**—அநேக அணுக்கள் சேர்ந்தவை. **(25)**

## ஸ்கந்தங்களின் உற்பத்தி

193. 𑌭𑍇𑌦𑌸𑌂𑌘𑌾𑌤𑍇𑌭𑍍𑌯𑌃 𑌉𑌤𑍍𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 ॥ 𑍨𑍬 ॥
பேத்ஸங்காதேப்ய: உத்பத்யந்தே ॥

(ப - ரை.) 𑌭𑍇𑌦𑌸𑌂𑌘𑌾𑌤𑍇𑌭𑍍𑌯𑌃-(அணுக்கள்) பிரிதல் கூடுதல் ஆகிய இவைகளினின்றும், 𑌉𑌤𑍍𑌪𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 - (ஸ்கந்தங்கள்) உண்டாகின்றன.

**கருத்துரை** :—அணுக்கள் பிரிதல், கூடுதல், பிரிதலும் கூடுதலும் ஆகிய இவற்றால் ஸ்கந்தங்கள் உண்டாகும். அதாவது, 100 பரமாணுக்கள் உள்ள ஒரு ஸ்கந்தத்தில் 10 பரமாணுக்கள் பிரிந்தபிறகு 90 பரமாணுக்களையுடைய ஒரு ஸ்கந்தமாகும். 100 பரமாணுக்களுள்ள ஒரு ஸ்கந்தத்தினுடன் 10 பரமாணுக்கள் சேர்ந்தால் 110 பரமாணுக்களையுடைய ஒரு ஸ்கந்தமாகும். 100 பரமாணுக்கள் உள்ள ஒரு ஸ்கந்தத்தில் ஒரே சமயத்தில் 10 பரமாணுக்கள் பிரிதலாலும் 15 பரமாணுக்கள் சேர்தலாலும் 105 பரமாணுக்கள் உள்ள ஒரு ஸ்கந்தமாகும். (26)

## அணுவின் உற்பத்தி

194. 𑌭𑍇𑌦𑌾𑌦𑌣𑍁𑌃 ॥ 𑍨𑍭 ॥
பேதாதணு: ॥

(ப - ரை.) 𑌭𑍇𑌦𑌾𑌤𑍍 - பிரிவதிலிருந்து, 𑌅𑌣𑍁𑌃 - அணுவானது உண்டாகும்.

**கருத்துரை** :—ஒன்றாகக் கூடியிருக்கும் அணுக்கள் தனித்தனியாகப் பிரிவதிலிருந்து அணு உண்டாகும். அதாவது, மண்கட்டியானது பலதூள்களாக ஆதல் போல்வது.

**ஸ்கந்தம்** :—பலதூள்களாக இருந்த மண்ணைத் தண்ணீர்விட்டு நனைத்து மொத்தையாக்குதல் போல்வது.

## கண்ணுக்குத் தோன்றும் ஸ்கந்தத்தின் உற்பத்தி

195. ஹேஃஸஂஹாதாஹ்யாஂ சாக்ஷுஷஃ ॥ உஅ ॥
பேதஸங்காதாப்யாம் சாக்ஷுஷஃ ॥

(ப - ரை.) ஹேஃஸஂஹாதாஹ்யாஂ - பிரிதல் சேர்தல் ஆகிய இவைகளிலிருந்து, சாக்ஷுஷஃ - கண்ணுக்குத் தோன்றும் ஸ்கந்தமானது உண்டாகும்.

பேத :—பல அணுக்களிலிருந்து சில அணுக்கள் கழிதல்.

ஸங்காதம் :—தனித்தனியாக இருக்கும் அணுக்கள் ஒன்றாகக் கூடியிருததல. (28)

## த்ரவ்யத்தின் இயல்

196. ஸஜ் த்ரவ்யலக்ஷணஂ ॥ உகூ ॥
ஸத் த்ரவ்யலக்ஷணம் ॥

(ப - ரை.) ஸஜ் - ஸத்தாவானது, த்ரவ்யலக்ஷணஂ - த்ரவ்யததின் லக்ஷணமாகும். (29)

## ஸத்தாவின் இயல்

197. உத்பாஃவ்யயத்ரௌவ்யயுக்தஂ ஸஜ் ॥ ௩௰ ॥
உத்பாதவ்யயத்ரௌவ்யயுக்தம் ஸத் ॥

(ப - ரை.) உத்பாஃ - தோன்றுதல், வ்யய - அழிதல், த்ரௌவ்ய - இருததல் ஆகிய இவைகளுடன், யுக்தஂ - கூடியது, ஸஜ் - ஸத்தாவாகும்.

கருத்துரை:—தோன்றுதல், அழிதல், இருத்தல் ஆகிய இம்மூன்று தன்மைகளை யுடையது ஸத்தாவாகும்.

குறிப்பு: உத்பாத :—பொருள் ஓர் உருவைவிட்டு மற்றோர் உருவாக மாறுதல். அதாவது, மண் மொத்தையி னுருவம் மட்குடத்தில் வேறுபடுதல் போல்வது.

வ்யய :—முதலுருவம் மாறுதல் (பூர்வ பர்யாயம் நசித்தல்). அதாவது, மண்மொத்தையின் உருவம் மட் குடம் செய்தபிறகு கெடுதல்.

த்ரௌவ்யம் :—எத்தன்மையிலும் அழியாதிருத்தல். அதாவது, மண் மொத்தையாயிருந்தகாலத்தும் அதைக் குடமாகச் செய்தகாலத்தும் மண் தன்மையானது அவை-களை விட்டு நீங்காதிருத்தல்போல்வது. (30)

## நித்யத்தின் லக்ஷணம்

198. தத்பாவாவ்யயம் நித்யம் || ௩௧ ||
தத்பாவாவ்யயம் நித்யம் ||

(ப - ரை.) தத்பாவாவ்யயம் - பொருள்களின் அவ்வத் தன்மை ஒழியாதிருத்தல் அதாவது, ஜீவனது தன்மை யாகிய ஜ்ஞானமானதும், புத்கலததின் தன்மைகளாகிய நிறம், சுவை, கந்தம், ஸ்பர்ஶம் ஆகியவைகளும் எக்காலத் திலும் எவ்விதமாறுதல்களிலும் நீங்காதிருத்தல், நித்யம் - நித்யமாகும்.

கருத்துரை :—ஒருமுறை கண்ட பொருளை மறுமுறை காணும்போது அத் தன்மையினைக்குறித்து, 'இது முன்-னர்க் கண்ட பொருளே' என்று உணர்தல் நித்யமாகும். ஒருமுறை கண்ட பொருளை மறுமுறை காணும்போது அத் தன்மையினை நீக்கி வேறு தன்மையாக அறிதல் அநித் தியமாகும். நித்யமானது பொருளின்கண் (சாமான்யத் தினால்) த்ரவ்யாபேக்ஷயினால் இருக்கும். அநித்யமானது பொருளின்கண் (விசேஷத்தினால்) பர்யாயாபேக்ஷயினால் இருக்கும். ஆதலால், பொருள்கள்எல்லாம் நித்யாநித்ய ஸ்வரூபமுள்ளவை எனப்படும். (31)

## வேறுபட்ட தன்மையுடைய நித்யமும்அநித்யமும் ஒருபொருளில் எவ்வாறு இருக்கும் என்பது

199. அர்பிதாநர்பிதஸித்தே: ॥ ௩௨ ॥

அர்பிதாநர்பிதஸித்தே: ॥

(ப - ரை.) அர்பித - (பல தன்மைகளை யுடைய ஒரு பொருளில் தம் பிரயோஜனத்திற்காக யாதானுமொரு தன்மையினைக்) குறித்தல், அநர்பித - (தமக்குப் பிரயோஜன மின்மையால் அப்பொருளின்கண் உள்ள பல தன்மைகளைக்) குறித்தலின்மை ஆகிய இவைகளால், ஸித்தே: - (ஒரு பொருளின்கண்ணும் நித்யமும் அநித்யமும் ஒருங்கே இருக்கும் என்பது) சித்தமாகும்.

கருத்துரை:—ஒருபொருளில் பல தன்மைகள் இருப்பினும் அத்தன்மைகள்அனைத்தையும் விட்டு ஒரு தன்மை-யினைமாத்திரம குறித்தல் அர்ப்பிதமாகும். அதாவது, ஒருவனிடத்தில் தந்தை, மாமன், மைத்துனன், கணவன், புதல்வன், பேரன், சிற்றப்பன் முதலான அநேக முறைகள் அமைவனவாயிருப்பினும், அவன்புதல்வன், மாமன் மைத்துனன் முதலான முறைகளை விட்டுத் தந்தை யென்னும் முறையைமாத்திரம் கூறுதல்போல்வது. ஒரு பொருளின்கண் உள்ள தன்மைகளுள் பலவற்றைக் குறித்தலின்மை அநர்ப்பிதமாகும். அதாவது, மேற்கூறப்பட்ட உதாரணத்தில் ஒருவனிடம் பொருத்தமாகவுள்ள மாமன் முதலான பிற முறைகளை அனுசரிக்காமலிருத்தல் போல்வது. அவ்வாறே த்ரவ்யார்த்திகநயத்தினல் ஒரு பொருளைக் குறிப்பின் அது நித்யமாகவும், பர்யாயார்த்திக நயத்தினல் அப்பொருளைக் குறிப்பின் அது அநித்யமாகவும் இருக்கும். த்ரவ்யார்த்திகநயத்தினல் ஒரு பொருளை

நித்யமாகக் குறிக்கும்போது பர்யாயார்த்திகநயத்தினுல் அது அநித்யமாகவும் இருக்கும். அதாவது, மேற்கூறப் பட்ட உதாரணத்தில் ஒருவனுடைய புதல்வன், தனது முறையினுல் தந்தையென்று கொள்ளப்படும் முறையும், புதல்வனுக்குச் சம்பந்தப்படாத முறைகளாகிய மாமன் முதலான முறைகளும் அவனிடம் இருத்தல்போல்வது. ஆதலால், ஒரு பொருளில் பல குணங்கள் இருத்தல் கூடும் என்பது தெளிவாகும். (32)

### பரமாணுக்கள் பந்தித்தல்

200. ஸ்நிக்தரூக்ஷத்வாத்பந்தஃ || ௩௩ ||

ஸ்நிக்தரூக்ஷத்வாத்பந்தஃ ||

(ப - ரை.) ஸ்நிக்தரூக்ஷத்வாத் - பசைத்தன்மை வறட்சி ஆகிய இவைகள் சேர்தலால், பந்தஃ - பந்தமாகும்.

**கருத்துரை** :—ஸ்நிக்தமும் ரூக்ஷமும் ஒன்ருகக் கலத்தலால் பந்தமாகும்.

**ஸ்நிக்தம்**:—ஒட்டுந்தன்மை யுள்ளது. அதாவது எண்ணெய், நெய் முதலானவற்றில் உள்ள பசை போன்றது.

**ரூக்ஷம்** :—ஒட்டுந் தன்மையில்லாதது. அதாவது, மணல் கல் முதலானவற்றில் உள்ள வறட்சித்தன்மையைப்போல்வது. (33)

201. ந ஜகந்யகுணாநாம் || ௩௪ ||

ந ஜகந்யகுணாநாம் ||

(ப - ரை.) ஜகந்யகுணாநாம் - ஜகந்யகுணமுள்ள பரமாணுக்கள், ந - பந்திப்பதில்லை.

**கருத்துரை:**—ஒருகுணமுள்ள ஸ்நிக்தமானது ஒன்று இரண்டு மூன்று ஸங்க்யாதம் அஸங்க்யாதம் அனந்தம் குணங்களையுடைய ஸ்நிக்தங்களுடன் பந்திப்பதில்லை. ஒரு குணமுள்ள ரூக்ஷமானது ஒன்று இரண்டு மூன்று ஸங்க்யாதம் முதலான குணங்களையுடைய ரூக்ஷங்களுடனும் பந்திப்பதில்லை. ஒரு குணமுள்ள ஸ்நிக்தமானது ஒன்று இரண்டு மூன்று முதலான குணங்களையுடைய ரூக்ஷங்களுடனும் பந்திப்பதில்லை. ஒரு குணமுள்ள ரூக்ஷமானது ஒன்று இரண்டு மூன்று முதலான குணங்களையுடைய ஸ்நிக்தங்களுடனும் பந்திப்பதில்லை.

குணம்—ஸ்நிக்தத்திலுள்ள பசைத்தன்மை. அதாவது நீர், ஆட்டுப்பால், ஆவின்பால், எருமைப்பால், ஒட்டகத்தின்பால் ஆகிய இவைகளுள் ஒன்றற்கொன்று அதிக ஸ்நிக்த குணம் உண்மை. ஆதலால், நீரினும் ஆட்டுப்பாலினுள் ஸ்நிக்தகுணம் அதிகம். இவ்வாறு புத்கலபரமாணுக்களிலும் அறிக. (34)

202. 𑌗𑍁𑌣𑌸𑌾𑌮𑍍𑌯𑍇 𑌸𑌦𑍃𑌶𑌾𑌨𑌾𑌮𑍍 ॥ ௩௫ ॥

குணஸாம்யே ஸத்ருஶாநாம் ॥

(ப - ரை.) 𑌗𑍁𑌣𑌸𑌾𑌮𑍍𑌯𑍇 - குணங்கள் ஸமானமாக இருப்பினும், 𑌸𑌦𑍃𑌶𑌾𑌨𑌾𑌂 - ஓர் இனமான அணுக்களுடன் பந்தம் ஆவதில்லை. அதாவது, இரண்டு குணமுள்ள ஸ்நிக்தமானது இரண்டு குணமுள்ள ஸ்நிக்தத்தினுடனும், இரண்டு குணமுள்ள ரூக்ஷமானது இரண்டு குணமுள்ள ரூக்ஷத்தினுடனும், மூன்று குணமுள்ள ரூக்ஷமானது மூன்று குணமுள்ள ஸ்நிக்தக்தினுடனும் பந்தமாவதில்லை. இவற்றைப்போல, சமானமாக இருப்பவைகளையும் அறிக. (35)

## பந்தம் இவற்றிற்கு உண்டாகும் என்பது

**203.** 𑌦𑍍𑌵𑍍𑌯𑌧𑌿𑌕𑌾𑌦𑌿 𑌗𑍁𑌣𑌾𑌨𑌾𑌂 𑌤𑍁 || ௩௬ ||

த்வ்யதிகாதி குணாநாம் து ||

(ப - ரை.) 𑌤𑍁 - ஆனால், 𑌦𑍍𑌵𑍍𑌯𑌧𑌿𑌕𑌾𑌦𑌿𑌗𑍁𑌣𑌾𑌨𑌾𑌂 - இரண்டு குணம் அதிகம் உள்ளவைகளுடன் பந்தமாகும். அதாவது, ஒருபரமாணுவினும் மற்றோர்பரமாணுவில் இரண்டு குணம் அதிகம் இருந்தால்தான் பந்தமாகும். எப்படி யெனில், இரண்டு குணமுள்ள பரமாணுவானது நான்கு குணமுள்ள பரமாணுவுடன் பந்தமாகும். அதைக் காட்டிலும் அதிகமாயும் குறைவாயும் உள்ளவைகளுடன் பந்தம் ஆகாது. பந்தமானது—ஸ்நிக்தம் ஸ்நிக்தத்துட னும், ரூக்ஷம் ரூக்ஷத்துடனும், ஸ்நிக்தம் ரூக்ஷத்தினுட னும், ரூக்ஷம் ஸ்நிக்தத்தினுடனும் ஆகும். (36)

**204.** 𑌬𑌨𑍍𑌧𑍇𑌽𑌧𑌿𑌕𑍌 𑌪𑌾𑌰𑌿𑌣𑌾𑌮𑌿𑌕𑍌 𑌚 || ௩௭ ||

பந்தேऽதிகௌ பாரிணாமிகௌ ச ||

(ப - ரை.) 𑌬𑌨𑍍𑌧𑍇 - ஒன்றுக்கொன்று சேரும்போது, 𑌅𑌧𑌿𑌕𑍌 - அதிகமான பரமாணுக்கள் குறைவான பரமாணுக்களைத் தம் இனமாக, 𑌪𑌾𑌰𑌿𑌣𑌾𑌮𑌿𑌕𑍌 𑌚 - மாற்றிக்கொள்ளுகின்றன.

கருத்துரை:—பந்தமாகும்போது அதிகமானது குறை வானதைத் தன் இனமாக மாற்றிக்கொள்ளும். அதாவது, அதிகமான இனிப்புள்ள வெல்லமானது தன்னுடன் கலந் துள்ள தூள்களைத் தன் இனமாக மாற்றிவிடுதல் போல் வது. (இளகின வெல்லத்தில் கலந்த தூள்கள் இனிப்பாக மாறுதல்போல்வது.) (37)

## த்ரவ்யத்தின் லக்ஷணம்

205. 𑌗𑍁𑌣𑌪𑌰𑍍𑌯𑌯𑌵𑌦𑍍 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌮𑍍 ॥ ௩௮ ॥

குணபர்யயவத் த்ரவ்யம ॥

(ப - ரை.) 𑌗𑍁𑌣𑌪𑌰𑍍𑌯𑌯𑌵𑌤𑍍 - குணத்தினையும் பர்யாயத்தினையும் உடையது, 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌂 - த்ரவ்யமாகும்.

கருத்துரை:—குணம்—பண்பு; த்ரவ்யமானது எவ்வித வுருவினை அடைந்தாலும் அத் த்ரவ்யத்தைவிட்டு நீங்காதிருத்தலாகிய தன்மை. அதாவது, ஜீவன் எப்பிறவியாகப் பிறந்தாலும் ஜ்ஞானகுணம் ஜீவனுடன் இருத்தல் போல்வது.

பர்யாயம்—ஒரு பொருள் பல வகையாக மாறுதல், அதாவது, ஒரு பிறவியிலேயே இளமை, பால்யம், முதுமை முதலாயின மாறுதலபோல்வது. மாம்பிஞ்சு - காய், பழம் முதலியவைகளாக மாறுதல் போலவது. (38)

## காலத்ரவ்யம்

206. 𑌕𑌾𑌲𑌶𑍍𑌚 ॥ ௩௯ ॥

காலஶ்ச ॥

(ப - ரை.) 𑌕𑌾𑌲𑌶𑍍𑌚 - காலமும் த்ரவ்யமாகும். என்னென்றால், அதுவும் உத்பாதம், வ்யயம், த்ரௌவ்யம், குணம், பர்யாயம் ஆகிய இவைகளுடன் கூடியிருக்கும்.(39)

## காலத்ரவ்யத்தின் விஸேஷம்

207. 𑌸𑍋𑌽𑌨𑌨𑍍𑌤𑌸𑌮𑌯𑌃 ॥ ௪௰ ॥

ஸோऽநந்தஸமய: ॥

(ப - ரை.) 𑌸𑌃 - அந்தக் காலத்ரவ்யமானது, 𑌅𑌨𑌨𑍍𑌤𑌸𑌮𑌯𑌃 - அனந்தஸமயம் உள்ளதாகும்.

கருத்துரை :— காலத்ரவ்யம் நிகழ்வில் ஒருஸமயம் உளதாயினும் சென்றசமயங்கள் வரும்சமயங்கள் ஆகிய இவைகளை அனுசரித்து அனந்தஸமயம் உளதென்று கூறப் பட்டது.

குறிப்பு: ஸமயம்—மிகக் குறைவாகிய ஒருகாலம். மந்தமாகச் செல்லும் பரமாணுவானது ஆகாஶத்தின் ஒரு ப்ரதேசத்தைவிட்டு மற்றோர்ப்ரதேஶம் அடைதற்கு எவ்வளவு நேரம் செல்லுமோ அவ்வளவு நேரம் சமயம் எனப்படும். நூறுதாமரையிலைகளை ஒன்றாக அடுக்கி ஊசியினால் தைத்தால் அவ்வூசி ஓர்இலையிலிருந்து மற்றோர் இலைக்குப்போக எவ்வளவு நேரம் செல்லுமோ அஃது ஒரு சமயம் எனப்படும்.

ஸமயம், ஆவலி, நாழிகை, முகூர்த்தம் முதலியவை வ்யவஹாரகாலமாகும்.

வ்யவஹாரகாலம் — நிச்சயகாலத்தினது பர்யாய மாகும்.

நிச்சயகாலத்ரவ்யம், லோகாகாஶத்தில் ஒவ்வொரு ப்ரதேஶத்திலும் ரத்னக்குவியலைப்போல இருக்கும். (40)

## குணத்தின் லக்ஷணம்

208. 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌯𑌾 𑌨𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑌾 𑌗𑍁𑌣𑌾𑌃 ॥ ௪௧ ॥

த்ரவ்யாஶ்ரயா நிர்குணா குணா: ||

(ப-ரை.) 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌃 - த்ரவ்யத்தினுடன் இருப்பவைகளும், 𑌨𑌿𑌰𑍍𑌗𑍁𑌣𑌾𑌃 - தமக்கு மற்றோர்குணம் இல்லாதவைகளும், 𑌗𑍁𑌣𑌾𑌃 - குணங்கள் ஆகும். (41)

## பர்யாயத்தின் லக்ஷணம்

209. 𑌤𑌦𑍍𑌭𑌾𑌵𑌃 𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑌃 || ௪௨ ||

தத்பாவ: பரிணாம: ||

(ப - ரை.) 𑌤𑌦𑍍𑌭𑌾𑌵𑌃 - த்ரவ்யங்கள் எவ்வெவத்தன்மையினை அடைகின்றனவோ அவ்வதத்தன்மையானது, 𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑌃 - பர்யாயமாகும். அதாவது, ஜீவன் நரகப்பிறவியாய்ப் பிறக்கும்போது அந் நரகப்பிறவி ஜீவனுடைய பர்யாயமாகும். (42)

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀 𑌉𑌮𑌾𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑍇 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌾𑌧𑌿𑌗𑌮𑍇
𑌮𑍋𑌕𑍍𑌷𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌪𑌂𑌚𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃

ஸ்ரீ உமாஸ்வாமிஆசார்யர் இயற்றிய
தத்த்வார்த்த ஸூத்ரம் என்னும் மோக்ஷ
ஶாஸ்த்ரத்தின் ஐந்தாவது அத்யாயம்
முற்றிற்று.

## கேள்விகள்

1. அஸ்திகாயம் என்றால் என்னை? அவை எத்தனை?
2. ஜீவன் அஸங்க்யாதப்ரதேசமுள்ளதாயின், சிறிய தான ஓர் உடலில் எப்படி அடங்கும்?
3. காலத்ரவ்யத்தின் உபகாரம் என்னை ?
4. அலோகாகாஶத்தின் ஆகாஶத்திற்குக் கால த்ரவ்யம் இன்றி உத்பாதம் முதலானவை எப்படி உண்டாகும் ?
5. புத்கலத்ரவ்யத்திற்கு எத்தனை ப்ரதேஶம் ?
6. 'அர்பிதாநர்பிதஸித்தேः' என்னும் ஸூத்ரத்தின் அபிப்ராயம் என்னை ?
7. ஜகன்யகுணத்தின் பொருள் என்னை ?
8. பந்தம் எவற்றிற்கு உண்டாகும் ?
9. தர்மத்ரவ்யம் உண்டென்று ஒப்பாமல், அதனால் உண்டாகுங் கார்யம் ஆகாஶத்ரவ்யத்தினால் உண்டாகும் என்று கொண்டால் என்ன தீங்கு நேரிடும் ?
10. காலத்ரவ்யம் ஜீவனா, அஜீவனா ?

# அத்யாயம் 6

## ஆஸ்ரவதத்த்வத்தின் வர்ணனை

### யோகத்தின் லக்ஷணமும் வகையும்

210. 𑌕𑌾𑌯𑌵𑌾𑌙𑍍𑌮𑌨𑌃𑌕𑌰𑍍𑌮𑌯𑍋𑌗𑌃 || ௧ ||

காயவாங்மநஃகர்ம யோகஃ ||

(ப - ரை.) 𑌕𑌾𑌯𑌵𑌾𑌙𑍍𑌮𑌨𑌃𑌕𑌰𑍍𑌮 - உடல் வாக்கு மனம் ஆகிய இவைகளின் செயல், 𑌯𑍋𑌗𑌃 - யோகமாகும்.

**கருத்துரை :**—சரீரத்தினல் வேலை செய்தல், வாயினல் பேசுதல், மனத்தால் நினைத்தல் ஆகிய இவை யோகம் எனப்படும்.

**யோகம்** மூன்று வகை. அவை—காயயோகம், வசனயோகம், மனோயோகம் என்பன. அவற்றுள்—

(i) **காயயோகம்**—வீர்யாந்தராயகர்மம் க்ஷயோபஶமம் ஆகும்போது ஔதாரிகம்முதலான ஏழுவகைக் காயவர்க்கணைகளுள் யாதானுமொரு வர்க்கணையின் நிமித்தத்தினல் ஆத்மப்ரதேஶங்களுள் (வேலை செய்தற்குரிய) சலனை உண்டாதல்.

(ii) **வசனயோகம்**—வீர்யாந்தராயம் மத்யக்ஷரம் முதலான கர்மஆவரணங்களின் க்ஷயோபஶமத்தினல் வாக்லப்தி உண்டாகும்போது வசனரூபமாக மாறுதற்கு எதிர்முகமாகிய ஆத்மப்ரதேசங்கள் (வசனமாக) அசைதல்.

(iii) **மனோயோகம்**—அந்தரங்கத்தில் வீர்யாந்தராயம் நோஇந்த்ரியஆவரணம் இவைகளின் க்ஷயோபஶமமாகிற மனோலப்தி உண்டாகும்போது மனமாக மாறுதற்கு எதிர்முகமாகிய ஆத்மப்ரதேசங்கள் அசைதல். (1)

## ஆஸ்ரவத்தின் லக்ஷணம்

**211.** 𑌸 𑌆𑌸𑍍𑌰𑌵𑌃

ஸ ஆஸ்ரவ: ||

**(ப - ரை.)** 𑌸𑌃 - அம்மூவகை யோகமும், 𑌆𑌸𑍍𑌰𑌵𑌃 - ஆஸ்ரவம் எனப்படும்.

**கருத்துரை :**—கிணற்றிற்கு ஊற்றுக்களின் வழியாக நீர் வருதல்போல, ஆத்மாவினிடம் யோகங்களின் மூலமாக வினைகள் வருதல் ஆஸ்ரவமாகும்.

குறிப்பு :—ஆஸ்ரவ - வினைகள் வருதல்.

**யோக:**— வினைகள் வரும் வழி.

ஆஸ்ரவத்திற்குக் காரணம் யோகமாயினும், காரணத்தைக் கார்யமாக உபசரித்து யோகத்தினையே ஆஸ்ரவம் என்று கூறியுள்ளார். இது, பிராணன்கள் நிலைத்தற்கு அன்னம் காரணமாயினும், "அன்னம் வை ப்ராணா:" என்பதனால் அன்னத்தையே ப்ராணன்கள் என்று கூறப்பட்டதுபோல்வது. (2)

## ஆஸ்ரவ வகை

**212.** 𑌶𑍁𑌭𑌃 𑌪𑍁𑌣𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌶𑍁𑌭𑌃 𑌪𑌾𑌪𑌸𑍍𑌯 ‖ ௩ ‖

ஶுப: புண்யஸ்யாஶுப: பாபஸ்ய ||

**(ப - ரை.)** 𑌶𑍁𑌭𑌃 - சுபயோகமானது, 𑌪𑍁𑌣𑍍𑌯𑌸𑍍𑌯 - புண்யத்திற்குக் காரணமாகும், 𑌅𑌶𑍁𑌭𑌃 - அசுபயோகமானது, 𑌪𑌾𑌪𑌸𑍍𑌯 - பாபத்திற்குக் காரணமாகும்.

**கருத்துரை :**—நற்செயல், நல்ல எண்ணம், நல்ல பேச்சு ஆகிய இவைகளால் புண்யம் வரும். தீச்செயல், கெட்ட எண்ணம், கெட்ட பேச்சு ஆகிய இவைகளால் பாபம் வரும்.

அசுபயோகம் மூன்று வகை. அவை—அசுபமனோ யோகம், அசுபவசனயோகம், அசுபகாயயோகம் என்பன. அவற்றுள்—

(i) அசுபமனோயோகம்—கொலை செய்ய நினைத்தல், பொறாமைகொள்ளுதல் முதலியன.

(ii) அசுபவசனயோகம்—பொய்பேசுதல், கெட்ட வார்த்தை யாடுதல், கடினமான மொழிகளை உரைத்தல் முதலியன.

(iii) அசுபகாயயோகம்—கொலை செய்தல், திருடுதல், காமஸேவை செய்தல் முதலியன.

சுபயோகம் மூன்றுவகை. அவை—சுபமனோயோகம், சுபவசனயோகம், சுபகாயயோகம் என்பன. அவற்றுள்—

(i) சுபமனோயோகம் :—உலகத்தில் நன்மை உண்டாக வேண்டும் என்று நினைத்தல் முதலியன.

(ii) சுபவசனயோகம் :— தர்மோபதேசம் செய்தல், வாசித்தல் முதலியன.

(iii) சுபகாயயோகம் :—பூஜைசெய்தல் முதலியன.

புண்யம்—ஆத்மாவுக்கு நன்மை தருவது, ஆத்மாவைச் சுத்தம் செய்வது.

பாபம் :—ஆத்மா நற்கார்யத்தினைச் செய்ய வொட்டாமல் தடுப்பது. (3)

## ஆஸ்ரவத்தின் வகையும் அதனை யுடையவரும்

213. ஸகஷாயாகஷாயயோ: ஸாம்பராயிகேர்யாபதயோ: ॥ ௪ ॥

ஸகஷாயாகஷாயயோ: ஸாம்பராயிகேர்யா
பதயோ: ||

(ப - ரை.) ஸ்கஷாயகஷாயயோ: - கோபம் முதலானவை உள்ளவர் கோபம் முதலானவை இல்லாதவர் ஆகிய இவர்கட்கு முறையே, ஸாம்பராயிகேர்யாபதயோ: - ஸாம்பராயிகஆஸ்ரவம் ஈர்யாபதஆஸ்ரவம் ஆகிய இவை ஆகும்.

**கருத்துரை:**—கோபம், மானம், மாயை, லோபம் என்கிற கஷாயத்துடன் கூடிய மித்யாதிருஷ்டிகளுக்கு ஸாம்பராயிக ஆஸ்ரவம் ஆகும. உபஶாந்த கஷாயம் முதலான குணஸ்தானவர்த்திகளுக்கும், கஷாயம் மந்தமானவர்களுக்கும், கஷாயம் இல்லாதவர்களுக்கும் ஈர்யாபத ஆஸ்ரவம் ஆகும்.

**ஸாம்பராயிக ஆஸ்ரவம்:**—ஸம்ஸாரத்திற்கு (பிறப்பிற்கு)க்காரணமான காபம் வருதல்.

**ஈர்யாபத ஆஸ்ரவம்:**—அதிக சமயம் இருத்தலாகிய ஸ்திதியும், பயனைத் தருதலாகிய அனுபாகமும் இன்றிக் கர்மம் வருதல, செல்லுதல் ஆகிய தன்மையினை உடையது.

## ஸாம்பராயிக ஆஸ்ரவத்தின் பேதம்

**214.** இந்த்ரியகஷாயாவ்ரதக்ரியா: பஞ்ச சது: பஞ்ச பஞ்ச
விம்ஶதி ஸங்க்யா: பூர்வஸ்ய பேதா: || ௫ ||

இந்தரியகஷாயாவ்ரதக்ரியா: பஞ்சசது:பஞ்சபஞ்ச
விம்ஶதிஸங்க்யா: பூர்வஸ்யபேதா: ||

(ப - ரை.) பஞ்ச இந்த்ரியம் - ஐம்பொறிகள், சது: கஷாயம் —க்ரோதம், மானம், மாயை, லோபம் ஆகிய இவை நான்கு கஷாயம், பஞ்ச அவ்ரதம் - கொலை, பொய், களவு,

காமம், பரிக்ரஹம் ஆகிய இவை ஐந்து, பஂசவிஂஶதி க்ரியா: - இருபத்தைந்து க்ரியைகள் ஆகிய இவை, ஸாம்பராயிகஸ்ய - ஸாம்பராயிகஆஸ்ரவத்தின், பேதா: - பேதங்கள் ஆகும்.

**கருத்துரை:**—ஐம்புலன்கள் முதலான 39 வழிகளால் ஸாம்பராயிகஆஸ்ரவம் உளதாகும்.

கிரியைகள் இருபத்தைந்தாவன:

1. **ஸம்யக்த்வக்ரியா:**—ஸம்யக்த்வத்தினை விருத்தி செய்யுந் தேவபூஜை குருபூஜை ஶாஸ்த்ரபூஜை முதலியன செய்தல்.

2. **மித்யாத்வக்ரியா:**—மித்யாத்வத்தினை விருத்தி செய்யும் மித்யாதேவர் மித்யாகுரு மித்யாஶாஸ்த்ரம் ஆகிய இவைகளை வணங்குதல் ஸ்துதிசெய்தல் முதலியன.

3. **ப்ரயோகக்ரியா:**—நடத்தல், பேசுதல் முதலியன.

4. **ஸமாதானக்ரியா:**—விரதமுடையோன் விரதமில்லாதவனிடத்துச் செல்லுதல், மரியாதை செய்தல் முதலியன.

5. **ஈர்யாபதக்ரியா:**—பிரயோஜனமின்றி நடக்க முயற்சி செய்தல்.

6. **ப்ராதோஷிகீக்ரியா:**—கோபத்தினல் செய்யுஞ் செயல்.

7. **காயிகீக்ரியா:**—துஷ்டத்தனத்துடன் வேலை செய்தல்.

8. **அதிகரணிகீக்ரியா:**—கொலைக்குக் காரணமான ஆயுதங்களை எடுத்தல்.

9. **பாரிதாபிகீக்ரியா:**—பிராணிக்குத் துன்பத்தினை உண்டுபண்ணுஞ் செயல்.

10. ப்ராணுதிபாதக்ரியா :—ப்ராணன்களைப் போக்கடித்தல் (உயிரை நீக்குதல்).

11. தர்ஸனக்ரியா :—விருப்பத்துடன் அழகான உருவங்களைப் பார்த்தல்.

12. ஸ்பர்ஸனக்ரியா :—அழகான பொருள்களையும், அழகானபெண்களையும் விருப்பத்துடன் தொடுதல்.

13. ப்ராத்யயிகீக்ரியா :—பஞ்சேந்திரிய விஷயங்களுக்கு வேண்டிய பொருள்களைப் புதியனவாகத் தேடுதல்.

14. ஸமந்தாநுபாதக்ரியா :—ஆண், பெண், பசு, பக்ஷி ஆகிய இவை வசிக்கும் இடத்தில் மலமூத்ரம் கழித்தல்.

15. அநாபோகக்ரியா :—பூமியைச் சுத்தம் செய்தலும் சிற்றுயிர்கள் இருத்தலைப்பார்த்தலும் இன்றி, அங்கு உட்காருதல் உறங்குதல் முதலியன செய்தல்.

16. ஸ்வஹஸ்தக்ரியா :—தொழிலாளிகளால் செய்யப்படவேண்டும்வேலைகளைத் தானுகச் செய்துகொள்ளல்.

17. நிஸர்க்கக்ரியா :—பாபகார்யத்தினை மேன்மையாக நினைத்தல்.

18. விதாரணக்ரியா :—பிறருடைய பாபச்செயல்களை வெளியிடுதல்.

19. ஆஜ்ஞாவ்யாபாதிகீக்ரியா :— சாரித்ரமோஹநீய கர்மத்தின் உதயத்தினுல், ஸாஸ்த்ரத்தில் கூறப்பட்ட க்ரியைகளைச் செய்தற்கு அஸமர்த்தனுகிச் சாஸ்திரத்தில் வேறுவிதமாகக் கூறப்பட்டுளதென்று நிரூபித்தல்.

20. அநாகாங்க்ஷாக்ரியா:—பிரமாதத்தினுல் அல்லது அஜ்ஞானத்தினுல் சாஸ்த்ரத்தில் கூறப்பட்ட நடத்தைகளில் ஆதரவு செய்யாதிருத்தல்.

21. ப்ராரம்பக்ரியா :—வெட்டுதல், கத்தரித்தல் முதலியவற்றைச் செய்தல், செய்வித்தல், ஆமோதித்தல், அச் செயல்களைக் கண்டு சந்தோஷித்தல் முதலியன.

22. பாரிக்ரஹகீக்ரியா:—அளவற்ற பொருள்களைத் தேடுதல், அவைகளைக் காப்பாற்றுதல் முதலியன.

23. மாயாக்ரியா :—ஜ்ஞானம் தர்ஸனம் ஆகிய இவை உள்ளவர்களிடத்துக் கபடம்செய்தல், அல்லது ஜ்ஞானம் தர்ஸனம் இவைகளிடத்தில் வஞ்சனை செய்தல்.

24. மித்யாதர்ஸனக்ரியா :—மித்யாத்வத்தில் இருப்பவரைப் பின்னும் பாராட்டுதல் முதலியவற்றால் அதில் ஆழ்ந்திருக்கச் செய்தல்.

25. அப்ரத்யாக்யானக்ரியா:—சாரித்ரமோஹநீயகர்மத்தின் உதயத்தினால் சாரித்ரம் இல்லாமல் இருத்தல்.

## ஆஸ்ரவத்தின் விஶேஷம்

215. தீவ்ரமந்த ஜ்ஞாதாஜ்ஞாத பாவாதிகரண
வீர்யவிஶேஷேப்யஸ்தத்விஶேஷ: ॥ ஸூ ॥

தீவ்ரமந்த ஜ்ஞாதாஜ்ஞாத பாவாதிகரண
வீர்யவிஶேஷேப்ய: தத்விஶேஷ:

(ப - ரை.) தீவ்ரபாவம் - தீவ்ரபாவனை, மந்தபாவம் - மந்தபாவனை, ஜ்ஞாதபாவம்-ஜ்ஞாதபாவனை, அஜ்ஞாதபாவம்- அஜ்ஞாதபாவனை, அதிகரணம்-ஆதரவு, வீர்யம்-சக்தி ஆகிய இவைகளின், விஶேஷேப்ய: - விஶேஷங்களினால், தத்விஶேஷ: - அவ்வாஸ்ரவத்தின் விஶேஷம் ஆகும். அதாவது அவ்வாஸ்ரவ மானது அதிமும் குறைவும் ஆகும்.

பாவம் என்னுஞ் சொல், தீவ்ர, மந்த, ஜ்ஞாத, அஜ்ஞாத என்பவற்றோடு சேரும்.

கருத்துரை:—மனத்தின் எண்ணம் எவ்வாறு உளதோ அதற்குத் தக்கவாறு வினைகள் வரும்.

தீவ்ரபாவ :—கடுங்கோபத்தினுல் (தீவ்ரமான) கொடுமையான எண்ணம் உண்டாதல்.

மந்தபாவ :—கோபம் முதலானவை இன்மையினுல் மந்தஸ்வபாவம் இருத்தல்.

ஜ்ஞாதபாவ :—(இந்த ஜீவன் கொல்லப்படத்தக்கது என்று) அறிந்து செய்யுந் தன்மை.

அஜ்ஞாதபாவ :—அறியாமையினுல் செய்யுந் தன்மை.

அதிகரணம் :—வஸ்துக்கள் தங்குமிடம்.

வீர்யம் :—பொருள்களில் உள்ள சக்தி. (6)

### அதிகரணத்தின் வகை

216. 𑌅𑌧𑌿𑌕𑌰𑌣𑌂 𑌜𑍀𑌵𑌾𑌜𑍀𑌵𑌾𑌃 || எ ||

அதிகரணம் ஜீவாஜீவாஃ

(ப - ரை.) 𑌅𑌧𑌿𑌕𑌰𑌣𑌂 - அதிகரணம், ஜீவா ஜீவாஃ - ஜீவாதிகரணம் அஜீவாதிகரணம் என இருவகை.

கருத்துரை :—ஜீவனுலும், அஜீவப்பொருள்களாலும் ஆஸ்ரவம் ஆகும். (7)

### ஜீவாதிகரணத்தின் வகை

217. 𑌆𑌦𑍍𑌯𑌂 𑌸𑌂𑌰𑌮𑍍𑌭𑌸𑌮𑌾𑌰𑌮𑍍𑌭𑌾𑌰𑌮𑍍𑌭𑌯𑍋𑌗𑌕𑍃𑌤
𑌕𑌾𑌰𑌿𑌤𑌾𑌨𑍁𑌮𑌤 𑌕𑌷𑌾𑌯 𑌵𑌿𑌶𑍇𑌷𑍈𑌸𑍍𑌤𑍍𑌰𑌿
𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌶𑍍𑌚𑌤𑍁𑌶𑍍𑌚𑌕𑌶𑌃 || அ ||

ஆத்யம் ஸம்ரம்பஸமாரம்பாரம்பயோகக்ருத
காரிதாநுமத கஷாய விஶேஷைஸ்த்ரி
ஸ்த்ரி ஸ்த்ரிஸ்சதுஸ்சைகஶஃ ||

(ப - ரை.) ஆத்யம் - முதலாவதாகிய ஜீவாதிகரண மானது, ஸம்ரம்ப—கார்யத்தைச் செய்ய நினைத்தல், ஸமாரம்ப-கார்யத்தைச் செய்யச் சாமான்களைச் சேகரித்தல், ஆரம்ப - கார்யத்தைச் செய்ய ஆரம்பித்தல், யோக - மனோயோகம் வசனயோகம் காயயோகம், க்ருத - தான் செய்தல், காரித - அயலாரால் செய்வித்தல், அநுமத - பிறர்செய்தற்கு ஆமோதித்தல், கஷாய - குரோதம் மானம் மாயை லோபம் ஆகிய இவைகளின், விஶேஷை: - விசேஷங்களினால், ஏகஶ: - ஒவ்வொன்றுக்கும், த்ரி: த்ரி: த்ரி: சது: - மூன்று மூன்று மூன்று நான்கு பேதங்களாவதனால் மொத்தம் 108 பேதங்களாகும்.

அதாவது—ஸம்ரம்பம் முதலான மூன்றை மூன்று யோகங்களால் பெருக்க ($3 \times 3 = 9$) ஒன்பது ஆகும். இந்த ஒன்பதைக் கிருதம் முதலான மூன்றினால் பெருக்க, ($9 \times 3 = 27$) இருபத்தேழாகும். இந்த இருபத்தேழினை-யும் குரோதம் முதலான நான்கினால் பெருக்க ($27 \times 4 = 108$) நூற்றெட்டுப் பேதங்கள் ஆகும். (௮)

## அஜீவாதிகரணத்தின் வகை

218. நிர்வர்த்தநாநிக்ஷேபஸம்யோகநிஸர்கா
த்³விசதுர்த்³வித்ரிபே⁴தா: பரம் ॥ ௯ ॥

நிர்வர்த்தநாநிக்ஷேபஸம்யோகநிஸர்க்கா
த்வி சதுர்த்வித்ரிபேதா: பரம் ॥

(ப - ரை.) பரம் - இரண்டாவதாகிய அஜீவாதிகரண மானது, த்³வி நிர்வர்த்தநா - இருவகை நிர்வர்த்தனை, சதுர் நிக்ஷேப - நான்குவகை நிக்ஷேபம், த்³வி ஸம்யோக - இருவகை ஸம்யோகம், த்ரி நிஸர்கா: - மூன்றுவகை நிஸர்க்கம் ஆகிய, பே⁴தா: - (பதினொரு) வகைகள் உள்ள தாகும்.

நிர்வர்த்தனையாவது—ரசனை செய்தல் (உண்டாக்குதல்). அஃது இருவகை. மூலகுண நிர்வர்த்தனை, உத்தர குண நிர்வர்த்தனை என்பன. அவற்றுள்—

(i) மூலகுணநிர்வர்த்தனை:—உடல் வாக்கு மனம் சுவாஸம் இழுத்தல், விடுதல் ஆகிய இவைகளை உண்டாக்குதல் (இவைகள் உண்டாதல்).

(ii) உத்தரகுணநிர்வர்த்தனை :—மரம், கல், மண் முதலியவற்றால் பிம்பம்செய்தல், படம் எழுதுதல் முதலியன.

நிக்ஷேபம் :—வஸ்துக்களை வைத்தல். அது நான்கு வகை. அவை—அப்ரத்யவேக்ஷிதநிக்ஷேபம், துஷ்ப்ரம்ருஷ்டநிக்ஷேபம், ஸஹஸாநிக்ஷேபம், அநாபோகநிக்ஷேபம் என்பன. அவற்றுள்—,

(i) அப்ரத்யவேக்ஷிதநிக்ஷேபம் :—தரையில் நுண்ணுயிர்கள் இருத்தலைப் பார்க்காமல் வஸ்துக்களை வைத்தல்.

(ii) துஷ்ப்ரம்ருஷ்டநிக்ஷேபம:—இடத்தைச் சுத்தி செய்யாமல் பொருள்களை வைத்தல்.

(iii) ஸஹஸாநிக்ஷேபம் :—பொருள்களைச் சீக்கிரமாக வைத்தல்.

(iv) அநாபோகநிக்ஷேபம் :—பொருள்களை நல்ல இடத்தில் வைக்காமல் எந்த இடத்திலாவது கவனிக்காமல் வைத்தல்.

ஸம்யோகம் :—சேர்த்தல் (கூட்டுதல்). அஃது இருவகை. அவை—உபகரணஸம்யோகம், பக்தபான ஸம்யோகம் என்பன.

(i) உபகரணஸம்யோகம் :—நனைந்த உடலை உலர்ந்த துணிகளினால் துவர்த்துதல், புஸ்தகம் கமண்டலம் முதலியவற்றைப் பிஞ்சத்தால் சுத்தம் செய்தல் முதலியன.

(ii) பக்தபாநஸம்யோகம்:—உணவுப்பொருள்களைக் கலத்தல்.

நிஸர்க்கம் :—பிரவர்த்தித்தல். அது மூன்றுவகை. அவை—காயநிஸர்க்கம், வாங்நிஸர்க்கம், மனோநிஸர்க்கம் என்பன. அவற்றுள்—

(i) காயநிஸர்க்கம் :—சரீரத்தை நடுக்குதல்.

(ii) வாங்நிஸர்க்கம்:—கெட்டவார்த்தை பேசுதல்.

(iii) மனோநிஸர்க்கம்:—கெட்டவிஷயத்தில் மனத்தைச் செலுத்துதல். (9)

## ஜ்ஞானவரணம் தர்ஶனவரணம் ஆகிய இவை வருங் காரணம்

219. தத்ப்ரதோஷ நிஹ்நவமாத்ஸர்யாந்தராயாஸாத
நோபகாதாஜ்ஞாநதர்ஶநாவரணயோ:॥௰॥

தத்ப்ரதோஷநிஹ்நவமாத்ஸர்யாந்தராயா
ஸாதநோபகாதாஜ்ஞாநதர்ஶநாவரணயோ: ॥

(ப-ரை.) தத்—அந்த ஜ்ஞானத்தைபற்றியும் தர்ஶனத்தைபற்றியும், ப்ரதோஷ-(தர்மோபதேசம் செய்பவரைக் கண்டு மனமகிழ்ச்சியடையாமல்) வெறுப்படைதல், நிஹ்நவ-(தமக்குத் தெரிந்தவிஷயத்தைத் தெரியாதென்று)மறைத்தல், மாத்ஸர்ய-பொறாமை கொள்ளுதல், அந்தராய-விக்னம் செய்தல், ஆஸாதந-தடுத்தல், உபகாத-தோஷங் கூறுதல் ஆகிய இவை, ஜ்ஞாநதர்ஶநாவரணயோ:-ஜ்ஞானவரணம் தர்ஶனவரணம் ஆகிய இவைகளின் ஆஸ்ரவமாகும்.

**கருத்துரை :** ப்ரதோஷ :—ஒருவர் உபதேசம் செய்யும்போது (மோக்ஷத்திற்குக் காரணமாகிய தத்வத்தினை அறிவிக்கும்போது) அவருடன் சேர்ந்து பாராட்டாமல், மனத்தில் வேறுவித எண்ணத்துடன் இருத்தல்.

நிஂஹவ :—தான் அறிந்த விஷயத்தினை மற்றொருவர் கேட்டால் தனக்குத் தெரியாது என்று கூறுதல்.

மாத்ஸர்ய :—'இவன் இதனை யறிந்து பெரிய வித்வான் ஆகி விடுவான்' என்னும் எண்ணத்தினால், யார் எதைக் கேட்டாலும் சொல்லாமலிருத்தல்.

அந்தராய :—படிக்கும் மாணவர்களின் பலகை, புஸ்தகம் முதலியவற்றை மறைத்து வைத்தல்; கோவில், பள்ளி, தர்மசாலை, அன்னசாலை முதலியவற்றை 'வேண்டாம்' என்று தடுத்தல்.

ஆஸாதந :—அயலார் செய்யுந் தர்மகார்யங்களைச் 'செய்யவேண்டாம்' என்று கூறுதல்.

உபகாத :—நற்கார்யத்தைக் கண்டு குறைகூறுதல்.

ஆகிய இவைகளால் ஜ்ஞானாவரணகர்மத்தினையும் தர்சனாவரணகர்மத்தினையும் பந்தித்து, அறிவீனனும் நல்லவர்களைக் காணமுடியாதவனும் ஆகிறான்.

குறிப்பு :—மேற்கூறப்பட்ட ப்ரதோஷம் முதலானவற்றைத் தர்சனத்திற்குச் செய்தால் தர்சனாவரணகர்மமும், ஜ்ஞானத்திற்குச் செய்தால் ஜ்ஞானாவரணகர்மமும் வரும்.

## அஸாதாவேதநீயகர்மம் வருங் காரணம்

220. 𑌦𑍁𑌃𑌖𑌶𑍋𑌕𑌤𑌾𑌪𑌾𑌕𑍍𑌰𑌨𑍍𑌦𑌨𑌵𑌧𑌪𑌰𑌿𑌦𑍇𑌵𑌨𑌾
𑌨𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌪𑌰𑍋𑌭𑌯𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌨𑍍𑌯𑌸𑌦𑍍𑌵𑍇𑌦𑍍𑌯𑌸𑍍𑌯 || ௧௧ ||

துக்கஶோகதாபாக்ரந்தநவதபரிதேவநாந்
யாத்மபரோபயஸ்தாநாந்யஸத்வேத்யஸ்ய ||

(ப - ரை.) ஆத்மபரோபயஸ்தாநி - தனக்கும் பிறருக்கும் அல்லது இருவருக்கும், து:க - துக்கமும், ஶோக - ஶோகமும், தாப - ஸந்தாபமும், ஆக்ரந்தந - உரக்க அழுகையும், வத - வதையும், பரிதேவநாநி - பிறர் இரங்கும்படி அழுதலும், அஸத்வேத்யஸ்ய - அஸாதா வேதநீய கர்மத்தினது ஆஸ்ரவமாகும்.

கருத்துரை :—துக்கப்படுதல், சோகமாயிருத்தல், ஸ்ந்தாபங் கொள்ளுதல், அழுதல் முதலியவைகளால் அஸாதாவேதநீயகர்மம் வரும்.

**துக்கம் :**—முள் தைத்தல், கல் தாக்குதல், வியாதியினுல் உண்டாகும் பீடை முதலியவற்ருல் உண்டாவது.

**சோகம் :**—தனக்கு மிகவும் விருப்பமுள்ள பொருள் நீங்குதலால் (வியோகத்திஞல்) உண்டாவது.

**தாபம்:**—இல்லறத்தார்களுக்குத் தம்முள் உண்டாகும் அவமானம் முதலியவற்ருல் ஏற்படும் மனோவேதனை.

**ஆக்ரந்தனம் :** — கண்ணீர் விட்டும் வாய்விட்டுக் கதறியும் அழுதல்.

**வத :**—பிராணன்களை நீக்குதல்.

**பரிதேவனம் :**—அயலார்மனத்தில் கருணை உண்டாகும்படி அழுதல். (11)

## ஸாதாவேதநீயகர்மம் வருங் காரணம்

221. பூதவ்ரத்யநுகம்பாதாநஸராகஸம்யமாதி
யோக: க்ஷாந்தி: ஶௌசமிதி ஸத்வேத்யஸ்ய ॥ ௧௨ ॥

பூதவ்ரத்யநுகம்பாதாநஸராகஸம்யமாதி
யோகः க்ஷாந்திः ஶௌசமிதி ஸத்வேத்யஸ்ய ||

(ப - ரை.) ഭൂതവ്രത്യനുകമ്പാ - பிராணிகளிடத்தும் விரதிகளிடத்தும் கருணை புரிதல், ദാന - தானம் செய்தல், സരാഗസംയമ - ஸம்யமத்தினை விருப்பத்தோடு ஆசரித்தல், ആദി - அகாமநிர்ஜரை முதலியன, യോഗഃ - நன்னடத்தை, க்ஷாந்திঃ - க்ரோதமின்மை, ശൗചമിതി - லோபமின்மை ஆகிய இவைகள், സദ്വേദ്യസ്യ - ஸாதா வேதநீயகர்மத்தினது ஆஸ்ரவகாரணமாகும்.

**பூதாநுகம்பா** :— ஸமஸ்த ப்ராணிகளிடத்தும் அன்பு செலுத்துதல்.

**விரதி அநுகம்பா** :— அணுவிரதிகளுக்கும் மஹாவிரதிகளுக்கும் உபத்ரவம் நேரிடாமல் பார்த்துக்கொள்ளுதல்.

**தானம்** :— தனக்கும் பிறருக்கும் நன்மை உண்டாவதற்காகத் தம் பொருள்களைக் கொடுத்தல்.

**ஸராகஸம்யம** : — ஐம்புலன்களையும் மனத்தையும் அடக்குதலும், ஜீவன்களைக் கொல்லாமையும் ஸம்யமமாகும். அந்த ஸம்யமத்தினை ஆசையுடன் ஆசரித்தல்.

**அகாம நிர்ஜரை** :— தனக்கு இஷ்டமின்றியே அயலாருடைய நிர்ப்பந்தத்தினால் கர்மம் கெடுதல். அதாவது சிறையிலில் இருக்கும் ஒருவன், தன் மனைவி முதலான உபபோகப் பொருள்களையும், தாம்பூலம் சந்தனம் முதலான போகப்பொருள்களையும் விடுதற்கு விருப்பமில்லாதவனயினும் அங்கு அப்பொருள்கள் கிடைக்காதபடி அங்குள்ள அதிகாரிகளால் தடுக்கப்படுதலால், அவைகளால் ஏற்படும் பாபம் வாராதிருத்தல். அவனுக்கு அவைகளை விடுதற்கு விருப்பமில்லாதிருப்பினும் அயலாரால் தடுக்கப்படுதலால் அவன் இச்சையின்றியே கர்மம் கெடும். இவைகளும், இதி என்னும் பதத்தினல் கொண்ட அர்ஹத்பக்தி செய்தல், பெரியோர்களுக்குத் தொண்டு புரிதல் முதலியனவும் ஸுகத்தைத்தரும். (12)

## தர்சநமோஹநீயகர்மம் வருங் காரணம்

222. கேவலிஶ்ருதஸம்கதர்மதேவாவர்ண
வாதோ தர்ஶனமோஹஸ்ய ॥ ௧௩ ॥

கேவலிஶ்ருதஸங்கதர்மதேவாவர்ண
வாதோ தர்ஶனமோஹஸ்ய ||

(ப - ரை.) கேவலி - அர்ஹத்பகவான், ஶ்ருத - சாஸ்திரம், ஸம்க - முனிகளின் கூட்டம், தர்ம - ஜிநபகவான் உரைத்த வசனம், தேவ - தேவர்கள் ஆகிய இவர்களை, அவர்ணவாத: - குற்றங்கூறுதல், தர்ஶனமோஹஸ்ய - தர்சநமோஹநீயகர்மத்தினது ஆஸ்ரவகாரணமாகும்.

**கேவலி அவர்ணவாதம்** :—அர்ஹத்பகவானும் நம்மைப்போல் உணவை உண்டு ஜீவிக்கிறார் என்றும், கம்பளி முதலிய உடைகளை அணிந்துள்ளார் என்றும் குறை கூறுதல்.

**ஶ்ருத அவர்ணவாதம்** :—புலால் புசிக்கலாம் என்றும் வேதனையை நீக்குதற்குக் காமக்ரீடை செய்யலாம் என்றும் ஶாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளதென்று கூறுதல்.

**ஸங்க அவர்ணவாதம்** :—முனிகளைக் கண்டு, 'இவர்கள் வெட்கம் இல்லாதவர்கள்; உடலில் அழுக்குள்ளவர்கள்' என்று அவமதித்துப் பேசுதல்.

**தர்ம அவர்ணவாதம்**:— 'ஜிநேந்திரபகவான் உரைத்த தர்மத்தினால் யாதொரு பயனும் இல்லை; அதனை ஆசரிப்பவர் அஸுரர்களாகப் பிறப்பார்கள்' என்று குறை கூறுதல்.

**தேவ அவர்ணவாதம்** :— 'தேவர்கள் கள் குடிக்கின்றனர்; புலால் புசிக்கின்றனர்; பலியிடுதலைக் கண்டு ஆனந்தமடைகின்றனர்' என்று கூறுதல்.

இவைகளால் தர்ஶனமோஹநீய கர்மம் வரும். (13)

## சாரித்ரமோஹநீய கர்மம் வருங் காரணம்

223. 𑌕𑌷𑌾𑌯𑍋𑌦𑌯𑌾𑌤𑍍𑌤𑍀𑌵𑍍𑌰𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑌶𑍍𑌚𑌾𑌰𑌿𑌤𑍍𑌰
𑌮𑍋𑌹𑌸𑍍𑌯 || ௧௪ ||

கஷாயோதயாத்தீவ்ரபரிணாமஶ்சாரித்ர
மோஹஸ்ய ||

(ப - ரை.) 𑌕𑌷𑌾𑌯𑍋𑌦𑌯𑌾𑌤𑍍 - கஷாயவுதயத்தினால் (கடுங்கோபத்தினால்), 𑌤𑍀𑌵𑍍𑌰𑌪𑌰𑌿𑌣𑌾𑌮𑌃 - தீவிரமான எண்ணம் உண்டாதல், 𑌚𑌾𑌰𑌿𑌤𑍍𑌰𑌮𑍋𑌹𑌸𑍍𑌯 - சாரித்ரமோஹநீயகர்மத்தினது ஆஸ்ரவகாரண மாகும்.

கருத்துரை:—கடுங்கோபத்தினால் முனிவர்முதலானவர்களை வைதல், தர்மத்தினைக் கெடுத்தல், விரதமுள்ளவரை விரதத்தினின்றும் நீக்குதல் முதலியவற்றால் சாரித்ரமோஹநீயகர்மம் வரும். (14)

## நரகப்பிறவிக்குக் காரணம்

224. 𑌬𑌹𑍍𑌵𑌾𑌰𑌮𑍍𑌭𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌤𑍍𑌵𑌂 𑌨𑌾𑌰𑌕𑌸𑍍𑌯𑌾𑌯𑍁𑌷𑌃

பஹ்வாரம்பபரிக்ரஹத்வம் நாரகஸ்யாயுஷ꞉ ||

(ப - ரை.) 𑌬𑌹𑍍𑌵𑌾𑌰𑌮𑍍𑌭 - அதிகமாகப் பயிர்த்தொழில் முதலிய ஆரம்பம் செய்தல், 𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌤𑍍𑌵𑌂 - பொருள்களில் மிக்க பற்று ஆகிய இவை, 𑌨𑌾𑌰𑌕𑌸𑍍𑌯𑌾𑌯𑍁𑌷𑌃-நரகப் பிறவிக்குக் காரணமாகும்.

கருத்துரை :—ஒருவனிடத்தில் ஒரு பொருளும் இல்லாமலிருப்பினும் அவன் உலகில் உள்ள பொருள்கள் அனைத்தையும் தான் அடையவேண்டும் என்ற எண்ணம் உள்ளவனாகி, அதிலேயே தன் மனத்தை அழுந்தச் செய்தல், அதிகஆசைகொள்ளுதல் இவை நரகப்பிறவிக்குக்

காரணமாகும். ஒருவனுக்கு அளவற்ற பொருள்கள் இருப்பினும் ‘இவைஅனைத்தும் என்னுடையவை அல்ல; இவை என்றைக்காகிலும் என்னைவிட்டுப் பிரியக்கூடியவைகளே’ என்ற பகுத்தறிவுண்டாகி, அவற்றின்மீது பற்றில்லாமல் இருந்தால் நரககதியின்றி நல்லகதி யுண்டாகும். (15)

## விலங்குப்பிறவியாதற்குக் காரணம்

225. மாயா தைர்யக்யோநஸ்ய ॥ ௧௬ ॥

மாயாதைர்யக்யோநஸ்ய ॥

(ப - ரை.) மாயா - கபடஞ்செய்தல், தைர்யக்யோநஸ்ய - விலங்குப்பிறவிக்குக் காரணமாகும்.

கருத்துரை:—கபடஞ்செய்பவர் குள்ளநரி, பூனை முதலான பிராணிகளாய்ப் பிறப்பர். (16)

## மனிதப்பிறவிக்குக் காரணம்

226. அல்பாரம்பபரிக்ரஹத்வம் மாநுஷஸ்ய ॥ ௧௭ ॥

அல்பாரம்பபரிக்ரஹத்வம் மாநுஷஸ்ய ॥

(ப - ரை.) அல்பாரம்ப - அல்பமாக ஆரம்பம் செய்தல், அல்பபரிக்ரஹத்வம்-தனக்குத் தேவையான பொருள்களை மாத்திரம் கொஞ்சமாகச் சேகரித்து வைத்திருத்தல், மாநுஷஸ்ய - மனிதப்பிறவிக்குக் காரணமாகும்.

கருத்துரை :—தானம் தர்மம் செய்தற்குத் தேவையானவரையில் பயிர்த்தொழில் முதலான ஆரம்பம் செய்தலும், பொருள்கள்மீது அதிகப்பற்று இல்லாமலிருத்தலும் மனிதப்பிறவிக்குக் காரணமாகும். (17)

227. ஸ்வபாவமார்தவஞ்ச ॥ ௧௮ ॥

ஸ்வபாவமார்தவஞ்ச ॥

(ப - ரை.) ஷுஹாவ - இயற்கையாகவே, ஊஊலவம் வ - மிருதுத்தன்மை யிருந்தாலும் (மனிதப்பிறவிக்குக் காரண மாகும்).

**குறிப்பு** :—இந்த ஸூத்திரம் தனியாகக் கூறப் பட்டதன் பயன் யாதெனில், இயற்கையாக மிருது பரிணாமம் இருத்தல் தேவப்பிறவிக்கும் காரணமாகும் என்பதை அறிவிப்பது. (18)

## நான்கு வகைப் பிறவிகட்கும் காரணம்

228. நிஸ்ஸீலவ்ரதக்வம் வ ஸவெலஷாம் ‖ கக ‖
நிஸ்ஸீலவ்ரதத்வஞ் ச ஸர்வேஷாம் ‖

(ப - ரை.) நிஃ ஸீலவ்ரதக்வம் - திக்விரதம் முதலான சீலாசாரமும் அஹிம்ஸை முதலான விரதாசரணையும் இல்லாமலிருத்தல், ஸவெலஷாம் - நான்கு வகைப் பிறவி கட்கும் காரணமாகும்.

**கருத்துரை** :—அல்பாரம்பபரிக்ரஹத்வமும் நிஸ்ஸீல விரதத்வமும் நான்கு வகைப் பிறவிகட்கும் காரணமாகும். அல்பாரம்பபரிக்ரஹமுடையோர் நரகப்பிறவியாக எப்படிப் பிறப்பர் எனில், அல்பாரம்பபரிக்ரஹமுடையோராயினும் வேறுவிதமான கெட்ட நடத்தையினைச் செய்தலால் நரகப் பிறவியாகப் பிறப்பார்கள்.

விரதமும் சீலமும் இன்றித் தேவர்களாக எப்படிப் பிறப்பார்கள் என்றால், போகபூமியில் உள்ளவர்கள் விரத மும் சீலமும் இல்லாதவர்களாயினும் மிருதுத்தன்மை யினால் ஈசாநஸ்வர்க்கம்வரைக்கும் பிறக்கின்றனர். இவற் றால், நான்கு பிறவிகட்கும் காரணம் எனப்பட்டது. (19)

## தேவப்பிறவிக்குக் காரணம்

229. ஸராகஸம்யமஸம்யமாஸம்யமாகாமநிஜரா
பாலதபாம்ஸி தைவஸ்ய ‖ உ௰ ‖

ஸராகஸம்யமஸம்யமாஸம்யமாகாமநிர்ஜரா
பாலதபாம்ஸி தைவஸ்ய ||

(ப - ரை.) ஸராகஸம்யமே—போகோபபோகப்பொருள்களை அடைய விரும்பி விரதமிருத்தல், ஸம்யமாஸம்யமே - விரதமும் விரதமின்மையும் உள்ள தன்மை யிருத்தல், அகாமநிர்ஜரா - தன் விருப்பமும் முயற்சியும் இன்றி வெளிக்காரணங்களால் சில கர்மங் கழிதல், பாலதபாம்ஸி-அஜ்ஞானத்தினுல் முக்தியின் வழியினை நன்ருக உணராமல் முக்தியினை யடையவேண்டுமென்கிற எண்ணத்துடன் தன் அறிவிற்கு எட்டியதாகிய தவத்தினைச் செய்தல் ஆகிய இவை, தைவஸ்ய - தேவப்பிறவிக்குக் காரணமாகும்.

ஸம்யமாஸம்யமம் :—இல்லறத்தார் பெரிய கொலைகளைச் செய்வதில்லை என்று விரதம் செய்து அதை விட்டிருத்தலால் ஸம்யமம் ஆகும். பூஜை செய்தல், பயிர் இடுதல், அடுப்பெரித்தல், மரம் செடி கொடி முதலியவற்றை அறுத்தல், வெட்டுதல் முதலானவைகளால் உண்டாகும் சிறிய கொலைகளை விடுதற்கு இயலாதவர்களாகையால் அஸம்யமம் ஆகும். இருதன்மையும்கூடி ஸம்யமாஸம்யமம் ஆகும். (20)

230. ஸம்யக்த்வம் ச || உக ||

ஸம்யக்த்வஞ்ச ||

(ப - ரை.) ஸம்யக்த்வம் ச - ஸம்யக்த்வமும் (தேவப்பிறவிக்குக் காரணமாகும்).

குறிப்பு :—இந்த ஸூத்திரத்தினைத் தனியாகக் கூறியதனுல், ஸம்யக்த்வம் இருக்குமாயின் வைமானிக தேவர்களாகவே பிறப்பர் என்பது அறிக. ஸம்யக்த்வம் இல்லையாயின் பவணர்முதலான கீழ்முத்தேவர்களாக ஜனிப்பர். (21)

## அஶுபநாமகர்மம் வரும் வழி

231. யொமவகூ்தா விஸஂவாஊநஂ
வாஶுஹஸ்ய நாஜ்ஞஃ ॥ உஉ ॥
யோகவக்ரதா விஸம்வாதநம்
சாஶுபஸ்யநாம்ந: ॥

(ப - ரை.) யொமவகூ்தா - மனத்தால் நினைத்தல் ஒன்று வார்த்தையினால் கூறுதல் மற்றொன்று செய்தல் வேறொன்று ஆகிய இவைகளும், விஸஂவாஊநஂ - உண்மையின்றி வேறுவிதமாகக் கூறுதலும், கஶுஹஸ்ய நாஜ்ஞஃ - அசுபநாமகர்மத்தினது ஆஸ்ரவகாரணம் ஆகும்.

விஸம்வாதனம் :—நல்ல வழியில் நடக்கும் ஒருவனை, கெட்ட எண்ணத்தினால் அவ்வழியினின்றும் நீக்கி வேறு வழியில் நடக்கும்படி கூறுதல்.

யோகவக்ரதா :—ஒருவனைக் கெடுக்க வேண்டுமென்று மனத்தில் நினைத்துக்கொண்டு, 'ஐயா யான் உமக்கு உதவி புரிதற்காகவே உம்மை நாடி வந்தேன்; என்னால் இயன்ற உதவியைப் புரிவேன்' என்று கூறி அவனுடன் இருந்து உதவிபுரிதல்போல நடந்து, தீங்கு செய்தல், செய்வித்தல்.

## சுபநாமகர்மம் வரும் வழி

232. தஷிவஶீதஂ ஶுஹஸ்ய ॥ உ௩ ॥
தத்விபரீதம் ஶுபஸ்ய ॥

(ப - ரை) தஷிவஶீதஂ - முன் ஸூத்ரத்தில் கூறப்பட்டவற்றிற்கு மாறுதலானவை; அதாவது மனத்தில் நினைத்ததை வார்த்தையினால் கூறுதல், கூறியபடி செய்தல், உண்மையை உள்ளபடி உரைத்தல் ஆகிய இவை, ஶுஹஸ்ய - சுபநாமகர்மத்தின் ஆஸ்ரவகாரணம் ஆகும்.

## தீர்த்தங்கரபதவிக்குக் காரணம்

233. தர்ஶநவிஶுத்திர்விநயஸம்பந்நதா ஶீலவ்ரதேஷ்வ
நதிசாரோऽபீக்ஷ்ணஜ்ஞாநோபயோகஸம்வேகௌ
ஶக்திதஸ்த்யாகதபஸீ ஸாதுஸமாதிர்வையா
வ்ருத்யகரணமர்ஹதாசார்யபஹுஶ்ருதப்ர
வசநபக்திராவஶ்யகாபரிஹாணிர்மார்கப்ர
பாவநாப்ரவசநவத்ஸலத்வமிதி தீர்த்தகரத்வஸ்ய ||

தர்ஶநவிஶுத்திர்விநயஸம்பந்நதா ஶீலவ்ரதேஷ்
வ்நதிசாரோऽபீக்ஷ்ணஜ்ஞாநோபயோகஸம்வேகௌ
ஶக்திதஸ்த்யாகதபஸீ ஸாதுஸமாதிர்வையாவ்ருத்ய
கரணமர்ஹதாசார்யபஹுஶ்ருதப்ரவசநபக்திரா
வஶ்யகாபரிஹாணிர்மார்க்கப்ரபாவநாப்ரவசநவத்ஸ
லத்வமிதி தீர்த்தகரத்வஸ்ய ||

(ப - ரை.) தர்ஶந விஶுத்தி: - ஜிநபகவான் உரைத்த மோக்ஷவழியினை நம்புதல் அதாவது இருபத்தைந்து குற்றங்கள் நீங்கிய நிர்மலமான நற்காட்சி, விநய ஸம்பந்நதா - ஸம்யக்ஜ்ஞானம் முதலானவைகளையும் மோக்ஷத்தின் ஸாதனத்தையும் குருக்களையும் தன் யோக்யதைக்குத் தக்கவாறு ஆதரவுடன் ஸத்காரம் செய்தல், ஶீலவ்ரதேஷ்வநதிசார: - அஹிம்ஸை முதலான விரதங்களையும் அவைகளைக் காப்பாற்றுஞ் சீலங்களையும் அதிசாரமின்றி ஆசரித்தல், அபீக்ஷ்ணஜ்ஞாநோபயோக: - எப்பொழுதும் இடைவிடாமல் ஜ்ஞானத்தை நற்கார்யத்தில் உபயோகித்தல் (அல்லது) எப்போதும் தத்த்வாப்யாஸஞ் செய்தல், ஸம்வேக: - ஸம்ஸாரத்தில் உண்டாகுந் துக்கத்திற்குப் பயப்படுதல், ஶக்திதஸ்த்யாக: - தன் சக்திக்குத் தக்கவாறு தானம்செய்தல், ஶக்திதஸ்தப: -

தன் சக்தியை மறைக்காமல் தன்னால் முடிந்தவரை காயக்லேஶம் முதலான தவஞ் செய்தல், ஸாதுஸமாதி: - முனிகளுக்கு நேரிடும் விக்நம் முதலியவற்றை நீக்குதல், வையாவ்ருத்யகரணம் - முனிகட்கு ஸேவை செய்தல், அர்ஹத்பக்தி: - அர்ஹத்பகவானிடத்தில் பக்தி செலுத்துதல், ஆசார்யபக்தி: - தீக்ஷை முதலியவற்றைக் கொடுக்கும் ஆசார்யரிடத்துப் பக்தி செய்தல், பஹுஶ்ருத பக்தி: - உபாத்யாயரிடத்துப் பக்தி செய்தல், ப்ரவசந பக்தி: - சாஸ்திரத்தினைக் கௌரவம்செய்து பக்திபூர்வகம் இருத்தல், ஆவஶ்யகாபரிஹாணி: - ஸாமாயிகம், ஸ்தவனம், வந்தனை, ப்ரதிக்ரமணம், ப்ரத்யாக்யானம், காயோத்ஸர்க்கம் ஆகிய ஆறு கிரியைகளைக் காலத்திற்குச் சரியாகச் செய்தல், அதாவது அவைகளை எந்தக் காலத்தில் செய்யவேண்டுமோ அந்தக்காலத்திலேயே செய்தல், மார்க்கப்ரபாவநா - ஜிநதர்மத்தினைப் பரவச்செய்தல், ப்ரவசநவத்ஸலத்வம் - கன்றைக் கண்ட கறவைபோல ஸதர்மிகளிடத்து அன்பு செலுத்துதல் ஆகிய இவை தீர்த்தங்கரபதவிக்குக் காரணம் ஆகும். (24)

## நீசைர்கோத்ரத்திற்குக் காரணம்

**234.** பராத்மநிந்தாப்ரஶம்ஸே ஸதஸத்குணோச்சாத
நோத்பாவநே ச நீசைர்கோத்ரஸ்ய ॥ ௨௫ ॥

பராத்மநிந்தாப்ரஸம்ஸே ஸதஸத்குணோச்
சாதநோத்பாவநே ச நீசைர்கோத்ரஸ்ய ॥

(ப - ரை.) பராத்மநிந்தாப்ரஶம்ஸே - அயலாரை நிந்தித்தல் தன்னைத் தான் புகழ்ந்துகொள்ளுதல், ச - மற்றும், ஸதஸத்குணோச்சாதநோத்பாவநே - அயலாரிடத்துள்ள குணங்களை மறைத்தல் தன்னிடத்து இல்லாத

குணங்களைக் கூறுதல் ஆகிய இவை, நீசைர்கோத்ரஸ்ய நீசைர்கோத்ரத்தின் ஆஸ்ரவகாரணமாகும். (25)

## உச்சைர்கோத்ரம் உண்டாதற்குக் காரணம்

235. தத்விபர்யயோ நீசைர்வ்ருத்யநுத்ஸேகௌ சோத்தரஸ்ய || ௨௬ ||

தத்விபர்யயோ நீசைர்வ்ருத்யநுத்ஸேகௌ சோத்தரஸ்ய ||

(ப - ரை) தத் - மேற் கூறப்பட்ட நீசைர்கோத்ர காரணத்தினுக்கு, விபர்யய: - மாறுதலாகிய அயலாரைப் புகழ்தலும் தன்னைத் தான் இகழ்ந்துகொள்ளுதலும், நீசைர்வ்ருத்யநுத்ஸேகௌ - பெரியோர்களை வணங்குதலும் கர்வமின்மையும், உத்தரஸ்ய - உச்சைர்கோத்திரத்தின் ஆஸ்ரவகாரணம் ஆகும்.

கருத்துரை:—அயலாரை நிந்தித்தல், தன்னைத் தான் புகழ்ந்துகொள்ளுதல், (பிறர்குணங்களை) பிறர் செய்த நற்கார்யங்களை மறைத்தல், தன் நடத்தையை வெளிப்படுத்துதல் ஆகிய இவை தாழ்ந்தகுலத்தில் பிறத்தற்குக் காரணமாகும்.

அயலாரைப்புகழ்தல், தன்னைக்குறித்து இகழ்ச்சியாகப் பேசிக்கொள்ளல், தன்னிடம் உள்ள குணங்களைப் பற்றிப் பேசாமல் பிறரிடத்துள்ள குணங்களை வெளியிடுதல், பெரியோர்களிடத்துப் பக்திசெய்தல், கர்வ மின்மை ஆகிய இவை உயர்ந்தகுலத்தில் ஜனித்தற்குக் காரணமாகும். (26)

## அந்தராய கர்மம் வருங் காரணம்

236. விக்நகரணமந்தராயஸ்ய || ௨௭ ||

விக்நகரணமந்தராயஸ்ய ||

(ப - ரை.) 𑌵𑌿𑌘𑍍𑌨𑌕𑌰𑌣𑌂-பிறருக்குத் தானம் கொடுத்தலைத் தடுத்தல், லாபம் வருவதைத் தடுத்தல், அயலாருடைய போகத்தைக் கெடுத்தல், உபபோகத்தினைக் கெடுத்தல், வீர்யத்தினை நசிப்பித்தல், 𑌮𑌨𑍍𑌤𑌰𑌾𑌯𑌸𑍍𑌯- அந்தராய கர்மத்தின் ஆஸ்ரவகாரணம் ஆகும். (27)

**கருத்துரை** :—நாம் பிறருக்கு எவ்வித விக்னத்தை உண்டுபண்ணுகிறோமோ அவ்வித விக்நம் நமக்கு நேரிடும்.

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀 𑌉𑌮𑌾𑌸𑍍𑌵𑌾𑌮𑌿 𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑍇 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌾𑌧𑌿𑌗𑌮𑍇
𑌮𑍋𑌕𑍍𑌷𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌷𑌷𑍍𑌠𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃

**இதி ஸ்ரீ உமாஸ்வாமி ஆசார்யர் இயற்றிய**
**தத்த்வார்த்த ஸூத்ரம் என்னும் மோக்ஷஶாஸ்த்ரத்தின்**
**ஆறும் அத்யாயம் முற்றிற்று.**

---

## கேள்விகள்

1. யோகமென்றால் என்னை? அது எத்தனை வகை?

2. அஜீவாதிகரணஆஸ்ரவத்தின் பேதத்தைக் கூறுக.

3. மனிதப்பிறவி, நரகப்பிறவி, சாரித்ரமோஹநீயம் இவை உண்டாதற்குக் காரணம் யாது?

4. ஸாம்பராயிகஆஸ்ரவத்திற்கும் ஈர்யாபதஆஸ்ரவத்திற்கும் உள்ள வித்தியாசம் யாது?

5. ஸம்யக்தர்ஶனம் மோக்ஷத்திற்கு வழியாகும். அப்படியிருக்க, ஸம்யக்தர்ஶனத்தைத் தேவகதிக்குக் காரணமாக ஏன் கூறினர்?

6. மித்யாதிருஷ்டியானவன், விநயஸம்பந்நதா முதலான பதினைந்து பாவனைகளையும் பாவித்துத் தீர்த்தங்கரபதவியை அடைய முடியுமா?

7. இந்த ஸம்ஸாரத்தில் ஒரு கர்மமும் ஆஸ்ரவமில்லாமல் ஒரு ஜீவனாவது இருக்குமா?

8. நிந்ஹவ, ஸராகஸம்யம, பாலதபம், யோகவக்ரதா, அநுத்ஸேகம், ஸாதுஸமாதி, அவர்ணவாதம், ஸமாரம்பம் இவைகளின் அர்த்தம் எழுதுக.

9. தீர்த்தங்கரபதவி யுண்டாதற்குக் காரணம் யாது?

10. ஏழையாகவும் தனவானாகவும் ஜனித்தற்குக் காரணம் யாது?

---

## அத்யாயம் 7

### 𑌶𑍁𑌭 ஆஸ்ரவத்தின் வர்ணனை

### விரதத்தின் லக்ஷணம்

237. 𑌹𑌿𑌂𑌸𑌾𑌽𑌨𑍃𑌤𑌸𑍍𑌤𑍇𑌯𑌾𑌬𑍍𑌰𑌹𑍍𑌮
𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑍇𑌭𑍍𑌯𑍋 𑌵𑌿𑌰𑌤𑌿𑌰𑍍𑌵𑍍𑌰𑌤𑌮𑍍 ॥ ௧ ॥

ஹிம்ஸாந்ருதஸ்தேயாப்ரஹ்ம
பரிக்ரஹேப்யோ விரதிர்விரதம் ||

(ப - ரை.) 𑌹𑌿𑌂𑌸𑌾 - கொலை, 𑌅𑌨𑍃𑌤 - பொய், 𑌸𑍍𑌤𑍇𑌯 - களவு, 𑌅𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 - காமஸேவைசெய்தல், 𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑍇𑌭𑍍𑌯𑌃 - பொருட்பற்று ஆகிய இவைகளை (இவைகளிலிருந்து) 𑌵𑌿𑌰𑌤𑌿𑌃 - விடுதல், (விலகுதல்) 𑌵𑍍𑌰𑌤𑌂 - விரதமாகும்.

**கருத்துரை :**—கொலை முதலான ஐந்து பாபத் தொழில்களைச் செய்யாமலிருத்தல் விரதமாகும். (1)

### விரதத்தின் வகை

238. 𑌦𑍇𑌶𑌸𑌰𑍍𑌵𑌤𑍋𑌽𑌣𑍁𑌮𑌹𑌤𑍀 ॥ ௨ ॥

தேஶஸர்வதோऽணுமஹதீ ||

(ப - ரை) 𑌦𑍇𑌶𑌸𑌰𑍍𑌵𑌤𑌃 - கொலை முதலான பாபங்களைக் கொஞ்சங் கொஞ்சமாக விடுதல் முற்றும் விடுதல் ஆகிய இவைகளினால், 𑌅𑌣𑍁𑌮𑌹𑌤𑍀 - அணுவிரதம் என்றும் மஹாவிரதம் என்றும் விரதம் இருவகை யாகும்.

**விரதம்** இருவகை. அவை— அணுவிரதம், மஹா விரதம் என்பன. அவற்றுள்—

**அணு விரதம் :**—கொலை முதலான பாபங்களைத் தன் சக்திக்குத் தக்கவாறு கொஞ்சங் கொஞ்சமாக விடுதல்.

மஹாவிரதம்:— கொலை முதலான பாபத்தொழில்களை மனத்தினாலும் செய்தல், செய்வித்தல், உடன்படுதல் இன்மை. (2)

## விரதங்கள் ஸ்திரமாக இருத்தற்குக் காரணம்

239. தத்ஸ்தைர்யார்த்தம் பாவநா: பஞ்ச பஞ்ச ||௩||

தத்ஸ்தைர்யார்த்தம் பாவநா : பஞ்ச பஞ்ச ||

(ப : ரை) தத்ஸ்தைர்யார்த்தம் - விரதங்கள் ஸ்திரமாக இருத்தற்காக ஒவ்வொரு விரதத்திற்கும், பஞ்ச பஞ்ச பாவநா: - ஐந்து ஐந்து பாவனைகள் இருக்கின்றன.

குறிப்பு :—பாவனை - எண்ணுதல்; சிந்தித்தல்.

## அஹிம்ஸாவிரதத்தின் ஐந்து பாவனைகள்

240. வாங்மநோகுப்தீர்யாதாநநிக்ஷேபண
ஸமித்யாலோகிதபாநபோஜநாநி பஞ்ச ||

வாங்மநோகுப்தீர்யாதாநநிக்ஷேபண
ஸமித்யாலோகிதபாநபோஜநாநி பஞ்ச ||

ப - ரை.) வாக்குப்தி - அதிகமாகவும் வீணாகவும் பேசாதிருத்தல், மநோகுப்தி - பலவழியிற் செல்லும் மனத்தின் வேகத்தைத் தடுத்தல், ஈர்யாஸமிதி - பூமியினைப் பார்த்து நடத்தல், ஆதாநநிக்ஷேபணஸமிதி - நுண்ணுயிர்கள் உள்ளனவோ என்று கவனித்து வஸ்துக்களை வைத்தல் எடுத்தல், ஆலோகிதபாநபோஜந - உணவுகளையும் நீர் முதலானவைகளையும் பரிசோதித்து உண்ணுதல் குடித்தல் ஆகிய இவை, பஞ்ச - ஐந்தும் அஹிம்ஸாவிரதத்தின் பாவனைகளாகும். (4)

## ஸத்யவிரதத்தின் ஐந்து பாவனைகள்

**241.** 𑌕𑍍𑌰𑍋𑌧𑌲𑍋𑌭𑌭𑍀𑌰𑍁𑌤𑍍𑌵𑌹𑌾𑌸𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾
𑌖𑍍𑌯𑌾𑌨𑌾𑌨𑍍𑌯𑌨𑍁𑌵𑍀𑌚𑌿𑌭𑌾𑌷𑌣𑌂 𑌚 𑌪𑌂𑌚 ॥௫॥

க்ரோதலோபபீருத்வஹாஸ்யப்ரத்யா
க்யாநாந்யநுவீசிபாஷணஞ் ச பஞ்ச ॥

**(ப - ரை.)** 𑌕𑍍𑌰𑍋𑌧 - கோபம், 𑌲𑍋𑌭 - ஆசை, 𑌭𑍀𑌰𑍁𑌤𑍍𑌵 - பயம், 𑌹𑌾𑌸𑍍𑌯 - பரிஹாசம்செய்தல் ஆகிய இவைகளை, 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌾𑌨𑌿 - விடுதல், 𑌅𑌨𑍁𑌵𑍀𑌚𑌿𑌭𑌾𑌷𑌣𑌂 - குற்றமின்றிப் பேசுதல் ஆகிய இவை, 𑌪𑌂𑌚 - ஐந்தும் ஸத்யவிரதத்தின் பாவனைக ளாகும்.

**கருத்துரை:—** கோபத்தினாலும், ஆசையினாலும், ஏளனஞ் செய்வதனாலும், பயப்படுவதனாலும் பொய்பேச நேரிடுவதனால் ஸத்யவிரதத்தினைக் காப்பாற்றுதற்காகக் கோபித்தல், ஆசைப்படுதல், பயப்படுதல், பரிஹாஸஞ் செய்தல் ஆகிய இவைகளை விடுதல் வேண்டும். இவைகளுடன் சாஸ்திரத்தில் கூறப்பட்டபடி தோஷமின்றியும் பேசுதல் வேண்டும். (5)

## அசௌர்யவிரதத்தின்பாவனைகள்

**242.** 𑌶𑍂𑌨𑍍𑌯𑌾𑌗𑌾𑌰𑌵𑌿𑌮𑍋𑌚𑌿𑌤𑌾𑌵𑌾𑌸𑌪𑌰𑍋𑌪
𑌰𑍋𑌧𑌾𑌕𑌰𑌣𑌭𑍈𑌕𑍍𑌷𑍍𑌯𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌸𑌧𑌰𑍍𑌮𑌾
𑌵𑌿𑌸𑌂𑌵𑌾𑌦𑌾𑌃 𑌪𑌂𑌚 ॥ ௬ ॥

ஶூந்யாகாரவிமோசிதாவாஸபரோபரோதாகரண
பைக்ஷ்யஶுத்திஸதர்மா விஸம்வாதா: பஞ்ச ॥

**(ப - ரை.)** 𑌶𑍂𑌨𑍍𑌯𑌾𑌗𑌾𑌰 - யாரும் இல்லாத மலை குகை வீடு முதலான இடங்களிலும், 𑌵𑌿𑌮𑍋𑌚𑌿𑌤𑌾𑌵𑌾𑌸 -

குடியிருந்து விடப்பட்ட இடங்களிலும் வசித்தல், 𑌪𑌰𑍋𑌪𑌰𑍋𑌧𑌾𑌕𑌰𑌣 - அயலாருக்கு இடையூறு நேரும்படி ஹடம் செய்யாதிருத்தல், 𑌭𑍈𑌕𑍍𑌷𑍍𑌯𑌶𑍁𑌦𑍍𑌧𑌿 - சுத்தமான உணவை உட்கொள்ளல் (ஆசாரஶாஸ்திரத்தில் கூறப்பட்டபடி ஆஹாரம் சுத்தமாக வைத்திருத்தல்) 𑌸𑌧𑌰𑍍𑌮𑌾𑌵𑌿𑌸𑌂𑌵𑌾𑌦𑌾𑌃 - தான் கைக்கொண்டு ஒழுகுந் தர்மத்தில் வர்த்திப்பவர்களுடன் 'இது என்னுடையது; அது உம்முடையது' என்று வாதம் செய்யாமலிருத்தல் ஆகிய இவைகள், 𑌪𑌂𑌚 - ஐந்தும் அசௌர்யவிரதத்தின் பாவனைகளாகும். (6)

## பிரம்மசர்யவிரதத்தின்பாவனைகள்

243. 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌰𑌾𑌗𑌕𑌥𑌾𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑌨𑍍𑌮𑌨𑍋𑌹𑌰𑌾𑌙𑍍𑌗𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑌣
𑌪𑍂𑌰𑍍𑌵𑌰𑌤𑌾𑌨𑍁𑌸𑍍𑌮𑌰𑌣𑌵𑍃𑌷𑍍𑌯𑍇𑌷𑍍𑌟𑌰𑌸
𑌸𑍍𑌵𑌶𑌰𑍀𑌰𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌤𑍍𑌯𑌾𑌗𑌾𑌃 𑌪𑌂𑌚 ॥ ௭ ॥

ஸ்த்ரீராககதாஶ்ரவணதந்மநோஹராங்கநிரீக்ஷண
பூர்வரதாநுஸ்மரணவ்ருஷ்யேஷ்டரஸஸ்வஶரீர
ஸம்ஸ்காரத்யாகா: பஞ்ச ||

(ப - ரை) 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌰𑌾𑌗𑌕𑌥𑌾𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌯𑌾𑌗𑌃 - பெண்களிடத்துக் காதல் உண்டாக்கும் கதையினைக் கேட்காதிருத்தல், 𑌤𑌨𑍍𑌮𑌨𑍋𑌹𑌰𑌾𑌙𑍍𑌗𑌨𑌿𑌰𑍀𑌕𑍍𑌷𑌣𑌤𑍍𑌯𑌾𑌗𑌃 - பெண்களின் அழகான அவயவங்களைப் பார்க்காமலிருத்தல், 𑌪𑍂𑌰𑍍𑌵𑌰𑌤𑌾𑌨𑍁𑌸𑍍𑌮𑌰𑌣𑌤𑍍𑌯𑌾𑌗𑌃 - முன்பு அனுபவித்த நுகர்ச்சியினை நினையாதிருத்தல், 𑌵𑍃𑌷𑍍𑌯𑍇𑌷𑍍𑌟𑌰𑌸𑌤𑍍𑌯𑌾𑌗𑌃 - காமவிகாரத்தினை உண்டுபண்ணும் ஸத்தானவுணவை உட்கொள்ளாமலிருத்தல், 𑌸𑍍𑌵𑌶𑌰𑍀𑌰𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌤𑍍𑌯𑌾𑌗𑌃 - தன் உடலை அத்தர், புனுகு, தைலம் முதலானவைகளைப் பூசியும், புஷ்பம் நல்ல அழகான ஆடை முதலானவைகளை

அணிந்தும் அழகு செய்யாமலிருத்தல் ஆகிய இவை, 𑌪𑌞𑍍𑌚 - ஐந்தும் பிரம்மசர்யத்தின் பாவனைகளாகும். (7)

## பரிக்ரஹத்யாகவிரதத்தின் பாவனைகள்

244. 𑌮𑌨𑍋𑌜𑍍𑌞𑌾𑌮𑌨𑍋𑌜𑍍𑌞𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌵𑌿𑌷𑌯
𑌰𑌾𑌗𑌦𑍍𑌵𑍇𑌷𑌵𑌰𑍍𑌜𑌨𑌾𑌨𑌿 𑌪𑌞𑍍𑌚 ॥ ௮ ॥

மநோஜ்ஞாமநோஜ்ஞேந்த்ரியவிஷய
ராகத்வேஷவர்ஜநாநி பஞ்ச ॥

(ப - ரை.) 𑌮𑌨𑍋𑌜𑍍𑌞 - இஷ்டமானது, 𑌅𑌮𑌨𑍋𑌜𑍍𑌞 - இஷ்டமில்லாதது ஆகிய, 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯 𑌵𑌿𑌷𑌯 - ஐம்புலன்களின் செய்கையில் அதாவது தொடுதல், சுவைத்தல், முகர்தல், பார்த்தல், கேட்டல் ஆகிப இவைகட்குக் காரணமாகிய பொருள்களில், 𑌰𑌾𑌗 - அன்பும், 𑌦𑍍𑌵𑍇𑌷 - துவேஷமும், 𑌵𑌰𑍍𑌜𑌨𑌾𑌨𑌿 - செய்யாமலிருத்தல் ஆகிய 𑌪𑌞𑍍𑌚 - ஐந்தும் பரிக்ரஹத்யாகவிரதத்தின் பாவனைகளாகும்.

கருத்துரை :—ஐம்புலன்களுக்கு விருப்பத்தைத் தரும் இஷ்டமான பொருள்களில் அன்பும், ஐம்புலன்களுக்கு வெறுப்பைத் தரும் இஷ்டமில்லாத பொருள்களில் த்வேஷமும் செய்யாமலிருத்தல் பரிக்ரஹத்யாகவிரதத்தின் ஐந்து பாவனைகளாகும். (8)

## பஞ்ச பாபங்களைப்பற்றி விசாரிக்கத் தகுந்தவை

245. 𑌹𑌿𑌂𑌸𑌾𑌦𑌿𑌷𑍍𑌵𑌿𑌹𑌾𑌮𑍁𑌤𑍍𑌰𑌾𑌪𑌾𑌯𑌾𑌵𑌦𑍍𑌯𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍍 ॥

ஹிம்ஸாதிஷ்விஹாமுத்ராபாயாவத்யதர்ஶநம் ॥

(ப - ரை.) 𑌹𑌿𑌂𑌸𑌾𑌦𑌿𑌷𑍁 𑌸𑍍𑌸𑍁 - கொலை முதலான ஐந்து பாபத்தொழில்களைச் செய்யும்போது, 𑌇𑌹 - இம்மையிலும் (இப்பிறவியிலும்), 𑌅𑌮𑍁𑌤𑍍𑌰 - மறுமையிலும் (மறுபிறவியிலும்), 𑌅𑌪𑌾𑌯𑌾𑌵𑌦𑍍𑌯𑌦𑌰𑍍𑌶𑌨𑌂 - அபாயமும் நிந்தையும் ஏற்படும் என்று விசாரித்தல் வேண்டும்.

**கருத்துரை:**—கொலை செய்பவன் இவ்வுலகில் அரச தண்டனையினை அனுபவிப்பவனாகவும் நிந்திக்கப்படுபவனாகவும், மறுபிறவியில் நரகம் முதலான துக்கத்தினை அனுபவிப்பவனாகவும் ஆகிறான்.

பொய் பேசுபவன் இம்மையில் நம்பிக்கையில்லாதவனாகவும் அரசதண்டனைக்குட்பட்டவனாகவும் ஆகிறான்; மறுமையில் கெட்ட கதியினை அடைகிறான்.

களவு செய்பவன் இம்மையில் அடித்தல், வதைத்தல், கட்டுதல், குத்துதல், உதைத்தல், காதையறுத்தல், மூக்கறுத்தல் முதலானவைகளை அனுபவிக்கிறான்; பொருளையும் இழக்கிறான். (அரசனால் கள்ளனுடைய எல்லாப் பொருள்களும் கவரப்படுகின்றன). மறுமையில் துக்கத்திற்குக் காரணமான கதியினை அடைகிறான்.

தீக்காம மாடுபவன், இம்மையில் ஜனங்களாலும் அரசர்களாலும் செய்யப்படும் பலவிதத் துன்பத்தினை அடைகிறான். மறுமையில் நரகப்பிறவியினை அடைந்து துக்கத்தினை அனுபவிக்கிறான்.

பொருட்பற்றினால் பரிக்ரஹமுள்ளவன், இம்மையில் திருடர், பகையாளி முதலானவர்களால் பீடிக்கப்படுகிறான்; மறுமையில் கெட்ட கதியினை அடைகிறான் என்று விசாரித்தல் வேண்டும். (9)

246. ஃ◌ஃவமெவ வா ॥ ௰ ॥

துக்கமேவ வா ॥

(ப - ரை.) வா - அல்லது, ஃ◌ஃவமெவ - கொலை முதலான பாபங்களைத் துக்கமென்றே நினைத்தல் வேண்டும்.

**குறிப்பு:**—காரணத்தினைக் கார்யமாகக் கூறுதல் என்ற முறைப்படி இங்கும் துக்கத்திற்குக் காரணமான கொலை முதலாவை துக்கமென்றே கூறப்பட்டன. (10)

## மற்றும் சிந்திக்கத் தகுந்த பாவனைகள்

247. 𑌮𑍈𑌤𑍍𑌰𑍀𑌪𑍍𑌰𑌮𑍋𑌦𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌮𑌾𑌧𑍍𑌯𑌸𑍍𑌥𑌾𑌨𑌿 𑌚
𑌸𑌤𑍍𑌵𑌗𑍁𑌣𑌾𑌧𑌿𑌕𑌕𑍍𑌲𑌿𑌶𑍍𑌯𑌮𑌾𑌨𑌾𑌵𑌿𑌨𑌯𑍇𑌷𑍁 ॥

மைத்ரீப்ரமோத காருண்யமாத்யஸ்தாநி ச
ஸத்வகுணாதிகக்லிஶ்யமாநாவிநயேஷு ||

(ப - ரை.) 𑌚 - மற்றும், 𑌸𑌤𑍍𑌵 - பிராணிகள், 𑌗𑍁𑌣𑌾𑌧𑌿𑌕 - குணத்திற் சிறந்தவர்கள், 𑌕𑍍𑌲𑌿𑌶𑍍𑌯𑌮𑌾𑌨 - துன்பப்பட்டுக்கொண்டிருப்பவர்கள், 𑌅𑌵𑌿𑌨𑌯𑍇𑌷𑍁 - சாஸ்திரமுறைப்படி வணக்கம் இல்லாதவர்கள் ஆகிய இவர்களிடத்தில் முறையே, 𑌮𑍈𑌤𑍍𑌰𑍀 - அன்பு, 𑌪𑍍𑌰𑌮𑍋𑌦- சந்தோஷம், 𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯 - தயவு, 𑌮𑌾𑌧𑍍𑌯𑌸𑍍𑌥𑌾𑌨𑌿 - ராகத்வேஷமின்றி மத்யஸ்தமாக இருத்தல் ஆகிய இவைகளைப் பாவித்தல் வேண்டும்.

கருத்துரை:—ஸமஸ்தப் பிராணிகளிடத்தும் அன்பும், குணத்திற் சிறந்தவர்களிடத்துச் சந்தோஷமும், நோயினால் பீடிக்கப்பட்டவர்களிடத்துத் தயவும், உண்மையான தத்த்வத்தினை நம்பாதவர்களிடத்து ராகத்வேஷமின்மையும் எப்போதும் எனக்கு உண்டாக வேண்டுமென்று சிந்தித்தல் வேண்டும்.

மைத்ரீ—அயலாருக்குத் துக்கமுண்டாக்காம லிருத்தல்.

ப்ரமோதம்—பெரியோர்களைக் கண்டு முகக்களிப்புடன் பக்தி செய்தல்.

காருண்யம்—துக்கமுள்ள பிராணிகளைக் கண்டு உபகாரஞ் செய்யவேண்டுமென்கிற எண்ணம் உண்டாதல்.

மாத்யஸ்தம்—ராகத்வேஷ மின்மையினால் பக்ஷபாதமில்லாமல் இருத்தல்.

**அவிநேயர்**—தத்த்வார்த்தத்தினை கேட்டல், ஸ்வீகரித்தல் முதலான தன்மையினை அடையாதவர்கள். (வணக்கமில்லாதவர்.) (11)

## மற்றும் பாவிக்கத் தகுந்த பாவனைகள்

248. 𑌜𑌗𑌤𑍍𑌕𑌾𑌯𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑍌 𑌵𑌾 𑌸𑌂𑌵𑍇𑌗
𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌮𑍍 ॥ ௧௨ ॥

ஜகத்காயஸ்வபாவௌ வா ஸம்வேக
வைராக்யார்த்தம் ॥

(ப - ரை.) 𑌜𑌗𑌤𑍍 - உலக ஸ்வரூபம்; ஸம்ஸாரி ஜீவன்கள் வசிக்குமிடம், 𑌕𑌾𑌯 - உடல் ஆகிய இவைகளின், 𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑍌 - தன்மையினை அடிக்கடி தியானித்தால், 𑌸𑌂𑌵𑍇𑌗 - ஸம்ஸாரதுக்கத்திலிருந்து நீங்க வேண்டுமென்கிற தன்மையும், 𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌂 - ஸம்ஸாரத்தின் மீது (உலகசம்பந்தமான பொருள்களின்மீது) ராகத்வேஷமில்லாத வைராக்யமும் (ஸம்ஸாரததை வெறுக்குந் தன்மையும்) உண்டாகும்.

**கருத்துரை**:—உலகம் அநாதி யானது. ஸம்ஸாரி ஜீவன்கள் தம் தம் வினைப்பயன்படி பலபிறவிகளிலும் பிறந்து துக்கத்தினை அனுபவித்துக்கொண்டிருக்கின்றன. ஜீவிதமானது நீர்க்குமிழிக்குச் சமானமானது. போகத்திற் குரிய பொருள்கள் அனைத்தும் மின்னல், மேகவொளி ஆகிய இவைகளுக்கு ஒப்பாகத் தோன்றித் தோன்றி அழியும் என்று சிந்திப்பதனால் ஸம்ஸாரத்தை விட்டு நீங்கி ஆத்மநிலையை அடையவேண்டும் என்ற ஸம்வேகபாவமும், உடல் சுத்தமில்லாதது, ஸாரமில்லாதது, துக்கத்திற்குக் காரணமானது, அழிவினை உடையது என்று நினைப்பதனால் வைராக்யமும் உண்டாகும்.

உலகையும் உடலையும் உற்று நோக்குமளவில் ஸம்வேகமும் வைராக்யமும் உண்டாகும். (12)

## ஹிம்ஸையின் லக்ஷணம்

**249.** 𑌪𑍍𑌰𑌮𑌤𑍍𑌤𑌯𑍋𑌗𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌣𑌵𑍍𑌯𑌪𑌰𑍋𑌪𑌣𑌂 𑌹𑌿𑌂𑌸𑌾 ||

ப்ரமத்தயோகாத்ப்ராணவ்யபரோபணம் ஹிம்ஸா ||

**(ப-ரை.)** 𑌪𑍍𑌰𑌮𑌤𑍍𑌤𑌯𑍋𑌗𑌾𑌤𑍍 - குரோதம், மானம், மாயை, லோபம் ஆகிய இவைகளின் சேர்க்கையினுல் குரோதம் முதலான பரிணமத்தினையுடையவனுகி, 𑌪𑍍𑌰𑌾𑌣𑌵𑍍𑌯𑌪𑌰𑍋𑌪𑌣𑌂 - பிராணன்களை நீக்குதல், 𑌹𑌿𑌂𑌸𑌾 - கொலையாகும்.

**கருத்துரை:**—குரோதம் முதலான பரிணமத்தினை உடையவனுகி அயலாரைக் கொல்லவேண்டுமென்று நினைத்தல் கொலையாகும். அதாவது, ஒருவன் ஒரு பிராணியைக் கொல்ல வேண்டுமென்று விரும்பிப் பல முயற்சிகள் செய்தும், அவனுல் அப் பிராணியானது கொல்லப்பட இயலவில்லையாயினும், அதைக் கொல்லவேண்டும் என்று கருதியிருந்ததனுல் அது கொலையேயாகும். அதனுல் வரும் பாபத்தினையும் அவன் அனுபவிப்பான்.

குரோதம் முதலான பரிணமமும், பிராணிகளைக் கொல்ல வேண்டுமென்கிற எண்ணமும் இல்லாமலிருக்கிற ஒருவனுல் ஒரு பிராணியானது கொல்லப்பட்டாலும் அது கொலையாகாது. அதாவது ஒருவன், தன்னுல் ஒரு பிராணியும் இறக்கக்கூடாதென்று கீழ்நோக்கிச் செல்லுஞ் சமயத்தில், அவனுக்குத் தெரியாமல், அவன் காலடியில் ஒரு பிராணியானது மிதிபட்டு இறந்து போனுலும் அவனுக்கு அதைக் கொல்லவேண்டுமென்கிற எண்ணம் இன்மையால் அது கொலை ஆகாது. அதனுல் வரும் பாபமும் அவனை அணுகாது.

## பொய்

250. அஸதபிதாநமந்ருதம் ॥ ௰௪ ॥

அஸதபிதாநமந்ருதம் ॥

(ப - ரை.) அஸத் அபிதாநம் – (அயலாருக்குத் துக்கத்தைத் தருவதாகிய) நடைபெறுதவற்றைக் கூறுதல் (அயலாரைக் கெடுக்கவேண்டுமென்று எண்ணி இல்லாததைக் கற்பித்துக் கூறுதல்), அந்ருதம் - பொய்யாகும். (14)

## களவு

251. அதத்தாதாநம் ஸ்தேயம் ॥ ௰௫ ॥

அதத்தாதாநம் ஸ்தேயம் ॥

(ப - ரை.) அதத்தாதாநம்-பிறர் கொடுக்காத பொருளை எடுத்துக்கொள்ளல், ஸ்தேயம் - களவாகும்.

**கருத்துரை :**—அயலாரை மோசம் செய்ய வேண்டுமென்றும், அயலார்பொருளை அபஹரித்துக்கொள்ள வேண்டுமென்றும் எண்ணி, பிறர் தம் கையினல் கொடுக்காத பொருளை அவருக்குத் தெரியாமல் தானுக எடுத்துக் கொள்ளல் களவாகும்.

மோசம் செய்யவேண்டுமென்கிற எண்ணமின்றி, திருப்பிக்கொடுத்துவிடவேண்டுமென்கிற எண்ணத்துடன் மண்வெட்டி, கலப்பை முதலானவற்றைப் பிறர் கொடுக்காமல் தானுக எடுத்துக்கொள்வது களவாகாது.

உலகத்தில் எல்லாருக்கும் உதவியாகவுள்ள பிறர்-வீட்டுக் கிணற்றுஜலம், பொதுநிலத்தில் உள்ள மண் முதலியவற்றை எடுத்துக்கொள்ளுதல் களவாகாது. (15)

## அப்பிரம்மம் (காமம்)

252. 𑌮𑍈𑌥𑍁𑌨𑌮𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 ॥ ௧௬ ॥

மைதுநமப்ரஹ்ம ॥

(ப - ரை.) 𑌮𑍈𑌥𑍁𑌨𑌂 - (சாரித்ரமோஹநீய கர்மத்தின் உதயத்தினால் காதல்கொண்டு ஆண் பெண்கள் இருவரும் ஒருவருக்கொருவர் பார்த்தல், தொடுதல், இன்பமாகப் பேசுதல்), புணர்தல் முதலியவை, 𑌅𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 - பிரம்மசர்யம்இன்மையாகும். (16)

## விரதத்தின்வகை

### பரிக்ரஹம்

253. 𑌮𑍂𑌰𑍍𑌛𑌾 𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 ॥ ௧௭ ॥

மூர்ச்சா பரிக்ரஹ: ॥

(ப - ரை) 𑌮𑍂𑌰𑍍𑌛𑌾 - அது என்னுடையது இது என்னுடையது என்ற வாஞ்சை, 𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 - பரிக்ரஹமாகும் (பொருட்பற்றாகும்).

**கருத்துரை** :—மனைவி, மக்கள், நிலம், வீடு, பசு, எருது முதலான பொருள்களைச் சம்பாதித்தல், காப்பாற்றுதல் ஆகிய இவைகளில் ஆழ்ந்திருத்தல் பரிக்ரஹமாகும். (17)

## விரதி (விரதமுள்ளவன்)

254. 𑌨𑌿𑌃𑌶𑌲𑍍𑌯𑍋 𑌵𑍍𑌰𑌤𑍀 ॥ ௧௮ ॥

நி: ஶல்யோ வ்ரதீ ॥

(ப - ரை) 𑌨𑌿𑌃𑌶𑌲𑍍𑌯𑌃 - ஶல்யம் இல்லாதவன், 𑌵𑍍𑌰𑌤𑍀 - விரதி யெனப்படுவான்.

**ஶல்யம்**:—முள் தைத்தலால் உடலில் வேதனை உண்டாதல்போல, கர்மோதயத்தினால் உடலுக்கும் உயிருக்கும் மனத்திற்கும் பாதை உண்டாதல்.

ஶல்யம் மூன்றுவகை: அவை—மித்யாஶல்யம், மாயா ஶல்யம், நிதானஶல்யம் என்பன. அவற்றுள்—

மித்யாஶல்யம் :— (உண்மைத்தன்மையில்லாமையை) தத்த்வமில்லாமையை நம்புதல்.

மாயாஶல்யம்:— (வஞ்சனை) கபடம் செய்தல்.

நிதாநஶல்யம் :—மறுபிறவியில் நல்ல போகோப போகப் பொருள்களைப் பெறவேண்டுமென்று இச்சித்தல்.

## விரதிகள் வகை

255. 𑌅𑌗𑌾𑌰𑍍𑌯𑌨𑌗𑌾𑌰𑌶𑍍𑌚 ‖ ௧௯ ‖

அகார்யநகாரஶ்ச ||

(ப-ரை) 𑌅𑌗𑌾𑌰𑍀 - இல்லறத்தார் என்றும், 𑌅𑌨𑌗𑌾𑌰𑌾𑌃 — துறவறத்தார் என்றும் விரதிகள் இருவகையினர்.

𑌅𑌗𑌾𑌰𑌂 - வீடு. 𑌅𑌗𑌾𑌰𑍀 - வீட்டில் இருப்பவன். 𑌅𑌨𑌗𑌾𑌰𑌃 - வீடில்லாதவன். (19)

## அகாரீ

256. 𑌅𑌣𑍁𑌵𑍍𑌰𑌤𑍋𑌽𑌗𑌾𑌰𑍀 ‖ ௨௰ ‖

அணுவ்ரதோऽகாரீ ||

(ப-ரை) 𑌅𑌣𑍁𑌵𑍍𑌰𑌤𑌃 - அணுவிரதத்தை யுடையோன், 𑌅𑌗𑌾𑌰𑍀 - அகாரியாவன். (இல்லறத்தான்)

அணுவிரதம் ஐந்து வகை: அவை—அஹிம்ஸாணுவிரதம், ஸத்யாணுவிரதம், அசௌர்யாணுவிரதம், பிரம்மசர்யாணுவிரதம், பரிக்ரஹபரிமாணாணுவிரதம் என்பன. அவற்றுள்—

அஹிம்ஸாணுவிரதம்:—புழு, பூச்சி, ஈ, எறும்பு முதலான த்ரஸஜீவன்களை வதையாமை.

**ஸத்யாணுவிரதம்:**—ராகத்திஞலும், த்வேஷத்தி ஞலும், பயத்திஞலும் பொய் பேசாதிருத்தல்.

**அசௌர்யாணுவிரதம்:**—பிறர்பொருளைக் களவு செய் யாமை.

**பிரம்மசர்யாணுவிரதம்:**—அன்யமாதரை விரும் பாமை ; தன்மனைவியைமட்டும் விரும்புதல்.

**பரிக்ரஹபரிமாணுணுவிரதம்:**—தன் குடும்பத்திற்கு வேண்டுமளவான பொருள்களை வைத்துக்கொண்டு ஏனைய பொருள்களை நியமம் செய்து விட்டுவிடுதல். (20)

## ஏழு சீலங்கள்

**257.** 𑌦𑌿𑌗𑍍𑌦𑍇𑌶𑌾𑌨𑌰𑍍𑌥𑌦𑌣𑍍𑌡𑌵𑌿𑌰𑌤𑌿𑌸𑌾𑌮𑌾𑌯𑌿𑌕𑌪𑍍𑌰𑍋𑌷
𑌧𑍋𑌪𑌵𑌾𑌸𑍋𑌪𑌭𑍋𑌗𑌪𑌰𑌿𑌭𑍋𑌗𑌪𑌰𑌿-
𑌮𑌾𑌣𑌾𑌤𑌿𑌥𑌿𑌸𑌂𑌵𑌿𑌭𑌾𑌗𑌵𑍍𑌰𑌤𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑌶𑍍𑌚 ‖ ௨௧ ‖

திக்தேஶாநர்த்ததண்டவிரதிஸாமாயிகப்ரோஷ
தோபவாஸோபபோகபரிபோகபரிமாணுதிதி
ஸம்விபாகவ்ரதஸம்பந்நஶ்ச ‖

(ப - ரை.) 𑌦𑌿𑌗𑍍𑌦𑍇𑌶𑌾𑌨𑌰𑍍𑌥𑌦𑌣𑍍𑌡𑌵𑌿𑌰𑌤𑌿 - திக்விரதி தேசவிரதி அனர்த்ததண்டவிரதி என்னும் மூன்று குணவிரதங்கள், 𑌸𑌾𑌮𑌾𑌯𑌿𑌕𑌪𑍍𑌰𑍋𑌷𑌧𑍋𑌪𑌵𑌾𑌸𑍋𑌪𑌭𑍋𑌗𑌪𑌰𑌿𑌭𑍋𑌗𑌪𑌰𑌿𑌮𑌾𑌣𑌾𑌤𑌿𑌥𑌿𑌸𑌂𑌵𑌿𑌭𑌾𑌗𑌵𑍍𑌰𑌤𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑌃 - ஸாமாயிகவிரதம், ப்ரோஷதோபவாஸ விரதம், உபபோகபரிபோகபரிமாணவிரதம், அதிதிஸம் விபாகவிரதம் என்னும் நான்கு சிக்ஷாவிரதங்கள் ஆகிய இவைகளை உடையோன் அணுவிரதி ஆவன்.

**குணவிரதம்:** மூன்று வகை. அவை—திக்விரதம், தேசவிரதம், அனர்த்ததண்டவிரதம் என்பன. அவற்றுள்—

**திக்விரதம்** :—சிறிய பாபங்களை விடுதற்காகப் 'பத்துத் திக்குக்களிலும் யான் இவ்வளவு தூரம், அல்லது இன்ன இடம்வரைக்குந்தான் செல்வேன்; அதற்குப் புறம்பில் மரணகாலம்வரை செல்வதில்லை' என்று நியமம்செய்து கொள்ளல்.

**தேசவிரதம்** :—மரணகாலம்வரை நியமம் செய்து கொண்ட திக்குவிரதத்தின் எல்லையினுள்ளும், 'இத்தனை நாழிகை, மணி, பகல், மாதம் என்ற காலஅளவு வரைக்கும், இன்ன வீடு, கிராமம், தெருவரைக்கும் செல்வேன்' என்று நியமம் செய்துகொண்டு அதற்கு வெளியில் செல்லாமலிருத்தல்.

**அனர்த்ததண்டவிரதம்** :—பாபகார்யத்தினைச் செய்யாது விடுதல். பாபகார்யம் ஐந்து வகை. அவை—பாபோபதேசம், ஹிம்ஸாதானம், அபத்யானம், துஶ்ஶ்ருதி, பிரமாதசர்யம் என்பன. அவற்றுள்—

(1) **பாபோபதேசம்** :— பிராணிகளுக்குத் துன்பம் ஏற்படக் கூடிய வசனங்களைக் கற்பித்தல்.

(2) **ஹிம்ஸாதானம்** :— கொலைக்குக் காரணமான கத்தி, அரிவாள், மண்வெட்டி முதலானவற்றைக் கொடுத்தல்.

(3) **அபத்யானம்** :—அயலார் மனைவி, தனம், தான்யம் முதலான பொருள்கள் எவ்வகையினுல் கெடும் என்று மனத்தால் சிந்தித்தல்.

(4) **துஶ்ஶ்ருதி** :— ராகத்வேஷத்தினை யுண்டு பண்ணும் நூல்களைப் படித்தல், கேட்டல்.

(5) **ப்ரமாதசர்யம்**:—பிரயோஜனமின்றி நீர்தெளித்தல், நெருப்பெரித்தல், மரம் செடி கொடிகளை அறுத்தல் முதலியன.

ஶிக்ஷாவிரதம் நான்கு வகை : அவை—ஸாமாயிகம், ப்ரோஷதோபவாஸம், உபபோகபரிபோகபரிமாண விரதம், அதிதிஸம்விபாகவிரதம் என்பன. அவற்றுள்—

(1) **ஸாமாயிகம் :**— பாபம் வருங் கார்யங்களை விட்டு, காலை மாலை மத்யான்னம் ஆகிய மூன்று காலங்களிலும் பஞ்சபரமேஷ்டிகுணஸ்தவனம், ஆத்மவிசாரணை முதலியவற்றைச் செய்தல்.

(2) **ப்ரோஷதோபவாஸம்:**—பர்வதிதியின் முன்-தினமும் பின்தினமும் ஒரு வேளை உண்ணுதல், பர்வதிதியில் உபவாஸம் இருத்தல். அவ்வாறே அஷ்டமி திதியில் உபவாஸம் இருக்க வேண்டியதாயின், ஸப்தமி திதியன்றும் நவமிதிதியன்றும் ஒரு வேளை உண்ணுதல், அஷ்டமிதிதியில் உபவாஸம் இருத்தல்.

(3) **உபபோகபரிபோகபரிமாணவிரதம் :**— ஒருதரம் அனுபவித்துத் திரும்ப அனுபவிக்க இயலாத பூமாலை, தாம்பூலம் முதலிய போகப்பொருள்களையும், அடிக்கடி அனுபவிக்கத்தகுந்த கட்டில், மெத்தை, மனைவி, வீடு முதலான உபபோகப்பொருள்களையும் 'இவ்வளவு போதுமானது' என்று அளவு செய்துகொள்ளுதல்.

(4) **அதிதிஸம்விபாகம் :**— முனிகட்கும், விரதிகட்கும், விருந்தாளிகட்கும் அன்னம், புஸ்தகம் முதலான-வற்றைக் கொடுத்தல். (21)

## ஸல்லேகனைசெய்தல் அவஶ்யம் என்பது

258. 𑌮𑌾𑌰𑌣𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑍀𑌂 𑌸𑌲𑍍𑌲𑍇𑌹𑌨𑌾𑌂 𑌜𑍋𑌷𑌿𑌤𑌾 ॥௨௨॥

மாரணாந்திகீம் ஸல்லேகநாம் ஜோஷிதா ॥

(ப - ரை.) 𑌮𑌾𑌰𑌣𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑍀𑌂 - மரணசமயத்தில், 𑌸𑌲𑍍𑌲𑍇𑌹𑌨𑌾𑌂 - ஸல்லேகநத்தினை, 𑌜𑍋𑌷𑌿𑌤𑌾 - செய்யத்தக்கது.

**கருத்துரை** :— மானிடர்கள் அனைவரும் ஸல்லேகனா பூர்வகம் இறந்தால் நல்ல பிறவி யுண்டாகும். அதுவின்றி, ராகத்வேஷபாவனையுடன் கிணற்றில் விழுந்து இறத்தல், விஷம் தின்று இறத்தல் முதலியன துர்க்கதிக்குக் காரண மாகும். துர்ப்பாவனையினால் இறப்பவர் பேய், பிசாசுக ளாகவும், நாரகராகவும், கெட்ட ஜந்துக்களாகவும் ஜனிப்பர்.

**ஸல்லேகனை** :— இவ்வுலகஸம்பந்த வியாபாரத்தினை விட்டு, ராகத்வேஷங்க ளின்றி, உடலைக் கிருஷம் செய்து இறத்தல். இவ்வண்ணம் இறத்தல் ஆத்மகாத மாகாது. கோபத்தினாலோ அல்லது ஆசையினாலோ, 'இறத்தல் வேண்டும்' என்று விஷம் தின்று இறத்தல், கிணற்றில் விழுந்து இறத்தல் முதலியன ஆத்மகாத மாகும்.

ஸல்லேகனை இருவகை. அவை :— பக்த ப்ரத்யாக் யானம், ப்ராயோபகமனம் என்பன. அவற்றுள்—

(1) **பக்தப்ரத்யாக்யானம்** :— அன்னத்தை விட்டுப் பால் குடித்தல், பாலை விட்டு நீர் குடித்தல், இவ்வண்ணம் முறையே உணவினைக் குறைத்து உடலை ஒடுக்குதல்.

(2) **ப்ராயோபகமனம்** :—முறையே உணவினை விடுவ தின்றி, ஒருமுறையே அன்னம் பானம் முதலியவற்றை விட்டு, உடலின் சக்தியைக் குறைத்தல்.

**குறிப்பு** :— தான் மனம் வைத்து உடலை ஒடுக்கு தலால், மரணசமயத்தில், 'இந்த உடலையும் உறவினரையும் விட்டு இறக்கின்றோம்' என்ற எண்ணம் உண்டாகாது. ஆதலால் அந்த மரணம் நல்ல மரணமாகும். மரணசமயத் தில் எண்ணம் எவ்வாறுளதோ, அதற்குத் தக்க பிறவிதான் கிடைக்கும். ஆதலால், மரணசமயத்தில் பாவனை நல்ல- தாகவே இருக்கவேண்டு மென்றே, உலகப்பற்றையும் உடல்பற்றையும் விடவேண்டியதற்காக ஸல்லேகனை அவச்யமான தென்று கூறப்பட்டது. (22)

## ஸம்யக்தர்சனத்தின் ஐந்து அதிசாரங்கள்

259. ஶங்கா காங்க்ஷா விசிகித்ஸா ऽந்யத்ருஷ்டி
ப்ரஶம்ஸா ஸம்ஸ்தவா: ஸம்யக்த்ருஷ்டே
ரதிசாரா: ॥ ௨௩ ॥

ஶங்காகாங்க்ஷாவிசிகித்ஸாऽந்யத்ருஷ்டி
ப்ரஶம்ஸா ஸம்ஸ்தவா : ஸம்யக்த்ருஷ்டே
ரதிசாரா: ॥

(ப - ரை.) ஶங்கா - ஸ்ரீஜிநபகவான் உரைத்த ஸூக்ஷ்மமான தத்த்வம் உண்டோ இல்லையோ என்று சந்தேஹித்தல், காங்க்ஷா-ஸம்ஸார ஸுகத்தினை விரும்புதல், விசிகித்ஸா - ஏழைகளையும் ஆடை அணியாத முனிகளையும் கண்டு அருவருப்படைதல், அந்யத்ருஷ்டி ப்ரஶம்ஸா - மித்யாத்ருஷிடிகளின் ஜ்ஞானம் சாரித்ரம் முதலான குணங்களை மனத்தால் ஸம்மதித்தல், அந்யத்ருஷ்டிஸம்ஸ்தவா: - மித்யாத்ருஷ்டிகளின் குணங்களைக் கொண்டாடுதல் ஆகிய இவை ஐந்தும், ஸம்யக்த்ருஷ்டே: - ஸம்யக்திருஷ்டியின், அதிசாரா: - அதிசாரங்கள். (23)

## விரதம் சீலம் ஆகிய இவைகளின் அதிசாரங்கள்

260. வ்ரதஶீலேஷு பஞ்ச பஞ்ச யதாக்ரமம் ॥
வ்ரதஶீலேஷு பஞ்ச பஞ்ச யதாக்ரமம் ॥

(ப - ரை) வ்ரதஶீலேஷு - விரதங்களுள்ளும் சீலங்களுள்ளும், யதாக்ரமம் - முறையே, பஞ்ச பஞ்ச - ஐந்தைந்து அதிசாரங்கள் உள்ளன. (24)

## அஹிம்ஸாணுவிரதத்தின் அதிசாரங்கள் ஐந்து

261. பந்தவதச்சேதாதிபாராரோபணான்னபான
நிரோதா: ॥ ௨௫ ॥

பந்தவதச்சேதாதிபாராரோபணாந்நபாந
நிரோதா: ॥

(ப ரை.) 𑌬𑌨𑍍𑌧-தன்னிஷ்டப்படி செல்லுதலைத் தடுத்தல்; அதாவது மனிதரைச் சிறையில் அடைத்தல், விலங்கிடுதல், பசு பக்ஷிகளைக் கூண்டிலடைத்தல், 𑌵𑌧-கோல், தடி, சாட்டை முதலியவற்றால் அடித்தல், 𑌛𑍇𑌦 - காது, வால் முதலியவற்றைக் கத்தரித்தல், 𑌅𑌤𑌿𑌭𑌾𑌰𑌾𑌰𑍋𑌪𑌣 - அளவுக்குமீறி அதிகச்சுமை ஏற்றுதல், 𑌅𑌨𑍍𑌨𑌪𑌾𑌨𑌨𑌿𑌰𑍋𑌧 - வேளை தவறித் தீனி வைத்தல், நீர் குடிக்க விடுதல், போஜனமளித்தல் ஆகிய இவை ஐந்தும் அஹிம்ஸாணுவிரதத்தின் அதிசாரங்கள். (25)

## ஸத்யாணுவிரதத்தின் அதிசாரங்கள் ஐந்து

262. 𑌮𑌿𑌥𑍍𑌯𑍋𑌪𑌦𑍇𑌶𑌰𑌹𑍋𑌭𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌨
𑌕𑍂𑌟𑌲𑍇𑌖𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌨𑍍𑌯𑌾𑌸𑌾𑌪𑌹𑌾𑌰
𑌸𑌾𑌕𑌾𑌰𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌭𑍇𑌦𑌾𑌃 ॥ உசு ॥

மித்யோபதேஶரஹோப்யாக்யாந
கூடலேகக்ரியாந்யாஸாபஹார
ஸாகாரமந்த்ரபேதா: ॥

(ப - ரை.) 𑌮𑌿𑌥𑍍𑌯𑍋𑌪𑌦𑍇𑌶 - ஸ்வர்க்கம் மோக்ஷம் ஆகிய இவைகளின் வழியை அறியாத ஜனங்கட்கு உண்மையில்லாததைக் கூறுதல், 𑌰𑌹𑍋𑌭𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌨 - ரஹஸ்யத்தினை வெளியிடுதல், 𑌕𑍂𑌟𑌲𑍇𑌖𑌕𑍍𑌰𑌿𑌯𑌾-பொய்ப் பத்ரம் முதலியன எழுதுதல், 𑌨𑍍𑌯𑌾𑌸𑌾𑌪𑌹𑌾𑌰 - ஒருவர் தன்னிடம் இருப்புவைத்த பொருள்களுள் சிலவற்றையோ அல்லது முழுவதையுமோ அபஹரித்தல், 𑌸𑌾𑌕𑌾𑌰𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌭𑍇𑌦𑌃 - குறிப்பினால் ஒருவருடைய மனத்திலுள்ள அபிப்ராயத்தினை அறிந்து அதனை வெளிப்படுத்துதல் ஆகிய இவை ஐந்தும் ஸத்யாணுவிரதத்தின் அதிசாரங்கள். (26)

## அசௌர்யாணுவிரதத்தின் அதிசாரங்கள்

263. 𑌸𑍍𑌤𑍇𑌨𑌪𑍍𑌰𑌯𑍋𑌗𑌤𑌦𑌾𑌹𑍃𑌤𑌾𑌦𑌾𑌨𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌰𑌾𑌜𑍍𑌯𑌾𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑌹𑍀𑌨𑌾𑌧𑌿𑌕𑌮𑌾𑌨𑍋𑌨𑍍𑌮𑌾𑌨𑌪𑍍𑌰𑌤𑌿𑌰𑍂𑌪𑌕𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌾𑌃 ॥ ௨௭ ॥

ஸ்தேநப்ரயோகததாஹ்ருதாதாநவிருத்தராஜ்யாதிக்ரமஹீநாதிகமாநோந்மாநப்ரதிரூபகவ்யவஹாரா: ॥

(ப - ரை.) 𑌸𑍍𑌤𑍇𑌨𑌪𑍍𑌰𑌯𑍋𑌗 - கள்ளனைக் களவு செய்யும்படி தூண்டி அனுப்புதல், கள்ளனுக்குக் களவுக்குத் தக்க உபாயத்தினைக்கூறுதல், 𑌤𑌦𑌾𑌹𑍃𑌤𑌾𑌦𑌾𑌨 - களவு செய்துகொண்டு வந்த பொருள்களை வாங்கிக்கொள்ளுதல், 𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌰𑌾𑌜𑍍𑌯𑌾𑌤𑌿𑌕𑍍𑌰𑌮 - அரசியல்சட்டத்தை மீறுதல், 𑌹𑍀𑌨𑌾𑌧𑌿𑌕𑌮𑌾𑌨𑍋𑌨𑍍𑌮𑌾𑌨 - பொருள்களை வாங்கும்போது அதிகமாக நிறுத்தும் அளந்தும் வாங்குதல், விற்கும்போது குறைவாக நிறுத்தும் அளந்தும் கொடுத்தல், 𑌪𑍍𑌰𑌤𑌿𑌰𑍂𑌪𑌕𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌃 - அதிக விலையுள்ள பொருள்களில் குறைந்த விலையுள்ள பொருளைக் கலந்து விற்றல்; அதாவது நெய்யில் எண்ணெயையும், பாலில் நீரையும், கேழ்வரகில் மணலையும் கலந்து விற்றல் போல்வது. இவை ஐந்தும் அசௌர்யாணுவிரதத்தின் அதிசாரங்கள். (27)

## பிரம்மசர்யாணுவிரதத்தின் அதிசாரங்கள்

264. 𑌪𑌰𑌵𑌿𑌵𑌾𑌹𑌕𑌰𑌣𑍇𑌤𑍍𑌵𑌰𑌿𑌕𑌾𑌪𑌰𑌿
𑌗𑍃𑌹𑍀𑌤𑌾𑌽𑌪𑌰𑌿𑌗𑍃𑌹𑍀𑌤𑌾𑌗𑌮𑌨𑌾𑌨𑌙𑍍𑌗
𑌕𑍍𑌰𑍀𑌡𑌾𑌕𑌾𑌮𑌤𑍀𑌵𑍍𑌰𑌾𑌭𑌿𑌨𑌿𑌵𑍇𑌶𑌾𑌃 ॥ ௨௮ ॥

பரவிவாஹகரணேத்வரிகா பரிக்ருஹீதாऽபரி
க்ருஹீதாகமநாநங்கக்ரீடா
காமதீவ்ராபிநிவேசா: ॥

(ப - ரை.) பரவிவாஹகரண - அயலாருக்குத் தான் மணம் செய்துவைத்தல், பரிக்ருஹீதாஇத்வரிகா கமந - கணவனுடன் அல்லது ஒருவன்வசத்தில் இருக்கும் விபசாரிணிஸ்திரியினிடத்தில் செல்லுதல், அபரிக்ருஹீதாஇத்வரிகாகமந - யஜமானனில்லாதவியபசாரிணியினிடம் அல்லது தாசியினிடம் செல்லுதல், அநங்கக்ரீடா- காமக்ரீடைக்கு உரிய அங்கத்தினைவிட்டு வேறு இடத்தில் க்ரீடித்தல், காமதீவ்ராபிநிவேஶ: - காமஸேவை செய்வதில் அதிக ஆவலுடையவனயிருத்தல் ஆகிய இவை ஐந்தும் பிரம்மசர்யாணுவிரதத்தின் அதிசாரங்கள். (28)

## பரிக்ரஹபரிமாணுவிரதத்தின் அதிசாரங்கள்

265. க்ஷேத்ரவாஸ்துஹிரண்யஸுவர்ணதநதாந்ய
தாஸீதாஸகுப்யப்ரமாணாதிக்ரமா: ॥ ௨௯ ॥

க்ஷேத்ரவாஸ்துஹிரண்யஸுவர்ணதநதாந்ய
தாஸீதாஸகுப்யப்ரமாணாதிக்ரமா: ॥

(ப - ரை) க்ஷேத்ரவாஸ்துப்ரமாணாதிக்ரம: - நெற்பயிர் முதலானவை விளையும் வயல், வீடு ஆகிய இவைகளை அளவு செய்துகொண்டதனினும் அதிகமாக வைத்துக் கொள்ளுதல், ஹிரண்யஸுவர்ணப்ரமாணாதிக்ரம: - ரூபாய் முதலிய நாணயம், பொன், காசு, ஆகிய இவைகளை அளவு செய்துகொண்டதனினும் அதிகமாகச் சேகரித்து வைத்துக்கொள்ளுதல், தநதாந்யப்ரமாணாதிக்ரம: - பசு, எருமை முதலானவைகளையும் தான்யங்களையும் அளவு செய்துகொண்டதனினும் அதிகமாகச் சேகரித்து வைத்துக்கொள்ளுதல், தாஸீதாஸப்ரமாணாதிக்ரம: - அடிமையாட்களை அதிகமாகவைத்துக்கொள்ளுதல், குப்யப்ரமாணாதிக்ரம: - துணி, பாத்திரம் முதலானவற்றை

அளவுக்கு மீறி அதிகமாகச் சேகரித்து வைத்துக்கொள்ளுதல் ஆகிய இவை ஐந்தும் பரிக்ரஹபரிமாணுவிரதத்தின் அதிசாரங்கள். (29)

## திக்விரதத்தின் அதிசாரங்கள்

266. ஊர்த்வாதஸ்திர்யக்வ்யதிக்ரமக்ஷேத்ரவ்ருத்தி
ஸ்ம்ருத்யந்தராதாநாநி || ௩௰ ||

ஊர்த்வாதஸ்திர்யக்வ்யதிக்ரமக்ஷேத்ர
வ்ருத்தி ஸ்ம்ருத்யந்தராதாநாநி ||

(ப - ரை) ஊர்த்வவ்யதிக்ரம - தான் அளவு செய்து கொண்ட உயரத்திற்குமேல் உயரமான மலையின் மீது ஏறுதல், அதோவ்யதிக்ரம - தான் அளவு செய்து கொண்டதற்குக்கீழ் ஆழமான கிணற்றில் இறங்குதல், திர்யக்வ்யதிக்ரம - ஸம பூமியில் தான் செய்துகொண்ட வரம்புக்கு அதிகமாகச் (நெடிது) செல்லுதல், க்ஷேத்ரவ்ருத்தி - தான் அளவு செய்துகொண்ட எல்லையினை அதிகமாக வளர்த்துதல், ஸ்ம்ருத்யந்தராதாநாநி - தான் அளவு செய்துகொண்ட மர்யாதையை மறந்து விடுதல் ஆகிய இவை ஐந்தும் திக்விரதத்தின் அதிசாரங்கள். (30)

## தேசவிரதத்தின் அதிசாரங்கள்

267. ஆநயநப்ரேஷ்யப்ரயோகசப்தரூபாநுபாத
புத்கலக்ஷேபா: || ௩௧ ||

ஆநயநப்ரேஷ்யப்ரயோகஶப்தரூபாநுபாத
புத்கலக்ஷேபா: ||

(ப - ரை) ஆநயந - தான் அளவு செய்துகொண்ட இடத்திற்கு வெளியிலிருந்து பொருள்களை வரவழைத்தல், ப்ரேஷ்யப்ரயோக - தான் அளவு செய்துகொண்ட

எல்லைக்குப்புறம்பில் அடிமையாள், கடிதம் முதலியவற்றை அனுப்புதல், 𑌶𑌬𑍍𑌦𑌾𑌨𑍁𑌪𑌾𑌤 - இருமுதல், தும்முதல், கனைத்தல், கைதட்டுதல் முதலியவைகளால் தான் அளவு செய்துகொண்ட எல்லைக்குப் புறம்பில் இருக்கும் மனிதருக்குத் தன் அபிப்ராயத்தினை வெளிப்படுத்துதல், 𑌰𑍂𑌪𑌾𑌨𑍁𑌪𑌾𑌤 - தான் அளவு செய்துகொண்டதற்குப் புறம்பில் இருக்கும் மனிதர்கட்கு உயரமான கல் மரம் முதலியவற்றின்மீது நின்று தன் உருவைக் காண்பித்தல், 𑌪𑍁𑌦𑍍𑌗𑌲𑌕𑍍𑌷𑍇𑌪𑌾: - தான் அளவு செய்துகொண்ட மர்யாதைக்குப்புறம்பில் கல், மண், ஓடு முதலியவற்றை எறிந்து தன் இச்சையினைப் பூர்த்திசெய்தல் ஆகிய இவை ஐந்தும் தேசவிரதத்தின் அதிசாரங்கள். (31)

## அனர்த்ததண்டவிரதத்தின் அதிசாரங்கள்

268. 𑌕𑌨𑍍𑌦𑌰𑍍𑌪𑌕𑍌𑌤𑍍𑌕𑍁𑌚𑍍𑌯𑌮𑍌𑌖𑌰𑍍𑌯𑌾
𑌸𑌮𑍀𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑍋𑌪𑌭𑍋𑌗𑌪𑌰𑌿
𑌭𑍋𑌗𑌾𑌨𑌰𑍍𑌥𑌕𑍍𑌯𑌾𑌨𑌿 || ௩௨ ||

கந்தர்பகௌத்குச்யமௌகர்யாஸமீக்ஷ
யாதிகரணோபபோகபரிபோகாநர்தக்யாநி ||

(ப - ரை.) 𑌕𑌨𑍍𑌦𑌰𑍍𑌪 - அதிக ஆவலால் பரிஹாஸத்துடன்கூடி யோக்யமில்லாத வார்த்தைகளைப் பேசுதல், 𑌕𑍌𑌤𑍍𑌕𑍁𑌚𑍍𑌯 - கையினாலும் முகத்தினாலும் ஜாடை செய்து கொண்டு வீண்வார்த்தை பேசுதல், 𑌮𑍌𑌖𑌰𑍍𑌯 - துஷ்டத்தன்மையினால் அளவுக்கு மீறி அதிகமாகப் பேசுதல், 𑌅𑌸𑌮𑍀𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌧𑌿𑌕𑌰𑌣 - விசாரிக்காமல் அதிகமான கார்யத்தினைச் செய்தல், 𑌉𑌪𑌭𑍋𑌗𑌪𑌰𑌿𑌭𑍋𑌗𑌾𑌨𑌰𑍍𑌥𑌕𑍍𑌯𑌾𑌨𑌿 - போகப் பொருள்களையும் உபபோகப்பொருள்களையும்

அவஶ்யமானவற்றிற்கு அதிகமாகச் சேகரித்து வைத்துக் கொள்ளுதல் ஆகிய இவை ஐந்தும் அனர்த்ததண்ட விரதத்தின் அதிசாரங்கள். (32)

## ஸாமாயிக (சிக்ஷா) விரதத்தின் அதிசாரங்கள்

269. 𑌯𑍋𑌗𑌦𑍁𑌷𑍍𑌪𑍍𑌰𑌣𑌿𑌧𑌾𑌨𑌾𑌨𑌾𑌦𑌰
𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯𑌨𑍁𑌪𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌨𑌿 || ௩௩ ||

யோகதுஷ்ப்ரணிதாநாநாதர
ஸ்ம்ருத்யநுபஸ்தாநாநி ||

(ப - ரை.) 𑌯𑍋𑌗𑌦𑍁𑌷𑍍𑌪𑍍𑌰𑌣𑌿𑌧𑌾𑌨 - மனத்தைக் கெட்டவழியில் செலுத்துதல், வீண்வார்த்தைபேசுதல், கெட்ட கார்யத்தினைச் செய்தல், 𑌅𑌨𑌾𑌦𑌰 - ஆதரமின்மை அதாவது ஸாமாயிகஞ் செய்யும்போது உத்ஸாஹமின்றிச் செய்தல், 𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯𑌨𑍁𑌪𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌨𑌿 - ஸாமாயிகஸமயத்தினை மறந்துவிடுதல் ஆகிய இவை ஐந்தும் ஸாமாயிகவிரதத்தின் அதிசாரங்கள். (33)

## ப்ரோஷதோபவாஸவிரதத்தின் அதிசாரங்கள்

270. 𑌅𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌵𑍇𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌪𑍍𑌰𑌮𑌾𑌰𑍍𑌜𑌿𑌤𑍋𑌤𑍍𑌸𑌰𑍍𑌗𑌾
𑌦𑌾𑌨𑌸𑌂𑌸𑍍𑌤𑌰𑍋𑌪𑌕𑍍𑌰𑌮𑌣𑌾𑌨𑌾𑌦𑌰
𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯𑌨𑍁𑌪𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌨𑌿 || ௩௪ ||

அப்ரத்யவேக்ஷிதாப்ரமார்ஜிதோத்ஸர்க்கா
தாநஸம்ஸ்தரோபக்ரமணாநாதர
ஸ்ம்ருத்யநுபஸ்தாநாநி ||

(ப - ரை) 𑌅𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌵𑍇𑌕𑍍𑌷𑌿𑌤𑌾𑌪𑍍𑌰𑌮𑌾𑌰𑍍𑌜𑌿𑌤 - நுண்ணுயிர்கள் உள்ளனவோ என்று பூமியைப் பார்க்காமலும் சுத்தம் செய்யாமலும், 𑌉𑌤𑍍𑌸𑌰𑍍𑌗 - மலமூத்ரம் கழித்தல்,

ஆதாந - பொருள்களை எடுத்தல், ஸம்ஸ்தரோபக்ரமண - பாய், துணி முதலியவற்றை விரித்தல், அநாதர - பசியினால் மெலிந்து தர்மகார்யங்களை உத்ஸாஹமின்றிச் செய்தல், ஸ்ம்ருத்யநுபஸ்தாநாநி - செய்யத்தகுந்த தர்மகார்யங்களை மறந்துவிடுதல் ஆகிய இவை ஐந்தும் ப்ரோஷதோபவாஸ விரதத்தின் அதிசாரங்கள். (34)

## உபபோகபரிபோகபரிமாணவிரதத்தின் அதிசாரங்கள்

271. ஸசித்தஸம்பந்தஸம்மிஶ்ராபிஷவ
துஷ்பக்வாஹாரா: || ௩௫ ||

ஸசித்தஸம்பந்தஸம்மிஶ்ராபிஷவ
துஷ்பக்வாஹாரா: ||

(ப - ரை) ஸசித்த - ஜீவனுள்ள பச்சைக்கறிகாய்கள், ஸம்பந்த - ஸசித்தவஸ்துவினுடன் சம்பந்தப்பட்ட பொருள்கள், ஸம்மிஶ்ர - ஸசித்தவஸ்துவினுடன் கலந்த வஸ்துக்கள், அபிஷவ - மயக்கத்தினைத் தரும் பொருள்கள், துஷ்பக்வாஹாரா:— நன்றாகப் பழுக்காத காய், அதிகமாகப்பழுத்துக்கெட்ட பழம் ஆகிய உணவுகளை உண்ணுதல் இவை ஐந்தும் உபபோகபரிபோகபரிமாணவிரதத்தின் அதிசாரங்கள். (35)

## அதிதிஸம்விபாகவிரதத்தின் அதிசாரங்கள்

272. ஸசித்தநிக்ஷேபாபிதாநபரவ்யபதேஶ
மாத்ஸர்யகாலாதிக்ரமா: || ௩௬ ||

ஸசித்தநிக்ஷேபாபிதாநபரவ்யபதேஶ
மாத்ஸர்யகாலாதிக்ரமா: ||

(ப - ரை.) ஸசித்தநிக்ஷேபாபிதாந - தாமரை, வாழை முதலானவற்றின் பச்சைஇலைகள்மீது உணவுப்

பொருள்களை வைத்தல், உணவுப்பொருள்களை பச்சை யிலைகளால் மூடுதல், பரவ்யபதேஶ - பிறர்பொருளைக் கொண்டு தானஞ் செய்தல், மாத்ஸர்ய - மற்றொருவர் தானம் செய்வதைக் கண்டு பொறுமைகொள்ளுதல் அல்லது ஆதரவின்றித் தானம் செய்தல், காலாதிக்ரமா: - காலந் தவறி உணவு அளித்தல் ஆகிய இவை ஐந்தும் அதிதிஸம்விபாகவிரதத்தின் அதிசாரங்கள். (36)

## ஸல்லேகனையின் அதிசாரங்கள்

273. ஜீவிதமரணாஶம்ஸாமித்ராநுராக
ஸுகாநுபந்தநிதாநாநி || ௩௭ ||

ஜீவிதமரணாஶம்ஸாமித்ராநுராக
ஸுகாநுபந்தநிதாநாநி ||

(ப - ரை.) ஜீவிதாஶம்ஸா - ஸல்லேகனை தரித்த பிறகு இன்னும் சில நாட்கள் பிழைத்திருத்தல் வேண்டுமென்று இச்சித்தல், மரணாஶம்ஸா - வேதனையினால் வியாகுல மடைந்து சீக்கிரம் இறந்துபோகவேண்டுமென்று விரும்புதல், மித்ராநுராக - முன்பு நண்பர்களுடன்கூடி விளையாடினதை நினைத்தல், ஸுகாநுபந்த - முன்பு அனுபவித்த ஸுகத்தினை நினைத்தல், நிதாந - மறுபிறப்பில் நல்ல பதவியை யடையவேண்டுமென்று விரும்புதல் ஆகிய இவை ஐந்தும் ஸல்லேகனையின் அதிசாரங்கள். (37)

## தானம்

274. அநுக்ரஹார்த்தம் ஸ்வஸ்யாதிஸர்கோ தாநம்

அநுக்ரஹார்த்தம் ஸ்வஸ்யாதிஸர்கோ தானம் ||

(ப - ரை.) அநுக்ரஹார்த்தம் - தனக்கும் பிறருக்கும் உபகாரமாகும்பொருட்டு, ஸ்வஸ்ய - தன் பொருள்களை, அதிஸர்க: - கொடுத்தல், தானம் - தானமாகும்.

குறிப்பு : ஸ்வோபகாரம்—தானம்செய்வதனுல் வரும் புண்யத்தைத்தானம் செய்பவர் பெறுதல்.

பரோபகாரம் :—தானத்தைப் பெறுபவரின் ஸம்யக் ஜ்ஞாநம், ஸம்யக்சாரித்ரம் முதலியவை விருத்தி அடைதல். (38)

## தாநவிஶேஷம்

275. விதித்ரவ்யதாத்ருபாத்ரவிஶேஷாத்தத்விஶேஷ: ।

விதித்ரவ்பதாத்ரு'பாத்ரவிஶேஷாத்தத்விஶேஷ: ||

(ப - ரை.) விதி - ப்ரதிக்ரஹம் முதலான நவதா பக்தி (நவபுண்யக்ரமம்), த்ரவ்ய - தபம், ஸ்வாத்யாயம், த்யானம் முதலியவற்றை விருத்தி செய்யும் உணவுப் பொருள்கள், தாத்ரு - ஏழு குணங்களுடன்கூடித் தானம் செய்பவன், பாத்ர - தானங் கொள்பவராகிய ஶ்ராவக, ஶ்ராவகீ, ஆர்யிகா, யதிகள் ஆகிய இவர்களின், விஶேஷாத்- விஶேஷத்தினுல், தத்விஶேஷ: - தானமும் விஶேஷமாகும்.

கருத்துரை :—விதி, த்ரவ்யம், தாத்ரு, பாத்ரம் ஆகிய இவைகள் எவ்வாறுள்ளனவோ அவைகளுக்குத் தக்கவாறு தானமும் விசேஷப்படும். விதி முதலானவையும், ஸம்யக் ஜ்ஞானம் ஸம்யக்சாரித்ரம் முதலியவற்றைக் கெடுக்கும் உணவுப்பொருள்களாகிய த்ரவ்யமும், ஏழு குணங்களுடன் கூடியிராததாத்ருவும், ஸாமான்யமான பாத்ரமும் இருந் தால் தானமும் குறைவாகக்காணப்படும்.

**ஒன்பது விதிகள் (நவதாபக்தி):—**

1. ப்ரதிக்ரஹ:— ஆஹாரத்திற்கு எதிர்கொண்டழைத்தல்.
2. உச்சஸ்தானம்—உயர்ந்த ஆஸநத்தின்மேல் அமர வைத்தல்.
3. பாதோதகம்—பாதப்ரக்ஷாளனம் செய்தல்.
4. அர்ச்சனம்—அஷ்டவித அர்ச்சனை செய்தல்.
5. வந்தனா—நமோஸ்து செய்தல்.
6. 7. 8. த்ரிகரணசுத்தி:—மனம் சுத்தமாக இருத்தல், அவரெதிரில் வீண் வார்த்தை பேசாதிருத்தல், அவரெதிரில் பாபகார்யம் செய்யாதிருத்தல்.
9. ஆஹாரசுத்தி:—சுத்தமான ஆஹார மளித்தல்.

**ஏழு குணங்கள் :—**

1. ஸ்ரத்தா— 'எனது புண்யஉதயத்தினால் இன்று ஆஹாரம் அளிக்க நேர்ந்தது' என்று மன மகிழ்தல்.
2. பக்தி:—ஆஹாரங்கொள்ளும்வரையில் அங்கு வணக்கத்துடன் நின்றிருத்தல்.
3. அலோலுபத்வம்—செய்து வைத்த உணவுகளைத் தமக்கு வேண்டுமென்ற விருப்பம் இன்றிக் கொடுத்தல்.
4. தயா—தயவுடன் இருத்தல். அதாவது உணவு அளிக்குஞ் சமயத்தில் ஜீவபாதையின்றிக் கொடுத்தல்.

5. ஶக்தி:—தானம் அளிப்பதில் சக்தி இருத்தல்.

6. க்ஷமா—உணவு அளிக்கும் ஸமயத்தில் மனைவி மக்கள், ஆட்கள் இவர்களை முனியாதிருத்தல்.

7. விஜ்ஞாநம்—ஆஹாரம் அளிக்கும் முறையை யறிந்திருத்தல்.

பாத்ரம் மூன்றுவகை :—

1. ஜகந்யபாத்ரம்— ஸம்யக்த்வத்தினை மாத்திரம் உடையவர்.

2. மத்யமபாத்ரம் —ஶ்ராவகவிரதத்தினை உடையவர்.

3. உத்தமபாத்ரம்—மஹாவிரதத்தினை உடையவர்.

இதி ஶ்ரீ உமாஸ்வாமிவிரசிதே தத்த்வார்த்தாதிகமே மோக்ஷஶாஸ்த்ரே ஸப்தமோऽத்யாய:

ஸ்ரீ உமாஸ்வாமிஆசார்யர் இயற்றிய தத்த்வார்த்த ஸூத்ரமென்னும் மோக்ஷஶாஸ்த்ரத்தின் ஏழாம் அத்யாயம் முற்றிற்று.

## கேள்விகள்

1. விரதி என்பவர் யார்?

2. அசௌர்யவிரதத்தின் ஐந்து பாவனைகள் எவை?

3. மைத்ரீ, ப்ரமோத, காருண்ய, மாத்யஸ்த பாவனைகளின் கருத்தென்ன?

4. ஈர்யாஸமிதியுடன் (கீழ் நோக்கி) நடப்பவனுடைய காலடியில் ஜீவன் மிதிபட்டு இறந்துபோனால் பாபம் உண்டா? இல்லையா?

5. மூர்ச்சையின் லக்ஷணம் என்னை?

6. ஸம்யக்தர்சனத்தின் அதிசாரங்களை அறிவித்து, ஸல்லேகனையின் லக்ஷணத்தினை எழுதுக.

7. ஸாகாரமந்த்ரபேதம், விமோசிதாவாஸம், குப்யம், ஊர்த்வம், வ்யதிக்ரமம், ஶல்யம் ஆகிய இவைகளின் பொருள் கூறுக.

8. ஶ்ராவகவிரதத்தினைச் சுருக்கமாக எழுதுக.

9. திக்விரதத்திற்கும் தேஶவிரதத்திற்கும் உள்ள வித்தியாஸம் என்னை?

10. எந்தெந்தக் கதியில் பிறந்தவர் விரதத்தினைத் தரிப்பர்?

# அத்யாயம் 8

## பந்த தத்த்வம்

### பந்தத்தின் காரணம்

276. 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌵𑌿𑌰𑌤𑌿𑌪𑍍𑌰𑌮𑌾𑌦𑌕𑌷𑌾𑌯
𑌯𑍋𑌗𑌾 𑌬𑌨𑍍𑌧𑌹𑍇𑌤𑌵𑌃 ॥ ௧ ॥

மித்யாதர்ஶநாவிரதிப்ரமாதகஷாய
யோகா பந்தஹேதவ : ॥

(ப - ரை.) 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌦𑌰𑍍𑌶𑌨 - மித்யாதர்சனம், 𑌅𑌵𑌿𑌰𑌤𑌿 - விரதமின்மை, 𑌪𑍍𑌰𑌮𑌾𑌦 - நற்காரியத்தில் ஆதரவின்மை, 𑌕𑌷𑌾𑌯 - குரோதம், மானம், மாயா, லோபம், 𑌯𑍋𑌗 - மனம், வாக்கு, காயம் ஆகிய இவைகள், 𑌬𑌨𑍍𑌧𑌹𑍇𑌤𑌵𑌃 - கர்மபந்தத்திற்குக் காரணங்கள்.

மித்யாதர்சனம் :— உண்மைத்தன்மை யில்லாததை நம்புதல் ; தத்த்வங்களில் நம்பிக்கை உண்டாகாமலிருத்தல். அது இரண்டு வகை. அவை—நைஸர்க்கிகம், பரோபதேசபூர்வகம் என்பன. அவற்றுள்—

(1) நைஸர்க்கிகம் :—பிறருபதேஶமின்றி மித்யாத்வ கர்மோதயத்தினால், தத்த்வமின்மையை நம்புதல். இதனை அக்ருஹீதமித்யாதர்ஶனம் என்றும் கூறுவர்.

(2) பரோபதேச பூர்வகம் :— பிறருபதேசத்தினால் தத்த்வ மின்மையை நம்புதல். இதனை, க்ருஹீதமித்யா தர்சனம் என்பர்

பரோபதேசபூர்வகம் நான்கு வகை. அவை— க்ரியாவாதி, அக்ரியாவாதி, அஜ்ஞாநி, வைநயிகம் என்பன. மற்றும் பரோபதேசபூர்வகம் ஐந்து வகை யாகும்.

அவை—ஏகாந்தமித்யாதர்சனம், விபரீதமித்யாதர்சனம், ஸம்ஶயமித்யாதர்சனம், வைநயிகமித்யாதர்சனம், அஜ்ஞாநமித்யாதர்சனம் என்பன. அவற்றுள்—

(i) ஏகாந்தமித்யாதர்சனம் :—ஒரு பொருளில் பல தன்மைகள் இருப்பினும் அப்பொருளை ஒருதன்மை உடையதென்று உணர்தல் (நம்புதல்). அதாவது, பௌத்தர் வஸ்துவை அநித்ய மென்றும், வேதாந்திகள் முற்றும் நித்யமென்றும் அறிதல் போல்வது.

(ii) விபரீதமித்யாதர்சனம் :—ஆடை அணிந்துள்ளோரை நிர்க்ரந்தர் (முனி) என்றும், கேவலியாகிய அர்ஹத் பகவானும் நாம் உணவு உண்பதுபோல உணவு உண்கிறார் என்றும், பெண்களும் அந்த ஜன்மத்திலேயே மோக்ஷமடைகின்றனர் என்றும் விபரீதமாக அறிதல் (நம்புதல்).

(iii) ஸம்ஶயமித்யாதர்சனம்:—நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம் ஆகிய இவை மோக்ஷத்தினை அடைய வழியாகுமோ ஆகாதோ என்று ஸந்தேஹித்தல்.

(iv) வைநயிகமித்யாதர்சனம்:—தேவர்கள் அனைவரும் ஒரேவிதமானவர் என்றும், மதங்கள் அனைத்தும் ஸமானமானவை என்றும் நம்புதல். கண்ட தெய்வங்களைக் கை கூப்புதல்.

(v) அஜ்ஞாநமித்யாதர்சனம் :— நன்மை தீமையினை விசாரிக்காமல் நம்புதல்.

அவிரதி—பன்னிரண்டு வகை. அவை ஷட்காய ஜீவவதையை விடாமலிருத்தல் ஆறு. ஐம்புலன், மனம் ஆகிய இவைகளை அடக்காமல் இருத்தல் ஆறு. ஆக 12.

ஷட்காயஜீவன்களாவன:—ப்ருத்வீகாயிகஜீவன் (மண்ணை உடலாகக்கொண்ட ஜீவன்), அப்காயிகஜீவன் (ஜலத்தினை உடலாகக் கொண்ட ஜீவன்), தேஜஸ்காயிக ஜீவன் (நெருப்பினை உடலாகக்கொண்ட ஜீவன்), வாயு காயிகஜீவன் (காற்றினை உடலாகக் கொண்ட ஜீவன்),

வனஸ்பதிகாயிகஜீவன் (மரம் செடி முதலியவற்றை உடலாகக்கொண்டஜீவன்), த்ரஸகாயிகஜீவன் (ஈ எறும்பு முதலான ஜீவன்).

ப்ரமாதம் :—ஸமிதி, குப்தி, சுத்தி, தர்மம் ஆகிய நற்கார்யங்களை உத்ஸாஹத்துடன் செய்யாமலிருத்தல்.

ப்ரமாதம் பதினைந்து வகை. அவை—

(1) ஸ்த்ரீகதை :—பெண்கள்மீது காதல் உண்டாக்குங் கதையினை வாசித்தல். (2) ராஜகதை :—கெட்ட அரசர்களின் கதையினையும் சண்டை சமாசாரம் முதலியவற்றையும் வாசித்தல். (3) பக்த கதை :—உண்பதில் விருப்பத்தினைத்தருங் கதையினைப் படித்தல், கேட்டல். (4) ராஷ்ட்ர கதை :—மனத்தைக் கெடுக்குங் கெட்ட தேசக்கதையினை வாசித்தல். (5) குரோதம் :—கோபித்தல். (6) மானம்:—கர்வித்தல். (7) மாயை:—வஞ்சனை செய்தல். (8) லோபம் :- ஆசைப்படுதல். (9) ஸ்பர்ச :—மோஹத்தினால் மிருதுவான பொருள்களைத் தொடுதல். (10) ரஸ:—புலால் புசித்தல், கள் குடித்தல். சுவையான பானகம் குடித்தல். (11) கந்த:—அத்தர், புனுகு முதலிய வாசனைத்ரவ்யத்தினை முகர்தல். (12) ரூப:—சினிமா, நாடகம், நர்த்தனம், அழகான உருவம் ஆகிய இவைகளைப் பார்த்தல். (13) ஶப்த:—விநோதமான பாட்டுமுதலியவற்றைக் கேட்டல். 14) நித்ரா:—அதிகமாக உறங்குதல். (15) ஸ்நேஹம்:—(கெட்டவர்களுடன்) நேசித்தல்.

யோகம்—பதினைந்து வகை. அவை—(1) ஸத்பமனோயோகம். (2) அஸத்யமனோயோகம். (3) உபயமனோயோகம். (4) அனுபயமனோயோகம். (5) ஸத்யவசனயோகம். (6) அஸத்யவசனயோகம். (7) உபயவசனயோகம். (8) அனுபயவசனயோகம். (9) ஔதாரிககாயயோகம். (10) ஔதாரிகமிஶ்ரகாயயோகம். (11) வைக்ரீயிககாயயோகம். (12) வைக்ரீயிகமிஶ்ரகாயயோகம். (13) ஆஹாரககாயயோகம். (14) ஆஹாரகமிஶ்ரகாயயோகம். (15) கார்மணகாயயோகம் என்பன.

**சுத்தி எட்டுவகை:**—அவை—(1) பாவசுத்தி, (2) காய சுத்தி, (3) விநயசுத்தி, (4) ஈர்யாபதசுத்தி, (5) பைக்ஷ்ய சுத்தி, (6) பிரதிஷ்டாபனசுத்தி, (7) ஶயனாஸநசுத்தி, (8) வாக்யசுத்தி என்பன.

கஷாயம் இருபத்தைந்து வகை. அவைகளை இந்த அத்யாயத்தின் ஒன்பதாம் ஸூத்ரத்தில் காண்க.

பஞ்சஸமிதி, த்ரிகுப்தி, தஶதர்மம் ஆகிய இவைகளை ஒன்பதாம் அத்யாயத்தில் காண்க. (1)

## பந்தலக்ஷணம்

277. ஸகஷாயக்வாஜ்ஜீவஃ கஂ௱ணோ யோ௬்யாநு
வுஃஉாநாஃதெ ஸ வஙஃ ॥ ௨ ॥

ஸகஷாயத்வாஜ்ஜீவஃ கர்மணோ யோக்யாந்
புத்கலாநாதத்தே ஸ பந்தஃ ॥

(ப - ரை.) ஜீவஃ - ஜீவனனது, ஸகஷாயக்வாத் - குரோதம், மானம், மாயை, லோபம் என்னும் கஷாயத்துடன் கூடியிருப்பதனால், கஂ௱ணஃ - கர்மத்திற்கு, யோ௬்யாநு - தகுந்த; யோக்யமான, வுஃஉாநு - கார்மண வர்க்கணையினைச்சார்ந்த புத்கலபரமாணுக்களை, ஆஃதெ - ஸ்வீகரிக்கின்றதோ, ஸஃ - அது, வஙஃ - பந்தமாகும்.

கருத்துரை :—ஒரு பாத்திரத்தில் வைக்கப்பட்ட பல வகை ரஸங்கள் விதைகள் புஷ்பங்கள் பழங்கள் ஆகிய இவைகள் ஒன்றாகச்சேர்தலால் மதிரா (மது) சக்தி உண்டாதல்போல, ஆத்மாவினிடத்துச்சேர்ந்த புத்கலங்கள், யோகம் கஷாயம் ஆகிய இவைகளின் நிமித்தத்தினால் கர்மமாகமாறுகின்றன. சேறும் நீரும் ஒன்றாகக் கலத்தல்போல அந்தக் கர்மமும் ஆத்மாவும் ஒன்றாகச்சேர்தல் பந்தமாகும்.

## பந்தத்தின் பேதம் (பந்தவகை)

278. 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌯𑌨𑍁𑌭𑌾𑌗
𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑌾𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑌿𑌧𑌯𑌃 ॥ ௩ ॥

ப்ரக்ருதிஸ்தித்யநுபாக
ப்ரதேஶாஸ்தத்விதய꞉ ॥

(ப - ரை.) 𑌤𑌦𑍍𑌵𑌿𑌧𑌯𑌃 - அந்தப் பந்தத்தின்வகை (நான்கு) அவை, 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿.......𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑌾𑌃 - ப்ரக்ருதி பந்தம், ஸ்திதிபந்தம், அநுபாகபந்தம், ப்ரதேஶபந்தம் என்பன.

**ப்ரக்ருதிபந்தம்**—ப்ரக்ருதியாவது ஸ்வபாவம். வேம்பின் ஸ்வபாவம் கசப்பு. கரும்பின் ஸ்வபாவம் இனிப்பு. அதுபோல, கர்மத்தின் ஸ்வபாவம் இங்கு ப்ரக்ருதி எனப்படும்.

**ஸ்திதிபந்தம்** :—கர்மங்கள் தம் ஸ்வபாவத்தினை விட்டு நீங்காமல் இருத்தல். அதாவது, பாலின் சுவை பாலைவிட்டு நீங்காதிருத்தல்போல்வது.

**அநுபாகபந்தம் அல்லது அநுபவபந்தம்** :—ஆடு, பசு, எருமை முதலானவைகளின்பாலில் சுவையானது (ஒன்றில்) அதிகமும், (ஒன்றில்) குறைவாகவும் இருத்தல்போல, ஜீவனுடைய ப்ரதேசங்களில் இருக்கும் கர்மங்களின் சுகதுக்கத்தினைத் தரும் சக்தியானது ஏறக்குறைய இருத்தல். கர்மங்கள் சுகதுக்கரூபமாக மாறுதல்.

**ப்ரதேஶபந்தம்** — கர்மமாக மாறும் புத்கல அணுக்களின் கூட்டம் ஆத்மாவினிடத்துச் சேர்ந்திருத்தல்.

**குறிப்பு**:—ப்ரதேஶபந்தமும் ப்ரக்ருதிபந்தமும் மன, வசன, காய யோகங்களின் நிமித்தத்தினால் உண்டாகும். ஸ்திதிபந்தமும், அநுபாகபந்தமும் கஷாயத்தின் நிமித்தத்தினால் உண்டாகும்.

## ப்ரக்ருதிபந்தவகை

**279.** 𑌆𑌦𑍍𑌯𑍋 𑌜𑍍𑌞𑌾𑌨𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌵𑌰𑌣𑌵𑍇𑌦𑌨𑍀𑌯
𑌮𑍋𑌹𑌨𑍀𑌯𑌾𑌯𑍁𑌰𑍍𑌨𑌾𑌮𑌗𑍋𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌯𑌾𑌃 ||

ஆத்யோ ஜ்ஞாநதர்ஶநாவரணவேதநீய
மோஹநீயாயுர்நாமகோத்ராந்தராயா: ||

(ப - ரை.) 𑌆𑌦𑍍𑌯𑌃 - முதலாவதாகிய ப்ரக்ருதிபந்தமானது எட்டு வகை. அவை – 𑌜𑍍𑌞𑌾𑌨.........𑌗𑍋𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌯𑌾𑌃 - ஜ்ஞாநாவரணம், தர்சனுவரணம், வேதநீயம், மோஹநீயம், ஆயுஷ்யம், நாமம், கோத்ரம், அந்தராயம் என்பன. அவற்றுள்—

(1) ஜ்ஞாநுவரணம்—ஜ்ஞானத்தை மறைத்தல்.

(2) தர்ஶநுவரணம்—தர்ஶனகுணத்தினை மறைத்தல்.

(3) வேதநீயம்—சுக துக்கங்களைத் தருதல்.

(4) மோஹநீயம்—தன் ஸ்வரூபத்தினை மறந்து பிற பொருள்களைத் தன்னுடையது என்றும், அல்லது தானே என்றும் நினைத்துக்கொள்ளுவதற்குக் காரணமானது.

(5) ஆயுஷ்யம்—கட்டிய ஆயுள் நிலைத்தற்குக் காரணமானது.

(6) நாமம்—உடல் முதலானவை உண்டாதற்குக் காரணமானது.

(7) கோத்ரம்—உயர்வு, தாழ்வு என்னுங் குலங்களில் பிறத்தற்குக் காரணமானது.

(8) அந்தராயம்—லாபம் முதலானவைகளில் விக்னம் உண்டாதற்குக் காரணமானது.

குறிப்பு :—ஜ்ஞாநுவரணம், தர்ஶநுவரணம், மோஹநீயம், அந்தராயம் ஆகிய இவை நான்கும் காதிகர்மமாகும். ஏனைய நான்கும் அகாதிகர்மமாகும்.

காதிகர்மம் :—ஜீவனுடைய அனுஜீவிகுணங்களை (ஸத்பாவ குணங்களை)க் கெடுப்பது.

அகாதிகர்மம்—பிரதிஜீவிகுணங்களை (அபாவரூப குணங்களை) க்கெடுப்பது. ஒரு முறை உண்ட உணவு, ரஸம் ரக்தம் முதலானவைகளாக மாறுதல்போல ஒரு முறை ஸ்வீகரித்த கர்மமானது பலவகையாக மாறும். ஆயின், உணவு முறையே மாறுதல் அடையும். அதாவது, உணவு ரஸரூபமாயும், ரஸம் ரக்தமாயும் மாறும். கர்மமானது அவ்வாறின்றி ஒருமுறையே ஜ்ஞானவரணம் முதலான கர்மங்களாக மாறும். (4)

## ப்ரக்ருதிபந்தத்தின் உட்பிரிவு

280. வஂசநவஷ்யஷ்டாவிஂஶதிசதுர்த்வி

சத்வாரிஂஶத்த்விபஂசபேதா யதாக்ரமம் ॥௫॥

பஞ்சநவத்வ்யஷ்டாவிம்ஶதிசதுர்த்வி

சத்வாரிம்ஶத்த்விபஞ்சபேதா யதாக்ரமம் ||

(ப - ரை.) ஜ்ஞானவரணம் முதலான கர்மங்கள், யதாக்ரமம் - முறையே, பஂச - ஐந்து, நவ - ஒன்பது, த்வி - இரண்டு, அஷ்டாவிஂஶதி - இருபத்தெட்டு, சதுஃ - நான்கு, த்விசத்வாரிஂஶத் - நாற்பத்திரண்டு, த்வி - இரண்டு, பஂச - ஐந்து, பேதாஃ - பேதங்களாக உள்ளன. (5)

## ஜ்ஞானவரணத்தின் ஐந்து பேதங்கள்

281. மதிஶ்ருதாவதிமநஃபர்யயகேவலாநாம் ॥

மதிஶ்ருதாவதிமந:பர்யயகேவலாநாம் ||

(ப - ரை.) ஜ்ஞானவரணம் ஐந்து வகை. அவை, மதி - மதிஜ்ஞானவரணம் (மதிஜ்ஞானத்தை மறைத்தல்), ஶ்ருத - சுருதஜ்ஞானவரணம் (சுருதஜ்ஞானத்தினை

மறைத்தல்), 𑌅𑌵𑌧𑌿 - அவதிஜ்ஞாளுவரணம் (அவதி ஜ்ஞானத்தினை மறைத்தல்), 𑌮𑌨𑌃𑌪𑌰𑍍𑌯𑌯 - மநஃபர்யய ஜ்ஞாளுவரணம் (மனப்பர்யயஜ்ஞானத்தினை மறைத்தல்), 𑌕𑍇𑌵𑌲𑌾𑌨𑌾𑌂 - கேவலஜ்ஞாளுவரணம் (கேவலஜ்ஞானத்தினை மறைத்தல்) என்பன. (6)

### தர்ஶனுவரணத்தின் பேதங்கள்

282. 𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑌵𑌧𑌿𑌕𑍇𑌵𑌲𑌾𑌨𑌾𑌂 𑌨𑌿𑌦𑍍𑌰𑌾
𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌪𑍍𑌰𑌚𑌲𑌾𑌪𑍍𑌰𑌚𑌲𑌾𑌪𑍍𑌰𑌚𑌲𑌾
𑌸𑍍𑌤𑍍𑌯𑌾𑌨𑌗𑍃𑌦𑍍𑌧𑌯𑌶𑍍𑌚 ॥ ௭ ॥

சக்ஷுரசக்ஷுரவதிகேவலாநாம் நித்ரா
நித்ராநித்ராப்ரசலாப்ரசலாப்ரசலா
ஸ்த்யாநக்ருத்தயஶ்ச ||

(ப - ரை.) தர்ஶனுவரணம் ஒன்பது வகை. அவை, 𑌚𑌕𑍍𑌷𑍁𑌃 - சக்ஷுர் தர்சனுவரணம், 𑌅𑌚𑌕𑍍𑌷𑍁𑌃 - அசக்ஷுர் தர்சனுவரணம், 𑌅𑌵𑌧𑌿-அவதிதர்சனுவரணம், 𑌕𑍇𑌵𑌲𑌾𑌨𑌾𑌂- கேவலதர்சனுவரணம் (ஆகிய இவைகளும்), 𑌨𑌿𑌦𑍍𑌰𑌾 - நித்திரை, 𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌨𑌿𑌦𑍍𑌰𑌾 - நித்ராநித்ரை, 𑌪𑍍𑌰𑌚𑌲𑌾 - பிரசலை, 𑌪𑍍𑌰𑌚𑌲𑌾𑌪𑍍𑌰𑌚𑌲𑌾 - பிரசலாபிரசலை, 𑌸𑍍𑌤𑍍𑌯𑌾𑌨𑌗𑍃𑌦𑍍𑌧𑌯𑌃 - ஸ்த்யாநக்ருத்தி என்பன. அவற்றுள்—

(1) **சக்ஷுர்தர்சனுவரணம்**—கண்களாற் பார்த்தலை மறைக்குங் கர்மம்.

(2) **அசக்ஷுர்தர்சனுவரணம்**—மெய், வாய், மூக்கு, செவி ஆகிய இவைகளால் அறிதலை மறைக்குங் கர்மம்.

(3) **அவதிதர்சனுவரணம்**—அவதிதர்சனத்தை மறைக்குங் கர்மம்.

(4) **கேவலதர்சனுவரணம்**—கேவலதர்சனத்தை மறைக்குங் கர்மம்.

(5) நித்ரா—துக்கம், சோகம், களைப்பு முதலானவை-களை நீக்குதற்பொருட்டு ஸாமான்யமாக உறங்குதற்குக் காரணமான கர்மம்.

(6) நித்ராநித்ரா—அதிகமாக உறங்குதற்குக் காரணமான கர்மம். அதாவது, கண்களைத் திறக்க முடியாமல் தூங்குதல் போல்வது.

(7) ப்ரசலா—அல்பநித்ரைக்குக் காரணமான கர்மம். அதாவது, கண்களைச் சிறிது திறந்துகொண்டு உறங்குதல். உறங்கும்போது பிறர் பேசுவதை யறிதல் போல்வது.

(8) ப்ரசலாப்ரசலா—உட்கார்ந்து உறங்குதல், சொள்ளு (வாயிலிருந்து நீர்) வடிதல், உடல் நடுங்குதல் முதலானவற்றிற்குக் காரணமான கர்மம்.

(9) ஸ்த்யாநக்ருத்தி—தூக்கத்தில் எழுந்து வேலை செய்தல், வழிநடத்தல், வாய்க்கு வந்தவை பேசுதல் முதலியவற்றிற்குக் காரணமான கர்மம். (7)

## வேதநீயத்தின் பிரிவு

283. ஸஉஸெஆெஉ) || அ ||

ஸதஸத்வேத்யே ||

(ப - ரை.) வேதநீயம் இரு வகை. அவை—ஸஉஸெஆெஉ) - ஸாதாவேதநீயம், அஸாதாவேதநீயம் என்பன. அவற்றுள்—

(1) ஸாதாவேதநீயம்—ஐம்புலன், மனம் ஆகிய இவைகளால் உண்டாகும் சுகத்திற்குக் காரணமான கர்மம்.

(2) அஸாதாவேதநீயம்—பலவகைத் துக்கங்கட்குக் காரணமான கர்மம். (8)

## மோஹநீயத்தின் பேதம்

281. 𑌦𑌰𑍍𑌶𑌨𑌚𑌾𑌰𑌿𑌤𑍍𑌰𑌮𑍋𑌹𑌨𑍀𑌯𑌾𑌕𑌷𑌾𑌯𑌕𑌷𑌾𑌯𑌵𑍇𑌦
𑌨𑍀𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌦𑍍𑌵𑌿𑌨𑌵𑌷𑍋𑌡𑌶𑌭𑍇𑌦𑌾𑌃 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵
𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌤𑌦𑍁𑌭𑌯𑌾𑌨𑍍𑌯𑌕𑌷𑌾𑌯𑌕𑌷𑌾𑌯𑍌 𑌹𑌾𑌸𑍍𑌯
𑌰𑌤𑍍𑌯𑌰𑌤𑌿𑌶𑍋𑌕𑌭𑌯𑌜𑍁𑌗𑍁𑌪𑍍𑌸𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌪𑍁𑌂𑌨𑌪𑍁𑌂
𑌸𑌕𑌵𑍇𑌦𑌾 𑌅𑌨𑌨𑍍𑌤𑌾𑌨𑍁𑌬𑌨𑍍𑌧𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌨𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾-
𑌖𑍍𑌯𑌾𑌨𑌸𑌂𑌜𑍍𑌵𑌲𑌨𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌾𑌶𑍍𑌚𑍈𑌕𑌶𑌃 𑌕𑍍𑌰𑍋𑌧
𑌮𑌾𑌨𑌮𑌾𑌯𑌾𑌲𑍋𑌭𑌾𑌃 || ௯ ||

தர்சநசாரித்ரமோஹநீயாகஷாயகஷாயவேதநீயாக்
யாஸ்த்ரிநவஷோடஶபேதாஃ ஸம்யக்த்வமித்
யாத்வததுபயாந்யகஷாயகஷாயௌ ஹாஸ்யரத்-
யரதிஶோகபயஜுகுப்ஸாஸ்த்ரீபும்நபும்ஸகவேதா
அநந்தாநுபந்த்யப்ரத்யாக்யாநப்ரத்யாக்யாநஸஞ்
ஜ்வலநவிகல்பாஶ்சைகஶஃ க்ரோதமாநமாயா
லோபாஃ ||

(ப - ரை.) 𑌦𑌰𑍍𑌶𑌨𑌚𑌾𑌰𑌿𑌤𑍍𑌰𑌮𑍋𑌹𑌨𑍀𑌯 - தர்சந மோஹநீயம் சாரித்ரமோஹநீயம், 𑌅𑌕𑌷𑌾𑌯𑌕𑌷𑌾𑌯 𑌵𑍇𑌦𑌨𑍀𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌃 - அகஷாய வேதநீயம் கஷாய வேதநீயம் ஆகிய இவைகள் கிரமமாக, 𑌤𑍍𑌰𑌿𑌦𑍍𑌵𑌿𑌨𑌵𑌷𑍋𑌡𑌶𑌭𑍇𑌦𑌾𑌃 - மூன்று, இரண்டு, ஒன்பது, பதினாறு பேதங்களாக உள்ளன. தர்சநமோஹநீயம் மூன்று வகை. அவை— 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌤𑌦𑍁𑌭𑌯𑌾𑌨𑌿 - ஸம்யக்த்வம், மித்யாத்வம், ஸம்யங்மித்யாத்வம் என்பன. சாரித்ரமோஹநீயம் இருவகை. அவை—𑌅𑌕𑌷𑌾𑌯𑌕𑌷𑌾𑌯𑍌 - அகஷாய வேதநீயம், கஷாயவேதநீயம் என்பன. அகஷாயவேதநீயம் ஒன்பது வகை. அவை—𑌹𑌾𑌸𑍍𑌯𑌰𑌤𑍍𑌯𑌰𑌤𑌿𑌶𑍋𑌕𑌭𑌯𑌜𑍁𑌗𑍁𑌪𑍍𑌸𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌪𑍁𑌂𑌨𑌪𑍁𑌂𑌸𑌕𑌵𑍇𑌦𑌾𑌃 - ஹாஸ்யம்,

ரதி, அரதி, சோகம், பயம், ஜுகுப்ஸை, ஸ்த்ரீவேதம், பும்வேதம், நபும்ஸகவேதம் என்பன. கஷாயவேதநீயம் பதினாறு வகை. அவை—அனந்தானுபந்த்யப்ரத்யாக்யானப்ரத்யாக்யான ஸஞ்ஜ்வலனவிகல்பாஶ்சைகஶ: க்ரோதமானமாயாலோபா: - அநந்தாநுபந்திக்ரோதம், அநந்தாநுபந்திமானம், அநந்தாநுபந்திமாயா, அநந்தாநுபந்திலோபம், அப்ரத்யாக்யாநக்ரோதம், அப்ரத்யாக்யாநமானம், அப்ரத்யாக்யாநமாயா, அப்ரத்யாக்யாநலோபம், ப்ரத்யாக்யானக்ரோதம், ப்ரத்யாக்யானமானம், ப்ரத்யாக்யானமாயா, ப்ரத்யாக்யானலோபம், ஸஞ்ஜ்வலநக்ரோதம், ஸஞ்ஜ்வலநமானம், ஸஞ்ஜ்வலநமாயா, ஸஞ்ஜ்வலநலோபம் என்பன.

கருத்துரை :—மோஹநீயகர்மமானது — தர்சனமோஹநீயம், சாரித்ரமோஹநீயம் என்று இருவகையாகும். அவைகளுள் தர்சனமோஹநீயம் மூன்று வகை. சாரித்ரமோஹநீயம் இருபத்தைந்து வகை. இரண்டும் சேர்ந்து இருபத்தெட்டுவகையாகும்.

1. மித்யாத்வ (ப்ரகிருதி)—முற்றும் உணரும் அர்ஹத்பகவானுடைய வார்த்தைகளை நம்பாததாகிய தீக்காட்சிக்குக் காரணமானது. அது நசித்தபிறகுதான் ஸம்யக்த்வம் உண்டாகும்.

2. ஸம்யக்த்வ(ப்ரகிருதி)—ஸம்யக்த்வத்தினை அடியோடு கெடுக்குந்தன்மையின்றி, (சலம், மலினம்) சலனம் தோஷம் முதலான சில தூஷணைகளை உண்டாக்குவதற்குக் காரணமானது.

3. ஸம்யங்மித்யாத்வ(ப்ரகிருதி)—நற்காட்சியின் தன்மையும் தீக்காட்சியின் தன்மையும் ஒன்றாகச் சேர்ந்திருத்தற்குக் காரணமானது. அதாவது, வெல்லத்தின் சுவையாகிய இனிப்பும், தயிரின் சுவையாகிய புளிப்பும் சேர்ந்து மற்றொருவகைச் சுவையாக மாறியிருத்தல் போல்வது.

**4.** **ஹாஸ்யம்**—சிரித்தல், பரிஹாஸஞ் செய்தல் முதலானவற்றிற்குக் காரணமான கர்மம்.

**5.** **ரதி**—மனைவிமுதலானவர்களிடத்து விருப்பத்தினை உண்டாக்குங் கர்மம்.

**6.** **அரதி**—மனைவிமுதலானவர்களிடத்து அன்பின்மை (வெறுப்பு) உண்டாதற்குக் காரணமான கர்மம்.

**7.** **ஶோகம்**—பொருள் நஷ்டத்தினால் நேரிடுஞ் சிந்தைக்குக் காரணமான கர்மம்.

**8.** **பயம்**—பயப்படுவதற்குக் காரணமான கர்மம்.

**9.** **ஜுகுப்ஸை**—தன் குற்றத்தை மறைத்தல், பிறர்குற்றத்தினை வெளியிடுதல், அருவருப்படைதல், திரஸ்காரம் (இகழ்ச்சி) செய்தல் முதலியவைகளுக்குக் காரணமான கர்மம்.

**10.** **ஸ்த்ரீவேதம்**—பெண்டிர்தன்மை உண்டாதல். அதாவது, ஹாவ, பாவ, விலாஸ, விப்ரமம் முதலான சேஷ்டைகளினால் ஆடவர்களுடன் ரமிக்கவேண்டுமென்ற இச்சை உண்டாதற்குக் காரணமான கர்மம்.

**11.** **பும்வேதம்**—ஆண்தன்மை உண்டாதல். அதாவது, பெண்கள்மீது காதல் உண்டாவதற்குக் காரணமான கர்மம்.

**12.** **நபும்ஸகவேதம்**—அலித்தன்மையினை யடைதல். அதாவது, ஆண், பெண் ஆகிய இருபாலாருடனும் காதல் கொள்வதற்குக் காரணமான கர்மம்.

குறிப்பு:—ஆண், பெண், அலி ஆகிய இவர்கட்கு உடலில் காணும் ஸ்தனம், யோனி, பேஹநம் முதலானவை நாமகர்மத்தினால் உண்டாகும். காதல், ரமிக்கவேண்டுமென்ற ஆவல் வேதநீயகர்மத்தினால் உண்டாகும்.

**13.** **அனந்தாநுபந்திக்ரோதம்**—அனந்தம் பிறவிகளை உண்டாக்குங் கோபத்திற்குக் காரணமான கர்மம்.

**14**. அனந்தாநுபந்திமானம்--கடையிலாப் பிறவியை உண்டுபண்ணுங் கர்வத்திற்குக் காரணமான கர்மம்.

**15**. அனந்தாநுபந்திமாயை--அநேக ஜன்மங்களை அடைவிக்கும் கபடத்திற்குக் காரணமான கர்மம்.

**16**. அனந்தாநுபந்திலோபம்--அநேக பவங்களை உண்டுபண்ணும் லோபம் உண்டாதற்குக் காரணமான கர்மம்.

குறிப்பு.--அனந்தாநுபந்தி முதலான நான்கும் ஸம்யக்த்வத்தினைக் கெடுக்கும்.

**17**. அப்ரத்யாக்யாநக்ரோதம்--அணுவிரதத்தினை (இல்லறத்தை)த் தரிக்கவொட்டாமல் தடுக்குங் கர்மம்.

**18**. அப்ரத்யாக்யாநமானம்--இல்லறத்தை (ஸ்தோக விரதத்தினை)க் கெடுக்குங் கர்மம்.

**19**. அப்ரத்யாக்யாநமாயா--தேசவிரதத்தினை (இல்லறத்தை)க் கெடுக்குங் கர்மம்.

**20**. அப்ரத்யாக்யாநலோபம் -- ஸம்யமாஸம்யமத்தினை (இல்லறத்தினை)க் கெடுக்குங் கர்மம்.

| | | |
|---|---|---|
| **21**. ப்ரத்யாக்யாநக்ரோதம் | | துறவறத்தித்தினை (மஹாவிரதத்தை)க் கெடுக்குங் கர்மம். |
| **22**. ,, | மானம் | |
| **23**. ,, | மாயா | |
| **24**. ,, | லோபம் | |

| | | |
|---|---|---|
| **25**. ஸ்ஞ்ஜ்வலநக்ரோதம் | | யதாக்யாதசாரித்ரத்தினைக் கெடுக்குங் கர்மம். |
| **26**. ,, | மானம் | |
| **27**. ,, | மாயா | |
| **28**. ,, | லோபம் | |

குறிப்பு:--அனந்தம்-கடையில்லாதது. அனுபந்தி-ஸம்ஸாரத்தை (பிறப்பினை) வளர்த்தல் (அதிகரித்தல்). அ-கொஞ்சம், ப்ரத்யர்க்யாநம்-விடுதல். அப்ரத்யாக்யானம்-கொஞ்சமாக விடுதல். ஸஞ்ஜ்வலந-ஸம்யமத்துடன் விளங்குதல்.

## ஆயுஷ்யகர்மத்தின் பேதம்

285. 𑌨𑌾𑌰𑌕𑌤𑍈𑌰𑍍𑌯𑌗𑍍𑌯𑍋𑌨𑌮𑌾𑌨𑍁𑌷𑌦𑍈𑌵𑌾𑌨𑌿 ||

நாரகதைர்யக்யோநமாநுஷதைவாநி ||

(ப - ரை.) ஆயுஷ்யம் நான்கு வகை. அவை—𑌨𑌾𑌰𑌕- நரகாயுஷ்யம், 𑌤𑍈𑌰𑍍𑌯𑌗𑍍𑌯𑍋𑌨 - திர்யக்காயுஷ்யம், 𑌮𑌾𑌨𑍁𑌷 - மனுஷ்யாயுஷ்யம், 𑌦𑍈𑌵𑌾𑌨𑌿 - தேவாயுஷ்யம் என்பன. அவற்றுள்—

(1) நரகாயுஷ்யம் —ஜீவன் நரகத்தில் இருத்தற்குக் காரணமான கர்மம்.

(2) திர்யக்காயுஷ்யம்—ஜீவன் விலங்கினத்தில் இருப்பதற்குக் காரணமான கர்மம்.

(3) மநுஷ்யாயுஷ்யம்—ஜீவன் மனிதப்பிறவியில் இருத்தற்குக் காரணமான கர்மம்.

(4) தேவாயுஷ்யம்—ஜீவன் தேவப்பிறவியில் இருப்பதற்குக் காரணமான கர்மம்.

ஆயுஷ்யம்—கர்மத்தினுல் உண்டானதும், மோஹத்தினுல் விருத்தி யடையப்பட்டதும் ஆகி ஸம்ஸாரத்தில் ஜீவனை ஆயுள்பர்யந்தம் நிலைநிறுத்துதல். அதாவது, தொழுக்கட்டையில் அடிக்கப்பட்ட ஒருவன் அல்லது, சிறையில் அடைக்கப் பட்ட ஒருவன் குறிப்பிட்ட காலம் வரைக்கும் அதனை விட்டு நீங்காமல் இருத்தல்போல்வது.

## நாமகர்மத்தின் பேதம்

286. 𑌗𑌤𑌿𑌜𑌾𑌤𑌿𑌶𑌰𑍀𑌰𑌾𑌙𑍍𑌗𑍋𑌪𑌾𑌙𑍍𑌗𑌨𑌿𑌰𑍍𑌮𑌾𑌣𑌬𑌨𑍍𑌧
𑌨𑌸𑌙𑍍𑌘𑌾𑌤 𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨 𑌸𑌂𑌹𑌨𑌨 𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌰𑌸
𑌗𑌨𑍍𑌧𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑍁𑌪𑍂𑌰𑍍𑌵𑍍𑌯𑌾𑌗𑍁𑌰𑍁𑌲𑌘𑍂𑌪
𑌘𑌾𑌤𑌪𑌰𑌾𑌘𑌾𑌤𑌾𑌤𑌪𑍋𑌦𑍍𑌯𑍋𑌤𑍋𑌚𑍍𑌛𑍍𑌵𑌾𑌸𑌵𑌿𑌹𑌾

யோ கதய: ப்ரத்யேகஶரீரத்ரஸஸுபக
ஸுஸ்வரஶுபஸூக்ஷ்மபர்யாப்திஸ்திராதே
யயஶ:கீர்த்திஸேதராணி தீர்த்தக்ரு
த்த்வம் ச || கக ||

கதிஜாதிஶரீராங்கோபாங்கநிர்மாண பந்தன ஸங்காத ஸம்ஸ்தான ஸம்ஹநன ஸ்பர்ஶ ரஸ கந்த வர்ணானுபூர்வ்யாகுருலகூபகாதபரகா தாதபோத்யோதோச்ச்வாஸவிஹாயோகதய: ப்ரத்யேக ஶரீர த்ரஸ ஸுபக ஸுஸ்வர ஶுப ஸூக்ஷ்ம பர்யாப்தி ஸ்திராதேய யஶ:கீர்த்தி ஸேதராணி தீர்த்தகரத்வஞ்ச ||

(ப - ரை.) கதி ஜாதி............விஹாயோ கதய: — கதி, ஜாதி, சரீரம், அங்கோபாங்கம், நிமாணம், பந்தனம், ஸங்காதம், ஸம்ஸ்தானம், ஸம்ஹநநம், ஸ்பர்ச, ரஸ, கந்த, வர்ண, ஆனுபூர்வி, அகுருலகு, உபகாத, பரகாத, ஆதப, உத்யோத, உச்ச்வாஸ, விஹாயோகதி ஆகிய இவை இருபத் தொன்றும், ப்ரத்யேக............யஶ:கீர்த்தி: - ப்ரத்யேக ஶரீரம், த்ரஸ, ஸுபக, ஸுஸ்வர, சுப, ஸூக்ஷ்ம, பர்யாப்தி, ஸ்திர, ஆதேய, யஶ:கீர்த்தி ஆகிய இவை பத்தும், ஸேதராணி - ப்ரத்யேகம் முதலான பத்துக்கு விபரீத மானவைகளான ஸாதாரணம், ஸ்தாவரம், துர்பக, துஸ் ஸ்வர, அஶுப, ஸ்தூல, அபர்யாப்த, அஸ்திர, அனாதேய, அயஶ:கீர்த்தி ஆகிய இவை பத்தும் தீர்த்தக்ருத்த்வம் - தீர்த்தகரத்வமும் சேர்ந்து நாற்பத்திரண்டு பேதமாகும்.

**கதிநாமகர்மம்** — ஆத்மாவானது மறுபவத்தினைக் குறித்துச் செல்லுதற்குக் காரணமான கர்மம். அது நான்குவகை. அவை—

**1.** நரககதிநாம—ஜீவன் நரககதிக்குச் செல்வதற்குக் காரணமானது. (1)

**2.** திர்யக்கதிநாம—ஜீவன் விலங்கினத்தில் ஜனித்தற்குக் காரணமானது. (2)

**3.** மனுஷ்யகதிநாம—ஜீவன் மனிதப்பிறவியாகப் பிறத்தற்குக் காரணமானது. (3)

**4.** தேவகதிநாம — ஜீவன், பவணர் வ்யந்தரர் ஜ்யோதிஷ்கர் வைமானிகர் என்னும் தேவர்களாக ஜனித்தற்குக் காரணமானது. (4)

ஜாதி நாம கர்மம்—ஒவ்வோர்கதியினுள்ளும் விரோதபாவமின்றி ஆத்மாவை ஒரே வகையாக (ரூபமாக)ச் செய்தற்குக் காரணமான கர்மம். அது ஐந்து வகை. அவை—

**1.** ஏகேந்திரியஜாதிநாம—ஆத்மா ஏகேந்திரியஜாதியில் உதிப்பதற்குக் காரணமான கர்மம். (5)

**2.** த்வீந்திரியஜாதிநாம—ஆத்மா த்வீந்திரியஜாதியில் ஜனித்தற்குக் காரணமான கர்மம். (6)

**3.** த்ரீந்திரியஜாதிநாம—ஆத்மா த்ரீந்திரிய ஜாதியில் பிறப்பதற்குக் காரணமான கர்மம். (7)

**4.** சதுரிந்திரியஜாதிநாம—ஆத்மா சதுரிந்திரிய ஜாதியில் ஜனித்தற்குக் காரணமான கர்மம். (8)

**5.** பஞ்சேந்திரியஜாதிநாம — ஆத்மா பஞ்சேந்திரிய ஜாதியில் பிறத்தற்குக் காரணமான கர்மம். (9)

ஶரீரநாமகர்மம்—ஆத்மாவிற்கு உடல் உண்டாதற்குக்காரணமான கர்மம். அதுஐந்து வகை. அவை—

**1.** ஔதாரிகஶரீரநாம—ஐம்பொறிகளுக்குத் தோன்றக்கூடிய பெரிய உடல் உண்டாதற்குக் காரணமான கர்மம். (10)

**2.** வைக்ரீயிகஶரீரநாம—பலவித வுருவுகளைத் தரிக்கும் உடல் உண்டாவதற்குக் காரணமான கர்மம். (11)

**3.** ஆஹாரகஸரீரநாம — ஆஹாரகசரீரமுண்டாதற்குக் காரணமான கர்மம். (12)

**4.** தைஜஸஸரீரநாம—உடலில் மேனி (தேஜஸ்) உண்டாதற்குக் காரணமான கர்மம். (13)

**5.** கார்மணஸரீரநாம—கார்மணசரீரத்தை அடைதற்குக் காரணமான கர்மம். (14)

**அங்கோபாங்கநாமகர்மம்**—தலை, முதுகு, ஹிருதயம், தோள், வயிறு, முழங்கால், கை, கால் ஆகிய எட்டு அங்கங்களும், நெற்றி, மூக்கு முதலான உபாங்கங்களும் தனித்தனியாகக் காண்பதற்குக் காரணமான கர்மம். அது மூன்று வகை. அவை—

**1.** ஔதாரிகஸரீராங்கோபாங்கநாம—ஔதாரிகசரீரத்தில் அங்கங்களும் உபாங்கங்களும் (உறுப்புக்களும்) தனித்தனியாகக் காண்பதற்குக் காரணமான கர்மம். (15)

**2.** வைக்ரீயிகஸரீராங்கோபாங்கநாம — வைக்ரீயிக சரீரத்தில் அங்கோபாங்கங்கள் தனித்தனியாகக் காண்பதற்குக் காரணமான கர்மம். (16)

**3.** ஆஹாரகஸரீராங்கோபாங்கநாம—ஆஹாரகசரீரத்தில் அங்கோபாங்கங்கள் தனித்தனியாகக் காண்பதற்குக் காரணமான கர்மம். (17)

நிர்மாணநாமகர்மம்—அங்கோபாங்கங்கள் உண்டாதற்குக் காரணமான கர்மம். (18)

அது இரண்டு வகை. அவை—

**(A)** ஸ்தாநநிர்மாணம்—அந்தந்த ஜாதிநாம கர்மத்திற்குத் தக்கவாறு கண், மூக்கு முதலியவைகள் தகுந்த ஸ்தானத்தில் அமைதலுக்குக் காரணமானது.

**(B)** ப்ரமாணநிர்மாணம்—செவி, கண், மூக்கு முதலானவை எவ்வளவு நீளம், அகலம் இருக்க வேண்டுமோ அவ்வளவிற்குத் தக்கவாறு உண்டாதற்குக் காரணமானது.

**பந்தநநாமகர்மம்**—சரீரநாமகர்மோதயத்தால் ஸ்வீக ரித்த புத்கலங்கள் ஒன்றாகச் சேர்தலுக்குக் காரணமான கர்மம். அது ஐந்து வகை. அவை—

1. **ஔதாரிகபந்தநநாம** — ஔதாரிகசரீரத்திற்குத் தகுந்த புத்கலங்கள் ஒன்றாகச் சேர்தற்குக் காரணமான கர்மம். (19)

2. **வைக்ரீயிகபந்தநநாம** — வைக்ரீயிகசரீரத்திற்கு யோக்யமான புத்கலங்கள் ஒன்றாகச் சேர்வதற்குக் காரண மான கர்மம். (20)

3. **ஆஹாரகபந்தநநாம** — ஆஹாரகசரீரத்திற்கு யோக்யமான புத்கலங்கள் ஒன்றாகச் சேர்தற்குக காரண மான கர்மம். (21)

4. **தைஜஸபந்தநநாம** —தைஜஸசரீரத்திற்கு யோக்ய மான புத்கலங்கள்ஒன்றாகச் சேர்தற்குக் காரணமான கர்மம். (22)

5. **கார்மணபந்தநநாம**—கார்மணசரீரத்திற்குயோக்ய மான புத்கலங்கள் ஒன்றாகச் சேர்வதற்குக் காரணமான கர்மம். (23)

**ஸங்காதநாமகர்மம்**—ஔதாரிகம் முதலான சரீரங்க ளில் இடையில் இடமின்றி (பொத்தல் இன்றி) ப்ரதேசங் கள் ஒன்றோடொன்று கூடியிருத்தலுக்குக் காரணமான கர்மம். அது ஐந்து வகை. அவை—

1. **ஔதாரிகஸங்காதநாம** — ஔதாரிகசரீரத்தில் புத்கலப்ரதேசங்கள் இடைவிடாது ஒன்றோடொன்று கூடி யிருத்தலுக்குக் காரணமான கர்மம். (24)

2. **வைக்ரீயிகஸங்காதநாம** — வைக்ரீயிகசரீரத்தில் ..........கர்மம். (25)

3. **ஆஹாரகஸங்காதநாம** — ஆஹாரகசரீரத்தில்...... .......கர்மம். (26)

4. தைஜஸஸங்காதநாம—தைஜஸசரீரத்தில்...............கர்மம். (27)

5. கார்மணஸங்காதநாம — கார்மணசரீரத்தில்.............கர்மம். (28)

ஸம்ஸ்தாந நாமகர்மம்—ஔதாரிகம் முதலான உடலின் உருவம் உண்டாதற்குக் காரணமான கர்மம். அது ஆறு வகை. அவை—

1. ஸமசதுரஸ்ரஸம்ஸ்தாநநாம—உடலின் உருவம் நாபிக்கு மேலும் கீழும் ஸமானமாக உண்டாதற்குக் காரணமான கர்மம். (29)

2. ந்யக்ரோதபரிமண்டலஸம்ஸ்தாநநாம—ஆலமரத்தைப்போல அடிசிறுத்தும் மேல் விரிந்தும் உள்ள உருவம் உண்டாதற்குக் காரணமான கர்மம். அதாவது, உடலின் உருவம் கொப்பூழுக்கு மேல் பெருத்தும் கொப்பூழுக்குக் கீழ் சிறுத்தும் இருத்தல். (30)

3. ஸ்வாதிஸம்ஸ்தாநநாம—ஸ்வாதிநக்ஷத்திரத்தைப் போல உடலின் உருவம் மேல் சிறுத்தும் கீழ் பெருத்தும் இருத்தற்குக் காரணமான கர்மம். இதனை வல்மீக ஸம்ஸ்தானம் என்றும் கூறுவர். வல்மீகம்-புற்று. (31)

4. குப்ஜஸம்ஸ்தாநநாம—முதுகு கூனாக உண்டாதற்குக் காரணமான கர்மம். (32)

5. வாமநஸம்ஸ்தாநநாம—குள்ளமாகப் பிறப்பதற்குக் காரணமான கர்மம். (33)

6. ஹுண்டகஸம்ஸ்தாநநாம—கால்கள் பெரியனவாயும், கைகள் சிறியனவாயும், உடல் பெரியதாயும், தலை சிறியதாயும் பார்த்தற்கு இழிவான உருவம் உண்டாதற்குக் காரணமான கர்மம். (34)

ஸம்ஹநன நாமகர்மம்—எலும்புகள் ஒன்றாக இணைந்து இருத்தற்குக் காரணமான கர்மம். அது ஆறு வகை. அவை—

**1.** வஜ்ரர்ஷபநாராசஸம்ஹநனநாம—வஜ்ராகாரமான இரண்டு எலும்புகளின் இணைப்பின் இடையில், வட்டமான கீல்பூட்டுப் போன்று பிணைத்திருத்தலுக்குக் காரணமான கர்மம்.

**2.** வஜ்ரநாராசஸம்ஹநனநாம—வஜ்ராகாரமான இரண்டு எலும்புகளின் இணைப்பின் இடையில் வட்டமின்றிக் கீல்பூட்டுமாத்திரம் இருத்தற்குக் காரணமான கர்மம்.

**3.** நாராசஸம்ஹநனநாம—வஜ்ராகாரமும் வட்டமும் இன்றிக் கீல்பூட்டுமாத்திரமிட்டுப் பிணைத்திருத்தலுக்குக்காரணமான கர்மம். (37)

4. அர்த்தநாராசஸம்ஹநனநாம—வஜ்ராகாரமும் வட்டமும் இன்றி ஒரு பக்கத்தில் (ஒரு எலும்பில் மாத்திரம்) கீல்பூட்டும், மற்ற எலும்புகளில் கீல் இன்றியும் பிணைத்திருத்தற்குக் காரணமான கர்மம், (38)

**5.** கீலகஸம்ஹநனநாம—கீல்பூட்டும் இன்றி எலும்புகளின் இணைப்புகக்ள் ஒன்றோடொன்று சேர்ந்திருத்தற்குக் காரணமான கர்மம். (39)

**6.** அஸம்ப்ராப்தாஸ்ருபாடிகாஸம்ஹநனநாம—உள் எலும்புகளின் இணைப்பு இன்றி மேல்மாத்திரம் நரம்பு, ஸ்நாயு, மாம்ஸம் முதலியவைகளால் சேர்ந்திருத்தற்குக் காரணமான கர்மம். (40)

**ஸ்பர்ஶநாமகர்மம்**—உடலில் ஸ்பர்ஶகுணம் உண்டாதற்குக் காரணமான கர்மம். அது எட்டு வகை. அவை—

**1.** கர்கஶநாம—ஈச்சமரத்தைப்போல் சுறசுறப்பாகவும், கல்லைப்போல் கெட்டியாகவும் உடல் உண்டாதற்குக் காரணமான கர்மம். (41)

**2.** ம்ருது நாம—உடல் பஞ்சைப்போல் மிருதுவாக உண்டாதற்குக் காரணமான கர்மம். (42)

3. குரு நாம—உடல் இரும்பைப்போல் அதிக கனமுள்ளதாக உண்டாதற்குக் காரணமான கர்மம். (43)

4. லகுநாம—உடல் பஞ்சுபோலக் கனமில்லாமல் இருத்தற்குக் காரணமான கர்மம். (44)

5. ஸ்நிக்தநாம — உடலில் வாழைமரத்தைப்போல வழவழப்பும், எண்ணெய்க்குடம்போன்ற மேனியும் உண்டாதற்குக் காரணமான கர்மம். (45)

6. ரூக்ஷ நாம—உடல் உலர்ந்த கட்டையைப்போல உண்டாதற்குக் காரணமான கர்மம். (46)

7. சீதநாம—உடல் குளிர்ச்சியாக இருத்தற்குக் காரணமான கர்மம். (47)

8. உஷ்ணநாம—உடல் சூடாக இருப்பதற்குக் காரணமான கர்மம். (48)

ரஸ நாம—உடலில் சுவை உண்டாதற்குக் காரணமான கர்மம். அது ஐந்து வகை. அவை—

1. திக்த நாம—(உடலில்) கசப்புச் சுவை உண்டாதற்குக் காரணமான கர்மம். (49)

2. கடுநாம—உறைப்புச் சுவை உண்டாதற்குக் காரணமான கர்மம். (50)

3. கஷாய நாம—துவர்ப்புச் சுவை உண்டாதற்குக் காரணமான கர்மம். (51)

4. ஆம்ல நாம—புளிப்புச் சுவை உண்டாதற்குக் காரணமான கர்மம். (52)

5. மதுர நாம—இனிப்புச் சுவை உண்டாதற்குக் காரணமான கர்மம். (53)

கந்தநாம கர்மம்—உடலில் கந்தம் உண்டாதற்குக் காரணமான கர்மம். அது இருவகை. அவை—

1. ஸுகந்த நாம—உடலில் நல்ல மணம் உண்டாதற்குக் காரணமான கர்மம். (54)

**2. துர்கந்தநாம**—உடலில் துர்நாற்றம் உண்டாவதற்குக் காரணமான கர்மம். (55)

**வர்ணநாமகர்மம்**--உடல் கறுப்பு முதலான நிறமுண்டாதற்குக் காரணமான கர்மம். அது ஐந்து வகை. அவை--

**1. ஶுக்லநாம**—உடல் வெள்ளைநிறமாய் இருத்தற்குக் காரணமான கர்மம். (56)

**2. க்ருஷ்ணநாம**—உடல் கறுப்புநிறமாயிருத்தற்குக் காரணமான கர்மம். (57)

**3. நீலநாம**--உடல் நீலநிறமாயிருக்தற்குக் காரணமான கர்மம். (பீதநாம என்பதும் உண்டு.) பீதம்-பொன்னிறம். (58)

**4. ரக்தநாம**--உடல் சிவப்புநிறமாயிருத்தற்குக் காரணமான கர்மம். (59)

**5. ஹரித்நாம**—உடல் பச்சைநிறமாயிருத்தற்குக் காரணமான கர்மம். (60)

**ஆநுபூர்வி நாம**--ஆத்மாவானது ஓர் உடலைவிட்டு மற்றோர் உடலைத் தரித்தற்குச் செல்லும் வழி விக்ரஹகதியெனப்படும். அந்த விக்ரஹகதியில் ஆத்மாவிற்கு முன்பு இருந்த உடலின் உருவமே இருத்தல். அதாவது—ஒரு நாய், தேவனாக ஜனிக்க வேண்டுமாயின் நாய் இறந்தபின்னரும் தேவனாகத் தோன்றுத முன்னரும் உள்ள இடைக்காலத்தில் ஆத்மாவானது நாயுருவமாகவே இருத்தல். தேவனாகஜனித்தவுடன் நாயுருவு மாறி, தேவனுருவாகிவிடும். அது நான்கு வகை. அவை--

**1. நரககதிப்ராயோக்யாநுபூர்வ்யநாம** — நரககதிக்குச் செல்லும் மனிதவுருவை யடைந்த ஆத்மாவானது செல்லும் வழியிலும் மனிதவுருவமாகவே இருத்தற்குக் காரணமான கர்மம். (61)

**2. திர்யக்கதிப்ராயோக்யாநுபூர்வ்யநாம** —விலங்குகதியில் உதிக்கச் செல்லும் மனிதவுரு அல்லது தேவ

வுருவை யடைந்த ஆத்மாவானது வழியிலும் மனிதவுரு அல்லது தேவவுருவமாகவே இருத்தற்குக் காரணமான கர்மம். (62)

**3.** மநுஷ்யகதிப்ராயோக்யாநுபூர்வ்யநாம — மநுஷ்யப் பிறவியாகப் பிறக்கச் செல்லும் ஆத்மாவானது முன்பு அடைந்திருந்த உருவமே வழியிலும் இருத்தற்குக் காரணமான கர்மம். (63)

**4.** தேவகதிப்ராயோக்யாநுபூர்வ்யநாம — தேவகதியினை யடையச் சென்றுகொண்டிருக்கும் ஆத்மாவானது முன்பு அடைந்திருந்த உருவமே வழியிலும் இருத்தற்குக் காரணமான கர்மம். (64)

குறிப்பு :— தேவன் — விலங்காகவும், மனிதனாகவும் பிறக்கமுடியும்; நாரகனாகப் பிறக்கமுடியாது. நாரகன் — விலங்காகவும், மனிதனாகவும் ஜனிக்கமுடியும்; தேவனாக ஜனிக்கமுடியாது. மனிதரும், விலங்குகளும் நான்கு கதியிலும் ஜனிக்கக்கூடும்.

அகுருலகுநாமகர்மம் — உடலானது இரும்புக்குண்டைப் போலக் கனமுள்ளதாகிக் கீழ்விழுந் தன்மையினையும், எருக்கம்பஞ்சுபோலக் கனமின்மையுள்ளதாகி மேலுக்கு எழும்புந் தன்மையினையும் உடையதாயிருத்தற்குக் காரணமான கர்மம். (65)

உபகாதநாமகர்மம் — தானே தன் கழுத்தில் தூக்குப் போட்டுக்கொண்டு இறப்பதற்கும், வில், துப்பாக்கி முதலிய ஆயுதங்களால் தன்உயிரைத் தானே நீக்கிக் கொள்வதற்கும் காரணமான கர்மம். அதாவது, தன் கை கால்களே தன்மரணத்திற்குக் காரணமாய் இருத்தற்குக் காரணமான கர்மம். (66)

பரகாதநாமகர்மம் — தன் அவயங்களால் பிறருக்குத் தொந்தரவும், பிறர்அவயங்களால் தனக்குத் தொந்தரவும் உண்டாதற்குக் காரணமான கர்மம். (67)

ஆதாபநாமகர்மம்—உடல் தாபமுள்ளதாயிருத்தற்குக் காரணமான கர்மம். இவ்வுடலை ஸூர்யனிடத்துக் காணலாம். (68)

உத்யோதநாமகர்மம்—உடலில் பிரகாஶம் உண்டாதற்குக் காரணமான கர்மம். (இந்த உடலை மின்மினிப் பூச்சி முதலானவைகளில் காணலாம்). (69)

உச்ச்வாஸநாமகர்மம்—மூச்சு விடுதற்குக் காரணமான கர்மம். (70)

விஹாயோகதிநாமகர்மம் — ஆகாயத்தில் பறப்பதற்கும், பூமியில் நடப்பதற்கும் காரணமான கர்மம். அது இருவகை. அவை—

1. ப்ரஶஸ்தவிஹாயோகதிநாம — யானை, அன்னப் பறவை முதலானவைகளைப்போல அழகாக நடப்பதற்கும், பறவைகள் பறப்பதற்குங் காரணமான கர்மம் .(71)

2. அப்ரஶஸ்தவிஹாயோகதிநாம—கழுதை, ஒட்டகம் முதலானவைகளைப்போல அழகுஇல்லாமல் நடப்பதற்குக் காரணமான கர்மம். (72)

ப்ரத்யேகஶரீரநாமகர்மம்—ஓர்உடலை ஓர் ஆத்மா வானது அனுபவிப்பதற்குக் காரணமான கர்மம். அதாவது, ஓர்உடலில் ஓர்ஆத்மாவே யிருக்கும். வனஸ்பதிகாய மாகிய புளியமரம்போன்றவற்றில் அந்த வனஸ்பதிகாயிக ஜீவன் ஒன்றே இருக்கும். (73)

ஸாதாரணநாமகர்மம்—ஓர்உடலைப் பல ஆத்மாக்கள் அனுபவிப்பதற்குக் காரணமான கர்மம். அதாவது, உடலில் உள்ள ஓர்ஆத்மாவினுடன் அநேக ஆத்மாக்கள்கூடி யிருக்கும். வனஸ்பதிகாயமாகிற வாழை, முருங்கை முதலான மரங்களில் இருக்கும் வனஸ்பதிகாயிக ஜீவனுடன் அநேகஜீவன்கள்கூடி அந்த வாழை முதலானவற்றிலேயே

இருக்கும். அந்த மரத்திற்குரிய ஜீவன் இறக்கும்போது அந்த அநேகஜீவன்களும் இறக்கும். அது பிறக்கும் இடத்தில் அந்த அநேக ஜீவன்களும் பிறக்கும். நிகோத ஜீவன்களும் ஓர் ஜீவன் பிறந்த இடத்தில் அனந்த ஜீவன்கள் பிறந்து இருக்கும். அவைகட்கும் ஸாதாரண நாமகர்மத்தின் உதயம் உண்டு. (74)

**த்ரஸநாமகர்மம்**—த்வீந்திரியம் முதலானவைகளில் ஜனிப்பதற்குக் காரணமான கர்மம். அதாவது—புழு, பூச்சி, எறும்பு, ஈ, வண்டு, பசு, பக்ஷி, மனிதர் முதலான பிறவி களில் பிறப்பதற்குக் காரணமான கர்மம். (75)

**ஸ்தாவரநாமகர்மம்** — ஸ்தாவரஜந்துக்களாக உதிப் பதற்குக் காரணமான கர்மம். அதாவது, ப்ருத்வீ, அப்பு, தேஜஸ், வாயு, வனஸ்பதிஜீவன்களாகப் பிறப்பதற்குக் காரணமான கர்மம். (76)

**ஸுபகநாமகர்மம்**—முன்பின் காணுத ஒருவரைக் கண்டவுடன் ப்ரீதி உண்டாதற்குக் காரணமான கர்மம்.

**துர்பகநாமகர்மம்**—ஒருவர் நல்ல அழகு முதலான வற்ருேடு கூடியிருப்பினும் அவர்மீது வெறுப்பு உண்டா தற்குக் காரணமான கர்மம். (78)

**ஸுஸ்வரநாமகர்மம்**—கேட்பவருடைய மனத்தைக் கவரும் இனிமையான குரல் (ஸ்வரம்) உண்டாதற்குக் காரணமான கர்மம். (79)

**துஸ்ஸ்வரநாமகர்மம்**—கேட்பவருடைய மனத்திற்கு அருவருப்பைத் தரும் ஈனஸ்வரம் உண்டாதற்குக் காரண மான கர்மம். (80)

**ஶுபநாமகர்மம்**—பார்ப்பதற்கு அழகான தலை முத லான அவயவங்கள் உண்டாவதற்குக் காரணமான கர்மம்.

**அஶுபநாமகர்மம்**—பார்ப்பதற்கு விகாரமான அவ யவங்கள் உண்டாதற்குக் காரணமான கர்மம். (82)

ஸூக்ஷ்மசரீரநாமகர்மம்—பிறர்க்கு உதவியும், அபகாரமும் செய்தற்கு இயலாத சிறிய உடலைத் தரிப்பதற்குக் காரணமான கர்மம். (83)

பாதரஸரீரநாமகர்மம்—பிறரால் தடுக்கப்படவும், பிறரைத் தடுக்கவும் யோக்யமான பெரிய உடலைத் தரிப்பதற்குக் காரணமான கர்மம். (84)

பர்யாப்திநாமகர்மம்—ஆஹாரம், சரீரம், இந்திரியம், ஸ்வாஸோச்ச்வாஸம், பாஷை, மனம் என்னும் ஆறு பர்யாப்திகளும் பூர்த்தி அடைதற்குக் காரணமான கர்மம்.

அபர்யாப்திநாமகர்மம்—ஆஹாரம் முதலான ஆறு பர்யாப்திகளும் பூர்த்தி அடையாமைக்குக் காரணமான கர்மம். (86)

ஸ்திரநாமகர்மம்—தாதுக்களும், உபதாதுக்களும் தம் தம் இடத்தில் ஸ்திரமாக இருத்தற்குக் காரணமான கர்மம். அதாவது, உபவாஸம் முதலான கடின தவம் புரிந்தாலும் உபாங்கங்கள் ஸ்திரமாயும் வியாதி இல்லாதனவாயும் இருத்தற்குக் காரணமான கர்மம். (87)

குறிப்பு :—தாதுக்கள் எழுவகை. அவை—ரஸம், ரக்தம், மாம்ஸம், மேதம், எலும்பு, மஜ்ஜா, வீர்யம் என்பன.

உபதாதுக்கள் எழுவகை. அவை—வாதம், பித்தம், கபம், சிரா, ஸ்நாயு, சாமம், உதராக்நி என்பன.

அஸ்திரநாமகர்மம்—கொஞ்சம் உபவாஸம் முதலானவை செய்வதனாலும், சீதோஷ்ணத்தினாலும் உபாங்கங்கள் க்ருஶமடைதற்கும், தாதுஉபதாதுக்கள் ஸ்திரமின்மைக்குங் காரணமான கர்மம். (88)

ஆதேயநாமகர்மம்—காந்தியுள்ள சரீரம் உண்டாதற்குக் காரணமான கர்மம். (89)

**அநாதேயநாமகர்மம்**—காந்தியீனமான சரீரமுண்டாதற்குக் காரணமான கர்மம். (90)

**யஶ:கீர்த்திநாமகர்மம்**—நல்ல குணங்களும், க்யாதியும் (கீர்த்தியும்) உலகில் பரவுதற்குக் காரணமான கர்மம். (91)

**அயஶ:கீர்த்திநாமகர்மம்**—கெட்ட குணங்களும், அபக்யாதியும் உலகில் பரவுதற்குக் காரணமான கர்மம். (92)

**தீர்த்தகரத்வநாமகர்மம்**—தீர்த்தங்கரபதவிக்குக் காரணமான கர்மம். (93)

## கோத்ரகர்மத்தின் பேதம்

287. உ0வெ0நீ-0வெஃ || ௰௨ ||

உச்சைர்நீசைஶ்ச ||

**(ப - ரை.)** கோத்ரகர்மம் இரண்டு வகை. அவை—உ0வெஃ - உச்சைர்கோத்ரம், நீ0வெஃ - நீசைர்கோத்ரம் என்பன.

(1) **உச்சைர்கோத்ரம்**—உயர்ந்த குலத்தில் பிறத்தற்குக் காரணமான கர்மம்.

(2) **நீசைர்கோத்ரம்**—தாழ்ந்த குலத்தில் பிறத்தற்குக் காரணமான கர்மம். (12)

## அந்தராயகர்மத்தின் பேதம்

288. தாநலாபபோகோபபோகவீய-ாணா0 ||

தாநலாபபோகோபபோகவீர்யாணும் ||

**(ப - ரை.)** அந்தராயகர்மம் ஐந்து வகை. அவை—தாந - தானந்தராயம், லா஭ - லாபாந்தராயம், போ஗ - போகாந்தராயம், உப஭ோ஗ - உபபோகாந்தராயம், வீய-ாணா0 - வீர்யாந்தராயம் என்பன.

(1) தானந்தராயம்—தானம் செய்ய விரும்பினும் செய்ய முடியாமல் இருத்தற்குக் காரணமான கர்மம். அல்லது தானம் செய்தாலும் அதில் பல வகை இடையூறுகள் நேருதற்குக் காரணமான கர்மம்.

(2) லாபாந்தராயம்—வியாபாரம் முதலிய தொழில்களைச்செய்வதில் லாபம் வாராமல் இருத்தற்குக் காரணமான கர்மம்.

(3) போகாந்தராயம்—உணவு உண்பதிலும், தாம்பூலம்முதலியவை ஸேவிப்பதிலும் பலவகை விக்னமுண்டாதற்குக் காரணமான கர்மம்.

(4) உபபோகாந்தராயம்— மனைவி, மக்கள், வீடு முதலான உபபோகப்பொருள்களை அநுபவிப்பதில் விக்னம் உண்டாதற்குக் காரணமான கர்மம்.

(5) வீர்யாந்தராயம்—உடலில் சக்தி குறைவாயிருத்தற்குக் காரணமான கர்மம். (13)

## ஸ்திதிபந்தத்தின் வர்ணனை

### ஜ்ஞாநவரணம், தர்ஶநவரணம், வேதநீயம், அந்தராயம் ஆகிய இவைகளின் உத்கிருஷ்ட ஸ்திதி

289. 𑌆𑌦𑌿𑌤𑌸𑍍𑌤𑌿𑌸𑍃𑌣𑌾𑌮𑌨𑍍𑌤𑌰𑌾𑌯𑌸𑍍𑌯 𑌚 𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌤𑍍𑌸𑌾𑌗𑌰
𑍋𑌪𑌮𑌕𑍋𑌟𑌿𑌕𑍋𑌟𑍍𑌯𑌃 𑌪𑌰𑌾 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃 ॥ ௧௪ ॥

ஆதிதஸ்திஸ்ருணமந்தராயஸ்ய ச த்ரிம்ஶத்ஸாக
ரோபமகோடிகோட்ய: பரா ஸ்திதி: ॥

(ப - ரை.) 𑌆𑌦𑌿𑌤𑌃 𑌤𑌿𑌸𑍃𑌣𑌾𑌂 - நான்காம் ஸூத்ரத்தில் கூறப்பட்ட வரிசைகளுள் முதலில் உள்ள மூன்று கர்மங்களுக்கும் அதாவது ஜ்ஞாநவரணம், தர்சநவரணம் வேதநீயம் ஆகிய இவைகளுக்கும், 𑌅𑌨𑍍𑌤𑌰𑌾𑌯𑌸𑍍𑌯 -

அந்தராயகர்மத்திற்கும், பராஸ்திதி: - உத்கிருஷ்டஸ்திதி யானது, த்ரிம்ஶத்ஸாகரோபமகோடீகோட்ய: - முப்பது கோடாகோடி கடற்கால பரிமிதமாகும்.

குறிப்பு:—மித்யாதிருஷ்டிகளாகிய ஸஂஜ்ஞி பஞ்சேந்திரியஜீவன்களுக்கே இந்த உத்கிருஷ்டஸ்திதி உண்டாகும். (14)

## மோஹநீயகர்மத்தின் உத்கிருஷ்டஸ்திதி

290. ஸப்ததிர்மோஹநீயஸ்ய || ௧௫ ||

ஸப்ததிர்மோஹநீயஸ்ய ||

(ப - ரை.) மோஹநீயஸ்ய - மோஹநீயகர்மத்தின் உத்கிருஷ்டஸ்திதியானது, ஸப்ததி: - எழுபது கோடா கோடி கடற்கால பரிமிதமாகும். (15)

## நாமகோத்ரகர்மங்களின் உத்கிருஷ்டஸ்திதி

291. விம்ஶதிர்நாமகோத்ரயோ: || ௧௬ ||

விம்ஶதிர்நாம கோத்ரயோ: ||

(ப - ரை.) நாமகோத்ரயோ: - நாமகர்மம் கோத்ர கர்மம் ஆகிய இவைகளின் உத்கிருஷ்டஸ்திதியானது, விம்ஶதி - இருபது கோடாகோடி கடற்கால பரிமிதமாகும்.

## ஆயுஷ்யகர்மத்தின் உத்கிருஷ்டஸ்திதி

292. த்ரயஸ்த்ரிம்ஶத்ஸாகரோபமாண்யாயுஷ: || ௧௭ ||

த்ரயஸ்த்ரிம்ஶத்ஸாகரோபமாண்யாயுஷ: ||

(ப - ரை.) ஆயுஷ:-ஆயுஷ்யகர்மத்தின் உத்கிருஷ்ட ஸ்திதியானது, த்ரயஸ்த்ரிம்ஶத்ஸாகரோபமாணி-முப்பத்து மூன்று கடற்கால பரிமிதமாகும். (17)

## வேதநீயகர்மத்தின் ஜகன்யஸ்திதி

293. 𑌅𑌪𑌰𑌾 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑌾 𑌵𑍇𑌦𑌨𑍀𑌯𑌸𑍍𑌯 ||

அபரா த்வாதஶமுஹூர்த்தா வேதநீயஸ்ய ||

(ப - ரை.) 𑌵𑍇𑌦𑌨𑍀𑌯𑌸𑍍𑌯 - வேதநீயகர்மத்தின், 𑌅𑌪𑌰𑌾 - ஜகன்யஸ்திதியானது, 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑌾 - பன்னிரண்டு முஹூர்த்தகாலமாகும். (18)

## நாமகோத்ரகர்மங்களின் ஜகன்யஸ்திதி

294. 𑌨𑌾𑌮𑌗𑍋𑌤𑍍𑌰𑌯𑍋𑌰𑌷𑍍𑌟𑍌 || ௰௯ ||

நாமகோத்ரயோரஷ்டௌ ||

(ப - ரை.) 𑌨𑌾𑌮𑌗𑍋𑌤𑍍𑌰𑌯𑍋𑌃 - நாமகர்மம், கோத்ர கர்மம் ஆகிய இவைகளின் ஜகன்ய ஸ்திதியானது, 𑌅𑌷𑍍𑌟𑍌 - எட்டு முஹூர்த்தகாலமாகும். (19)

## ஏனைய கர்மங்களின் ஜகன்யஸ்திதி

295. 𑌶𑍇𑌷𑌾𑌣𑌾𑌮𑌨𑍍𑌤𑌰𑍍𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑌾 || ௨௰ ||

ஶேஷாணாமந்தர்முஹூர்த்தா ||

(ப - ரை.) 𑌶𑍇𑌷𑌾𑌣𑌾𑌂 - ஏனைய ஜ்ஞாநாவரணம், தர்ஶநாவரணம், மோஹநீயம், அந்தராயம் ஆகிய இவைகளின் ஜகன்ய ஸ்திதியானது, 𑌅𑌨𑍍𑌤𑌰𑍍𑌮𑍁𑌹𑍂𑌰𑍍𑌤𑌾 - ஒரு அந்தர்முஹூர்த்த காலமாகும்.

குறிப்பு :—அந்தர்முஹூர்த்தம் - இரண்டு நாழிகைக்குக் கொஞ்சங் குறைவான காலம். முஹூர்த்தம் - இரண்டு நாழிகை. (20)

## அநுபவ (அநுபாக) பந்த வர்ணனை

### அநுபவபந்தத்தின் லக்ஷணம்

296. விவாகொ ऽநுபவः || உக ||

விபாகோऽநுபவ: ||

(ப - ரை.) விவாகः - கர்மங்கள் பரிபக்குவத்தினல் உண்டாகும் ஸுகதுக்கங்களை ஆத்மா ஸ்வீகரிப்பது, ऽநுபவः - அநுபாகபந்தமாகும்.

குறிப்பு :—நல்ல எண்ணத்தினல் சுபகர்மங்களின் அநுபாகம் அதிகமும், கெட்ட கர்மங்களின் அநுபாகம் குறைவும் ஆகும். கெட்ட எண்ணம் அதிகமானல் நல்ல கர்மங்களின் அநுபாகம் குறைந்தும், கெட்ட கர்மங்களின் அநுபாகம் மிகுந்தும் இருக்கும். (21)

297. ஸ யயாநாம || உஉ ||

ஸ யதாநாம ||

(ப - ரை.) ஸः - அந்த அநுபாகபந்தமானது, யயாநாம - எப்பெயரை யுடையதோ, அதன் பயனும் அப்பெயரினை யுடையதாகும்.

கருத்துரை :—ஜ்ஞாஞவரணத்தின் பயன் ஜ்ஞானத்தை மறைத்தல், தர்சஞவரணத்தின் பயன் தர்சனத்தை மறைத்தல். இவ்வாறே ஏனையவற்றையும் அறிக. (22)

### கர்மங்கள் பயனைத் தந்த பிறகு என்னவாகும் என்பது

298. ததஸ்ச நிர்ஜரா || உங ||

ததஸ்ச நிர்ஜரா ||

(ப - ரை.) ததः - கர்மங்கள் பயனைக் கொடுத்த பிறகு, நிர்ஜரா - நீங்கிவிடுகின்றன.

**கருத்துரை:**—கர்மங்கள் உதயமாகிப் பலன் கொடுத்த பிறகு ஆத்மாவை விட்டு நீங்கிவிடும். நிர்ஜரை இரண்டு வகை. அவை—ஸவிபாகநிர்ஜரை, அவிபாகநிர்ஜரை என்பன.

ஸவிபாகநிர்ஜரை—கர்மங்களின் ஸ்திதி முடிந்தவுடன் உதயத்திற்கு வந்து பயனைக் கொடுத்து ஆத்மாவை விட்டு நீங்குதல்.

அவிபாகநிர்ஜரை—கர்மங்களின் ஸ்திதி முடியாத முன்னரும் (உதயத்திற்கு வாராத முன்னும்) தவம் முதலான உபாயங்களால் கர்மங்களை நீக்குதல்.

**குறிப்பு:**— இந்த ஸூத்திரத்தினுள் காணும் 'ச' காரமானது ஒன்பதாம் அத்யாயத்தில் கூறப்படும் "தபஸா நிர்ஜரா ச" என்னும் ஸூத்ரத்தினையும் அனுஸரிக்கும். ஆதலால் தபஸ்வினாலும் நிர்ஜரையாகும் என்பது ஸித்தமாகும்.

ஸவிபாகநிர்ஜரைக்குக் கர்மத்தின் உதயம் காரண மாகும்.

அவிபாகநிர்ஜரைக்குத் தவம் முதலானவை காரண மாகும். (23)

## ப்ரதேஶபந்தத்தின் வர்ணனை

299. நாமப்ரத்யயா: ஸர்வதோ யோகவிஶேஷாத்
ஸூக்ஷ்மைகக்ஷேத்ராவகாஹஸ்திதா: ஸர்வா
த்மப்ரதேஶேஷ்வநந்தாநந்தப்ரதேஶா: ||

நாமப்ரத்யயா: ஸர்வதோ யோகவிஶேஷாத்
ஸூக்ஷ்மைகக்ஷேத்ராவகாஹஸ்திதா: ஸர்வா
த்மப்ரதேஶேஷ்வநந்தாநந்தப்ரதேஶா: ||

(ப - ரை.) நாமப்ரத்யயா: - ஜ்ஞானாவரணம் முதலான கர்மங்களுக்குக் காரணமாயும், ஸர்வத: - எல்லாப்

பிறவிகளிலும், 𑌯𑍋𑌗𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌤𑍍 - மன, வசந, காய யோகங்களின் விசேஷத்தினால், 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑍈𑌕𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌾𑌵𑌗𑌾𑌹𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃 - ஸூக்ஷ்மமாகி ஓரிடத்தில் இருப்பவைகளாயும் உள்ள, 𑌅𑌨𑌨𑍍𑌤𑌾𑌨𑌨𑍍𑌤𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑌾𑌃 - கர்மங்களாகிற புத்கலங்களின் அனந்தானந்த ப்ரதேஶங்கள், 𑌸𑌰𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌪𑍍𑌰𑌦𑍇𑌶𑍇𑌷𑍁 - ஆத்மாவினுடைய எல்லாவிடத்திலும் இருக்கும் (ஸமஸ்த ஆத்மப்ரதேசங்களிலும் இருக்கும்).

## புண்ய ப்ரகிருதிகள்

300. 𑌸𑌦𑍍𑌵𑍇𑌦𑍍𑌯𑌶𑍁𑌭𑌾𑌯𑍁𑌰𑍍𑌨𑌾𑌮𑌗𑍋𑌤𑍍𑌰𑌾𑌣𑌿
𑌪𑍁𑌣𑍍𑌯𑌮𑍍 || ௨௫ ||

ஸத்வேத்யஶுபாயுர்நாமகோத்ராணி புண்யம்॥

(ப - ரை.) 𑌸𑌦𑍍𑌵𑍇𑌦𑍍𑌯 - ஸாதாவேதநீயம், 𑌶𑍁𑌭𑌾𑌯𑍁𑌃 - சுபஆயுஷ்யம், 𑌶𑍁𑌭𑌨𑌾𑌮 - சுபநாமகர்மம், 𑌗𑍋𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 - உச்சைர்கோத்ரம் ஆகிய இவைகள், 𑌪𑍁𑌣𑍍𑌯𑌂 - புண்ய கர்மங்கள்.

(1) திர்யக்காயுஷ்யம், (2) மனுஷ்யாயுஷ்யம், (3) தேவாயுஷ்யம், (4) மனுஷ்யகதி, (5) தேவகதி, (6) பஞ்சேந்திரியஜாதி, (7) ஔதாரிகசரீரம், (8) வைக்ரீயிகசரீரம், (9) ஆஹாரகசரீரம், (10) தைஜஸசரீரம், (11) கார்மணசரீரம், (12) ஔதாரிகாங்கோபாங்கம், (13) வைக்ரீயிகாங்கோபாங்கம், (14) ஆஹாரகாங்கோபாங்கம், (15) ஸமசதுரஸ்ரஸம்ஸ்தானம், (16) வஜ்ரர்ஷபநாராசஸம்ஹநனம், (17) ஸ்பர்சம், (18) ரஸம், (19) வர்ணம், (20) கந்தம், (21) மனுஷ்யகத்யாநுபூர்வ்ய, (22) தேவகத்யாநுபூர்வ்ய, (23) அகுருலகு, (24) பரகாத, (25) உச்ச்வாஸ, (26) ஆதப, (27) உத்யோத, (28) ப்ரஶஸ்த விஹாயோகதி, (29) த்ரஸ, (30) பாதர, (31) பர்யாப்தி, (32) ப்ரத்யேகசரீர, (33) ஸ்திர, (34) சுப, (35) ஸுபக,

(36) ஸுஸ்வர, (37) ஆதேய, (38) யஶஃகீர்த்தி, (39) நிர்மாணம், (40) தீர்த்தங்கரநாம, (41) உச்சைர்கோத்ரம், (42) ஸாதாவேதநீயம் ஆகிய இவை நாற்பத்திரண்டும் புண்ய கர்மங்கள். (25)

## பாப கர்மங்கள்

301. 𑌅𑌤𑍋𑌽𑌨𑍍𑌯𑌤𑍍𑌪𑌾𑌪𑌮𑍍 || ௨௬ ||

அதோऽந்யத்பாபம் ||

(ப - ரை.) 𑌅𑌤𑌃 - புண்யகர்மத்தினின்றும், 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍 - மிகுதியானவை, 𑌪𑌾𑌪𑌂 - பாப கர்மங்கள். அதாவது, அஸாதாவேதநீயம், அசுபஆயுః, அசுபநாமகர்மம், நீசைர்கோத்ரம் ஆகிய இவைகள்.

ஐந்துவகை ஜ்ஞாநாவரணம், ஒன்பதுவகை தர்சநாவரணம், 26 வகை மோஹநீயம், ஐந்துவகை அந்தராயம், நரககதி, திர்யக்கதி, நான்கு ஜாதி, ஐந்து ஸம்ஸ்தானம், ஐந்து ஸம்ஹநநம், அப்ரஶஸ்தவர்ணம், கந்தம், ரஸம், ஸ்பர்ஶம், நரககத்யாநுபூர்வ்ய, திர்யக்கத்யாநுபூர்வ்ய, உபகாத, அப்ரஶஸ்தவிஹாயோகதி, ஸ்தாவர, ஸூக்ஷ்ம, அபர்யாப்தி, ஸாதாரணசரீர, அசுப, துர்பக, அஸ்திர, துஸ்ஸ்வர, அநாதேய, அயஶஃகீர்த்தி, அஸாதாவேதநீயம், நரகாயுः, நீசைர்கோத்ரம் ஆகிய இவை எண்பத்திரண்டும் பாபகர்மங்கள். (26)

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀 𑌉𑌮𑌾𑌸𑍍𑌵𑌾𑌮𑌿 𑌵𑌿𑌰𑌚𑌿𑌤𑍇 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌾𑌧𑌿𑌗𑌮𑍇

𑌮𑍋𑌕𑍍𑌷𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌅𑌷𑍍𑌟𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃

இதி ஸ்ரீ உமாஸ்வாமிஆசார்யர் இயற்றிய
தத்த்வார்த்த ஸூத்ரமேன்னும் மோக்ஷஶாஸ்த்ரத்தின்
எட்டாம் அத்யாயம் முற்றிற்று.

## கேள்விகள்

1. பந்தமென்றால் என்னை ?

2. ஜ்ஞானாவரணம் முதலான கர்மங்கள் எந்த த்ரவ்யத்தைச் சேர்ந்தவை ?

3. தர்ஶனமோஹநீயம் எத்தனை வகை ? அவை-களின் ஸ்வரூபமென்னை ?

4. விக்ரஹகதியில் ஜீவனுடைய உருவம் எப்படி யிருக்கும் ? அப்படி இருத்தற்கு என்ன காரணம் ?

5. பர்யாப்தி, அஸ்திர, வஜ்ரர்ஷபநாராசஸம்ஹநனம், ப்ரஶஸ்தவிஹாயோகதி, லாபாந்தராயம் ஆகிய இவைகளின் லக்ஷணம் கூறுக.

6. எல்லாக் கர்மங்களின் உத்கிருஷ்ட ஸ்திதியினைக் கூறுக.

7. தான் செய்த கர்மங்களை எப்போது அனுபவிக்கக் கூடும் ?

8. ப்ரதேஶபந்த மென்றால் என்னை ?

9. கர்மங்கள் பயனைக் கொடுத்த பிறகு என்னவாகும் ?

10. பாபப்ரகிருதிகள் எவை ?

# அத்யாயம் 9

## ஸம்வரம், நிர்ஜரை ஆகிய இவைகளின் வர்ணனை

### ஸம்வரம்

302. ஆஸ்ரவநிரோதஃ ஸம்வரஃ || க ||

ஆஸ்ரவநிரோத: ஸம்வர: ||

(ப - ரை.) ஆஸ்ரவநிரோதஃ - கர்மம் வருவதைத் தடுத்தல், ஸம்வரஃ - ஸம்வரமாகும்.

**கருத்துரை:**—ஆத்மாவினிடத்து வரும் வினைகளை (ஆத்மாவினிடம்) வாராமல் தடுத்தல் ஸம்வரமாகும். (1)

### ஸம்வரத்தின் காரணம்

303. ஸ குப்திஸமிதிதர்மாநுப்ரேக்ஷா
பரிஷஹஜயசாரித்ரைஃ || உ ||

ஸ குப்திஸமிதிதர்மாநுப்ரேக்ஷா
பரிஷஹஜயசாரித்ரை: ||

(ப - ரை.) குப்தி.........சாரித்ரைஃ - குப்தி, ஸமிதி, தர்மம், அநுப்ரேக்ஷை, பரிஷஹஜயம், சாரித்ரம் ஆகிய இவைகளால், ஸஃ - அந்த ஸம்வரம் ஆகும்.

**கருத்துரை:**—குப்தி ஸமிதி முதலானவைகளை ஆசரித்தலால் ஆத்மாவினிடத்து வினைகள் வாராமல் இருக்கும்.

**குப்தி**—மன, வசன, காயங்களின் கெட்ட செயலைத் தடுத்தல்.

**ஸமிதி**—ஜீவஹிம்ஸையை நீக்கும்பொருட்டுப் பிரயத்னபூர்வகம் நடத்தல்.

**தர்மம்**—ஆத்மாவினை ஸம்ஸாரதுக்கத்தினின்றும் நீக்கி ஆத்மாவிற்கு மோக்ஷசுகத்தினைத் தருதல்.

**அநுப்ரேக்ஷா**—அடிக்கடி சிந்தித்தல்.

பரிஷஹஜய—பசி முதலானவைகளால் ஏற்படும் தொந்தரவை ஜயித்தல்.

சாரித்ரம்—வினை வரும் (வாயிலைத் தடுத்தற்குக் காரணமானது) செயல்களை விடுதல். (2)

## நிர்ஜரை, ஸம்வரம் ஆகிய இவைகளின் காரணம்

304. தவஸா ணிஜ்ஜரா ய || ௩ ||

தபஸா நிர்ஜரா ச ||

(ப - ரை.) தவஸா - தபஸ்ஸினால், ணிஜ்ஜரா - கர்மங் கழிதலும், ய - (ஸம்வரம்), கர்மம் வாராதிருத்தலும் ஆகும்.

கருத்துரை :—தபஸ்ஸினால் ஸம்வரமும் நிர்ஜரையும் ஆகும்.

குறிப்பு :—தபஸ்ஸானது, தசதர்மத்தினுள் அடங்கியதாயினும், இங்குத் தனியாகக் கூறப்பட்டதனால் ஸம்வரத்திற்கும் நிர்ஜரைக்கும் காரணமாகும். ஆயினும், தபஸ்ஸானது ஸம்வரத்திற்கு முக்யமான காரணமாகும் என்பதற்காகச் 'ச' காரம் தனியாகக் கூறப்பட்டது. தபஸ்ஸானது புண்யத்திற்குக் காரணமாயிருப்பது நிர்ஜரைக்குக் காரணம் எப்படியாகுமெனில், ஒரு பொருளினால் பல கார்யங்கள் உண்டாதல்போல தபஸ்ஸானது புண்யத்திற்கும் கர்மநிர்ஜரைக்கும் காரணமாகும். அல்லது உழவர்கள் தான்யம் பயிரிடுபவராயினும் அதனுடன் புல், பூண்டு முதலியன முளைத்து வளர்தல்போல தபஸ்விகள் கர்மங் கெடுதற்காகத் தபஸ் செய்தாலும் அதனுடன் புண்யமும் வரும். சிறிதேனும் ஸஞ்சலமின்றித் தபஸ் செய்வதால் கர்மங்கழியும் (கர்ம நிர்ஜரையாகும்). தபஸ் செய்வதில் சலனமுண்டானால் புண்யம் வரும். ஆயினும் கர்மங் கழிதலே (நிர்ஜரையே) தபஸ்ஸின் முக்கியப் பயனாகும். புண்யம் வருதல் ஸாமான்யமான பயனாகும். (3)

## குப்தியின் லக்ஷணம்

305. 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌯𑍋𑌗𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑍋 𑌗𑍁𑌪𑍍𑌤𑌿𑌃 ॥ ௪ ॥

ஸம்யக்யோகநிக்ரஹோ குப்தி: ॥

(ப - ரை.) 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌯𑍋𑌗𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌃 - மன வசன காயங்களின் செயலைத் தடுத்தல், 𑌗𑍁𑌪𑍍𑌤𑌿𑌃 - குப்தியாகும்.

கருத்துரை :—உலகில் ஸத்காரம், கீர்த்தி, பெருமை முதலானவற்றை அடைய வேண்டும் என்னும் விருப்பமின்றி, மன வசன காயங்களின் செயலைத் தடுத்தல் குப்தியாகும்.

குப்தி மூன்று வகை. அவை—காயகுப்தி, வாக்குப்தி, மனோகுப்தி என்பன. அவற்றுள்—

1. காயகுப்தி:—சரீரத்தினால் உண்டாகுந் தீச்செயல்களைத் தடுத்தல்.

2. வாக்குப்தி:—வீண்வார்த்தையினைத் தடுத்தல்.

3. மனோகுப்தி:—தீய எண்ணத்தினைத் தடுத்தல்.

## ஸமிதியின் வகை

306. 𑌈𑌰𑍍𑌯𑌾𑌭𑌾𑌷𑍈𑌷𑌣𑌾𑌦𑌾𑌨𑌨𑌿𑌕𑍍𑌷𑍇𑌪𑍋𑌤𑍍𑌸𑌰𑍍𑌗𑌾𑌃 𑌸𑌮𑌿𑌤𑌯𑌃 ॥ ௫ ॥

ஈர்யாபாஷைஷணாதாநநிக்ஷேபோத்ஸர்க்கா: ஸமிதய: ॥

(ப - ரை.) 𑌈𑌰𑍍𑌯𑌾 - நடத்தல், 𑌭𑌾𑌷𑌾 - பேசுதல், 𑌏𑌷𑌣𑌾 - உணவுகொள்ளுதல், 𑌆𑌦𑌾𑌨𑌨𑌿𑌕𑍍𑌷𑍇𑌪 - எடுத்தல் வைத்தல், 𑌉𑌤𑍍𑌸𑌰𑍍𑌗𑌾𑌃 - மலமூத்ரம் கழித்தல் ஆகிய இவை ஐந்தும், 𑌸𑌮𑌿𑌤𑌯𑌃 - ஸமிதிகள்.

ஸமிதி ஐந்து வகை. அவை—

(1) ஸம்யக்ஈர்யாஸமிதி—நுண்ணுயிர்களின் ஹிம்ஸை உண்டாகாமல் இருக்கும்படி பூமியினை நோக்கி நடத்தல்.

(2) ஸம்யக்பாஷாஸமிதி—ஹிதமாயும், மிதமாயும், பிரியமாயும் உள்ள வார்த்தையைப் பேசுதல்.

(3) ஸம்யக்ஏஷணுஸமிதி — தோஷமில்லாத உணவை உட்கொள்ளுதல்; ஜீவஹிம்ஸையினால் உண்டாகும் உணவை உட்கொள்ளாதிருத்தல்.

(4) ஸம்யக்ஆதாநநிக்ஷேபஸமிதி — நுண்ணுயிர்கள் உள்ளனவோ என்று பரிசோதித்துப்பார்த்துப் பொருள்களை எடுத்தல், வைத்தல்.

(5) ஸம்யக் உத்ஸர்க்கஸமிதி—நுண்ணுயிர்கள் காணப்படாத இடத்தில் பலமூத்ரம் கழித்தல். ( 5 )

## பத்துவகை தர்மம்

307. உத்தமக்ஷமாமார்தவார்ஜவசௌசஸத்யஸம்யம
தபஸ்த்யாகாகிஞ்சந்யப்ரஹ்மசர்யாணி தர்ம:॥

உத்தமக்ஷமாமார்த்தவார்ஜவசௌசஸத்யஸம்யம
தபஸ்த்யாகாகிஞ்சந்யப்ரம்ஹசர்யாணிதர்ம: ॥

(ப - ரை.) உத்தமக்ஷமா - யாதொரு காரணமுமின்றித் தன்னைப் பிறர் துன்புறுத்தினாலும் அவர்மீது கோபங் கொள்ளாமலிருத்தல், உத்தமமார்தவ - யான் உயர்ந்த குலத்தில் உதித்தவன், நல்ல அழகுடையவன், நல்ல ஜ்ஞான முடையவன் என்று அபிமானங் கொள்ளாமலிருத்தல் (கர்வங் கொள்ளாமை), உத்தமஆர்ஜவ - கபடம் செய்யாமலிருத்தல், உத்தமசௌச - லோபத்தைவிட்டு ஆத்மாவைப் பவித்ரம் செய்தல், உத்தமஸத்ய - நல்ல ஜனங்களிடத்தில் நல்ல வார்த்தையினைப் பேசுதல், உத்தம ஸம்யம- ஐம்புலன்களையும் மனத்தையும் அடக்குதல், பிராணிகளின்

வதையை நீக்குதல், 𑌉𑌤𑍍𑌤𑌮𑌤𑍍𑌯𑌾𑌗 - பிரத்யுபகாரம் முதலான வாஞ்சனையின்றி ஜ்ஞானம்முதலான தானம் செய்தல், 𑌉𑌤𑍍𑌤𑌮𑌾𑌕𑌿𑌂𑌚𑌨𑍍𑌯 - சரீரம்முதலான பிற பொருள்கள்மீதுள்ள மமத்வ பரிணாமத்தினை விடுதல், 𑌉𑌤𑍍𑌤𑌮𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌾𑌣𑌿 - முன்னர் அனுபவித்த ஸ்த்ரீயினை ஸ்மரித்தல், பெண்கள்கதையினைக் கேட்டல், பெண்கள் படுத்த பாய் முதலியவற்றில் படுத்தல் முதலானவற்றை விட்டு ஆத்மபாவனையில் ஆழ்ந்து, குருகுலவாஸத்தில் இருத்தல் ஆகிய இவை பத்தும், 𑌧𑌰𑍍𑌮𑌃 - தர்மமாகும். (6)

## பன்னிரண்டு அநுப்ரேக்ஷைகள்

308\. 𑌅𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌶𑌰𑌣𑌸𑌂𑌸𑌾𑌰𑍈𑌕𑌤𑍍𑌵𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌶𑍁𑌚𑍍𑌯𑌾
𑌸𑍍𑌰𑌵𑌸𑌂𑌵𑌰𑌨𑌿𑌰𑍍𑌜𑌰𑌾𑌲𑍋𑌕𑌬𑍋𑌧𑌿𑌦𑍁𑌰𑍍𑌲𑌭
𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌵𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑍁𑌚𑌿𑌂𑌤𑌨𑌮𑌨𑍁𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑌾𑌃

அநித்யாஶரணஸம்ஸாரைகத்வாந்யத்வாஶுச்
யாஸ்ரவஸம்வரநிர்ஜராலோகபோதிதுர்லபதர்ம
ஸ்வாக்யாததத்த்வாநுசிந்தநமநுப்ரேக்ஷா: ||

(ப-ரை.) 𑌅𑌨𑌿𑌤𑍍𑌯 - நிலையில்லாமை, 𑌅𑌶𑌰𑌣 - சரண்(துணை)இன்மை, 𑌸𑌂𑌸𑌾𑌰 - ஸம்ஸாரம்; பிறவி, 𑌏𑌕𑌤𑍍𑌵𑌂 - ஒருமை, 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌵𑌂 - வேற்றுமை, 𑌅𑌶𑍁𑌚𑌿𑌤𑍍𑌵𑌂 - சுத்தமின்மை, 𑌆𑌸𑍍𑌰𑌵 - வினை வருதல், 𑌸𑌂𑌵𑌰 - வினை வாராமல் தடுத்தல், 𑌨𑌿𑌰𑍍𑌜𑌰𑌾 - கர்மங் கழிதல், 𑌲𑍋𑌕 - உலகம், 𑌬𑍋𑌧𑌿𑌦𑍁𑌰𑍍𑌲𑌭 - (ஜ்ஞானம்) இரத்தினத்ரயத்தினை அடைதலின் அருமை, 𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌵𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌤𑌤𑍍𑌤𑍍𑌵 - ஸ்ரீ ஜிந பகவான் உரைத்த அஹிம்ஸாலக்ஷணமாகிய தர்மத்தை அறிவிக்கும் தத்த்வம் ஆகிய இவைகளை, 𑌅𑌨𑍁𑌚𑌿𑌂𑌤𑌨𑌂 - அடிக்கடி (நினைத்தல்) தியானித்தல், 𑌅𑌨𑍁𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑌾𑌃 - அநுப்ரேக்ஷை யாகும்.

1. அநித்யாநுப்ரேக்ஷை—ஸம்ஸாரத்தில் உள்ள எல்லாப்பொருள்களும் மின்னல், நீர்க்குமிழி, இந்திரவில் முதலானவைகட்குச் சமானமாகத் தோன்றித்தோன்றி அழியுந் தன்மையினையுடையனவென்று சிந்தித்தல்.

2. அஶரணாநுப்ரேக்ஷை—காட்டின் இடையில், பசியினால் வருந்திய சிங்கத்தின் வாயினுள் அகப்பட்ட மான் குட்டியைக் காப்பாற்றுதற்கு யாரும் இல்லாததுபோல மரணவாயில் அகப்பட்ட ஜீவனைக் காப்பாற்றுவதற்கு யாரும் இல்லை. (ஜீவன் இறக்கும்போது வந்து துணையாக இருப்போர் எவரும் இல்லை). ஆதலால் நற்கார்யங்களைச் செய்து ஆபத்தினின்றும் (மரணவாயிலிருந்து) நீங்க வேண்டும் என்று அடிக்கடி சிந்தித்தல் (தியானித்தல்).

3. ஸம்ஸாராநுப்ரேக்ஷை—ஸம்ஸாரத்தில் (நரக முதலான நான்கு பிறவிகளில்) உண்டாகுந் துக்கத்தை அடிக்கடி ஆலோசித்தல் (தியானித்தல்).

4. ஏகத்வாநுப்ரேக்ஷை—'யான் செய்த வினைப்பயனையும், இறப்பு பிறப்பு வியாதி முதலானவைகளிலிருந்து உண்டாகுந் துக்கத்தையும் யானே அநுபவிக்க வேண்டும். மனைவி மக்கள் யாரும் அநுபவிக்கமாட்டார்கள்' என்றும், 'பிறக்கும்போதும் யான் ஒருவனே பிறந்தேன்; இறக்கும்போதும் யான் ஒருவனே இறக்கவேண்டும்' என்றும் அடிக்கடி தியானித்தல்.

5. அந்யத்வாநுப்ரேக்ஷை—உடலுக்கும் உயிருக்கும் ஸம்பந்தம் இல்லையென்றும், (ஆத்மாவுக்கும்) தனக்கும் மனைவி மக்கள் முதலானவர்களுக்கும் ஸம்பந்தம் இல்லையென்றும், ஆத்மாவேறு உடல்வேறு, மனைவி மக்கள் வேறு என்றும் அடிக்கடி எண்ணுதல்.

6. அஶுசித்வாநுப்ரேக்ஷை—உடலானது இரத்தம் மாமிசம் முதலானவைகளால் உண்டானது; குளித்தாலும் சுத்தமாகாது. உடல்மீது பூசப்பட்ட அத்தர், புனுகு முதலான வாசனைத் திரவியங்களும் சிறிது நேரத்திற்குள்

அசுத்தமாகும். எத்தன்மையாலும் உடல் அசுத்தமானதே என்று அடிக்கடி சிந்தித்தல்.

7. ஆஸ்ரவாநுப்ரேக்ஷை — மித்யாத்வம் முதலான பாவனைகளால் (கர்மம் வரும்) ஆஸ்ரவமாகும் என்றும், ஆஸ்ரவமானது ஸம்ஸாரத்திற்கு மூலகாரணம் என்றும் அடிக்கடி சிந்தித்தல்.

8. ஸம்வராநுப்ரேக்ஷை—ஆத்மாவினிடம் கர்மங்கள் வாராமல் தடுப்பது ஸம்வரையாகும். அந்த ஸம்வரையினால் ஜீவன்களுக்கு நன்மை யுண்டாகும் என்று அடிக்கடி எண்ணுதல்.

9. நிர்ஜராநுப்ரேக்ஷை—ஸவிபாகநிர்ஜரையினால் (கர்மங்கள் தம்தம் பயனைக் கொடுத்தபின்னர்க் கெடுதலால்) ஆத்மாவிற்கு யாதொரு பயனும் இல்லை என்றும், அவிபாக நிர்ஜரையினால் (கர்மங்கள் பயனைத் தரும்முன்னரே தவம் முதலானவைகளால் நீக்குவதனால்) நன்மையுண்டாகும் என்றும் நிர்ஜரையின் தன்மையைச் சிந்தித்தல்.

10. லோகாநுப்ரேக்ஷை — உலகத்தின் ஸ்வரூபத்தைச் சிந்தித்தல்.

11. போதிதுர்லபாநுப்ரேக்ஷை — இரத்தினத்ரயமாகின்ற போதியானது கிடைப்பது அரிது என்று எண்ணுதல் (அடிக்கடி சிந்தித்தல்.)

12. தர்மஸ்வாக்யாதத்த்வாநுப்ரேக்ஷை — ஸ்ரீ ஜிந பகவான் உரைத்த அஹிம்ஸாபரமோதர்மமானது ஜீவன்களுக்கு நன்மையைத் தருவதாகும். இந்தத் தர்மத்தினைப் பரிபாலிக்காவிடில் ஜீவன்களுக்குத் துக்கமுண்டாகும் என்று சிந்தித்தல்.

குறிப்பு :—அநுப்ரேக்ஷைகளை சிந்திக்கத் தகுந்தவன், உத்தமக்ஷமை முதலான தர்மங்களையும் ஆசரித்தவனாகின்றான், பரிஷஹங்களையும் ஜயிப்பான். ஆதலால் அநுப்ரேக்ஷையானது தர்மத்திற்கும் பரிஷஹஜயத்திற்கும் இடையில் கூறப்பட்டது. (7)

## பரிஷஹங்களை ஜயிக்க வேண்டும் என்பது

309\. 𑌮𑌾𑌰𑍍𑌗𑌾𑌚𑍍𑌯𑌵𑌨𑌨𑌿𑌰𑍍𑌜𑌰𑌾𑌰𑍍𑌥𑌂
𑌪𑌰𑌿𑌷𑍋𑌢𑌵𑍍𑌯𑌾𑌃 𑌪𑌰𑌿𑌷𑌹𑌾𑌃 ॥ ௮ ॥

மார்க்காச்யவநநிர்ஜரார்த்தம்
பரிஷோடவ்யாஃ பரிஷஹாஃ ||

(ப - ரை.) 𑌮𑌾𑌰𑍍𑌗𑌾𑌚𑍍𑌯𑌵𑌨 - ஸம்வரத்தின் மார்க்கத்திலிருந்து (கர்மங்களைத் தடுக்கும் உபாயத்திலிருந்து) விலகாமல் இருத்தற்கும், 𑌨𑌿𑌰𑍍𑌜𑌰𑌾𑌰𑍍𑌥𑌂 - கர்மங் கழிதற்கும், 𑌪𑌰𑌿𑌷𑌹𑌾𑌃 - பரிஷஹங்கள் (தொந்தரவுகள்), 𑌪𑌰𑌿𑌷𑍋𑌢𑌵𑍍𑌯𑌾𑌃 - பொறுக்கத் தகுந்தவை.

**கருத்துரை :—** ஸ்ரீஜிநபகவான் அறிவித்த வழியிலிருந்து விலகாமல் அவ்வழியிலேயே நடப்பதனால் (தொந்தரவுகளை ஜயிப்பதனால்) நூதனமாக வருங் கர்மங்களைத் தடுத்து, முன்பு பந்தமாயிருந்த கர்மங்களைக் கிரமமாக விலக்கி மோக்ஷம் எய்துவர். (௮)

## பரிஷஹங்கள்

310\. 𑌕𑍍𑌷𑍁𑌤𑍍𑌪𑌿𑌪𑌾𑌸𑌾𑌶𑍀𑌤𑍋𑌷𑍍𑌣𑌦𑌂𑌶𑌮𑌶𑌕𑌨𑌾𑌗𑍍𑌨𑍍𑌯𑌾
𑌰𑌤𑌿𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌚𑌰𑍍𑌯𑌾𑌨𑌿𑌷𑌦𑍍𑌯𑌾𑌶𑌯𑍍𑌯𑌾𑌕𑍍𑌰𑍋𑌶
𑌵𑌧𑌯𑌾𑌚𑌨𑌾𑌲𑌾𑌭𑌰𑍋𑌗𑌤𑍃𑌣𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌮𑌲
𑌸𑌤𑍍𑌕𑌾𑌰𑌪𑍁𑌰𑌸𑍍𑌕𑌾𑌰𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑌰𑍍𑌶
𑌨𑌾𑌨𑌿 ॥ ௯ ॥

க்ஷுத்பிபாஸாசீதோஷ்ண தம்ஶமஶகநாக்ந்யா
ரதிஸ்த்ரீசர்யாநிஷத்யாஶய்யாக்ரோஶ
வதயாசநாலாபரோகத்ருணஸ்பர்ஶமல
ஸத்கார புரஸ்காரப்ரஜ்ஞாஜ்ஞாநாதர்ஶ
நாநி ||

(ப - ரை.) க்ஷுதா - பசி, விவாஸா - நீர்வேட்கை, ஶீத - குளிர், உஷ்ண - வெப்பம், தம்ஶமஶக - மாட்டு ஈ, கொதுகு (கொசுகு), நாக்ந்ய - உடையில்லாமலிருத்தல், அரதி - ப்ரீதியின்மை, ஸ்த்ரீ - பெண், சர்யா - நடத்தல், நிஷத்யா - உட்காருதல், ஶய்யா - படுத்தல், ஆக்ரோஶ - இஷ்டமில்லாத வசனம், வத - அடித்தல் முதலியன, யாசநா - யாசித்தல், அலாப - நினைத்தபொருள் கிடைக்காமை, ரோக - நோய், த்ருணஸ்பர்ஶ - புல், முள் முதலியவை உடல்மீது தைத்தல், மல - அழுக்கு, ஸத்காரபுரஸ்கார - புகழ்ச்சி இகழ்ச்சி (அல்லது) ஆதரவு ஆதரவின்மை, ப்ரஜ்ஞா - அறிவு, அஜ்ஞாந - அறிவின்மை, அதர்ஶந - தர்சனமின்மை ஆகிய இந்த இருபத்திரண்டு வகைகளால் ஏற்படுந் தொந்தரவை ஜயித்தல் பரிஷஹஜயம் எனப்படும்.

1. க்ஷுத்பரிஷஹஜயம் — பசியினால் உண்டாகுந் துக்கத்தைப் பொருட்படுத்தாமல் ஜபம், தியானம், வாசித்தல் முதலான கார்யங்களைச் செய்தல். அதாவது, பசியினால் உண்டாகுந் துக்கத்தைப் பொறுத்துக்கொள்ளுதல்.

2. பிபாஸாபரிஷஹஜயம்—நீர்வேட்கையினால் உண்டாகுங் கஷ்டத்தைப் பொறுத்துக்கொள்ளுதல்.

3. ஶீதபரிஷஹஜயம்— குளிரினால் உண்டாகும் பாதையைப் பொறுத்துக்கொள்ளுதல்.

4. உஷ்ணபரிஷஹஜயம்—வெயிலின் வெப்பத்தினால் உண்டாகும் வேதனையை ஸஹித்துக்கொள்ளுதல்.

5. தம்ஶமஶகபரிஷஹஜயம்—மாட்டு ஈ, கொதுகு, எறும்பு, மூட்டுப்பூச்சி, பேன் முதலானவை கடிப்பதனால் உண்டாகுந் துக்கத்தினை ஸஹித்துக்கொள்ளுதல்.

6. நாக்ந்யபரிஷஹஜயம்—ஆடை அணியாமல் பிறந்த வுருவுடனிருந்தும் வெட்கப்படாமலிருத்தல்.

7. அரதிபரிஷஹஜயம்—ஏகாந்தஸ்தானத்தில் ஜபம், தவம், தியானம் முதலானவற்றைச் செய்துகொண்டிருக்குமபோது தனக்கு விருப்பமில்லாத கீதம், ந்ருத்யம், வாத்யம் முதலானவை நடந்தாலும் அதன்மீது விருப்பம் இல்லாமல் ஸம்யமத்தின்மீதே விருப்பமாக இருத்தல்.

8. ஸ்த்ரீபரிஷஹஜயம்—தன்னை அடைய வேண்டிப் பெண்கள் காதல்கொண்டு ஹாவ பாவ விலாஸ விப்ரமங்களைக்காண்பித்து மனத்தை மயக்கும்படி செய்தாலும் அச்செயலைக்கண்டு அவர்கள்மீது காதல்கொள்ளாமலிருத்தல்.

குறிப்பு:—ஹாவ:—முகவிகாரம்; அதாவது முகத்தை நெளித்தல் முதலியன. ஹாவ:—மனோவிகாரம். விலாஸ:—கண்ஜாடை, அதாவது கடைக்கண் பார்வை முதலியன. விப்ரமம்—புருவம் அசைத்தல்.

9. சர்யாபரிஷஹஜயம்—வழி நடக்கும்போது காலில் முள், கல் முதலியவை தாக்கித் துக்க முண்டானாலும், என்னுடைய யானை, குதிரை முதலான வாஹநங்களை 'விட்டுவிட்டேனே' என்று மனத்தில் கஷ்டப்படாமல் பாதையைப் பொறுத்துக்கொள்ளுதல்.

10. நிஷத்யாபரிஷஹஜயம் — தியானம் செய்யும் வரைக்கும் தான் நியமம் செய்துகொண்ட ஆஸனத்திலிருந்து விலகாமல், அதனால் உடலுக்கு உபத்திரவம் உண்டானாலும் அவ்வுபத்திரவத்தினைப் பொறுத்துக் கொள்ளுதல்.

11. ஶய்யாபரிஷஹஜயம் — பாய் படுக்கைகளின்றித் தரையின்மீது உறங்கும்போது கல், மண் முதலியவை உடலில் தாக்கின், அவைகளால் உண்டாகும் வேதனையினைப் பொறுத்துக்கொள்ளுதல்.

12. ஆக்ரோஶபரிஷஹஜயம்—துஷ்டர்கள் இகழ்ச்சியான வார்த்தைகளைக் கூறினுலும் அவர்கள்மீது மனவருத்தம் அடையாதிருத்தல்.

13. வதபரிஷஹஜயம்—தன்மேல் யாராவது மண், கல் முதலியவற்றை எறிந்தாலும் அவர்கள்மீது கோபங் கொள்ளாமல் இருத்தல்.

14. யாசநாபரிஷஹஜயம்—உயிர் போகுஞ் சமயம் நேரிட்டாலும் 'ஐயா! அம்மா!' என்று கூவி உணவுப் பொருள்களை யாசகம் செய்யாமல்இருத்தல்.

15. அலாபபரிஷஹஜயம்—உணவுப் பொருள் (ஆஹாரம்) 'கிடைக்காவிடினும், கிடைக்கவில்லையே' என்று கஷ்டப்படாமல் சந்தோஷத்துடனிருத்தல்.

16. ரோகபரிஷஹஜயம்— வியாதியினல் உண்டாகும் வேதனையை ஸஹித்துக்கொள்ளுதல்.

17. த்ருணஸ்பர்ஶபரிஷஹஜயம்—வியாதி, சீதோஷ்ணம் ஆகிய இவைகளால் உண்டான ஶ்ரமத்தை நீக்கும்-பொருட்டு, படுக்கையில் அல்லது உட்காரும் ஆஸனத்தில் போடப்பட்ட த்ருணஸநத்தால் (புல் வைக்கோல முதலானவைகளால்), உடலில் தினவு முதலியன ஏற்பட்டாலும், நடக்கும்போது காலில் முள், ஓடு, கல், கண்ணுடித்துண்டு முதலானவை தாக்கி வேதனை உண்டாணுலும் அவைகளைப் பொறுத்துக் கொள்ளுதல்.

18. மலபரிஷஹஜயம்—ஸ்நானம் செய்யாமலிருத்தலால் வியர்வை, அழுக்கு முதலியவை சேர்ந்து நாற்றம் வருமாயின் கண்டவர் நகைப்பர் என்னும் எண்ணத்தினல் ஸ்நானம் செய்யவேண்டும் என்று எண்ணுமலிருத்தல். அதாவது, தன் உடலின்மீது உள்ள அழுக்கைக் கண்டு அருவருப்படையாமலிருத்தல்.

19. ஸத்காரபுரஸ்காரபரிஷஹஜயம்—கௌரவத்திலும் அபமானத்திலும் சமமான மனத்தையுடையோராகி,

புகழ்ச்சி செய்வோரிடத்தும் இகழ்ச்சி செய்வோரிடத்தும் வெறுப்பும் விருப்பமும் இல்லாதிருத்தல். அதாவது, தன்னை அழைத்து யாரும் கௌரவம் செய்யாமலிருப்பினும் மனத்தில் க்லேசம் அடையாமலிருத்தல்.

20. ப்ரஜ்ஞாபரிஷஹஜயம்—'யான் எல்லாவற்றையும் அறிந்தவன்; எல்லாரும் எனக்குக் கீழ்ஆனவர்களே' என்று அஹங்காரங் கொள்ளாமலிருத்தல். அதாவது, வித்வானாயினும் கர்வமடையாம விருத்தல்.

21. அஜ்ஞாநபரிஷஹஜயம்—'யான் பசுவைப்போலப் பகுத்தறிவு இல்லாதவன். என்னைக் கண்டவர் ஏளனஞ் செய்வர்' என்ற எண்ணம் மனத்தில் தோன்றாமலிருத்தல். தன்னை மூடனென்றும் அஜ்ஞாநியென்றும் பிறர் கூறினும் அவர்மீது கோபங் கொள்ளாமலிருத்தல்.

22. அதர்சநபரிஷஹஜயம்—'யான் நெடுநாளாகக் கடுந் தவஞ் செய்தும் எனக்கு அவதிஜ்ஞானம, இருத்தி முதலானவை உண்டாகவில்லையே; யான் விரதம் இருப்பது வீண்தான்' என்று எண்ணமலிருதல். (9)

## இன்னருக்கு இத்தனை பரிஷஹங்கள் உண்டாகும் என்பது

311. ஸூக்ஷ்மஸாம்பராயச்சத்மஸ்தவீதராகயோ
ச்சதுர்தச || ௰ ||

ஸூக்ஷ்மஸாம்பராயசத்மஸ்தவீதராகயோச்
சதுர்தச ||

(ப - ரை.) ஸூக்ஷ்மஸாம்பராயச்சத்மஸ்தவீதராகயோ: - ஸூக்ஷ்மஸாம்பராயமென்னும் பத்தாங்குணஸ்தானவர்த்திகளுக்கும், சத்மஸ்தவீதராக மென்னும் உபசாந்தமோஹநீயகுணஸ்தானம், க்ஷீணமோஹகுணஸ்தானம் ஆகிய இவைகளில் வர்த்திப்பவர்களுக்கும், சதுர்தச - பதினான்கு பரிஷஹங்கள் உண்டாகும்.

அவை—(1) க்ஷுத், (2) பிபாஸா (3) ஶீதம், (4) உஷ்ணம், (5) தம்ஶமஶகம், (6) சர்யா, (7) ஶய்யா, (8) வத, (9) அலாப, (10) ரோக, (11) த்ருணஸ்பர்ஶ, (12) மல, (13) ப்ரஜ்ஞா, (14) அஜ்ஞானம் என்பன. (10)

312. ஏகாதஶ ஜிநே ॥ ௰௧ ॥

ஏகாதஶ ஜிநே ॥

(ப - ரை.) ஜிநே - ஸயோகிகேவலியென்னும் பதின்மூன்றாங் குணஸ்தானவர்த்தியாகிய ஜிநேந்திரபகவானுக்கு, ஏகாதஶ - பதினொரு பரிஷஹங்கள் இருக்கும்.

ஸ்ரீ ஜிநபகவானிடத்தில் வேதநீயகர்மம் உண்டு. அதனால் உண்டாகும பரிஷஹங்கள் பகவானுக்கும் உண்டென்று கூறப்படும். ஆயினும், பகவானுக்கு மோஹநீய கர்மம் இல்லாமலிருத்தலால் பசி முதலான வேதனைகள் உண்டாவதில்லை. அதாவது, பகவானுக்கு உண்மையாக ஒரு பரிஷஹமும் இல்லை ; வேதநீய கர்மம் இருப்பதனால் வேதநீயகர்மத்தின் கார்யமாகிய பதினொரு பரிஷஹங்களும் இருக்கும் என்று உபசாரத்தினால் கூறப்படும். (11)

313. பாதரஸாம்பராயே ஸர்வே ॥ ௰௨ ॥

பாதர ஸாம்பராயே ஸர்வே ॥

(ப - ரை.) பாதரஸாம்பராயே - ஸ்தூலமான கஷாயமுள்ளவர்களுக்கு அதாவது 6-ஆங் குணஸ்தானம் முதற்கொண்டு 9-ஆங் குணஸ்தானம் வரைக்கும் உள்ளவர்களுக்கு, ஸர்வே - எல்லாப் பரிஷஹங்களும் உண்டாகும்.

## பரிஷஹம் இவற்றால் உண்டாகும் என்பது

314. ஜ்ஞாநாவரணே ப்ரஜ்ஞாஜ்ஞாநே ॥ ௰௩ ॥

ஜ்ஞாநாவரணே ப்ரஜ்ஞாஜ்ஞாநே ॥

ப - ரை.) 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑍇 - ப்ரஜ்ஞாபரிஷஹமும், அஜ்ஞாநபரிஷஹமும, 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌵𑌰𑌣𑍇 - ஜ்ஞாநாவரண கர்மத்தின் உதயத்தினால் உண்டாகும். (13)

315. 𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍋𑌹𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌯𑌯𑍋𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌲𑌾𑌭𑍌
தர்ஸநமோஹாந்தராயயோரதர்ஸநாலாபெள ||

(ப - ரை.) 𑌦𑌰𑍍𑌶𑌨𑌮𑍋𑌹𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌯𑌯𑍋𑌃 - தர்சந மோஹநீயம் அந்தராயம் ஆகிய இவைகளினால் முறையே, 𑌅𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌲𑌾𑌭𑍌 - அதர்ஸநபரிஷஹமும் அலாப பரிஷஹமும் உண்டாகும். அதாவது தர்சனமோஹநீயத்தினால் அதர்சநபரிஷஹமும், லாபந்தராயகர்மத்தினால் அலாபபரிஷஹமும் உண்டாகும். (14)

316. 𑌚𑌾𑌰𑌿𑌤𑍍𑌰𑌮𑍋𑌹𑍇 𑌨𑌾𑌗𑍍𑌨𑍍𑌯𑌾𑌰𑌤𑌿𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌨𑌿𑌷𑌦𑍍𑌯𑌾
𑌕𑍍𑌰𑍋𑌶𑌯𑌾𑌚𑌨𑌾𑌸𑌤𑍍𑌕𑌾𑌰𑌪𑍁𑌰𑌸𑍍𑌕𑌾𑌰𑌾𑌃 ||
சாரித்ரமோஹே நாக்ந்யாரதிஸ்த்ரீநிஷத
யாக்ரோஸயாசநாஸத்காரபுரஸ்காரா: ||

(ப - ரை.) 𑌚𑌾𑌰𑌿𑌤𑍍𑌰𑌮𑍋𑌹𑍇 - சாரித்ரமோஹநீய கர்மத்தின் உதயத்தினால் 𑌨𑌾𑌗𑍍𑌨𑍍𑌯𑌾𑌰𑌤𑌿........ ........𑌪𑍁𑌰𑌸𑍍𑌕𑌾𑌰𑌾𑌃 - நாக்ந்ய, அரதி, ஸ்த்ரீ, நிஷத்யா, ஆக்ரோஸ, யாசநா, ஸத்காரபுரஸ்கார: ஆகிய இவை ஆகும். (15)

317. 𑌵𑍇𑌦𑌨𑍀𑌯𑍇 𑌶𑍇𑌷𑌾𑌃 || ௧௬ ||
வேதநீயே ஸேஷாः ||

(ப - ரை.) 𑌶𑍇𑌷𑌾𑌃 - ஏனைய பரிஷஹங்கள், அதாவது 𑌕𑍍𑌷𑍁𑌤𑍍, பிபாஸா, ஸீதம், உஷ்ணம், தம்ஸமஸகம், சர்யா, ஸய்யா, வத, ரோக, த்ருணஸ்பர்ஸ, மல ஆகிய இவைகள், 𑌵𑍇𑌦𑌨𑍀𑌯𑍇 - வேதநீயகர்மத்தின் உதயத்தினால் உண்டாகும். (16)

## ஒருங்கே இத்தனை பரிஷஹங்கள் உண்டாகும் என்பது

318. 𑌏𑌕𑌾𑌦𑌯𑍋 𑌭𑌾𑌜𑍍𑌯𑌾 𑌯𑍁𑌗𑌪𑌦𑍇𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍈
𑌕𑍋𑌨𑌵𑌿𑌂𑌶𑌤𑍇𑌃 ॥ ௧௭ ॥

ஏகாதயோ பாஜ்யா யுகபதேகஸ்மிந்
நைகோநவிம்ஶதே: ||

(ப - ரை.) 𑌯𑍁𑌗𑌪𑌤𑍍 - ஒருங்கே, 𑌏𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 - ஒருவரிடத்தில், 𑌏𑌕𑌾𑌦𑌯𑌃 - ஒன்று முதலாக, ஆ 𑌏𑌕𑍋𑌨𑌵𑌿𑌂𑌶𑌤𑍇𑌃 - பத்தொன்பதுவரை, 𑌭𑌾𑌜𑍍𑌯𑌾𑌃 - பிரிவு செய்யத் தகுந்தன.

**கருத்துரை:**—ஒருவருக்கு ஏககாலத்தில் 19 பரிஷஹங்கள்தாம் உண்டாகும். ஏனெனில் சீதம், உஷ்ணம் ஆகிய இவை இரண்டில் ஏதாவது ஒன்றும், சர்யா, ஶய்யா, நிஷத்யா இவை மூன்றனுள் ஏதாவது ஒன்றும் உண்டாகும். ஆக இந்த ஐந்தனுள் மூன்று நீங்குவதனால் பத்தொன்பதுதான் உண்டாகும். (17)

## சாரித்ரங்கள்

319. 𑌸𑌾𑌮𑌾𑌯𑌿𑌕𑌚𑍍𑌛𑍇𑌦𑍋𑌪𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌾𑌪𑌰𑌿𑌹𑌾𑌰
𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌸𑌾𑌮𑍍𑌪𑌰𑌾𑌯𑌯𑌥𑌾𑌖𑍍𑌯𑌾𑌤
𑌮𑌿𑌤𑌿 𑌚𑌾𑌰𑌿𑌤𑍍𑌰𑌮𑍍 ॥ ௧௮ ॥

ஸாமாயிகச்சேதோபஸ்தாபநாபரிஹார
விஶுத்திஸூக்ஷ்மஸாம்பராயயதாக்யாத
மிதி சாரித்ரம் ||

(ப - ரை.) 𑌸𑌾𑌮𑌾𑌯𑌿𑌕........𑌯𑌥𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 - ஸாமாயிகம், சேதோபஸ்தாபனு, பரிஹாரவிசுத்தி, ஸூக்ஷ்ம ஸாம்பராயம், யதாக்யாதம், இதி - ஆகிய இவை ஐந்தும், 𑌚𑌾𑌰𑌿𑌤𑍍𑌰𑌂 - சாரித்ரமாகும்.

1. ஸாமாயிகசாரித்ரம் -- ஸமஸ்த பாபங்களேயும் விடுதல்.

2. சேதோபஸ்தாபனுசாரித்ரம் -- ப்ரமாதத்தினல் சாரித்திரத்தினுள் யாதானுமொரு குற்றம் ஏற்படுமாயின் ப்ராயஶ்சித்தபூர்வகம் அக்குற்றத்தினை நீக்கி, சாரித்திரத்தினை மீண்டும் ஸ்வீகரித்தல்.

3. பரிஹாரவிஶுத்திசாரித்ரம் — ஜீவன்களின் ஹிம்ஸையை முற்றும்விட்டதனல் சாரித்திரத்தினுள் விசுத்தி உண்டாதல்.

4. ஸூக்ஷ்மஸாம்பராயிகசாரித்ரம் — ஸூக்ஷ்ம லோபகஷாயோதயத்தினல் சாரித்ரம் உண்டாதல்.

5. யதாக்யாதசாரித்ரம்--மோஹநீயகர்மத்தின் க்ஷயத்தினல் அல்லது உபஶமத்தினல் ஆத்மாவானது தன் சுத்தஸ்வரூபத்தில் இருத்தல்.

குறிப்பு:--ஸாமாயிகமும் சேதோபஸ்தாபனேயும் 6, 7, 8, 9-ஆங் குணஸ்தானவர்த்திகளுக்கு உண்டாகும். பரிஹாரவிசுத்தியானது 6, 7-ஆங் குணஸ்தானவர்த்திகளுக்குண்டாகும். ஸூக்ஷ்மஸாம்பராயம் பத்தாங்குணஸ்தானவர்த்திகட்கு உண்டாகும். யதாக்யாதம் 11, 12, 13-ஆங் குணஸ்தானவர்த்திகட்கு உண்டாகும். (18)

## நிர்ஜரையின் வர்ணனே
## பாஹ்யதபஸ் (வெளித்தவம்)

320. अनशनावमौदर्यवृत्तिपरिसंख्यान
रसपरित्यागविविक्तशय्यासनकाय
क्लेशा बाह्यं तपः ॥ ௧௯ ॥

அநஶநாவமோதர்யவ்ருத்திபரிஸங்க்யாந
ரஸபரித்யாகவிவிக்தஶய்யாஸநகாய
க்லேஶா பாஹ்யம் தப: ॥

(ப - ரை.) அநஶநம் - ஸம்யமத்தினை விருத்தி செய்தற்காக உபவாஸம் செய்தல்; அதாவது உண்பன, தின்பன, நக்குவன, பருகுவன என்னும் நான்கு வகை உணவுகளையும் உண்ணாமை, அவமௌதர்யம் - சோம்பலின்றித் தபம், தியானம், ஸ்வாத்யாயம் முதலியவை செய்தற்கும் ஆசையை நீக்குதற்கும் வயிறு நிரம்ப உண்ணாமல் குறைவாக உண்ணுதல், வ்ருத்திபரிஸங்க்யாநம் - ஆஹாரத்தின்மீது உண்டாகும் வாஞ்சையினை நிவர்த்திப்பதற்காக 'இத்தனை வீட்டிற்குள், இந்தத் தெருவுக்குள் உணவு கிடைப்பின் உண்பேன், இன்றேல் உணவு கொள்ளமாட்டேன்' என்று நியமம் செய்துகொண்டு உணவு கொள்ளப் புறப்படுதல், ரஸபரித்யாக: - ஐம்புலன்களை அடக்கும் பொருட்டுப் பால், நெய், முதலான ரஸவஸ்துக்களைவிட்டு-விடுதல், விவிக்தஶய்யாஸநம் - யாருமில்லாத தனிமையான இடத்தில் (ப்ரஹ்மசர்ய விரதம் ஸ்வாத்யாயம் முதலானவை இடையூறின்றி நடப்பதற்காக) பாய் படுக்கையின்றித் தரையின்மீது உறங்குதல், காயக்லேஶா: - சரீரத்தின் மீதுள்ள ஆசையைத் துறந்து வெயிலில் நின்று யோகஞ் செய்தல், மழைக் காலத்தில் மரத்தின்கீழ் நின்று யோகஞ் செய்தல் ஆகிய இவை ஆறும், பாஹ்யம் தப: - பாஹ்ய தபமாகும். (19)

## அந்தரங்கதபஸ் (அகத்தவம்)

321. ப்ராயஶ்சித்தவிநயவையாவ்ருத்த்யஸ்வாத்யாய
வ்யுத்ஸர்கத்யாநாந்யுத்தரம் ॥ ௨௰ ॥
ப்ராயஶ்சித்தவிநயவையாவ்ருத்யஸ்வாத்யாய
வ்யுத்ஸர்க்கத்யாநாந்யுத்தரம் ||

(ப - ரை.) ப்ராயஶ்சித்த - ப்ரமாதத்தினால் அல்லது அஜ்ஞானத்தினால் ஏற்பட்ட தோஷத்தினை நீக்குதல்,

𑌵𑌿𑌨𑌯 - பெரியோர்களிடத்தில் வணக்கத்துடன் இருத்தல், 𑌵𑍈𑌯𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯 - பெரியோர்கட்கு ஸேவை செய்தல், 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯 - ஆலஸ்யமின்றி வாசித்தல்; ஆத்மபாவனைக்குரிய ஜ்ஞானத்தினை ஸம்பாதித்தல், 𑌵𑍍𑌯𑍁𑌤𑍍𑌸𑌰𑍍𑌗 - அகப்பற்று புறப்பற்றுக்களை விடுதல், 𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌨𑌿 - மனத்தின் சலனத்தைத் தவிர்த்து யாதானுமொரு பொருளைச் சிந்தித்தல் அதாவது பஞ்சபரமேஷ்டி முதலானவர்களைத் தியானித்தல் ஆகிய இவை ஆறும், 𑌉𑌤𑍍𑌤𑌰𑌂 - அகத் தவமாகும். (20)

## அகத்தவத்தின் உட்பேதம்

322. 𑌨𑌵𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶𑌪𑌞𑍍𑌚𑌦𑍍𑌵𑌿𑌭𑍇𑌦𑌾 𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌮𑌂
𑌪𑍍𑌰𑌾𑌗𑍍𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌤𑍍 || ௨௧ ||

நவசதுர்தஶபஞ்சத்விபேதா யதாக்ரமம்
ப்ராக்த்யாநாத் ||

(ப - ரை.) 𑌪𑍍𑌰𑌾𑌗𑍍𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌤𑍍 - தியானத்தின் முன்புள்ள ஐந்து தவங்களும் முறையே, 𑌨𑌵 - ஒன்பது, 𑌚𑌤𑍁𑌃 - நான்கு, 𑌦𑌶 - பத்து, 𑌪𑌞𑍍𑌚 - ஐந்து, 𑌦𑍍𑌵𑌿 - இரண்டு, 𑌭𑍇𑌦𑌾𑌃 - பிரிவினையுடையன. அதாவது, பிராயஶ்சித்தம் 9 வகை; விநயம் 4 வகை; வையாவ்ருத்யம் 10 வகை; ஸ்வாத்யாயம் 5 வகை; வ்யுத்ஸர்க்கம் 2 வகை. (21)

## ப்ராயஶ்சித்தம் ஒன்பது வகை

323. 𑌆𑌲𑍋𑌚𑌨𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑍍𑌰𑌮𑌣𑌤𑌦𑍁𑌭𑌯𑌵𑌿𑌵𑍇𑌕
𑌵𑍍𑌯𑍁𑌤𑍍𑌸𑌰𑍍𑌗𑌤𑌪𑌶𑍍𑌛𑍇𑌦𑌪𑌰𑌿𑌹𑌾𑌰𑍋𑌪𑌸𑍍𑌥𑌾
𑌪𑌨𑌾𑌃 || ௨௨ ||

ஆலோசநாப்ரதிக்ரமணததுபயவிவேகவ்யுத்
ஸர்க்கதபஸ்சேதபரிஹாரோபஸ்தாபநா: ||

(ப - ரை.) ஆலோசநா-தான் செய்த குற்றத்தினைக் குருவினிடம் மறைக்காமல் (உண்மையைக்) கூறுதல், ப்ரதிக்ரமண - தான் செய்த குற்றத்தினைக் குருவினிடம் கூறாமல் தானே நீக்கிக் கொள்ளுதல், ததுபய - ஆலோசனையினாலும் ப்ரதிக்ரமணத்தினாலும் குற்றத்தினை நீக்குதல், விவேக - தான் விட்டுவிட்ட பொருள் தனக்குத்தெரியாமல் தன்னிடம் சேர்ந்துவிடின் அப்பொருளை முற்றும் விட்டுவிடுதல், உணவுப்பொருள்களைக் குருக்கள் உத்தரவிட்ட காலம்வரைக்கும் விட்டுவிடுதல். வ்யுத்ஸர்க - காயோத்ஸர்க்கம்முதலியவற்றைச் செய்தல், தப: - உபவாஸம் முதலானவற்றைச் செய்தல், சேத: - குறிப்பிட்ட காலம்வரைக்கும் தீக்ஷையினை விட்டுவிடும்படி செய்தல், பரிஹார: — குறிப்பிட்ட காலம்வரைக்கும் ஸங்கத்தைவிட்டு நீக்கி வெளியில் இருக்கச் செய்தல், உபஸ்தாபநா: - பழைய விரதத்தினை (தீக்ஷையினை) நீக்கிப் புதியதாகத் தீக்ஷை கொடுத்தல் ஆகியஇவை ஒன்பதும் ப்ராயஸ்சித்தத்தின் பேதமாகும்.

குறிப்பு :—ப்ராயஸ்சித்தம் - குற்றத்தினை நீக்குதல். ப்ராயஸ்சித்தங்களை ஸங்கத்தலைவராகிய ஆசார்யரே நியமிப்பார். (22)

## நான்கு வகை விநயம்

324, ஜ்ஞாநதர்ஶநசாரித்ரோபசாரா: || உங ||

ஜ்ஞாநதர்ஶநசாரித்ரோபசாரா: ||

(ப - ரை.) ஜ்ஞாநவிநய: - சோம்பலின்றிச்சுத்தமனத்துடன் தகுந்த காலத்தில் முக்தியினை அடைதற்கு ஹேதுவாகிய சாஸ்த்ரங்களை ஓதுதல், தர்ஶநவிநய: - குற்றமில்லாத நற்காட்சியினை அடைதல், சாரித்ரவிநய: -

சாரித்ரவான்களைக் கண்டு பக்தி செய்தல், சாரித்திரத்தினை ஆசரித்தல், உவயாரவிநய: - ஆசார்யர்முதலான பெரியோர்களைக் கண்டால் எழுந்து நிற்றல், அவர் சென்றால் பின்தொடர்தல், கைகூப்புதல் முதலியவற்றைச்செய்தல் ஆகிய இவை நான்கும் விநயதவத்தின் பேதமாகும்.

## பத்துவகை வையாவ்ருத்யம்

325. ஆவாயெ-ிாவாயுாய தவஸ்ஸிஸெஷக்ஷஹிாந
ஏணகூலஸம்வஸாயுஉஜெநாஜ்ஞாநாழ ||

ஆசார்யோபாத்யாயதபஸ்விசைக்ஷக்லாந
கணகுலஸங்கஸாதுமநோஜ்ஞாநாம் ||

(ப - ரை.) ஆவாய-ி - ஆசார்யர், உவாயுாய - உபாத்யாயர், தவஸ்ஸி - தபஸ்வீ, ஸெஷக்ஷ - சைக்ஷயர், ஹிாந - க்லானர், ஏண - கணம், கூலு - குலம், ஸம்வ - ஸங்கம், ஸாயு - ஸாது, உஜெநாஜ்ஞாநாழ - மநோஜ்ஞர் ஆகிய பத்து வகை முனிகட்கு ஸேவை செய்தல்.

1. ஆசார்யர் —ஜ்ஞாநாசாரம்முதலான ஐந்து ஆசாரங்களுடன் ஒழுகுபவர்; பிறரை ஒழுக வைப்பவர்.

2. உபாத்யாயர்—முக்தியினை அடைதற்குரிய நூல்களை ஓதுபவர், ஓது விப்பவர், தர்மோபதேசம் செய்பவர்.

3. தபஸ்வீ—உபவாஸம் முதலான கடுந்தவம் புரிபவர்.

4. சைக்ஷயர் — சாஸ்த்ரங்களைக் கற்றுக்கொண்டிருப்பவர்; ஶிஷ்யத்தன்மை யுள்ளவர்.

5. க்லாநர்—வியாதியினால் பீடிக்கப்பட்ட உடலையுடையோர்.

6. கணம்—வ்யது முதிர்ந்த அல்லது நெடுநாள் தவம்புரிந்த முனிவர்களின் கூட்டம்.

7. குலம்—தீக்ஷையைக் கொடுக்கும் ஆசார்யருடைய சிஷ்யபரம்பரையைச் சார்ந்தவர்.

8. ஸங்கம்—ருஷி, முனி, யதி, அநகாரர்; அல்லது, ருஷி, ஆர்யிகா, ஶ்ராவக, ஶ்ராவிகைகள் என்னும் நான்கு வகையினரையுடைய கூட்டம்.

9. ஸாது—நெடுநாள் தவம் புரிந்தவர், தீக்ஷை பெற்று அதிகநாள்சென்றவர்.

10. மனோஜ்ஞர்—வித்வானும், ஜனங்களால் மதிக்கப்படுபவரும், நல்ல அழகு வாய்ந்தவரும் ஆகிய முனிவர்.

## ஐந்து வகை ஸ்வாத்யாயம்

326. 𑌵𑌾𑌚𑌨𑌾𑌪𑍍𑌰𑌚𑍍𑌛𑌨𑌾𑌨𑍁𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑌾𑌽𑌽𑌮𑍍𑌨𑌾𑌯
𑌧𑌰𑍍𑌮𑍋𑌪𑌦𑍇𑌶𑌾𑌃 ‖ ௨௫ ‖

வாசநாப்ரச்சநாநுப்ரேக்ஷாऽऽம்நாய
தர்மோபதேஶா: ‖

(ப - ரை.) 𑌵𑌾𑌚𑌨𑌾 - ஆத்மாவின் நன்மைக்குரிய நூல்களை வாசித்தல் வாசித்துக் கூறுதல், 𑌪𑍍𑌰𑌚𑍍𑌛𑌨𑌾 - சந்தேஹம் நீங்கும்பொருட்டும் தான் அறிந்ததை அல்லது கேட்டதை நிச்சயஞ்செய்துகொள்ளும்பொருட்டும் வினவுதல், 𑌅𑌨𑍁𑌪𑍍𑌰𑍇𑌕𑍍𑌷𑌾 - அறிந்ததும் கேட்டதுமாகிய விஷயத்தினை அடிக்கடி நினைவிற்குக்கொண்டுவருதல், 𑌆𑌮𑍍𑌨𑌾𑌯 - தப்பில்லாமல் சுத்தமாக ஓதுதல், 𑌧𑌰𑍍𑌮𑍋𑌪𑌦𑍇𑌶𑌾𑌃 - தர்மத்தினைப் போதித்தல் ஆகிய இவை ஐந்தும் ஸ்வாத்யாயத்தின்பேதமாகும். (25)

## இருவகை வ்யுத்ஸர்க்கம்

327. 𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑍋𑌪𑌧𑍍𑌯𑍋𑌃 ‖ ௨௬ ‖

பாஹ்யாப்யந்தரோபத்யோ: ‖

(ப - ரை.) பாஹ்யா.........பத்யோ: — பாஹ்ய உபதி, அப்யந்தரஉபதி ஆகிய இவைகளை விடுதல்.

**பாஹ்யோபதிவ்யுத்ஸர்க்க:**—பாஹ்ய பரிக்ரஹத்தினை விடுதல், அதாவது, மனைவி, மக்கள், தனம், தான்யம் முதலான பொருள்களை விடுதல்.

**அப்யந்தரோபதிவ்யுத்ஸர்க்க:**—அந்தரங்க பரிக்ரஹத்தினை விடுதல். அதாவது, குரோதம் முதலானவைகளை விடுதல். நியதகாலம் அல்லது மரணகாலம்வரைக்கும் சரீரத்தின்மீது உண்டாகும் மமதையை விடுதலும் அப்யந்தரஉபதித்யாகம் என்பர். (26)

## த்யானத்தின் லக்ஷணம்

328. உத்தமஸம்ஹநநஸ்யைகாக்ரசிந்தா
நிரோதோ த்யாநமாந்தர்முஹூர்த்தாத் ॥

உத்தமஸம்ஹநநஸ்யைகாக்ரசிந்தாநிரோதோ
த்யாநமாந்தர்முஹூர்த்தாத் ||

(ப - ரை.) உத்தம ஸம்ஹநநஸ்ய - வஜ்ரர்ஷபநாராச ஸம்ஹநநம், வஜ்ரநாராசஸம்ஹநநம், நாராசஸம்ஹநநம் என்னும் உத்தமமான ஸம்ஹநநமுடையோர்களுக்கு, ஆ அந்தர்முஹூர்த்தாத் - ஒரு அந்தர்முஹூர்த்த பர்யந்தம், ஏகாக்ரசிந்தா நிரோத: - ஒரு பொருளின் மீது மனத்தைச் செலுத்துவதாகிய, த்யாநம் - தியானமானது ஆகும்.

**கருத்துரை :**—பல பொருள்களின் திறத்தில் அலையும் மனத்தினை அடக்கி ஒரு பொருளின்மீது மனத்தை நிலைக்கச் செய்தல் த்யானமாகும். அந்தத்யானமானது உத்தமஸம்ஹநநமுள்ளவர்கட்கும் ஒரு அந்தர்முஹூர்த்தம்வரைக்குந்தான் உண்டாகும். அதற்குமேல் மனத்தைத் தடுக்க முடியாது. (27)

### த்யானத்தின் வகை

329. 𑌆𑌰𑍍𑌤𑌰𑍌𑌦𑍍𑌰𑌧𑌰𑍍𑌮𑍍𑌯𑌶𑍁𑌕𑍍𑌲𑌾𑌨𑌿 || ௨௮ ||

ஆர்த்தரௌத்ரதர்ம்யஶுக்லானி ||

(ப - ரை.) த்யானம் நான்கு வகை. அவை, 𑌆𑌰𑍍𑌤 - ஆர்த்தத்யானம், 𑌰𑍌𑌦𑍍𑌰 - ரௌத்ரத்யானம், 𑌧𑌰𑍍𑌮𑍍𑌯 - தர்மத்யானம், 𑌶𑍁𑌕𑍍𑌲𑌾𑌨𑌿 - ஶுக்லத்யானம் என்பன. (28)

